வெளியீடு—உஅஅ.

# ஷேக்ஸ்பியர்

# கதைக் கொத்து

[இரண்டாம் பாகம்]

1. நடுவேனிற் கனவு
2. சிம்பலின்
3. கார்காலக் கதை
4. ஒதெல்லோ
5. பன்னிரண்டாம் இரவு
6. சிறு பிழையால் நேர்ந்த பெருந் தொல்லை
7. சரிக்குச் சரி
8. ரோமியோவும் ஜூலியட்டும்.

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி............ ......................சென்னை. 1.

1-ம் பாகம் விலை ரூ. 1- 8
2-ம் பாகம் விலை ரூ. 1-12
3-ம் பாகம் விலை ரூ. 2- 0
4-ம் பாகம் விலை ரூ. 2- 8

[*Copy Right*]

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
THIRUNELVELI & MADRAS.

அப்பர் அச்சகம், சென்னை 1.

# பதிப்புரை

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நவில்தொறும் இன்பம் பயப்பன. ஆங்கில இலக்கிய நூல்களின் தலைமையாகப் போற்றப்பெறுவன இந்நாடகங்களே. சிறுவரும் படித்து இன்புறும்பொருட்டு **சார்லஸ் லாம்** என்னும் ஆங்கிலப் புலவர் ஒருவர் அவற்றைக் கதைவடிவில் எழுதியுள்ளார்.

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் கதைவடிவில் எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டு எட்டுப் புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன. **பரிசு வழங்குதற்கும் நூல்நிலையங்கட்கும்** பயனாகுமாறு இரண்டிரண்டு புத்தகங்களை ஒன்றாய்ச் சேர்த்து அழகிய கட்டடஞ்செய்து வெளியிட்டுள்ளதில் இந்நூல் **இரண்டாம்பாக**மாகும்.

தமிழறிஞர்கள் இத்தகைய நூல்களை வாங்கி எங்கள் நூல் வெளியீட்டுத் தொண்டிற்குப் போதிய ஆதரவு தருவார்களாக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்

## ஷேக்ஸ்பியர் கதைகள்

### மூன்றும் புத்தகம்


1. நடுவேனிற் கனவு
2. சிம்பலின்
3. கார்காலக் கதை
4. ஒதெல்லோ


### நான்காம் புத்தகம்


1. பன்னிரண்டாம் இரவு
2. சிறு பிழையால் நேர்ந்த பெருந் தொல்லை
3. சரிக்குச் சரி
4. ரோமியோவும் ஜூலியட்டும்

கழக வெளியீடு—உ௫௫

சிறுவர்க்கான

# ஷேக்ஸ்பியர் கதைகள்

மூன்றும் புத்தகம்

(விளக்கப் படங்களுடன்)

❀

திரு. K. அப்பாதுரைப் பிள்ளை, எம். ஏ., எல். டி.,
எழுதியது

❀

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.

*First Edition* 1941
*Second Edition* 1944
*Third Edition* 1946
*Fourth Edition* 1947

# முன்னுரை

**ஷேக்ஸ்பியர்** உலகறிந்த புலவர் என்பது யாவரும் அறிவர். அவர்தம் நாடகங்கள் நவில்தொறும் நயம் பயப்பன. அவற்றுள் **வெனிஸ் வணிகன்** (The Merchant of Venice), **விரும்பிய வண்ணமே** (As you like it), **மாக்பெத்** (Macbeth) என்னும் மூன்று கதைகள் முதற் புத்தகத்திலும், **புயற் காற்று** (The Tempest) **லீயர் மன்னன்** (King Lear), **ஹாம்லெத்** (Hamlet) என்னும் மூன்று கதைகள் இரண்டாம் புத்தகத்திலும், வெளிவந்திருக்கின்றன. ஆங்கிலத்தில் **சார்லஸ் லாம்** (Charles Lamb) எழுதிய ஷேக்ஸ்பியர் கதைகளைத் தழுவியே தமிழில் மேற்கண்ட ஆறு கதைகளும் எழுதப்பெற்றுள்ளன.

இப்போது மூன்றும் புத்தகமாக **நடுவேனிற் கனவு** (A Midsummer Night's Dream), **சிம்பலின்** (Cymbeline), **கார்காலக் கதை** (The Winter's Tale), **ஒதெல்லோ** (Othello) ஆகிய நான்கு கதைகளும் வெளிவருகின்றன.

இப்பதிப்பில் சிறுவர்கட்குக் கதைகள் நன்றாய் மனத்திற் பதியும்பொருட்டுக் கதை உறுப்பினர்களையும் கதைச் சுருக்கத்தையும் ஒவ்வொரு கதையின் முகப்பில் எழுதிச் சேர்த்திருக்கிறோம்.

இளைஞர்கள் படித்து இன்புறத்தக்க எளிய இனிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆதலின், இவற்றைக் கற்கும் மாணவர் அறிவு வளர்ச்சியுடன் மொழித் தேர்ச்சியும் பெறுவர்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| **1.** | **நடுவேனிற் கனவு** | | |
| | கதை உறுப்பினர் | ... | 1 |
| | கதைச் சுருக்கம் | ... | 2 |
| க. | காதலுக்காகக் கானக மேகுதல் | ... | 3 |
| உ. | வன அரசன் காதற்பிணக்கு | ... | 5 |
| ங. | காதலர் குழப்பம் | ... | 11 |
| ச. | கழுதைமீது காதல் | ... | 16 |
| ரு. | முடிவு | ... | 21 |
| **2.** | **சிம்பலின்** | | |
| | கதை உறுப்பினா | ... | 24 |
| | கதைச் சுருக்கம் | ... | 25 |
| க. | காதலர் பிரிவு | ... | 27 |
| உ. | ஒரு புதுமையான பந்தயம் | ... | 29 |
| ங. | வஞ்சகன் வஞ்சம் | ... | 31 |
| ச. | வீண் பழி | ... | 34 |
| ரு. | படுகுழிப் பிழைத்தல் | ... | 37 |
| சா. | இயற்கையின் ஆற்றல் | ... | 39 |
| எ. | மயக்க மருந்து | ... | 43 |
| அ. | போர் | ... | 46 |
| கூ. | முடிவு | ... | 48 |

பக்கம்

3. கார்காலக் கதை

| | | | |
|---|---|---|---|
| | கதை உறுப்பினர் | ... | 53 |
| | கதைச் சுருக்கம் | ... | 54 |
| க. | நட்பின்பம் | ... | 55 |
| உ. | பொறாமைப் பேய் | ... | 57 |
| ந. | ஆவாரை யாரே அழிப்பர் | ... | 62 |
| ச. | சேராதவரையும் சேர்த்துவைக்கும் காதல் | ... | 62 |
| ரு. | திரை நீக்கம் | ... | 66 |
| சா. | ஓவியமா உயிருருவமா | ... | 69 |

4. ஒதெல்லோ

| | | | |
|---|---|---|---|
| | கதை உறுப்பினர் | ... | 73 |
| | கதைச் சுருக்கம் | ... | 74 |
| க. | ஒதெல்லோவின் காதல் | ... | 75 |
| உ. | அயாகோவின் பொறாமைப் புயல் | ... | 82 |
| ந. | காசியோ மீது குற்றச் சாட்டு | ... | 84 |
| ச. | டெஸ்டிமோனாவின் இல்வாழ்க்கைக்கு உலை | ... | 87 |
| ரு. | பொய்யும் சொல்வன்மையால் மெய்யாம் | ... | 91 |
| சா. | கைக்குட்டையே கழுத்துக் குட்டையாதல் | ... | 94 |
| எ. | டெஸ்டிமோனாவின் முடிவு | ... | 98 |
| அ. | புயலுக்குப் பின் | ... | 102 |

# சிறுவர்க்கான
# ஷேக்ஸ்பியர் கதைகள்
## (மூன்றும் புத்தகம்)

---

## 1. நடுவேனிற் கனவு

### (கதை உறுப்பினர்)

**ஆடவர்**

1. **தீஸியஸ்** :—அதேன்ஸ் நகரத்து அரசன்.
2. **ஈஜியஸ்** :—அதேன்ஸ் நகரத்தான்—ஹெர்மியாவின் தந்தை.
3. **லைஸாண்டர்** :—ஹெர்மியாவின் காதலன்.
4. **தெமத்ரியஸ்** :—ஹெலனாவின் பழங்காதலன்—ஈஜியஸால் ஹெர்மியாவுக்கு மணமகனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவன்.
5. **ஓபிரான்** :—வனதெய்வங்களின் அரசன்.
6. **பக் அல்லது (நற்றோழன் ராபின்)** :—ஓபிரானுக்கு அமைச்சனும் விகடனும்.
7. **பாட்டம்** :—நாட்டுப்புற நாடகக் குழுவின் தலைவன்—பக்கால் கழுதைத்தலை தரப்பட்டு, திதானியா காதலைப் பெற்றவன்.
8. **நூலாம்படை** } வன அரசி திதானியாவின் பணியாட்கள்.
9. **கடுகு வெடிப்பு** }

**பெண்டிர்**

1. **ஹிப்பாலிதா** :—தீஸியஸ் மணந்து கொள்ளவிருக்கும் பெண்ணரசி.
2. **ஹெர்மியா** :—ஈஜியஸின் மகள்—லைஸாண்டர் காதலி.
3. **ஹெலனா** :—ஹெர்மியாவின் உயிர்த் தோழி—தெமெத்ரியஸைக் காதலித்தவள்.
4. **திதானியா** :—வன அரசி—ஓபிரான் மனைவி—மாய மலரின் மயக்கத்தில் கழுதைத்தலைப் பாட்டமின் காதலி.
5. **பயற்று நெற்று** } வன அரசி திதானியாவின் பணியாட்கள்.
6. **விட்டில் பூச்சி** }

# கதைச் சுருக்கம்

அதேன்ஸ் நகரத்தில் அரசன் தீஸியஸிற்கும் ஹிப்பாலிதாவுக்கும் மணவினை ஏற்பாடாயிற்று. அதற்கிடையில் ஈஜியஸ் என்பவன் தான் தேர்ந்தெடுத்த மணமகனாகிய தெமெத்ரியஸை மறுத்து லிஸாண்டரை மணக்க விரும்பும் தன் மகள் ஹெர்மியாவுக் கெதிராக வழக்குக் கொண்டுவந்தான். அரசன் நாலுநாள் தவணைதர, ஹெர்மியா லிஸாண்டருடன் வேறிடம் சென்று மண முடிக்கத் தீர்மானித்தாள். இதனை அறிந்த அவள் தோழி ஹெலனா தான் காதலித்த தெமெத்ரியஸிடம் சொல்ல, அனைவரும் காட்டில் இரவில் ஒன்று கூடினர்.

காட்டில் வன அரசன் ஓபிரானுக்கும் வன அரசி திதானியாவுக்கும் ஒரு சிறு இந்தியப் பையனைக் கைக்கொள்ளும் வகையில் ஏற்பட்ட பிணக்கால் வன அரசன் தன் துணைவன் பக்கின் உதவி கொண்டு உறங்கி எழுந்தவுடன் கண்டவரைக் காதலிக்கச் செய்யும் மாயமலரைக் கொணரச் செய்தான். அப்போது பக் தீஸியஸுக்காக நாடகம் நடிக்கவந்த நாட்டுப்புறத்து மக்கள் தலைவனும் பாட்டம் தலைமீது கழுதைத் தலையை வைத்து அதனைத் திதானியா காதலிக்கும்படி செய்தான்.

இதே மாயமலரைப் பயன்படுத்தி தெமெத்ரியஸை ஹெலனா மீது காதல் கொள்ளச்செய்ய ஓபிரான் எண்ணினான். ஆனால் பக்கின் பிழையால் அது லிஸாண்டர் கண்மீது பட அவன் ஹெர்மியாவைவிட்டு ஹெலனாவைப் பின்பற்றினான். பிழைகண்டு திருத்துகையிலும், தெமெத்ரியஸ் கண்ணில் மலரிட்டு அவனையும் ஹெலனா பக்கமே திருப்பினான். தோழியர் இருவரும் இந்நிலையைத் தாமே அறியாமல் பூசலிட்டனர். ஓபிரான் இறுதியில் தெளிவுபெற்று அனைவரையும் உறங்கவைத்து லிஸாண்டர் கண்ணில் மாற்று மலரிட்டான். இதே சமயம் கழுதைத் தலையனுடன் அளவளாவும் திதானியாவிடமிருந்து இந்தியப் பையனை அடைந்த பின் அவள் கண்களிலும் ஓபிரான் மாற்று மலரிட்டான்.

விழித்தெழுமுன் தீஸியஸும் ஈஜியஸும் பிறரும் வேட்டையாடவந்து காதலர் மனமாற்றங் கண்டு, வியப்பும் மகிழ்ச்சியும் பெற்றனர். அரசன் மணத்துடன் காதலர் மணங்களும் சிறக்க நடந்தேறின. மண இரவில் வன தெய்வங்கள் மணப் படுக்கைகளைச் சுற்றி வாழ்த்துப்பாடின.

# க. காதலுக்காகக் கானக மேகுதல்

[1]அதேன்ஸ் நகரத்தில் ஒரு புதுமையான சட்டம் உண்டு. அதன்படி ஒரு பெண் தன் தந்தை கருத்துக்கிசைந்த கணவனை ஏற்க மறுத்தால் அவள் கொலைத் தீர்ப்புக்கு உரியவள் ஆகவேண்டும். ஆயினும், பொதுவாக எவரும் தாம் பெற்ற புதல்வியரை இழக்க விரும்பாததால் இயற்கைக்கு மாறான இச்சட்டம் நடைமுறையில் வழங்காமலே இருந்தது.

ஆயினும், ஒரு தடவை மட்டும் [2]ஈஜியஸ் என்பவன் இச்சட்டத்தின் பெயரால் தன் புதல்வியாகிய [3]ஹெர்மியாமீது அதேன்ஸ் அரசராகிய [4]தீஸியஸ் முன்பாக வழக்குத் தொடுத்தான். உயர் குடியிற் பிறந்த [5]தெமத்ரியஸ் என்னும் இளைஞனுக்கு அவளை மணம் செய்விக்க வேண்டுமென்று ஈஜியஸ் விரும்பினன். ஆனல், அவள் [6]லைஸாண்டர் என்ற வேறோர் இளைஞனையே மணஞ்செய்துகொள்ள விரும்பியதனல் தந்தையின் ஆணைப்படி நடக்க மறுத்தாள். இக்குற்றத்திற்காகச் சட்டப்படி அவளைத் தண்டிக்க வேண்டும் என்று ஈஜியஸ் வேண்டிக்கொண்டான்.

ஹெர்மியா இதற்கு எதிராக, ‘தெமத்ரியஸ் என்பவன், முன் [7]ஹெலெனு என்ற பெண்ணைக் காதலித்திருந்தான். அந்த ஹெலனு இன்னும் அவனையே எண்ணி எண்ணி வாடுகின்றனள். தெமத்ரியஸ் அவளை மணந்துகொள்ளாவிட்டால் அவள் வீணே உயிரிழக்க நேரிடும்’ என்று வழக்காடினுள்.

---

[1]Athens. [2]Egeus. [3]Hermia. [4]Theseus. [5]Demetrius. [6]Lysander. [7]Helena.

தீஸியஸ் பெருந்தன்மையும் அருளும் உடைய அரசர். ஆயினும், அவர் அதேன்ஸின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவராயிருந்தார். எனவே அவர் இவ்வகையில் நன்காராய்ந்து ஒரு முடிவுக்கு வர ஹெர்மியாவுக்கு நான்கு நாட்கள் தவணை கொடுத்தார். 'அத் தவணைக்குள் தந்தையின் விருப்பப்படி நடப்பதாக ஒப்புக்கொள்ளாவிட்டால் உன்னை நான் கொலைத் தீர்ப்புக்கு ஆளாக்கவேண்டி வரும்' என்று அவர் அவளிடம் கூறினார்.


லிஸாண்டரும் ஹெர்மியாவும்

ஹெர்மியா, தீஸியஸின் வழக்கு மன்றத்தினின்று நேராகத் தன் காதலனாகிய லிஸாண்டரிடம் சென்று தமது இக்கட்டான நிலைமையை எடுத்துக் கூறினாள்.

இது கேட்டு லிஸாண்டர் மிகவும் மனம் உடைந்தான். பின் அவன் ஒருவாறு தேறி, 'அதேன்ஸினின்றும் சிறிது தொலைவில் எனக்குச் சிற்றன்னை ஒருத்தி இருக்கிறாள். அவள் உறைவிடம் நகர் எல்லைக்கு வெளியில் உள்ளது. இக்கொடிய அதேனியச் சட்டத்தின் ஆட்சி அவ்விடத்தில் செல்லாது. ஆதலால், இன்றிரவே அவ்விடத்துக்கு இருவரும் சென்று மணம் புரிந்துகொள்வோம்,' என்றான். ஹெர்மியாவும் அதற்கிணங்கினாள். "வேனிற் காலத்தில் நாம் இருவரும் களிப்புடன் நகர்ப்புறத்துக் காட்டில் உலவுவ

துண்டன்றோ? அதே இடத்தில் இன்றிரவு நான் உன்னுடன் வந்து சேர்கிறேன்," என்று கூறிவிட்டுச் சென்றான்.

மகிழ்ச்சி தரும் இச்செய்தியை ஹெர்மியா தன் தோழி ஹெலனாவுக்கு மட்டிலுமாவது சொல்லாதிருக்க முடியவில்லை. காதலர் கண்ணற்றவர் என்ற கருத்திற்கிணங்க, ஹெலனா அதனைத் தெமத்ரியஸுக்கு உரைத்தாள். தன் தோழிக்குத் தீங்கு இழைக்கவேண்டும் என்பது அவள் கருத்தன்று. ஆயினும், தானும் தன் காதலனைத் தொடர்ந்து காட்டிற்கேகலாம் என்ற ஆர்வம் இச்செயலைச் செய்யும்படி அவளைத் தூண்டிற்று.

## உ. வன அரசன் காதற் பிணக்கு

லைஸாண்டரும் ஹெர்மியாவும் வந்து சேர எண்ணிய காடு, குற்றுரு உடைய [1]வனதெய்வங்களின் நடமாட்டத்துக்குரிய இடமாக இருந்தது.

அத் தெய்வங்களின் அரசன் [2]**ஓபிரான்**; அரசி [3]**திதானியா.** அவ்விருவரும் அவர்கள் குழாங்களும் அக் காட்டிடையே தங்கள் நள்ளிரவு விழாவைக் கொண்டாட வந்திருந்தனர்.

இவ்வன அரசனுக்கும் அரசிக்கும் இடையே ஒரு வருத்தந் தரும் பிணக்கு ஏற்பட்டது. அதன் பயனாக அவ்விருவரும் வழக்கம்போல் அவ்வடர்ந்த காட்டில் முழு நிலவெறிக்கும் இரவுகளில் ஒன்றாய் உலாவுவதில்லை. அவர்களது குழாத்தைச் சேர்ந்த சிறுதெய்வ

[1]Fairies. [2]Oberon. [3]Titania.

வடிவங்களும் அவர்கள் இருவரது சீற்றத்திற்கு அஞ்சி வாதுமைக்கொட்டைகளுக்குள் சென்று ஒளிந்து கொள்ளத் தொடங்கின.



வன தெய்வங்கள்

இப்பிணக்கிற்குக் காரணம் இந்தியாவிலிருந்து திதானியா கொண்டுவந்த ஓர் அழகிய சிறுவனே யாவன். அவன் முன்னம் திதானியாவுக்குத் தோழி யாயிருந்த ஒருத்தியின் புதல்வன். அவன் தாய் இறந்தபின் அப் பையனைத் திதானியா அவனுடைய வளர்ப்புத் தாயிடமிருந்து கைப்பற்றித் தானே வளர்த்து வந்தாள்.

காதலர் கானகத்தே வருவதாகச் சொன்ன இரவில், திதானியா தன் உரிமைத் தோழியருடன் உலாவிக்கொண்டிருந்தாள். அப்போது ஒபிரானும் அவன் குழாத்தினரும் எதிரே வந்தனர்.

ஒபிரான்: 'இறுமாப்பு மிக்க திதானியா! உனது வருகை என் மனத்திற்கு வெறுப்பையே தருகின்றது.

திதானியா : 'பொறுப்பற்ற அரசே! வருவது நீ என்பதை நான் காணவில்லை. தோழியரே! இவருறவு தகாது. இவ்விடம் விட்டு விரைவில் அகலுங்கள்.'

ஓபிரான் : 'துணிச்சல் மிக்கவளே, சற்று நிற்பாயாக! நான் உன் கணவன் என்பதை நீ மறந்து விட்டாய்போலும்! தன் ஓபிரான் விருப்பத்திற்குத் திதானியா ஏன் மாருக நடக்கவேண்டும்? அச்சிறுவனை எனக்குப் பணியாளாகத் தருக.'

திதானியா : 'அவ்வகையில் உமக்கு நெஞ்சு துடிக்கவேண்டாம். உமது வன அரசு முற்றிலும் கொடுத்தாலுங்கூட அச்சிறுவனை நீர் பெற முடியாது.'

இக் கடுஞ் சொற்களுடன் திதானியா மிகுந்த சினத்துடன் சென்ருள். ஓபிரானும், 'இப்போது நீ செல்க; விடியுமுன் இதற்காக உன்னை என்ன பாடு படுத்துகிறேன் பார்' என்று கறுவிக்கொண்டான்.



பக்

ஓபிரான் அதன்பின், தன் குறிப்பறிந்து நடக்கும் தோழனும் முதல் அமைச்சனுமாகிய [1]**பக் (அல்லது நற்ரேழன் ராபின்)** என்பவனைத் தன்னிடம் அழைத்தான்.

பக் கூரிய அறிவும் குறும்புத்தனமும் உடையவன். அவனை நேரில் கண்டவர் மிகச் சிலரேயாயினும் அவன் கைத்திறனை அறிந்தவர் பலர். அவன் குறும்புகள் எண்ணில்லாதவை. நாட்டுப் புறப் பெண்கள்

[1]Puck or Robin Good-fellow.

பக்கமாக மறைந்து நின்று கூவி அச்சம் விளைவிப்பான். தயிர்கடைவோர் கலங்களில் புகுந்து வெண்ணெய் திரளாமல் தடுப்பான். பால்பருகுவோர் கிண்ணங்களிலிருந்து நண்டு உருவில் துள்ளி அவர்கள் பாலைக் கொட்டும்படி பண்ணுவான். முக்காலி உருவில் ஆராய்ச்சியாளர் முன் கிடப்பான். அவர்கள் உட்காரப் போகும்போது சற்றே சறுகி அவர்களை விழப் பண்ணி எல்லாரையும் சிரிக்க வைப்பான்.

ஒபிரான் பக் வந்ததும், 'என் அரிய நண்ப! முன் ஒரு நாள் நாம் பேசிக்கொண்டிருக்கையில், கடற்பன்றியின்மீது சென்ற ஒரு கன்னித் தெய்வத்தின் மேல் காமன் கணை தொடுத்ததைப் பார்த்தோமல்லவா? அக்கணை அவள்மீது விழாமல் தவறி ஒரு வெண் மலர்மீது விழுந்து அதனைச் சிவப்பாக்கியதை நீ பார்த்திருக்கலாம். அம் மலருக்குக் [1]**காதலர் மாய மலர்** என்று பெயர். அதன் சாற்றை உறங்குவோர் கண்களிற் பிழிந்தால், எழுந்தவுடன் முதலிற் கண்ட ஆள் அல்லது பொருளின்மேற் காதல் கொள்வர். அம் மலரை நீ எனக்குப் பறித்துக் கொண்டுவா. அதன் சாற்றை நான் திதானியாவின் கண்களில் பிழிந்து, அவளை எள்ளி நகையாட வழிதேடப் போகிறேன். அப்போது அவள் என் வழிக்கு வருவாள். அதன்பின் அதற்கு மாற்றான ஒரு மலரைப் பிழிந்து அம்மாயக் காதலை நீக்கிவிடுவேன்' என்று சொன்னான்.

மாய மலரைப் பறிக்கப் பக் சென்றபின் தெமத்ரியஸும் ஹெலனாவும் காட்டு வழியே வருவதை

---

[1]Love-in-idleness.

ஓபிரான் கண்டான். ஹெலனு தெமத்ரியஸிடம் தன் காதலையும் அதன் உறுதிப்பாட்டையும் பற்றிப் பேச முயன்றாள். ஆனால் அவன் அவளிடம் கடு மொழிகள் பேசி அவள் தன்னைத் தொடரவேண்டா என்று தடுத்துத் தள்ளிவிட்டுப் போனான்.

வன அரசன் காதலர்களிடம் என்றும் பரிவுடை யவன். அதிலும் ஹெலனு நெடுநாளாய் தெமத்ரிய ஸிடமே மாறாப் பற்றுக்கொண்டிருப்பது தெரிந்து, அவளிடம் அவனுக்கு நல்லெண்ணம் உண்டாயிற்று. எனவே தனது மாய மலர் மூலம் அவளுக்கும் நலம் செய்ய எண்ணங் கொண்டான். பக் அம்மலரைக் கொண்டுவந்ததும் அவன் பக்கினிடம், 'இம்மலரின் ஒரு பகுதியை நான் எடுத்துக்கொள்கிறேன். இன் னொரு பகுதியை நீ கொண்டுபோ. அதேனிய இளைஞனொருவனும் மங்கை ஒருத்தியும் இக்காட்டில் செல்கின்ற னர். அவர்களைச் சரியாக அடையா ளங் கண்டு, மங்கையைக் காதலிக்கும் படி இளைஞன் கண்களில் மாய மலர்ச் சாற்றைப் பிழிவாயாக,' என்றான். பக் அங்ஙனமே செய்வதாகக் கூறி அகன் றான்.


திதானியா

அதன்பின் ஓபிரான், திதானியா அறியாது அவள் தங்கும் மலர்ப் படுக் கையை அணுகினான். அங்கு மல் லிகை, முல்லை, சண்பக முதலிய நறு மலர்கள் பூத்துக் கிடந்தன. திதா னியா ஒரு மலரணைமீது பாம்பின் தோலை ஆடை

யாக உடுத்துக்கொண்டு வீற்றிருந்தாள். அவளுடைய தோழியராகிய வனதெய்வங்கள் அவள் பணியைத் தலைமேற்கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைச் செய்துகொண்டிருந்தனர். சிலர் மல்லிகை மொட்டுக்களைத் தின்னும் புழுக்களைக் கொல்லும் வேலையிலீடுபட்டிருந்தனர். சிலர் வெளவால்களுடன் போர் புரிந்தனர். இப்போர்களிற் கொன்ற வெளவால்களின் தோலினாலேதான் வனதெய்வங்கள் ஆறுகளைக் கடக்கும் படகுகளைச் செய்து வந்தனர். சிலர், அருவருக்கத்தக்க குரலும் உருவும் உடைய ஆந்தைகள் வந்து வன அரசிக்கு ஊறு செய்யாமற் காவலிருந்தனர். இன்னும் சிலர் வன அரசி உறங்கும்வண்ணம் அவளுக்குத் தாலாட்டுப் பாட்டுப் பாடினர்.

### (பாட்டு)

**முதல் வனதெய்வம்**

வகிர்ந்த நாவும் புள்ளியுங் கொண்ட
வன்கட் பாம்பீர்! வாராதீர்!
பகர்ந்த பல்லியீர்! பதுங்கு நாங்கூழ்ப்
புழுவீர்! அரசியைப் பாராதீர்!

**(பல்லவி)**

கானக்குயிலீர் இசையுடனே
பாடீர் எம்முடன் நசையுடனே;
தனனத் தனனத் தானனை
தானத் தனன தானனை
தீங்கு செய்யாதீர்! தீங்கான
மந்திர மெதுவுந் தந்தெமதரசி
நொந்திட எதுவும் நேராதீர்!

**இரண்டாம் வனதெய்வம்**

வலைபுரி எண் கால் சிலந்திப் பூச்சியிர் !
வார்ந்தநும் நூல்கொடு சாராதீர் !
அலைவரி விட்டிலிர் ! நத்தையிர் ! புழுவிர் !
அரசியின் துயிலினைப் பேராதீர் !

**(பல்லவி)**

கானக்குயிலீர்

இப் பாட்டைக் கேட்டுக்கொண்டே திதானியா உறங்கிவிட்டாள். அவள் தோழியரும் தத்தம் வேலையைச் செய்யப் போயினர். அதன்பின் ஓபிரான் ஓசை செய்யாது திதானியா பக்கம் வந்து,

விழித்தெழு பொழுதினில் விழிப்படு பொருளே
விருப்பினுக் குரிதா விளங்குக பெரிதே ;

என்று கூறிக்கொண்டு மாய மலரின் சாற்றை அவள் கண்களிற் பிழிந்தான்.

## ௩. காதலர் குழப்பம்

அதேனியச் சட்டத்திற்கஞ்சிக் காட்டிற்கு வந்த ஹெர்மியாவும் லைஸாண்டரும் சிறிது தொலைவு நடந்து பின் களைப்புற்று உறங்கினர். அப்போது பக் அவர்களைக் கண்ணுற்ருன். ஓபிரான் கூறிய அதேனியக் காதலர் இவர்களே என்று நினைந்து அவன் லைஸாண்டரின் கண்களில் மாய மலரின் சாற்றைப் பிழிந்தான். அதன்பின் அவ்வழியே ஹெலனு வந்தாள். தற்செயலாக லைஸாண்டர் விழித்தபோது அவளைப் பார்க்க நேர்ந்தது. மாய மலரின் ஆற்றலால் உடனே அவன் ஹெர்மியாவின் காதலை மறந்து ஹெலனுவைக் காதலித்தான்.

ஓபிரான் பக்கினிடம் மாய மலரை அனுப்பிய போது காதலில்லாத ஓரிடத்துக் காதலை உண்டுபண்ணவே விரும்பினன். ஆனல், நடந்தது இதற்கு நேர் மாருய்விட்டது. காதலிருந்த இடத்தில் அதனை அகற்றி, இருந்த குழப்பத்தை இன்னும் மிகுதியாக்கிற்று அது. ஹெலனு முதலிலேயே தெமத்ரியஸைப் பின்பற்றிச் செல்ல முயன்று, பின்பற்ற முடியாமல் பின்னிடைந்து தனியே வந்துகொண்டிருந்தாள். அதற்கிடையில் இப்பொழுது அவளுக்கு லைஸாண்டர் காதலிப்பது இயற்கை அன்ருகலின் அவன் அவளைக் கேலி செய்வதாகவே அவள் நினைத்தாள். 'எல்லாருடைய ஏளனத்திற்கும் ஆளாக நான் ஏன் பிறந்தேன்? தெமத்ரியஸின் வெறுப்பால் நான் புண்பட்டிருப்பது போதாதா? நீரும் சேர்ந்து வேறு என்னை அவமதிக்கவேண்டுமா? நான் உம்மை நல்ல உள்ளம் உடையவர் என்றன்ருே நினைத்திருந்தேன். நீர் என்னிடம் இப்படிக் கொடுமை காட்டலாமா?' என்று அவள் சினந்து கூறிக்கொண்டு சென்ருள். அவள் கடுமொழிகளைத் தாங்கிக் கொண்டு லைஸாண்டர் அவளையே விடாமற் பின்பற்றினன்.

ஹெர்மியா விழித்தெழுந்தபோது லைஸாண்டர் அங்கில்லை. தனியே இருப்பதில் அவளுக்கும் அச்சம் ஏற்பட்டது. லைஸாண்டருக்கு என்ன நேர்ந்ததோ என்ற கவலையும் உண்டாயிற்று. அவனைத் தேடித் தேடி அவள் காடெங்கும் அலைந்தாள். இதற்கிடையில் ஹெலனுவை வெறுத்துத் தள்ளிவிட்டு முன் சென்ற தெமத்ரியஸ் காட்டில் இன்ெருருபுறம்

தூங்குவதை ஓபிரான் கண்டான். தெமத்ரியஸ் என்று நினைத்துக்கொண்டு பக் உண்மையில் லைஸாண்டர் கண்களிலேயே மாயச்சாற்றைப் பிழிந்துவிட்டான் என்பதை ஓபிரான் கண்டுகொண்டான். இப்போது தான் குறிப்பிட்ட இளைஞனையே நேரில் பார்த் தாயிற்று. எனவே, அவன் கண்களில் அப்பொழுதே மாயச்சாற்றைப் பிழிந்தான். சற்றுநேரம் சென்றபின் அவ்வழியே லைஸாண்டரும் ஹெலனுவும் வந்தனர். அவர்கள் ஓசை கேட்டு விழித்த தெமதரியஸ் முதன் முதலாக ஹெலனுவைக் கண்டான். காணவே அவன் இதுகாறும் அவளிடம் காட்டிய வெறுப்பை மறந்து காதல் மொழிகள் பகரத் தொடங்கினான்.

உண்மையில் தெமத்ரியஸின் காதலையன்றி வேறெதனையும் ஹெலனு விரும்பினாளல்லள். ஆயினும் அவனும் லைஸாண்டரும் தன்னிடம் காதல் மொழிகள் கூறுவதைக் கண்ட அவள் அது தன்னைக் கேலி செய்வதற்காகவே என நினைத்தாள். ஹெர்மியாவே ஒருவேளை அவளைக் காதலித்த இருவரையும் ஏவி இந்நாடகம் நடிக்கச் செய்திருக்கலாம் என்றும் அவளுக்குப் பட்டது.

ஹெலனுவுக் கெப்படியோ, அப்படியே ஹெர்மியாவுக்கும் இச் செய்தி விளங்கவில்லை. ஹெலனுவை வெறுத்திருந்த தெமத்ரியஸ் அவளைக் காதலித்ததே புதுமை. ஆனால், அது களிப்புத் தரும் புதுமையேயாகும். அதோடு தன் காதலனும் சேர்ந்து அவளைக் காதலிப்பது அவளுக்கு ஏன் என்று விளங்கவில்லை? முதலில் அது கேலி எனக்கொண்டு அவள் அவனை அணுகினாள். ஆனால், விரைவில் அவன் உண்

மையாகவே சீறுகிறுன் என்பது அவளுக்குத் தெரிந்தது. ஹெலனு ஏதோ மாயத்தால் தெமத்ரியஸை மயக்கியதோடு தன் காதலனையும் மயக்கினுள் என்று அவள் நினைத்தாள்.



ஹெர்மியாவும் ஹெலனுவும்

இதுகாறும் தோழியர் இருவரும் ஒற்றுமையாய் இருந்தனர். இப்பொழுது இக் காதற் சுழலில்பட்டு ஒருவரை ஒருவர் ஏசியும் தாக்கியும் பூசலிட்டனர்.

'ஹெர்மியா, நீ இப்படிக் கொடியவள் ஆவாய் என்று நான் நினைக்கவில்லை. உன்னுடையலைஸாண்டரைக்கொண்டு என்னைப் பொய்யாகப் புகழ்ந்து ஏளனம் பண்ணச் செய்கிருய். அதோடு என்னைக் காலால் உதைத்தால் கூடக் கால் கெட்டு விடும் என்று முதுகைத் திருப்பிக்கொண்டோடும் என் தெமத்ரியஸையும் எனக்கெதிராகத் தூண்டிவிட்டாய். அவ்வளவு வெறுப்பையும் இப்போது அவன் வஞ்சப் புகழ்ச்சியாக்கி என்னைத் "தெய்வப் பெண்ணே! வனமாதே! மாணிக்கமே!" என்றழைக்கிருன். உன் பழைய பள்ளித்தோழியை இப்படி ஆண்பாலாருடன் சேர்ந்துகொண்டு எள்ளி நகையாட உனக்கு எப்படி மனம் வந்ததோ? நாமிருவரும் ஒரே இருக்கையில் இருந்து, ஒரே பாட்டைப் படித்துக்

களிப்புடன் உரையாடிக்கொண்டு ஒரே மாதிரியாய்ப் பூத் தைத்தோமே! ஒரே காம்பிற் பழுத்த ஈரொட்டுப் பழங்கள் போலன்றோ நாம் வாழ்ந்தது?' என்று ஹெலனு குறைகூறினுள்.

ஹெர்மியா இதற்கு மாருக, 'உன் சொல்மழை எனக்கு வியப்பைத் தருகிறது. நான் ஏளனம் செய்வதாகக் கூறிக்கொள்கிருய். ஆனுல் ஏளனம் செய்வது நானு? நீதானே. அதற்குமேல் என்னைக் குறை சொல்லவுந் துணிந்தாய்!' என்ருள். ஹெலனு, 'அது தான் சரி. அப்படியே நீ தொடங்கியதை விடாமல் நடித்துக் காட்டு. இப்படியே என் கண்முன் நாடகம் நடத்திவிட்டு என் முதுகு திரும்பியதும் ஒருவருக்கொருவர் கண்ணடித்து என்னை ஏளனம் செய்யுங்கள். இறையளவாவது உங்களுக்கு நட்போ, ஒழுங்கு முறையோ, நாகரிகமோ இருக்குமானுல் என்னை இப்படி நடத்துவீர்களா?' என்று இடித்துக் கூறினுள்.

தோழியர் இருவரும் இப்படிச் சொற்போற் தொடுத்துக்கொண்டிருந்தனர். அதே சமயம் ஹெலனுவின் காதலுக்கு நீ நான் என்று போட்டியிட்டு மற் போர் தொடுக்கும் எண்ணத்துடன் லைஸாண்டரும் தெமத்ரியஸும் அவர்களை விடுத்து அப்பாற் சென்றனர். அதைக் கண்டு அத்தோழியர் இருவரும் தம் முட் சண்டை செய்வதை விட்டுவிட்டுத் தத்தம் காதலரைத் தேடிச் சென்றனர்.

அவர்கள் குழப்பங்களனைத்தையும் கூர்ந்து கவனித்தான் ஒபிரான். பக்கை நோக்கி, 'இவையெல்லாம் உன் திருவிளையாடல்கள்; வேண்டுமென்றுதான்

இப்படிச் செய்திருப்பாய் நீ' என்றான். 'அப்படி ஒன்றும் இல்லை, ஐயனே! அதேனியக் காதலர் என்று தானே நீங்கள் சொன்னீர்கள். அதனையே குறிப்பாகக்கொண்டு சென்றேன். இவர்களும் அதேனியர்களே; ஆதலால் ஏமாந்தேன்; ஆனால் இப்பொழுது இக் குழப்பம் பார்ப்பதற்கு எனக்கு மகிழ்ச்சியாக இருப்பதைமட்டும் என்னால் மறுக்கக்கூடவில்லை' என்றான் குறும்பில் விருப்புடைய பக்.

ஓபிரான் 'சரி; போனது போகட்டும்; மற்போர் புரியச் சென்றிருக்குங் காதலர்கள் ஒருவரிடமிருந்து ஒருவரை எதிரியின் குரலில் பேசிப் பிரித்துக்கொண்டு போய் உறங்கவை. அதன்பின் மாயமலருக்கு மாற்றாகிய இம் மலர்ச்சாற்றை லைஸாண்டர் கண்களிற் பிழிந்துவிடு' என்று சொல்லி வேறொரு மலரைக் கொடுத்தான். அதன்பின்பு அவன் திதானியா வகையில் தான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றச் சென்றான்.

## ௪. கழுதைமீது காதல்

இதற்கிடையில் நகரில் தீஸியஸ் மன்னன் திருமணத்திற்கு நாடகமாடத் தொழிலாளார் சிலர் எண்ணம் கொண்டனர். 'நகரில் சிறுவர் தொந்தரவு செய்வர். இரவில் நிலவு வெளிச்சத்தில் காட்டிற்குப் போய் ஒத்திகை நடத்துவோம்' என்று அவர்கள் முடிவு செய்தனர். தற்செயலாக அவர்கள் திதானியா உறங்கிக்கொண்டிருக்கும் மலர்ப்படுக்கையருகிலேயே தங்கள் ஒத்திகையை நடத்த நேர்ந்தது. அதில் தலைமையான நடிகர் நிலையில் நடித்தவன் [1]பாட்டம்

---

[1]Bottom.

என்பவன். அவன் ஒரு கோமாளியே எனினும் கல்வி யறிவற்ற அத்தொழிலாளர் கூட்டத்தில் அவன் தலைவனுகக் கருதப்பட்டான். இதனுல் அவனுக்கு ஓர் இறுமாப்பும் பெருமித நடையும் ஏற்பட்டன. அவனுடைய கோமாளித்தனத்தை இவை மிகைப்படுத்தினவேயன்றி வேறல்ல.

திதானியாவை ஏளனம் செய்து பணியவைக்க இவனே சரியான பேர்வழி என்று ஓபிரான் நினைத்தான். அவனது கோமாளித்தனத்திற்கேற்ற உருவத்தையும் அவனுக்குக் கொடுக்கவேண்டும் என்று அவன் முடிவு செய்தான். எனவே நாடக ஒத்திகையின் இரு காட்சிகளுக்கிடையில் உருமாற மறைவிடத்துக்கு அவன் வந்த சமயம் பார்த்து அவன் தலைமீது கழுதைத்தலை ஒன்றை வெட்டி வைத்துவிட்டான். அம்மாறுதலை யறியாத கோமாளி வெளியேவர, எல்லாரும் பார்த்துத் திகைத்தனர். சிலர் நகைத்தனர். அது கண்டு பாட்டம் சினங்கொண்டு அவர்கள்மீது சீறி விழுந்தான். அவர்கள் மூலைக்கொருவராகச் சிரிப்பை அடக்க முடியாமல் விலாவைப் பிடித்துக்கொண்டே அகன்ருர்கள்.


பாட்டம்

பாட்டம் நடந்த ஓசையில் திதானியா விழித்துக்கொண்டாள். அப்போது அவள் பார்வை பாட்டத்தின்மேல் விழுந்தது. உடனே அவள் அவன்மீது காதல்கொண்டு,

ஆ! என்ன அழகிய தெய்விக உரு! வெளியழகே இவ்வளவு! அக அழகு எப்படி இருக்குமோ?' என்றாள்.

பாட்டம்: 'ஏன் அம்மணி, அக அழகிருந்தால் அகத்திற்குச் செல்லும் வழி எனக்குத் தென்படாதா?'

திதானியா: 'வேண்டா, வேண்டா, நீ அகம் செல்லவேண்டா. இக் காட்டிலேயே உனக்கு நல்ல அகம் உண்டுபண்ணுகிறேன். நான் மனிதமாதல்லேன்; தெய்வ மாது. எனக்கு உன்மீதுதான் காதல். என்னிடமே நீ வா. உனக்கு என்னுடைய தெய்வ மங்கையர்கள் பணிபுரிவார்கள். அவர்கள் நல்ல ஆட்கள். பெயர்களும் நல்ல பெயர்கள். [1]**பயற்று நெற்று, [2]நூலாம்படை, [3]விட்டில்பூச்சி, [4]கடுகுவெடிப்பு!** என்று சொல்லிக்கொண்டு அவர்களைப் பார்த்து, 'இவ் இனிய செல்வனுக்கு வேண்டிய நலன்கள் தருக. அவன் காண ஆடல் பாடல் புரிவீர்! நறுங்கனிகளும் தேனும் அவனுக்குக் கொண்டுவந்து தருவீர்!' என்று உத்தரவிட்டாள். அதன்பின் அவள் பாட்டத்தைத் தன் அருகில் அழைத்து அவன் தலையைத் தன் தோளில் சாய்த்துக்கொண்டு, 'என் அருமைக் கழுதை மணியே! உன் அழகே அழகு! என்ன நிமிர்ந்தோடிய காதுகள்! என்ன பரந்த கண்கள்!' என்று சொல்லி அவனுடைய அழகில் மயங்கி அவனுக்கு முத்தங்கள் தந்து மகிழலானாள்.

பாட்டமும் இக் காதலைத் தனக்குத் தக்கதாகவே ஏற்றுக்கொண்டான். திதானியாவோ, அவள்

---

[1]Pease-blossom. [2]Cobweb. [3]Moth. [4]Mustard-seel.

காதலோ அவனுக்கு ஒன்றும் புதுமையாகப்பட வில்லை. அரசியின் காதலை ஏற்ற அரசரது நிலையில் உடன் தானே பேசத் தொடங்கினன்.

வன அரசி தன் மயிரடர்ந்த கன்னங்களை வருடு வதையோ, கழுத்தைக் கட்டிக் கொஞ்சுவதையோ அவன் பொருட்படுத்துவதாகக் காட்டிக்கொள்ள வில்லை. அரசியின் காதலை ஒரு சிறு பொருளாகப் பெற்ற ஓர் அரசனது மனப்பான்மையுடன் நடக்கவுந் தொடங்கினன்.

பாட்டம்; ஏனடி, பயற்று நெற்று!

பயற்றுநெற்று: ஐயா, இதோ! உத்தரவு!

பாட்டம்: என் தலையைச் சற்றுச் சொறி. அடா நூலாம்படை!

நூலாம்படை: இதோ, ஐயா!

பாட்டம்: சரி, திருவாளர் நூலாம்படை, சற்று அதோ அந்த முள்முருங்கையின் முகட்டில் இருக்கும் தேனீயைக் கொன்று, அத் தேன் கூட்டைக் கொண்டு வா. வரும்போது தேன் கூட்டை மட்டும் கிழித்து விடாதே. தேன் வழிந்து உன் உடலெல்லாம் வீணுகக் கெட்டுவிடும். சரி, விரைவில் போ. அடே அந்தக் கடுகுவெடிப்புப் பயல் எங்கே?

கடுகுவெடிப்பு: இதோ இங்கேதான் இருக் கிறேன். நான் என்ன செய்யவேண்டும், ஐயா!

பாட்டம்: ஒன்றுமில்லை; இந்தப் பயற்று நெற் றுச் சொறிவது போதாது. கொஞ்சம் துணையாக நின்று சொறி. இங்கே நல்ல அம்பட்டன் விடுதி

ஏதாவது உண்டா? என் முகமெல்லாம் மயிர் அடர்ந்திருக்கிறது. முகம் வழித்துக்கொள்ள வேண்டும்.

இதற்கிடையில் திதானியா அன்புடன், 'என் அருமைக் கழுதையே, உனக்கு உணவுக்கு என்ன விருப்பம்? எனக்கு வனதெய்வம் ஒருவன் இருக்கிறான். அவனைக் கொண்டு அணில் கூடுகளைத் தேடிக் கொட்டைகள் கொண்டுவரச் சொல்லட்டுமா?' என்றாள்.

பாட்டத்துக்குக் கழுதைத் தலையோடுகூட நாவின் சுவையும் கழுதையின் சுவையாய்விட்டது. 'எனக்கு அஃதொன்றும் வேண்டா. கொஞ்சம் வறுத்த கடலையே போதும்! என்றான்.

'எனகு உறககம் கண்ணைக்கட்டிக்கொண்டு வருகிறது. உன் ஆட்கள் கொசுக்கள் போலக் குறு குறு என்று ஓசையிட்டால் நான் உறங்க முடியாது' என்றான் சிறிது நேரங் கழித்து.

திதானியா: 'அவர்கள் ஒன்றும் ஓசை செய்ய மாட்டார்கள். தடையில்லாமல் சற்று என் தோள் மீது சாய்ந்து படுத்துறங்கு. ஆ என் அருமைக் கழுதையே! உன்னை நான் பெற்றதே பேறு!' என்று பாட்டத்தைக் கைகளால் அணைத்து உறங்க வைத்தாள்.

அச் சமயம் மறைவிடத்திலிருந்து ஒபிரான் வெளி வந்து, 'அடடா, வன அரசி இருந்திருந்து கழுதையையா காதலிக்க வேண்டும். மிகவும் நன்றாயிருக்கிறது' என்று நகைத்தான். திதானியா கண்களில் மாயச் சாற்றின் வன்மை இருந்துகொண்டு அவள் விருப்பத்தைக் கழுதைத் தலையன் பக்கமே இழுத்தது.

அதே சமயம் தன்னுடன் பிணங்கிய கணவனது ஏள னத்தையும் அவளால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. அவனை விரைவில் அனுப்பிவிட்டுத் தன் காதலனுடன் தடையின்றி இருக்க விருப்பங்கொண் டாள். ஆகவே, அவன கேட்டபடி தன் சிறிய இந்தி யப்பையனை அவனுக்குக் கொடுத்துவிட்டாள்.

## ரு. முடிவு

தன் காரியம் கைகூடினபின் திதானியா கழுதை யுடன் கிடந்து உறங்குவதைக் கண்டு ஓபிரானுக்கு இரக்கம் வந்தது. ஆகவே அவன் அவள் கண்களில் மாற்றுமலரின் சாற்றைப் பிழிந்தான். அவள் விழித்தெழுந்ததும் தனது பொய்க் காதலை மறந்து ஓபிரானிடமே தன்னியற்கைப்படி காதல் கொள்ளலானாள்.



தெமத்ரியஸனும் ஹெலனாவும்

அதே சமயத்தில் காதலர்கள் குழப்பமும் ஒருவாறு தீர்ந்தது. பக் மற்போருக்கு முனைந்த காதலர்களை அவர்கள் எதிரிகளின் குரலில் தனித்தனி அழைத்துச் சென்று பிரித்தான். பின் அவர்கள் பல விடங்களிலும் சென்று களைப்படைந்தனர். காதலியரும் அதேபோன்று

அலேந்து களேப்படைந்தனர். அனைவரும் பக்கின் சூழ்ச்சித் திறத்தின் பயனுகக் கிட்டத்தட்ட ஒரே இடத்தில் வந்து படுத்துறங்கினர். அப்போது பக் லேஸாண்டர் கண்களில் மாற்றுமலரின் சாற்றைப் பிழிந்தான்.

அவர்கள் எழுந்தபோது தெமத்ரியஸ் ஹெலனு வின் காதலே மறவாது அவளேப் புகழ்ந்தான். அவளும் மயக்கந் தெளிந்து தன் விருப்பங் கைகூடியதென மகிழ்ந்தாள். அதே நேரத்தில் லேஸாண்டர் விழித்த போது அவனே மயக்கிய மாயமலரின் ஆற்றல் மாற்று மலரால் அகன்றுவிட்டது. அவன் பழையபடி ஹெர் மியாவிடம் இன்மொழிகள் கூறினன். அவளும் தான்பட்ட துன்பமனைத்தையும் கனவென உணர்ந்து மகிழ்ந்தாள். தோழியர் இருவரும் இப்போது காதற் சுழலிலிருந்து விடுபட்டுவிட்டனர். இருவரும் தத்தங் காதலரைப் பெற்ற மகிழ்ச்சியில் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர்.

நகரத்தில் மன்னன் தீஸியஸுக்கும், ஹிப்பாலிதா வுக்கும் மணவினே நிகழ்த்த எல்லா ஏற்பாடுகளும் நிறைவேறின. மறுநாள் மண நாள். அவ்விரவு, அரசனுக்கும் அவன் காதல் துணேவிக்கும் மிக நீண்ட தாகத் தோன்றியது. ஆதலால், அதனைக் களிப்புடன் போக்க அவர்கள் காட்டிற்கு வேட்டையாட வந்தனர். ஹெர்மியாவின் தந்தையாகிய ஈஜியஸும் உடன் வந் தான். காட்டில் அவர்கள் ஹெலனுவும் தெமத்ரிய ஸும் பகை நீத்துக் கைகோத்து வருவதைக் கண்ட னர். பக்கத்தில் அதேபோல ஹெர்மியாவும் லேஸாண் டரும் வந்துகொண்டிருந்தனர். தெமத்ரியஸ் இப்

போது லிஸாண்டரிடம் பகைமையும் போட்டியும் கொள்ளாமல் நட்புடையவனு யிருந்தான்.

நிலைமை மாறிவிட்டபடியால், இனித் தன் பிடி முரண்டு செல்லாதென ஈஜியஸ் கண்டான். ஆகவே காதலர் மனப்படி மணம் புரிவிக்க இணங்கினுன். மறுநாள் அரசனது மணவினை நடக்கும்போது அதனுடன் கூடவே இவர்கள் மணவினைகளும் நடந்தேறின. இம் மணவினைப் போதில், பாட்டம் உட்படத் தொழிலாளர் தம் நாடகத்தை நடித்தனர். அஃது உயர்வுடையதா யில்லாவிட்டாலும் காதலரது நகைத்திறனைத் தூண்டி அவர்கள் இன்பத்தைப் பெருக்க உதவிற்று.

மண நாள் இரவு, அனைவரும் படுக்கைக்குச் சென்று உறங்கியதன்பின் வனதெய்வங்கள் தம் அரசன் அரசியுடன் வந்து மணவாழ்த்துப் பாடின.

## (பாட்டு)

1. மன்றற் படுக்கை
ஒன்றன்பின் ஒன்ருய்
நன்றென வாழ்த்திச்
சென்றிடு வோமே !

2. காத லிளைஞர்தம்
காதலி தழுவிப்
போதரு புதல்வர்
தீதற வாழ்க !

3. கருக்கொளு நேரம்
உருக்கொளும் ஓரை
திருப்பெறச் சேர
விருப்புறு வோமே !

4. மறுவறு சாயல்
மகிழ்தரு மென்மை
நெறியுடன் பெற்றவர்
நிலைபெற வாழ்க !

5. பொன்னுயர் பொலிவும்
இன்னுயிர்க் களிப்பும்
நன்னிலக் கிழமையும்
மன்னிட வாழ்க !

# 2. ஸிம்பலின்

## (கதை உறுப்பினர்)

### ஆடவர்

1. **ஸிம்பலின்** :—பிரிட்டன் அரசன்—இமொஜன் தந்தை.
2. **கிளாட்டென்** :—ஸிம்பலினை மணக்குமுன்னைய அரசியின் மகன்.
3. **பாஸ்துமஸ்** ;—போரிலிருந்த வீரன் மகன்—ஸிம்பலின் வளர்ப்புப் பிள்ளை—இமொஜென் காதற் கணவன்.
4. **அயாக்கிமோ** :—பாஸ்துமஸுடன் பழகிய தீய இத்தாலிய இளைஞன்—இமொஜென் வகையில் அவனை ஏமாற்றியவன்.
5. **பீஸானியோ** :—ஸிம்பலின் அரண்மனை வேலையாள்—பாஸ்துமஸின் உண்மை நண்பன்.
6. **பெலாரியஸ்** :—ஸிம்பலினால் நாடு கடத்தப்பட்டு அவன் பிள்ளைகளிருவரையும் கவர்ந்து காடு சென்று வளர்த்தவன்.
7. **கிடரியஸ்** } ஸிம்பலின் பிள்ளைகள்—இமொஜென் உடன்
8. **அர்விராகஸ்** } பிறந்தார்—பெலாரியஸால் கவர்ந்து செல்லப்பட்டுக் காட்டில் வளர்ந்தவர்.

   மாற்றுருவில் **பாலியடார் காட்ஸல்** என்றழைக்கப்பட்டவர்.
9. **லூஸியஸ்** :—ரோம் படைத்தலைவன்—இமொஜெனை ஆணுருவில் ஆதரித்தவன்.
10. **பிடேலே** ::—இமொஜெனுக்கு ஆணுருவில் பெயர்.

### பெண்டிர்

1. **அரசி** :—ஸிம்பலின் இரண்டாம் மனைவி—கிளாட்டென் தாய்—கொடியவள்.
2. **இமொஜென்** :—ஸிம்பலினுக்கு முதல் மனைவியிடம் பிறந்த புதல்வி—கிடரியஸ் அர்விராகஸின் தமக்கை.

   மாற்றுரு—ஆண்—**பிடேலே.**

# கதைச் சுருக்கம்

பிரிட்டனின் அரசன் ஸிம்பலினுடைய முதல் மனைவி இறந்த பின் அவன் வேறுமணம் செய்துகொண்டான். முதல் மனைவியால் இமொஜென் என்ற மகளும் கிடரியஸ் அர்விராகஸ் என்ற இரு புதல்வரும் இருந்தனர். அரசனிடம் பகைமைகொண்ட பெலாரியஸ் என்ற வீரப் பெருமகன் அவர்களைக் கவர்ந்து காடு சென்று ஒரு குகையில் பாலிடோர் காட்வெல் என்ற பெயர்களுடன் அவர்களை வளர்த்து வந்தான்.

அரசி அரசனை மணக்குமுன்னுள்ள தன் மகனாகிய கிளாட்டெனுக்கு இமொஜெனை மணந்து அரசுரிமையைப் பெற எண்ணினாள். ஆனால் இறந்துபோன ஒரு வீரன் மகனும் ஸிம்பலினால் எடுத்து வளர்க்கப்பட்டவனுமான பாஸ்துமஸை அவள் காதலித்து மறைவில் மணஞ்செய்து கொண்டாள். இதனை அறிந்த அரசி பாஸ்துமஸை நாடு கடத்தினாள்.

பாஸ்துமஸ் இத்தாலி நாடு சென்று இன்ப வாழ்விலீடுபட்ட நண்பர்களுடன் காலங்கழித்தான். அவர்களில் ஒருவனாகிய அயாக்கிமோ என்ற தீயவன் அவன் நாவைக்கிளறித் தன் மனைவியின் கற்புடைமைமீது ஆயிரம் பொன் பந்தயம் வைக்கத் தூண்டினான். இமொஜெனைக் கண்டதும் நம்பிக்கை யற்றது. ஆனால் வஞ்சகமாய்ப் பாதுகாப்புக்காக அவளறையில் வைக்கச்சொன்ன பெட்டகத்தி லிடங்கொண்டு உடற்குறி முதலிய மறைச் செய்திகளறிந்து கைவளையையும் கவர்ந்து இவற்றால் பாஸ்துமஸ் தன் பொய்யை நம்பவைத்துப் பந்தயத்தையும் இமொஜென் கணையாழியையும் பெற்றான்.

பாஸ்துமஸ் இதனால் பித்துக்கொண்டு அரண்மனை வேலையாளான பிஸானியோ என்ற தன் உண்மை நண்பனுக்கெழுதி, அவளைக் கொல்லத் தூண்ட, அவன் செய்தியைக் கூறிவிட்டு அவளை விட்டுச்சென்றான். அப்போது அவன் இமொஜெனைக் கொல்ல எண்ணி நஞ்சொன்று மருத்துவனிடம் வாங்கி மருந்

தென்று சொல்லிக்கொடுத்த மயக்க மருந்தையும் அவளிடம் கொடுத்தான். இமொஜென் அதனுடன் தற்செயலாக கிடரியஸ் அர்விராகஸை அடுத்து உடன்பிறந்தார் என்றறியாமல் அவர்களை உடன்பிறந்தாராக நடத்தினுள். பின்னொரு நாள் அயர்வால் அம் மருந்து கொண்டிறந்தாற்போற் கிடக்க, சிறுவர் பூப்பெய்து உடலை அடக்கஞ் செய்து போக, அவள் பின் எழுந்து சென்றுள்.

இச் சமயம் ரோமர் படையெடுக்க, பாஸ்துமஸ், பெலாரியஸ், சிறுவர் "முயற்சியால்" ரோமர் முறியடிக்கப்பட்டார்கள். ஆண் வடிவுள் இமொஜென் ரோமனுகிய லூஸியஸால் ஆதரிக்கப்பெற்று அவனுடன் சிறைப்பட்டாள். பாஸ்துமஸ் உயிர் வெறுத்து ரோமனுக நடித்துச் சிறைப்பட்டான். இமொஜென் கணவனைக் கண்டதுடன் அயாக்கிமோவிடம் தன் கணையாழி கண்டு, தன்மீது இரங்கிய அரசனிடம் வேண்டி அவனை ஒறுத்து உண்மை விளக்கித் தன் உருக்காட்டி எல்லோரையும் மகிழ்விக்கின்றுள்.

# 2. ஸிம்பலின்

## க. காதலர் பிரிவு

கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிரிட்டனில் (அஃதாவது இங்கிலாந்தில்) [1]ஸிம்பலின் என்ருேர் அரசன் இருந்தான். அவனுடைய முதல்மனைவி இறந்தபின் அவன் மீண்டும் மணம் செய்துகொண்டான். முதல்மனைவி மூலமாக அவனுக்குப் புதல்வி ஒருத்தியும் புதல்வர் இருவரும் இருந்தனர். இரண்டாம்மனைவி பேராசை யுடையவள். அவள் எப்படியாவது அரசுரிமையைத் தன் வசப்படுத்த நினைத்தாள். முதல்மனைவியின் புதல்வர் இருவரும் சிறுபிள்ளைகளா யிருக்கும்போதே எங்கோ காணுமல் மறைந்து போய்விட்டனர். முதல்மனைவியின் புதல்வி அழகிலும் அறிவிலும் மிக்க [2]இமொஜென். அவளைத் தன் புதல்வனை [3]க்ளாட்டெனுக்கு மணஞ்செய்து வைத்துவிட்டால் அரசுரிமை அவள் மூலமாக அவனுக்கே வரும் என அரசி எண்ணினுள்.

ஸிம்பலினுடைய குடிகளுள் சிறந்த வீரனெருவன் அவ்வரசனது போரில் மாண்டான். அப்போது குழந்தை ஒன்றை அவன் விட்டுப் போனுன். அதன் துணையற்ற நிலைக்கு இரங்கி ஸிம்பலின் அப்பிள்ளையை எடுத்து வளர்த்தான். தந்தை இறந்தபின் பிறந்த பிள்ளையாதலின் அவனுக்குப் [4]பாஸ்துமஸ் (=பிந்திப் பிறந்தவன்) என்று பெயரிட்டனர். இப் பாஸ்துமஸ் உருவில் வளருந்தோறும் அறிவிலும் குணத்திலும் வளர்ந்து வந்தான். இமொஜெனும் பாஸ்துமஸும் இளமை முதற்கொண்டே விளையாட்டுத் தோழர்களா

---

[1]Cymbeline. [2]Imogen. [3]Cloten. [4]Posthumus.

யிருந்தனர். அத் தோழமை முதிர்ந்து அவர்களிருவரும் நாளடைவில் அரசன் அரசியை எதிர்பாராமலே தம்முள் மறைவாக மணம் செய்துகொண்டனர்.

அரசியின் ஒற்றர் இளவரசியின் நடைமுறைகளை ஊன்றிக் கவனித்து வந்தனர். ஆதலின் விரைவில் இம் மறைமணச் செய்தி அரசிக்குந் தெரிந்துவிட்டது. தனது பகற் கனவின்மீது மண்சொரிந்த இமொஜெனிடம் அவளுக்கு மட்டற்ற சீற்றம் ஏற்பட்டது. அவள் அரசனுக்கும் இவ்வகையிற் சினமூட்டி பாஸ்துமஸை நாட்டைவிட்டுவெளியே துரத்திவிட்டாள்.



பாஸ்துமஸ் இமொஜெனிடமிருந்து பிரிதல்

ஒருவரை நேரே எதிர்த்துக் கெடுப்பதைவிட, அவரை நயமாக அடுத்துக் கெடுப்பதே எளிது என்று அரசிக்குத் தெரியும். எனவே, தான் இமொஜெனுக்கு நல்லவளாக நடந்துகொண்டால், நாளடைவில் அவள் மனத்தை விட்டு பாஸ்துமஸை அகற்றி! அவள் தன் மகனையே ஏற்கும்படி செய்யலாம் என்று அரசி இன்னும் மனப்

பால் குடித்துக்கொண்டுதான் இருந்தாள். இந் நோக்கங்கொண்டு அவள் பாஸ்துமஸ் போகுமுன் இமொஜெனுடன் அவன் பேச இடம் கொடுத்தாள்.

பாஸ்துமஸ் இமொஜெனிடமிருந்து பிரியாவிடை பெற்றுக்கொள்ளும்போது அவள் அவனுக்குத் தனது வைரக்கணையாழி ஒன்றை நினைவுக்குறியாகக் கொடுத்தாள். அவனும் அதுபோலவே அவள் கையில் தனது நினைவுக்குறியாகப் பொன்வளை யொன்றை அணிவித்தான்.

பாஸ்துமஸ் தன்னுடைய பிரிவு நாட்களை எண்ணிக்கொண்டே ரோம் நகரில் வாழ்ந்து வந்தான். இமொஜெனும் தன் உயிரற்ற வாழ்க்கையைத் தந்தை அரண்மனையில் வேண்டா வெறுப்பாகக் கழித்து வந்தாள்.

## உ. ஒரு புதுமையான பந்தயம்

ரோமில் பல நாடுகளிலிருந்தும் வந்த இளஞ் செல்வர் பலர் இருந்தனர். அவர்கள் கூட்டத்தில் சேர்ந்து பாஸ்துமஸ் வாழ்ந்து வந்தான். அவர்களது ஆரவார வாழ்வில் பாஸ்துமஸ் தன் மனத்துயரை ஒருவாறு அகற்ற முயன்றுகொண்டிருந்தான். ஒருநாள் அவர்கள் பேச்சு தற்செயலாகப் பெண்கள் பக்கம் திரும்பியது. முதலில் ஒவ்வொருவரும் தத்தம் நாட்டுப் பெண்களே உயர்வுடையவர் என்று நிலைநாட்ட முயன்றனர். அதிலிருந்து படிப்படியாகப் பேச்சு முன்னேறி ஒவ்வொருவரும் அவரவர் மனைவி அல்லது காதலியைப் போற்றும் அளவிற்கு வந்தது. பாஸ்துமஸும் அவர்

கள் பேச்சிற் கலந்துகொண்டு தன் நாட்டு மாதர்களை யும் சிறப்பாகத் தன்னுடைய காதல் தலைவி இமொ ஜெனையும்பற்றிப் பலவாறாகப் புகழ்ந்து பேசினான்.

அப்போது [1]**அயாக்கிமோ** என்ற செல்வன் ஒருவன் இடையில் வந்து, 'பெண்களிடம் எங்குமே உண்மைக் கற்பு என்பது கிடையாது; கற்புடையவர் என்பவ ரின் கற்பெல்லாம் இயலாக் கற்பேயன்றி வேறன்று. முயல்வார் முயன்றால் எம்மாதும் கற்பை விட்டுக் கொடுத்தே தீருவாள்' என்றான். இது கேட்டுப் பாஸ் துமஸ் சினங்கொண்டு அவ்வுரையை மறுத்தான். "தான் கள்ளன் பிறரை நம்பான்," என்ற பழமொழிக் கிணங்க அவன் அதையே பிடிமுரண்டாகக் கூறினான். மேலும் தான் கூறியதை நிலைநாட்டப் பதினாயிரம் பொன் பந்தயம் வைப்பதாகவும் உறுதி கூறினான்.

பேச்சில் மிக முனைந்துவிட்டதாலும், தன் மனைவி யின் கற்பில் மாறா உறுதி இருந்ததாலும், (ஊழ்வினை முந்துறுத்தலாலும்) பாஸ்துமஸ் இப் பந்தயத்தை ஏற்றான்.

இம் முயற்சியில் இறங்க உதவும் முறையில் பாஸ்துமஸ் அயாக்கிமோவிடம் தன் கணையாழியைக் கொடுத்து, இமொஜெனுக்கு அயாக்கிமோவை ஒரு நண்பன் என அறிமுகப்படுத்தி ஒரு கடிதமும்வரைந்து கொடுத்தான். இவற்றைப் பெற்றுக்கொண்டு அவன் பிரிட்டனை நோக்கிப் பயணமானான். இமொஜென் கைவளையையும் காதலையும் பெற்று வந்துவிடுவதாக அவன் வீம்பு பேசிக்கொண்டு சென்றான்.

[1] Iachimo.

## ௮. வஞ்சகன் வஞ்சம்

தன் கணவனுடைய நண்பன் என்ற முறையில் இமொஜென் அயாக்கிமோவை நன்கு வரவேற்ருள். அவனுக்கு யாதொரு குறையுமின்றி வேண்டும் உதவிகளையும் புரிந்தாள். ஆனல், அவள் பாஸ்துமஸின் மனைவி என்று நடந்துகொண்டாளே யொழிய, பெண் என்ற முறையில் நடந்துகொள்ளவேயில்லை. தன் போன்ற இளைஞர் கருதும் காதலுக்கும் இமொஜென் போன்ற இல்லுறை தெய்வங்களுக்கும் எவ்வளவு தொலை என்பதை அவன் அறிய நெடுநாள் செல்லவில்லை. ஆனல், இதனை அப்படியே உள்ளபடி ஏற்பதென்ருல், பத்தாயிரம் பொன்னும் போயின. அதுகூட அவ்வளவு பெரிதன்று. தோழரிடைத் தான் கூறிய வீம்பு என்னுகும்? தன் மதிப்பு என்னுகும்? எனவே எப்பாடு பட்டாவது, என்ன பொய் சொல்லியாவது தன் மதிப்பைக் காக்கவேண்டும் என்று எண்ணமிட்டான் அயாக்கிமோ.

இக்கருத்துடன் நஞ்சகங்கொண்ட அவ்வஞ்சகன் ஓராள் தங்கியிருக்கும் அளவு பெரிதான ஒரு பெட்டி வாங்கினன். பின் அவன் இமொஜெனிடம், 'நான் பிரிட்டனில் பல பகுதிகளையும் சுற்றிப் பார்க்க விரும்புகிறேன். அதுவரைக்கும் இப்பெட்டியை நல்ல பாதுகாப்பான இடத்தில் வைத்திருந்து திருப்பித்தர வேண்டுகிறேன்' என்று சொன்னன், இமொஜென் 'அதனை என் கண் காண என் அறையிலேயே வைத்திருக்கிறேன்' என்று உறுதி கூறினள்.

பணியாட்கள் மூலம் பெட்டி இமொஜெனுக்கு அனுப்பப்பட்டது. சூதொன்றும் நினையாத இமொ

ஜெனும் அதனைத் தன் படுக்கையறையில் கொண்டு வந்து வைக்கும்படி கூறினுள். ஆனுல், அப்பெட்டிக்குள் அயாக்கிமோவே உட்கார்ந்திருந்தான்.

இரவில் இமொஜென் நன்ருய் உறங்கியபின் அயாக்கிமோ மெல்லப் பெட்டியைத் திறந்துகொண்டு



அயாக்கிமோ பெட்டியிலிருந்து வெளிவந்து துயிலும் இமொஜெனைப் பார்த்தல்

வெளிவந்தான். அறையின் அமைப்பையும் அதிலுள்ள பொருள்களையும் அவன் நன்கு மனத்தில் குறித்துக்

கொண்டான். இமொஜென் படுக்கும் கட்டிலின் அமைப்பு, அதன் உறுப்புக்கள் முதலிய விவரங்களை அதன்பின் கவனித்தான். அதன்பின் அவன் கண்கள் இமொஜென் உருவத்தின்மீது சென்றன. உள் ஒளி என்று ஒன்று உண்டானால், அஃது அன்று அவள் உடலைச் சுற்றிலும் வீசிக்கொண்டிருந்தது. அவள் முகத்தில் ஞாயிற்றின் ஒளியும் திங்களின் குளிர்ச்சியும் ஒருங்கே நிறைந்து தோன்றின. பாலாடைபோன்ற அவளுடைய மெல்லிய ஆடைகள் அவள் உடலமைப்பையும் நிறத்தையும் கூட அப்ப டியே எடுத்துக் காட்டுவனவா யிருந்தன. தனக்கு மிகப் பயன்படுமெனக் கருதி அவற்றையும் அவன் நன்கு கவனித்தான். அப்போது அவளது தொடையில், படுக்கைக்கான அவ் வுடையிலன்றி வேறெவ்வுடை யிலும் பிறர் கண்கள் காணமுடியாத இடத்தில், மறு ஒன்று இருந்ததைக் கண்டான். இருளே நிறைந்த அவ் வஞ்சகன் நெஞ்சில் அம் மறுவைக் கண்டதே இருள் ஞாயிறு தோன்றியதென்னும்படி இருளொளி வீசிற்று.

அயாக்கிமோ இமொஜெனுடைய பணியாளருக் குக் கைந்நிறையப் பொன் கொடுத்து அவர்கள் துணையைப் பெற்றிருந்தமையால், அயாக்கிமோ அவள் படுக்கையறையில் பலநாள் தங்கியிருக்க முடிந் தது. தங்கி இரவுதோறும் ஓசையின்றி வெளிவந்து ஒன்றுவிடாமல் அவ்வறையின் நுட்பங்கள், பொருள் கள், அவளைச் சேர்ந்த ஒவ்வொரு நண்பர், உறவினர், தோழியர் இவர்களுடைய விவரங்கள், அவள் இயல்பு கள், பழக்க வழக்கங்கள் ஆகிய எல்லாவற்றையும் நன்கு அறிந்துகொண்டான். கடைசி இரவில் அவ

ளது வளையையும் அரிய கைத்திறனுடன் அவள் கையி னின்று திருடிக்கொண்டான்.

இறுதியில் அயாக்கிமோ பணியாள ருதவியால் வெளிவந்து பெட்டியை மீட்டுக்கொண்டு ரோம் நகரத்துக்குப் புறப்பட்டான்.

## ௪. வீண் பழி

ரோமில் வழக்கம்போல் தோழர்கள் கூடியிருந் தனர். பாஸ்துமஸூம் அவர்களிடையே இருந்தான். அயாக்கிமோ வலியத் தன் முகத்தில் வெற்றிக்குறியை வருவித்துக்கொண்டான். அதனைக் கண்டு வியந்தனர் பலர். புன்முறுவல் கொண்டனர் சிலர். பாஸ்துமஸ் மட்டும் தனக்குள் 'ஏன் இந்த இறுமாப்பு; சான்று கள் வரட்டும்; பார்ப்போம்,' என்றிருந்தான். அவன் முகத்தில் அமைதி குடிகொண்டிருந்தது.

அயாக்கிமோ தன் பொய்யுரைகளைத் துணிகர மாக அளந்தான். 'நான் சென்றேன்; சென்று பார்த் தேன்; பார்த்து வென்றேன்', என்று வீம்புடன் கூறிய ஸீஸர் மொழிகளை ஒத்தன அவன் மொழிகள். 'இமொ ஜென் என்னை நன்கு வரவேற்றாள். முதலில் அவளு டனும் அவள் தோழியருடனும் நயமாக நடந்து கொண்டேன். பின் தோழியரைப் பல வழியில் வசப் படுத்தினேன். அவர்கள் உதவியாலும் ஒத்துழைப் பாலும் இமொஜெனுடன் நெருங்கிப் பழக முடிந்தது. இறுதியில் இமொஜென் என் வழிக்கு வந்தாள். பல வகையிலும் அவளுடன் பொழுது போக்கினேன். ஓரிரவு படுக்கையறையிலேயே கழித்தேன். பின் பல உறுதி மொழிகளுடன் பிரிந்தேன்,' என்றான்.

'தோழர் ஒருவரை ஒருவர் நோக்கினர். பாஸ்துமஸ் பின்னும் புன்சிரிப்புடன் அத்தனையும் வெறும் கட்டுக் கதை', என்முன்.

அயாக்கிமோ: 'சரி, அப்படியே இருக்கட்டும். அவள் படுக்கையறை வெண் பொன் கரையிட்ட பட்டுமேற்கட்டியுடையது. அதில் தீட்டப்பெற்ற படம் ஒப்பற்ற அரசியான [1]**கிளியோப்பாத்ரா** தன் தலைவன் [2]**அந்தோனியோ**வைக் கண்ணுறும் காட்சி; ஆம்,' என்முன்.

'அஃது உண்மையே; ஆனல் இதனை நீ பார்க்காமலே கேட்டறிந்திருக்கக்கூடும்'! என்முன் பாஸ்துமஸ்.

"புகைப்போக்கி, அறையின் தென்புறம் உள்ளது. அப் பக்கம் உள்ள படம் 'திங்களஞ்செல்வி' **(Diana)** குளிப்பது ஆகும்."

"இதுவும் கேட்டறியக்கூடியதே."

அதன்பின் அயாக்கிமோ அறையின் முகட்டையும், தணலடுப்பின் முன் தட்டில் கண்ட இரண்டு வெள்ளிக் காமனுருவங்களையும் குறிப்பிட்டான். 'இவையனைத்தும் நீ பணியாட்களிடமிருந்து உசாவி அறிந்திருப்பாய்', என்முன் பாஸ்துமஸ்.

சரி; 'இதனை நீ நன்முய் அறிந்திருக்கலாமே' என்று பொன் வளையைச் சட்டைப்பையிலிருந்து எடுத்து முன் வைத்தான். பின், 'நான் அவளிடமிருந்து பிரியும்போது அவள் பல உறுதிமொழிகள்

[1]Cleopatra. [2]Antonio.

கூறினாள். அதன்பின் நான் நினைவுக்குறியாக இப் பொன் வளையைத் தருக' என்றேன். அவள் முதலில் நெடுநேரம் தயங்கினாள். அதைத் தருவதில் வருத்த முண்டானால் அதனைத் தரவேண்டுவதில்லை என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு கூறினேன். அவள் அதுகண்டு துணிந்து, 'அப்படியொன்றும் இல்லை. அது, என் உயிருக்குயிராயிருந்த காலமும் உண்டு தான். ஆனால் உங்களிடம் தராத பொருள் என்ன இருக்க முடியும்?' என்று கூறி 'இதனைத் தந்தாள்' என்றான்.

பாஸ்துமஸின் முகம் சட்டென்று கறுத்தது. சினங்கொண்டு 'இஃதனைத்தும் உன் மாயப் புரட்டு. நீ அதனைத் திருடியே கொண்டுவந்திருக்கவேண்டும்,' என்றான்.

'ஆம். ஆனால், இதனை மட்டுமன்று; அவள் உள்ளத்தையும் திருடிக்கொண்டுதான் வந்திருக்கிறேன் என்று உனக்குக் காட்டுகிறேன்,' என்று சீற்றத்துடன் மொழிந்து, பின் அவள் உடலமைப்புக்களையும் உறுப்புக்களின் அமைப்புக்களையும் விரித்துரைத்தான். இறுதியில் தனது மறுக்கக்கூடாத கடைசித் துருப்பாகிய மறுவைப்பற்றியும் கூறினான்.

பாஸ்துமஸின் முகம் வரவரச் சுண்டிக்கொண்டே வந்து இறுதியிற் குருதி கசியும்படி கன்றிவிட்டது. இனித் தோழர்களிடம் சீற்றங்கொண்டு என்ன பயன்? சீற்றமெல்லாம் இனி இமொஜெனிடத்திலும் அவளைப் படைத்த இறைவனிடத்திலுமேயாம்.

பந்தயம் தோற்றது.

ஆனால், பாஸ்துமஸ் இழந்தது பததாயிரம் பொன்னல்ல. அவன் தன் உயிர் நாடியையே இழந்தவன் போலானான். பந்தயப் பேச்சுப்படி இமொஜென் கொடுத்த கணையாழியும் அயாக்கிமோவினிடமே சென்றது.

## ரு. படுகுழிப் பிழைத்தல்

பாஸ்துமஸ் மனத்தில் ஊழித்தீயே பரந்தெரிவது மாதிரி இருந்தது. இமொஜென் பேரில் அவனுக்கிருந்த சீற்றத்தில் அவளைக் கொன்றுவிட்டுத்தான் மறுவேலை என்று துணிந்தான். அவள் செய்த பிழையின் தன்மை, தனது சினத்தின் தன்மை இவற்றை விரித்து அவன் தன் நண்பனும் ஸிம்பலின் பணியாளனுமான [1]**பிஸானியோ**வுக்கு ஒரு கடிதம் எழுதினான். அவள் நிலைதவறினாள் என்பதற்குத் தனக்குக் கிடைத்த சான்றுகள் இவை இவை என்பதை அதில் குறிப்பிட்டிருந்தான். பின் அவளை எப்படியும் கொன்று அவள் கறையை அகற்ற வேண்டுமென வேண்டிக்கொண்டான். அதற்கு வாய்ப்பாக அவன் தான் மில்போர்டு ஹேவனுக்கு வருவதாகவும் அங்குவந்து தன்னைக் காணும்படியாகவும் அவளுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதன்படி அவள் அங்கு வரும்போது பிஸானியோ அவளைக் கொன்றுவிடவேண்டும் என்பதே பாஸ்துமஸின் திட்டம்.

கணவன் பெயரையும் அவனைக் காணும் செய்தியையுந் தெரிந்து இமொஜென் எல்லையிலா மகிழ்ச்சியுடன் பிஸானியோவுடன் பயணமானாள். பிஸானி

[1]Pisanio.

யோவுக்குத் தன் தலைவனாகிய பாஸ்துமஸை மீறவும் மனம் இல்லை; அவன் ஆணையைச் செய்யவும் மனமில்லை. இங்ஙனம் வழியெல்லாம் அவன் போராடி இறுதியில் அந்த ஆணையை மீறி அவளிடமே அவ் ஆணையைப்பற்றிய செய்திகளைக் கூறினான்.

தன் ஆருயிர்த் தலைவனைக் காணும் மகிழ்ச்சி கொண்டு இமொஜென் இதுகாறும் விரைந்து வந்தாள். இப்போது அவன் உண்மையில் தன்னைக் கொல்ல விரும்பும் அளவுக்குத் தன்மீது வெறுப்புக் கொண்டுள்ளான் என்பதை அறிந்தாள். இது, அவளுக்குப் பேரிடிபோல் திகைப்புத் தந்தது. பின் 'ஏதோ ஒரு தப்பெண்ணத்தினாலேதான் இப்படி ஏற்பட்டிருக்கவேண்டும். நாளடைவில் அது தெளிவடையும்' என்று பிஸானியோ தேற்ற ஒருவாறு தேறினாள். ஆயினும், தன் கணவன் வெறுத்தபின் வாழ அவள் ஒருப்படவில்லை. அப்போதும் பிஸானியோ அவளுக்கு நல்லுரைகள் கூறிப் 'பாஸ்துமஸின் மயக்க நினைவு மாறினபின் அவன் தன் செயலை நினைந்து வருந்துவான். ஆதலால், அதுவரை வாழ்ந்திருந்தால் மட்டுமே அவன் துயரைத் தீர்க்க முடியும்,' என்று எடுத்துக் காட்டினான். 'பாதுகாப்புக்கும் மறைவுக்கும் உதவும் வகையில் ஆண் உடை அணிந்து நீங்கள் ரோம் சென்று கணவனுடனிருந்து அந்த நல்ல நாளை எதிர் பார்த்திருங்கள்,' என்றும்அவன் கூறினான்.

பிஸானியோ எப்படியும் அரண்மனைக்கு விடியுமுன் வரவேண்டியவன். எனவே இமொஜென் உரு மாற ஆணுடை பார்த்துக் கொடுத்துவிட்டுத் திரும்பினான். திரும்புகையில் அவன் அரசியிடமிருந்து

தான் பெற்ற ஒரு மருந்துப் புட்டியை அவளிடம் கொடுத்தான். இதனை, 'எல்லாப் பிணிகளுக்கும் மருந்தாய் உதவும் சஞ்சீவி' என அவள் அவனிடம் கூறியிருந்தாள். வழியில் உடல் நலத்திற்கு ஏதேனும் ஊறு நேரின், அதனைப் பயன்படுத்திக் கொள்க என்றான் பிஸானியோ. உண்மையில் இம் மருந்து சஞ்சீவியன்று. தீநினைவே குடிகொண்ட அரசி சஞ்சீவி என்ற பெயரால் நஞ்சையே கொடுக்கத் துணிந்தாள். ஆனால், அவள் குணத்தை அறிந்து, அவள் எலி முதலிய உயிர்களை உடனே கொல்லும் நஞ்சு கேட்கும் போது, மருத்துவன் நஞ்சைக் கொடுக்காமல் மயக்க மருந்தொன்றையே கொடுத்து வைத்தான். எனவே இமொஜென் கையிற் கிட்டிய அம் மருந்து, பிஸானியோ நினைத்தது போலச் சஞ்சீவி யன்றாயினும், அரசி நினைத்ததுபோல நஞ்சுமன்று.

## ௬. இயற்கையின் ஆற்றல்

இறைவனது திருவருளின் போக்குச் சில சமயம் புதுமையானதாக அமைவதுண்டு. இமொஜெனுக்கும் இங்ஙனமே நிகழ்ந்தது. ஏனெனில், அவள் தற்செயலாகத் தன் உடன் பிறந்தார் இருந்த இடத்திற்கே வந்து சேர்ந்தாள். இவர்களை ஸிம்பலினின் அரண்மனையினின்று மறைவாக எடுத்துக்கொண்டவன் [1]பெலாரியஸ் ஆவன். இவன் ஸிம்பலினின் பெருங்குடி மக்களுள் ஒருவன். இவன்மீது அரசன் பொய்யாக வீண் பழி சுமத்தி நாட்டை விட்டுத் துரத்தினான். அதனால் வெகுண்டு பழிக்குப் பழியாகவே இப் பிள்ளை

[1]Belarius.

களைத் தூக்கிச் சென்ருன். முதலில் அவன் நோக்கம் இதுவாயினும் அவர்களைத் தன் பிள்ளைகளென வளர்த்து, அவர்களிடம் பற்றுதலுடையவன் ஆனுன்.

இமொஜென் மில்போர்டு ஹேவனுக்குச் சென்று ரோமுக்குக் கப்பலேற வேண்டுமென்று தான் விரைந்து நடந்தாள். ஆனுல், எப்படியோ வழிதவறிக் காட்டில் அலைந்து மேற்கூறிய உடன்பிறந்தார் வாழ்ந்த குகைக்கு வந்து சேர்ந்தாள். வழியில் அவள் பட்ட துயர் கொஞ்ச நஞ்சமன்று. ஆணுடை அணிந்ததனுல் ஆண் தன்மை வந்துவிடாதன்ருே? அவளது பஞ்சினும் மெல்லிய சீறடிகள் கல்லு முள்ளும் உறுத்தக் கொப்புளித்தன. பசியும் நீர் விடாயும் காதடைத்தன. இக் குகையினருகில் மனித வாழ்க்கைக்கான அறிகுறிகள் கண்டு, உணவு இருக்குமா என்று பார்க்க உள் நுழைந்தாள். உள்ளே ஆளில்லை. ஆனுல், ஒருபுறம் பழ அமுது வைக்கப்பட்டிருந்தது. பசிக் கொடுமையால், பொறுமை யிழந்து முன்பின் எதுவும் நினையாது அதனை உண்ணலானுள். உண்ணும்போதும் தன் நிலை, தன் கணவனது கொடுமை இவற்றைப்பற்றிய நினைவு அவள் மனத்தை விட்டகலாதிருந்தது.

உடன்பிறந்தார் இருவருக்கும் முதலில் [1]**கிடரியஸ்,** [2]**அர்விராகஸ்** என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனுல், பெலாரியஸ் அப் பெயர்களை மறைத்து அவர்களுக்கு, [3]**பாலிடோர்,** [4]**காட்வேல்** என்னும் வேறு பெயர்களை வழங்கினுன். அவர்கள் காட்டில் வளர்ந்தபோதிலும், பெலாரியஸ் அவர்களுக்கு எல்லாவகைக் கல்வி

[1]Guiderius. [2]Arviragus. [3]Polydore. [4]Cadwell.

யும் கற்றுக்கொடுத்தான். அரசிளங் குமரரது இயற்கைப்படி அவர்களும் வாட்போர், மற்போர், வேட்டை முதலிய அரசுரிமைக் கேளிக்கைகளிற் பயின்று வீர மிக்க இளைஞராயினர்.

குகைக்குள் அவ் இளைஞர் நுழைந்ததும், உணவின் முன் குனிந்து உட்கார்ந்திருந்த ஆண் உடை அணிந்த இமொஜெனைக் கண்டனர். கண்டு, 'இஃதென்ன! பொற்பாவையோ! பொன்னுலகத் தணங்கோ!' எனத் திகைத்து நின்றனர். அதனிடையே இமொஜெனும் அவர்களைக் கண்டதும் தான் அவர்களை எதிர்பாராது அவர்களது இடத்தில் உரிமையுடன் புகுந்ததுபற்றி அவர்கள் சீற்றங்கொள்வரோ என அஞ்சினாள். 'ஐயன்மீர்! மன்னிக்கவும்; பசி மிகுதியால் உங்கள் வரவுக்குப் பொறுக்காமல் உணவை உட்கொள்ளலானேன். ஆனால், அதனைத் திருடும் நோக்கம் எனக்கில்லை. அதற்கான விலையை இங்கு வைத்துவிட்டு உங்களுக்கு நன்றி கூறிப் போகவே இருந்தேன்,' என்று சொல்லிக்கொண்டு அவர்களுக்குப் பொருள்தரப் போனாள். அவர்கள் அதனை மறுத்தனர்.

பெலாரியஸ்: நீ யார்? எவ்விடத்திற்குப் புறப்பட்டு வந்தாய்?

இமொஜென்: என்பெயர் [1]ஃபிடேலே என்பது. என் உறவினர் ஒருவர் மில்போர்டு ஹேவனிலிருந்து ரோமிற்குப் புறப்படப்போகிறார். அவருடன் சேரும் நோக்கத்துடன் வருகையில் வழிதப்பி இங்கே வந்தேன்.

---

[1]Fidele.

பெலாரியஸ்: 'நீ மிகவும் உயர்குணமுள்ளவனாகவே காண்கிறாய். நாங்களும், இவ் விடத்திலே வாழ்கிறோமாயினும் காட்டாளர்கள் அல்லேம். இங்கு நீ எங்களுடன் தங்கி உணவுண்டு வாழ்வதில் எங்களுக்கு மகிழ்ச்சியே,' என்று கூறிவிட்டுப் பையன்களையும் அவளுக்கு வணக்கம் செய்து நல்வரவு கூறும்படி பணித்தான்.

அம் மூவரும் அதுமுதல் உடன் பிறந்தவராகவே வாழ்ந்து வந்தனர்; (அவர்கள் உண்மையில் உடன் பிறந்தவரே என்பது அவர்களுக்குத் தெரியாது). இமொஜெனும் அவர்களது குகையைத் தன் வீடாக்கி, அதில் தனதியற்கைப்படி தூய்மையும் ஒளியும் விளங்கச் செய்தாள். சிறுவர்கள் உணவு அன்றுமுதல் இமொஜென் கைகளிடமிருந்து இனிமையைக் கடன் வாங்கின. இத்தகைய இன்னுணவாலும் இனிய பாட்டுக்களாலும் இளைஞரிருவரும் அவளிடம் மாறாத பற்றுக்கொண்டனர்.

ஆனால், (பிடேலே என்று அவர்கள் வழங்கிய) இமொஜென் அவர்களுடன் எவ்வளவுதான் ஆடிப் பாடி நகையாடினாலும், அவள் முகத்தில் பொறுமை என்னுந் திரையால் மறைக்கப்பட்டு மங்கலான துயரின் நிழல் தோன்றுவதை அவர்கள் அடிக்கடி கவனித்தனர். இமொஜெனும், அவர்களிடம் தன் செய்திகள் எவையுங் கூறாமலே பொழுதைக் கழித்தாள். உடல் நலிவெனக் காரணங் காட்டி, அவள் அவர்களுடன் வேட்டைக்குப் போவதைத் தவிர்த்துப் பின் தங்கினாள். உண்மையில் கணவனது நினைவும் காட்டில்

அலைந்த அலைச்சலும் அவளுக்குப் பெரு நலிவை உண்டு பண்ணின என்பதில் ஐயமில்லை.

## எ. மயக்க மருந்து

மற்றவர்கள் வேட்டையை நாடிச் சென்றபின் இமொஜெனுக்குப் பிஸானியோவிடமிருந்து பெற்ற மருந்தின் நினைவு எழுந்தது. அஃது எல்லாப் பிணிக்



இமொஜென் உயிரற்றவள்போல் கிடத்தல்

கும் மருந்தென அவன் கூறியிருப்பதையும் அவள் ஓர்ந்தாள். ஓர்ந்து அதனைப் பருகி உணர்விழந்து உயிரற்றவள்போல் விழுந்து கிடந்தாள்.

பெலாரியஸும் இளைஞரும் காட்டில் வேட்டை யாடிவிட்டுத் திரும்புகையில் அவள் படுத்திருந்தது கண்டு முதலில் உறங்குகிறாள் என்று நினைத்தனர். ஆனால் அவள் மட்டுக்கு மிஞ்சி நெடுநேரம் உறங்கு வது கண்டு அவளை எழுப்ப முயன்றனர். அப்படியும் அவள் எழவில்லை. அவள் இறந்தனள் என்று இதனால் உறுதிப்படுத்திக்கொண்டு அவர்கள் கன்றினைப் பிரிந்த ஆவெனக் கதறியழுதனர். அந்த ஒரு நாளைக்குள்ளாக உடன்பிறந்து வளர்ந்தவர்களைவிட மிகுதியாக இமொ ஜென் அச் சிறுவருடன் பழகிவிட்டபடியால் அவர் களும் கையற்றவர்கள் போன்று கவன்றனர்.

இரவு நெடுநேரம்வரை அழுதரற்றியபின் பெலா ரியஸ், 'இனி அழுது பயனென்ன? பிடேலே போய் விட்டான். அவன் உடம்பை நல்ல முறையில் அடக் கம் செய்யவாவது முயலவேண்டாமா?' என்றான்.

காட்டில் ஒரு நறுஞ்சோலையினுள் பூம்படுக்கை செய்து அதில் அவள் உடலைப் பண்ணும் இரங்கும் இனிய பாட்டுக்களுடன் அடக்கம் செய்தனர்.

### (பாட்டு)

**பெலாரியஸும் இளைஞரும் :**

கஞ்சமலர் கண்டுனது கண்மறத்தல் செய்யோம்
　காந்தளவை கண்டுனது கைவிரல்கள் மறவோம்
செஞ்சொலிளங் கிளியதனால் சொல்மறத்தல் செய்யோம்
　தேம்பழத்தால் நின்உணவின் தீஞ்சுவையும் மறவோம்
வஞ்சமறு மான்மறியிற் சீரிளமை மறவோம்
　வாழும்வரை உன்வாழ்வும் மாள்வும் இனி மறவோம்
நெஞ்சிலுறை கின்றனையாம் நேருறவா ராயோ
　நேயமுடன் யாமழைக்க நேருறவா ராயோ

**பாலிடோர் :**

[1]கூடப்பிறந்திலமே
[2]கூடப்பிறந்திலமே
கூடிப்பிரிந்தனம் மேல்—கூடுவோமே !

**காட்வேல் :**

மன்றவிள நிலவு
தென்றலுள அளவும்
உன்றனுள ஒளிவு—பொன்றிடாதே !

[1]கூட = உடனுக. [2]கூட = ஒன்ருக வாழ.

வாழ்க்கையில் நிறைவென்ற ஒன்றையும் குறைவென்ற ஒன்றையும் அச் சிறுவர் பிடேலே தம்மிடையே வந்த நாளிலும் தம்மை விட்டுச் சென்ற நாளிலுந்தான் கண்டனர். பெலாரியஸும் பொற்பெட்டியை இழந்தவன் அதன் திறவுகோலைக் கண்டு மனமழுங்குவதுபோல துணை இழந்து கதறும் தன் இளைஞரைக் கண்டு வருந்தினன்.

நிற்க, மயக்க மருந்தின் ஆற்றல் தீர்ந்து இமொஜென் விழித்தெழும்போது நள்ளிரவு கடந்து பின் யாமமாயிருந்தது. அப்போது அவள் என்றும் உறங்கி எழுவதுபோல் எழுவதாக முதலில் நினைத்தாள். சுற்றும்முற்றும் பார்த்தபோது, தான் இருப்பது அரண்மனையுமன்று, வீடுமன்று; காடே என்பது விளங்கிற்று. அப்பொழுது ஒன்றன்பின் ஒன்ருகத் திரைப்படக் காட்சிபோலப் பெலாரியஸினுடைய குகையின் நினைவுகள் வந்தன. 'அவர்கள், தான் இறந்துவிட்டதாக நினைத்திருப்பார்கள்; விடிந்ததும் அவர்களிடமே போவோம்,' என்று முதலில் நினைத்தாள். ஆனல்

கணவனது நினைவு இதனைத் தடுத்தது. அதன்பின் எப்படியும் இத்தாலி நாட்டுக்குப்போய் அவனைப் பார்ப்பது என்று துணிந்து புறப்பட்டாள். ஆயினும் பழையபடியே திருவருள் குறுக்கிட்டு அவள் வாழ்க்கையை மாற்றிற்று.

## அ. போர்

இமொஜென் காட்டுக்கு வந்ததன்பின் ரோம் அரசர்க்கும் பிரிட்டன் அரசரான ஸிம்பலினுக்கும் போர் மூண்டது. ரோம் அரசர் படை ஒன்று பிரிட்டனுக்கு வந்து போர் தொடங்கிற்று.

பாஸ்துமஸ் அப் படையோடு கூடவே பிரிட்டனுக்கு வந்தான். ஆனால், அவன் தன் தாய்நாட்டுக்கெதிராகப் போரில் கலக்க எண்ணவில்லை. அவன் மனமும் இப்பொழுது நல்ல நிலையிலில்லை. இமொஜெனைக் கொன்று விட்டோம் என்ற எண்ணத்தினால் அவன்மனம் எவ்வகைஅமைதியையும் அடையவில்லை. உண்மையில் அதன் பரபரப்புக் குறைந்ததேயன்றித் துயரம் குறையவில்லை. 'ரோமர்களோடு பிரிட்டனுக்கு வந்தால், தன்னையும் ரோமன் என்று நினைத்து எவரேனுங் கொல்லக்கூடும்; அன்றி, எதிரியுடன் சேர்ந்தவன் என்று ஸிம்பலின் கொலை செய்யவுங் கூடும், எப்படியும் உயிரைவிட்டுவிட வாய்ப்பு நேரும்' என்று கருதித்தான் அவன் அங்கே வந்தான்.

காட்டில் அலைந்து திரிந்து இமொஜென் ரோம் படை வீரரால் பிடிக்கப்பட்டாள். ஆனால் அவள் நாகரிகத்தையும் நற்குணத்தையுங் கண்டு ரோம்

படைத்தலைவர் [1]லூஸியஸ் அவளைத் தன் பணியாளாக ஏற்படுத்திக்கொண்டான்.

இப் போரில் சேர்ந்து சண்டைசெய்ய வேண்டுமென்று பாலிடோரும் காட்வெலும் விரும்பினர். பெலாரியஸும் வீரனாதலின் அவர்கள் விருப்பத்துக்கு உடன் பட்டதுடன் தானும் உடன்சென்று போரிற் சேர்ந்துகொண்டான்.

போரில் ரோமவீரர் மிகத் துணிகரமாகச் சண்டை செய்ததால் பிரிட்டனின் படை மிகவும் மலைவுற்றது. அச் சமயம் பாஸ்துமஸ் ஒருபுறம், பாலிடோர், காட்வெல் ஆகிய இளஞ்சிங்கங்கள் ஒருபுறம் நின்று தாக்கிப் பிரிட்டனின் படைக்கு ஊக்கந் தந்து வெற்றி யுண்டாக்கினர். பாஸ்துமஸ் நாட்டுப்பற்றுக் காரணமாக வெற்றிபெறப் போர் புரிந்தானாயினும் அவ் வழியில் தான் இறவாமையால், பகைவனாகவே நடித்துச் சிறை பிடிக்கப்பட்டான். ஆணுடை உடுத்த இமொஜெனும், அவள் தலைவனாகிய லூஸியஸும், இமொஜென் வாழ்க்கைக்கு உலை வைத்த சண்டாளனாகிய அயாக்கிமோவும் எஞ்சிய வீரருடன் சிறைப்பட்டனர். பாஸ்துமஸுக்கு அவன் எதிர் பார்த்தபடியே கொலைத் தீர்ப்பு அளிப்பதென்று துணியப்பட்டது.

வீரத்துடன் போர் புரிந்ததற்காகப் பாலிடோரும் காட்வெலும் பாராட்டப்பெற்று நன்கொடை பெறும்படி கொண்டுவரப்பட்டனர்.

---

[1]Lucius.

பாஸ்துமஸ் அங்கு வந்திருப்பதை இமொஜென் கண்டுகொண்டாள். ஆனால் அவள் ஆணுடையி லிருந்தபடியால் அவன் அவளை அறிந்துகொள்ள வில்லை. பாஸ்துமஸின் நண்பன் என்ற நிலையில் தன் னிடம் சிலகாலம் பழகிய அயாக்கிமோ என்பவனும் அங்கு வந்திருப்பதை இமொஜென் கண்டாள். ஆனால் அவன் கையில் பாஸ்துமஸுக்குத் தான் கொடுத்த வைரக் கணையாழி இருப்பது கண்டு அவளுக்குச் சொல்லொணு வியப்பு ஏற்பட்டது. அதில் ஏதோ சூதிருக்கிறதென்று அவள் உடனே உணர்ந்துகொண்டாள். அதனைக் கண்டுபிடிக்க வேண்டுமே என்று அவள் மனம் விரைந்து பதைத்தது.

இமொஜெனை அங்கே வேறு சிலரும் அறிய இடமிருந்தது. அவளுக்கு ஆணுடை கொடுத்த பிஸானியோ அவர்களுள் ஒருவன். பெலாரியஸும் இளைஞரும் அவளைக் கண்டுகொண்டனர்: ஆயினும், இறந்தவள் எப்படி வந்தாள் என்றும், ஏன் பேசா திருக்கிருள் என்றும் அறியாது விழித்தனர்.

## ௧௦. முடிவு

எங்கும் கவலையும் விழிப்பும் ஆர்வமும் நிறைந்த இந் நிலையில், திருவருள், ரோம் படைத்தலைவன் லூஸி யஸின் நாவில் வந்திறங்கியது. அவன்,

"அரசே! நான் ரோம் நாட்டவன். என்னை நீங்கள் கொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். தெரிந்தும் நான் உயிருக்கு மன்ருடப்போவதில்லை. ரோமர்கள் சாவுக்கு அஞ்சார். ஆனல், எனக்காக

ஒன்றுங்கேட்கவேண்டுவதில்லையாயினும், பிறருக்காக ஒன்று கேட்க விரும்புகிறேன். இதோ இப்பையன் (இமொஜெனைச் சுட்டிக் காட்டி) ரோம் நாட்டவன் அல்லன்; பிரிட்டானியனே. அவன் உண்மையுடையவன். அவன் பிரிட்டனுக்கு எதிராகச் சண்டையிற் சேர்ந்தவன் அல்லன். ரோமன் கையிற் சிறைப்பட்டு அதனால் அவனுக்கு உழைத்தவன். அவனைப் பாதுகாப்பீராக!" என்றான்.

"தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்" என்பதற் கிணங்க, ஸிம்பலின், இமொஜெனை இன்னாள் என அவளது ஆணுருவில் அறியாவிடத்தும் இயற்கையான பாசத்தின் உந்துதலால் அவளைப் பார்த்து, 'உன்னைப் பார்க்க, நான் உன் உயிரைத் தருவதென்பது மட்டுமன்று; நீ வேண்டும் வேறு ஒருவரது உயிரைத் தருவதற்குங்கூடத் தயங்கமாட்டேன்' என்றான்.

இத் தறுவாயில் எல்லாரும் இமொஜென் தன் உயிரை மறுத்து, அவளுயிர்க்கு மன்றாடிய லூஸியஸ் என்ற பெரியானது உயிரைத்தான் கேட்பாள் என எதிர்பார்த்து நின்றனர். அரசன்கூட அதனை எதிர் பார்த்தே அவ்வாறு கூறினான். லூஸியஸும் அதுவே இயற்கையென நினைத்தவனாதலால், முன்கூட்டியே 'நீ என் உயிரைக் கேட்காதே,' என்றான். இமொஜென், அப் பெருந்தன்மை வாய்ந்த லூஸியஸை நோக்கி, யாவருந் திடுக்கிடும் வகையில், 'என் ஐயனே, மன்னிக்க வேண்டும். உங்கள் உயிரினும் சிறந்த பொருளாக நான் கேட்கவேண்டுவது ஒன்று உளது' என்றாள். 'இவ்வளவு இளமையும் அழகும் கொண்ட

சிறுவனிடம் இத்தனை நன்றி கொல்லும் தன்மையும் இருக்கமுடியுமா' எனப் பலரும் மூக்கிற் கைவைத்து வியந்தனர்.

கருமமே கண்ணாய் நின்ற இமொஜென் பிறர் எண்ணத்தைப் பொருட்படுத்தவில்லை. தான் இன்னதுதான் கேட்கவேண்டும் என்பதை அவளது கூரிய அறிவு நொடிப்பொழுதில் முடிவு செய்துவிட்டது.

அயாக்கிமோவைச் சுட்டிக் காட்டி, "அதோ நிற்பவர் கையில் ஒரு வைரக் கணையாழி இருக்கிறதே; அது, அவர் கையில் எப்படி வந்தது என்பதை ஆராய்ந்தறிய வேண்டுகிறேன்," என்றாள்.

"என்ன புதுமையான கேள்வி இது! என்ன முட்டாள்தனமான கேள்வி," என்றுகூடப் பலர் எண்ணினர்.

முதலில் அயாக்கிமோ யாதும் கூற மறுத்துப் பார்த்தான். ஆனால் இவ்வுண்மையை வெளியிடாவிட்டால் படிப்படியாகக் கொலைசெய்யப்படுவதாக அச்சுறுத்தப்பட்டபின், அவன் முழு உண்மையையுங் கூறிவிட்டான்.

இதற்கு முன்னமேயே கொலைத் தீர்ப்பை அவாவி நின்ற பாஸ்துமஸ் குற்றமற்ற தன் மனைவியைக் கொன்றுவிட்டோமே என்ற கவலையால் தன்னை மிகவும் நொந்துகொண்டான். அவன் அரசன்முன் வந்து, இமொஜெனுக்குத் தான் செய்த தீங்கையும் வெளிப்படுத்தி, 'என் இமொஜென் இறந்தபின் நான் இனி உயிர்வாழேன்; என் உயிரை நீங்கள் வாங்காவிடின், நான் வாங்கவேண்டியதே' என்று சொல்லிப் புலம்பினான்.

கணவனது கொடுமை தப்பெண்ணத்திஞல் வந்த தென்பதைக் கண்ட இமொஜென், அவன் துன்பங் காணப் பொருமல் முன்வந்து, 'இதோ! உங்கள் இமொஜென்!' என்று அவனைத் தழுவிக் கொண்டாள்.

இங்ஙனம் எதிர்பாரா வகையில் மகளையும் மருமகனையும் மீண்டும் நன்னிலையில் அடையப்பெற்ற ஸிம்பலின், போரில் கண்ட வெற்றிமகிழ்ச்சியினும் பன்மடங்கு அகங்களித்து அவர்களை ஏற்றுக்கொண்டான்.

இச்சமயமே நற்சமயமாகக்கொண்டு பெலாரியஸ் முன் வந்து, தன் பிழைகளையும் வெளியிட்டுத் தான் வளர்த்த இளைஞர்களை முன் நிறுத்தி, 'ஐயனே! நான் இதுகாறும் தங்களுக்கும் என் தாய்நாட்டுக்கும் இழைத்த பிழைகளைப் பொறுத்தருள வேண்டுகிறேன். இதோ இவ்விருவரும் உம்முடைய மக்கள். உம்மீது பகைமையால் அவர்களைக் கவர்ந்து சென்று வளர்த்தேன்,' என்ருன்.

பிள்ளைகளைத் தந்தையினின்றும் பிரித்தது மிகப் பெருங் குற்றமேயாயினும், களிப்பே நிறைந்த இந்த நாளில் கறை வேண்டாமென்று கருதி, ஸிம்பலின் அவனை மன்னித்துத் தம் புதல்வரை அன்புடன் அணைத்துக்கொண்டான்.

இமொஜென், தான் ஆண் உடையிலிருந்தபோது தனக்குத் தலைவராயிருந்த லூஸியஸின் உயிரைக் கேட்க வேண்டாமலே எல்லாம் நலமாக முடிந்தது. இவ்வளவுக்குந் திட்டம் போட்டு முதலில் அவர் உயிரைக் கேட்காதிருந்த அவள் நுண்ணறிவுக்கு யாவரும் வியப்பெய்தினர்.

இளைஞரை உடன்பிறந்தவர்போல இதுவரை நடத்திய இமொஜென் இப்போது உடன் பிறந்தவ ரெனவே கண்டு அவர்களைத் தழுவிக்கொண்டாள். மயக்க மருந்தினுல் நிகழ்ந்த செய்திகளனைத்தும் அவள் எடுத்துக் கூறினுள். அதன்பின், அரசியின் மருத்து வன் வந்து, 'அரசி இங்கு நடப்பது யாவுங் கண்டு தனது மறைந்த தீவினை தன்னைச் சூழ்கின்றது என்று தெரிந்து மனங்கொதித்து மாண்டாள் என்று தெரி வித்தான். மேலும், அவள் கொல்லும் எண்ணத் துடன் நஞ்சு கேட்பதைத் தான் குறிப்பாக அறிந்து தான் மயக்க மருந்தைக் கொடுத்ததாக அவன் கூறினுன்.

அயாக்கிமோவே இவ்வளவு தீமைக்கும் வேரான வன். ஆயினும், அவன் தீங்குகள் வெற்றியடை யாததே போதும் என்று கருதி அவனை விட்டு விட்டனர்.

இமொஜென், பிரிந்த கணவனைப் பெற்றதோடு, பிரிந்த தந்தை, பிரிந்த உடன் பிறந்தார் ஆகியவர் களையும் பெற்று இறவா இன்பமும் புகழும் எய்தி வாழ்ந்தாள்.

## 3. கார்காலக் கதை

(கதை உறுப்பினர்)

**ஆடவர்**

1. லியோண்டிஸ் :—ஸிஸிலியத் தீவின் அரசன்.
2. பாலிக்ஸெனிஸ் :—பொஹீமியாவின் அரசன்—லியோண்டிஸின் நண்பன்—பிளாரிஸெல் தந்தை.
3. மாமில்லஸ் :—லியோண்டிஸ் மகன்—தாய் துயர் கேட்டிறந்தவன்.
4. காமில்லோ :—பாலிக்ஸெனிஸுக்கு உண்மை நண்பனுயிருந்து உடன் சென்றவன்—இறுதியில் பிளாரிஸெல் பெர்திதா காதலை ஏற்க முன்வந்தவன்.
5. அந்திகோனஸ் :—பெருமகன்—பாலினு கணவன்—பெர்திதாவைக் கடல்கடந்து அகற்றிவிட்டு வருகையில் கரடிவாய்ப்பட்டவன்.
6. பிளாரிஸெல் :—பாலிக்ஸெனிஸ் மகன்—பெர்திதா காதலன்—மாற்றுருவில் இடையர் வகுப்பு இளைஞன்—தொரிக்ளிஸ்.

**பெண்டிர்**

1. ஹெர்மியோன் :—லியோண்டிஸ் மனைவி.
2. பாலினு :—அந்திகோனஸ் மனைவி—ஹெர்மியோனை மறைவாக வைத்துக் காத்தவள்.
3. பெர்திதா :—அரசனுல் அந்திகோனஸ் மூலம் கடல் கடந்து விடப்பட்ட பெண் மகவு—இடையர் வளர்த்து பிளாரிஸெல் காதலியானவள்.

# கதைச் சுருக்கம்

ஸிஸிலி அரசன் லியோன்டிஸ் தன் நண்பனாகிய பொஹீமியா அரசன் பாலிக்ஸெனிஸைப் பலநாள் விருந்திற்கப்பால் தான் வற்புறுத்தியபோது தங்காமல் மனைவி வற்புறுத்தித் தங்கினதால் பொறாமைகொண்டு அவனைக் கொல்ல நண்பனாகிய காமில்லோப் பெருமகனை ஏவ, அவன் பாலிக்ஸெனிஸிடம் எல்லாம் சொல்லி உடன்சென்று விட்டான். ஹெர்மியோனையும் சிறையிலிட்டுத் துன்புறுத்த அது பொறாத அவள் சிறுவன் மாமில்லஸ் இறந்தான். பின் பிறந்த பெண் மகவையும் அந்திகோனஸ் பெருமகன் மூலம் கடல் கடந்து விட்டுவிடத் தூண்டினான். அங்ஙனம் விட்டு மீள்கையில் அவனைக் கரடி விழுங்கிற்று. ஹெர்மியோனிடம், அரசன் இரங்குமுன், அவள் இறந்தாள் என்று கூறி அந்திகோனஸ் மனைவியாகிய பாலினா அவனைக் காத்தாள்.

விடப்பட்ட மகவு இடையரால் எடுக்கப்பட்டுப் பெர்திதா என்ற பெயருடன் வளர்ந்தது. இடையனுருவில் வந்த பாலிக்ஸெனிஸ் மகன் பிளாரிஸெல் அவளைக் காதலித்து அரசன் அறிந்து சீறியும் பொருட்படுத்தாதிருப்ப, காமில்லோ இரங்கி லியோன்டிஸ் மூலம் அவர்களைச் சேர வைக்க நினைக்க, லியோன்டிஸ் பெர்திதாவைக் கண்டவுடன் அவள் தன் மனைவி போன்றிருப்பது கண்டு இடையனை உசாவ உண்மை விளங்கிற்று. பின் பாலினாவும் உருவம் காட்டுவதாகக் கூறி ஹெர்மியோனைக் காட்ட இதற்கிடையில் பாலிக்ஸெனிஸும் வர, அனைவரும் ஒருங்குசேர வளர்ந்தனர். பிளாரிஸெல் பெர்திதாவை மணந்தான்.

# 3. கார்காலக் கதை

## க. நட்பின்பம்

[1]லியோன்டிஸ் என்பான் [2]ஸிஸிலித் தீவின் அரசன். அவன் மனைவி அழகிலும் கற்பிலும் மிக்க[3]ஹெர்மியோன் ஆவள். அவளது இல்வாழ்க்கை பொன்மலரும் நறுமணமும் பொருந்திய தென்னும்படி குறைவிலா நிறைவு பெற்றிருந்தது.

[4]பொஹீமியா நாட்டரசனுகை [5]பாலிக்ஸெனிஸ் லியோன்டிஸினுடைய பழைய பள்ளித்தோழனும் உற்ற நண்பனுமாவான். தனது மணவினையின் பின் லியோன்டிஸ் பாலிக்ஸெனிஸைக் கண்டதே கிடையாது. கடித மூலமாக ஒருவரை ஒருவர் நலம் உசாவுவது மட்டும் உண்டு.

லியோன்டிஸ் அவனை நேரில் கண்டு உறவாடுவதுடன் தன் அரிய மனையாளுக்கு அவனை அறிமுகம் செய்துவைக்கவும் வேண்டும் என்று நெடுநாள் எண்ணிக்கொண்டிருந்தான். பலதடவை அழைப்பு அனுப்பியபின், இறுதியில் ஒரு நாள் பாலிக்ஸெனிஸ் அவற்றிற்கிணங்கி லியோன்டிஸைப் பார்க்கவந்தான்.

முதலில் லியோன்டிஸுக்கு நண்பனது வரவால் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லை யில்லை. தனது இன்ப வாழ்விற் கிருந்த ஒரே குறை இப்பொழுது நீங்கிற்றென அவன் உணர்ந்தான். பழைய பள்ளித்தோழனது வரவினுல் பழைய பள்ளி நினைவுகளும் பள்ளியுணர்வுகளும் ஏற்பட்டது மட்டுமன்றித் தானும்

---

[1]Leontes. [2]Sicily. [3]Hermione. [4]Bohemia. [5]Polixenes.

பழையபடி பள்ளிச் சிறுவன் ஆனதாகவே அவன் உணர்ந்தான். நண்பரிருவரும் பேசும் இப்பழங்காலப் பேச்சுக்களையும் அதனால் கணவன் கொண்ட களிப்பினையும் பார்த்து ஹெர்மியோனும் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.

சிலநாள் லியோன்டிஸுடன் தங்கியிருந்தபின் பாலிக்ஸெனிஸ் நண்பனிடமிருந்து விடைபெற்றுக்



லியோன்டிஸ் தன் நண்பனோடு அளவளாவல்

கொள்ள விரும்பினான். லியோன்டிஸ் தன் நண்பனை விட்டுப் பிரிய மனமில்லாமல் அவனை இன்னும் சில நாள் தங்கியிருக்கும்படி வற்புறுத்தினான்.

லியோன்டிஸ் எவ்வளவு சொல்லியும் பாலிக்ஸெனிஸ் தான் இனிப் போகவேண்டியதுதான் என்று சொல்லிவிட்டான். இதனால் மனமுடைந்த லியோன்

டிஸ் ஹெர்மியோனிடம் சென்று, 'நீயாவது அவனை வற்புறுத்தி இருக்கச் செய்யலாமே' என்றான். அதன் படி அவள் பாலிக்ஸெனிஸினிடம் சென்று பெண் களுக் கியற்கையான நயத்துடன் அவனை இன்னுஞ் சிலநாள் தங்கியிருந்து போகலாம் என்று வேண்டி னாள். அவளுடைய இன்மொழிகளை மறுக்கக்கூடாமல் பாலிக்ஸெனிஸ் தன் முடிவைச் சற்றுத் தள்ளிவைக்க உடன்பட்டான்.

## உ. பொறாமைப் பேய்

தனது வேண்டுகோளை மறுத்த தன் அன்பன் தன் மனைவியின் வேண்டுகோளை ஏற்றான் என்ற செய்தி லியோன்டிஸ் மனத்தில் சுறுக்கென்று தைத்தது. அது நயமான மொழிகளாலும் இருவர் வேண்டுகோளின் ஒன்றுபட்ட ஆற்றலாலுமே ஏற்பட்டதென்று அவன் மனத்தில் அப்போது படவில்லை. அதற்குக் காரணம் கள்ளங்கபடற்றிருந்த அவன் உள்ளத்தில் பொறா மைப் பேய் புகுந்துகொண்டதேயாம்.

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பர். அஃதேபோன்று மனத்தில் இக் களங்க நினைவு ஏற்பட்டது முதல் அதற்குமுன் இயல்பாகத் தோன்றிய சிறுசிறு செய்திகளும் இப்பொழுது களங்கமுடையனவாகத் தோன்றின. கணவனுக்கு நண்பன் என்ற முறையில் ஹெர்மியோன் பாலிக் ஸெனிஸுக்குக் காட்டிய மதிப்பும் அன்பும் எல்லாம் லியோன்டிஸின் மனத்தில் களங்க நினைவுகளாக மாறின. அவனது பால்போல் தெளிந்த இனிய

உள்ளம் இக் கடுப்பினுல் திரைந்து தீமையும் கொடுமையும் நிறைந்ததாயிற்று.

இறுதியில் லியோன்டிஸ் தன் பெருமக்களுள் ஒருவனும் நண்பனுமான [1]காமில்லோவிடம் தனது



லியோன்டிஸ் களங்கமுறுதல்

மனத்துள் எழுந்த எண்ணங்களை வெளியிட்டான். காமில்லோ உண்மையும் ஒழுக்கமும் அமையப்பெற்றவன். எனவே முதலில் அரசனது கருத்துத் தப்பானது என்று விளக்க முயன்ருன். ஆனல் லியோன்டிஸ் அதனைச் செவியில் ஏற்றுக்கொள்ளவில்லை. அதோடு பாலிக்ஸெனிஸை நஞ்சிட்டுக் கொல்லுமாறும் அவன் காமில்லோவைத் தூண்டினன். காமில்லோ அதற்கு

[1] Camillo

இணங்குவதற்கு மாறாக, இம் மாற்ற முழுமையும் பாலிக்ஸெனிஸுக்கு அறிவித்து அவனுடன் அவன் நாடாகிய பொஹீமியாவுக்கே போய்விட்டான்.

தன் கருத்து ஈடேறாமற் போனது லியோன்டிஸின் சீற்றத்தை இன்னும் மிகைப்படுத்தியது. அவ் வெறியில் அவன் தன் மனைவியைச் சிறையிலிட்டான். அவர்களுக்கு அப்போது [1]**மாமில்லஸ்** என்ற ஒரு மைந்தன் இருந்தான். தாய்க்கு நேர்ந்த அவமதிப்பையும் துன்பத்தையும் நினைந்து நினைந்து அவனும் வாடித் துரும்பாக மெலிந்தான். அப்பொழுதும் அரசன் மனம் கனியவில்லை.

ஹெர்மியோனுக்குச் சிறையில் ஒரு பெண் மகவு பிறந்தது. மகவின் முகத்தைப் பார்த்தாவது தன் கணவன் மனம் மாறக்கூடும் என்று அவள் அடிக்கடி நினைப்பாள். ஆனால் கொந்தளிக்கும் புயல்போலச் சீறிக்கொண்டிருக்கும் அரசன்முன் அக் குழந்தையைக் கொண்டுபோக யாருக்கும் மனம் துணியவில்லை. இதை யறிந்து அந்நாட்டுப் பெருமக்களுள் ஒருவனான [2]**அந்திகோனஸ்** என்பவன் மனைவி [3]**பாலினா** அப்பணியைச் செய்வதெனை முன்வந்தாள். ஹெர்மியோன் அவளை வாயார வாழ்த்தி, "உன் நல்லெண்ணம் ஈடேறுவதாக!" என்று சொல்லிக்கொண்டு குழந்தையை அவளிடம் ஒப்படைத்தாள்.

குழந்தையை அரசன் முன் கிடத்திப் பாலினா கல்லுங் கரைய ஹெர்மியோனுக்காகப் பரிந்து பேசிப் பார்த்தாள். லியோன்டிஸ் அதற்குச் சற்றும் இணங்

---

[1]Mamillus. [2]Antigonus. [3]Paulina.

காதது கண்டு, குழந்தையைத் தனிமையாக இருக்கும் போது பார்த்தாவது அவன் மனம் இளகக்கூடும் என்று நினைத்து அதனை அங்கேயே விட்டு விட்டுப் போனாள். இதிலும் அவள் நினைவு தவறாகவே முடிந்தது. லியோன்டிஸ் குழந்தையைக் கடல் கடந்து



பாலினா குழந்தையைக் கிடத்தி வேண்டுதல்

ஆளில்லா இடத்தில் விட்டுவிடும்படி அந்திகோனஸை ஏவினான். அந்திகோனஸும் அப்படியே விடச் சென்றான்.

குழந்தைக்கு நேர்ந்த முடிவு கேட்டு ஹெர்மியோன் உள்ளம் அனலிலிட்ட மெழுகுபோல் உருகிற்று.

ஆனால், அதனை நினைந் தழுவதற்குக் கூட அவளுக்கு நேரமில்லை. அவள் குற்றத்தை நாட்டுப் பெருமக்கள் நிறைந்த மன்றத்தில் உசாவித் தீர்ப்பளிக்க மன்னன் முனைந்தான். அக்குற்றத்தின் முழு உண்மையையுங் கேட்டு வரும்படி [1]தெல்பாஸ் என்ற இடத்திலுள்ள பேர்போன குறி சொல்லுந் தெய்வத்தினிடம் அரசன் இரு தூதர்களை அனுப்பி யிருந்தான். அவர்கள் அப்போது திரும்பிவந்து, 'ஹெர்மியோன் குற்றமற்ற வள். பாலிக்ஸெனிஸூம் அப்படியே. லியோன்டிஸ் பொறாமை வாய்ப்பட்டுக் கொடுங்கோலனாய் விளங்கு கிறான். இழந்த குழந்தை பிழைத்து வந்தாலன்றி, அவனுக்கு வேறு பிள்ளையு மில்லை' என்று குறிகாரன் எழுதிய துண்டைக் கொடுத்தார்கள். அரசன் அம் மொழிகளையும் சட்டை பண்ணாமல் ஹெர்மியோன் மீது குற்றஞ் சாட்டினான்.

இத்தனையுங் கேட்டு முன்னமேயே நலிவுற்றிருந்த மாமில்லஸ் இறந்துபோனான். லியோன்டிஸூக்கு இப்போது அரசியிடம் சற்று இரக்கம் வரும்போ லிருந்தது. ஆனால், அதற்குள் பாலினா அவனிடம் வந்து, 'ஹெர்மியோன் இறந்துபோய் விட்டாள்' என்று கூறினாள்.

லியோன்டிஸின் மனம் இப்போதுதான் தன் நிலைக்கு வந்தது. தன் மனைவி கெட்டவளாயிருந்தால் இவ்வளவு மனஞ் சிதைந்து மடிந்திருக்கமாட்டாள் என்று அவனுக்குப் பட்டது. அதோடு மாமில்லஸ் இறந்ததால், குறிகாரன் மொழிகளும் உண்மை என

[1]Delphos.

ஓரளவு தெளிவு படுத்தப்பட்டன. இழந்த அச் சிறு பெண்மகவு அகப்படவில்லையானால், தன் அரசாட்சிக்கு உரிமையான பிள்ளை வேறு இனி இருக்கமுடியாதன்றோ?

## ௩. ஆவாரை யாரே அழிப்பர்!

சிற்க குழந்தையை ஆளில்லா நாட்டுக் கடற்கரையில் எறியவேண்டும் என்று சென்ற அந்திகோனஸின் கப்பல் பாலிக்ஸெனிஸின் நாடாகிய பொஹீமியாப் பக்கமே புயலால் கொண்டுபோகப் பட்டது. குழந்தையை அவனும் அங்கேயே நல்லாடை அணிகளுடன் விடுத்துச் சென்றான். குழந்தையின் பிறப்பு முதலிய விவரங்களைக் கூறும் ஒரு கடிதமும், [1]பெர்திதா (= இழந்தவள்) என்ற பெயர் எழுதிய துண்டொன்றும் அவ்வாடை யணிகளுடன் சேர வைக்கப் பட்டன. குழந்தையை விட்டுவிட்டுச் செல்கையில், அந்திகோனஸ் அத் தீமைக்குத் தண்டனை பெற்றான் என்று சொல்லும் வண்ணம் கரடி ஒன்றாற் கொல்லப் பட்டான்.

## ௪. சேராதவரையும் சேர்த்துவைக்கும் காதல்

பெர்திதா என்னும் அக்குழந்தையை ஓர் ஏழை இடையன் கண்டெடுத்தான். அவனுடன் வைக்கப் பட்டிருந்த அணிகலன்களுள் சிலவற்றை விற்று அவன் செல்வமுடையவனாகி வேறோரூரிற் சென்று வாழ்ந்தான். பெர்திதா தான் யார் என்ற அறிவின்றி

[1]Perdita.

அவன் மகளாக அவன் வீட்டிலேயே வளர்ந்து வந்தாள். ஆயினும் அவள் தன் தாயின் ஒரு புதிய பதிப்பே என்னும்படி வடிவழகியாய் விளங்கினாள்.

பாலிக்ஸெனிஸின் புதல்வனான [1]பிளாரிஸெல் என்பவன் ஒருநாள் வேட்டையாடிவிட்டு வரும்போது பெர்திதாவைக் கண்டான். அரம்பையரும் நாணும் அழகுடைய அம் மெல்லியலாள் இடைச்சேரியில் இருப்பது கண்டு வியப்படைந்தான். அரசிளங்குமரன் என்ற நிலையில் அவளை அடுத்தால் எங்கே அவளிடத்தில் அன்பிற்கு மாறாக அச்சமும் மதிப்பும் மட்டும் ஏற்பட்டுவிடுமோ என்று அவன் அஞ்சினான். அதனால் தானும் ஓர் இடைக்குல இளைஞன்போன்ற மாற்றுருக் கொண்டு [2]தொரிக்ளிஸ் என்ற பெயர்பூண்டு, அவள் நட்பையும் காதலையும் பெறுவானானான்.

வர, வர பெர்திதாவின் காதல் வலையிற்பட்டு பிளாரிஸெல் இடைச்சேரியிலேயே பெரும்பாலாகத் தனது நாளைக் கழிக்கத் தொடங்கினான். பாலிக்ஸெனிஸ் தன் மகன் அடிக்கடி அரண்மனையை விட்டுப் போய்வருவதையும் அரண்மனையில் அவன் கால் பாவாததையுங் கண்டான். எனவே, ஒற்றர்களை ஏவி அவன் எங்கே போகிறான் என்று பார்த்து வரும்படி அனுப்பினான். அவர்களால் பிளாரிஸெல் இடைச்சேரியில் ஒரு மங்கையைக் காதலிக்கிறான் என்று அறிந்தான்.

அந்நாட் டிடையர்கள் பாலுக்காக மட்டுமன்றிக் கம்பளி மயிருக்காகவும் ஆடுகள் வளர்த்துவந்தனர்

---

[1]Florizel. [2]Thoricles.

ஆண்டுக்கு ஒரு தடவை அவற்றின் கம்பளி கத்தரிக்கப்பட்டது. நம்நாட்டு உழவர் தமது அறுவடை நாளைக் கொண்டாடுவதுபோல் அவர்களும் அம் மயிர் வெட்டு நாளை விழாவாகக் கொண்டாடி விருந்து செய்வர். அத்தகைய விருந்துநாளில் பாலிக்ஸெனிஸ் காமில்லோவையும் கூட்டிக்கொண்டு இடையர் மாதிரி உடையுடனே பெர்திதாவை வளர்த்த இடையனது வீட்டிற்குச் சென்றான்.

இடையனும் அவன் மனைவியும் அரசனையும் காமில்லோவையும் தம்மை ஒத்த இடையர்களே எனக்கொண்டு வரவேற்றார்கள். அப்போது அரசனும் காமில்லோவும் அவ்விருந்தில் பிறருடன் கலவாது ஒரு மூலையில் ப்ளாரிஸெல் பெர்திதாவுடன் உட்கார்ந்து உரையாடி மகிழ்ந்திருப்பதைக் கண்டார்கள். இடையனிடம் சென்று அவர்கள் யார் என்று கேட்க, அவன் சூதின்றி 'என் மகளும் அவளைக் காதலிக்கும் இளைஞனும்' என்றான்.

பெர்திதாவின் அழகும் பெருமிதத் தோற்றமும் பாலிக்ஸெனிஸுக்கு வியப்பைத் தந்தன. அவளை அவனால் பாராட்டாதிருக்க முடியவில்லை. ஆயினும், அவள் ஓர் எளிய இடையன் மகளாதலால், அவளுடன் தன் மகன் காதல் கொள்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவர்கள் காதல் எவ்வளவு தொலை சென்றுள்ளது என்று காணும் எண்ணத்துடன் அவர்களை அணுகி உரையாடினான். அவர்கள் அம் மாற்றுருவில் அவனை அறிந்துகொள்ள முடியவில்லை.

பாலிக்ஸெனிஸ்: இளைஞனே, உன் மனம் இப்புற விருந்துகளில் செல்லவில்லை என்று தோன்று

கிறது. ஆனால், உனது அகவிருந்தையும் நீ அவ்வளவு திறம்படச் செய்யவில்லை என்றுதான் சொல்லுவேன்.

பிளாரிஸெல்: அப்படியா, அதில் நீர் கண்ட குறை யாது?

பாலிக்ஸெனிஸ்: நான் இளைஞனயிருந்து காதல் கொண்டபோது என் காதலிக்கு வகைவகையான கண் கவர்ச்சியான நற்பொருள்கள் வாங்கித் தந்து மகிழ்வதுண்டு. நீ ஏன் ஒன்றும் கொண்டுவராமல் ஊமைக் காதலாகவே காதலிக்கிறாய்?

பிளாரிஸெல்: 'நெஞ்சில் பொருளற்று வெறுமையாய் வருபவர்களே கையில் பொருளுடன் வர வேண்டும். இந்நங்கை நல்லாளும் புன்மையான கைப்பொருள்களை மறுத்து என் நெஞ்சகத்துள்ள விலையற்ற பொருளையே பொருளாக மதிப்பவள். அப்பொருள் வஞ்சமற்ற காதலே யாகும். எப்படியும் நீங்கள் இப்பேச்சை எடுத்துவிட்டபடியால் நீங்களே சான்றாக நான் அவளுக்கு அத்தகைய காதலைக் கொடுக்கிறேன்.' என்று அவள் பக்கம் திரும்பி, 'என் உரிமைப் பெர்திதா, இப் பெரியவர் காதலைக் கண்ட மனிதர் ஆவார். அவர் அறிய நான் கூறுகிறேன். இந்த நொடிமுதல் நம் உறவு காதலின் கனியாகிய மண உறவு ஆகுக! இந்நொடிமுதல் நீயே என் துணைவி. இதுவே நம் மண ஒப்பந்தம்,' என்றான்.

அவர்கள் காதல் இவ்வளவு தொலை வளர்ந்திருக்கும் என்று நினைக்காத பாலிக்ஸெனிஸுக்கு இது முதலில் ஏமாற்றத்தையும் பின் சினத்தையும் உண்டு பண்ணிற்று. அவன் உடனே தனது மாற்றுருவைக்

கலைத்து அரசனுருத் தாங்கி, 'அடே அறிவிலி! ஒப்பந்தம் ஏற்படும்போதே உன் ஒப்பந்தத்தைக் கலைக்கிறேன் பார். நீ இந்நொடியிலேயே இவளை விட்டுப் பிரிந்துவரவேண்டும்,' என்று கூறினுன். பின் அரசிளங் குமரனை உடனழைத்து வரும்படி காமில்லோவிடம் சொல்லிவிட்டு அவன் அரண்மனை சென்றுன்.

பெர்திதா பாலிக்ஸெனிஸின் மொழிகளைக் கேட்டதும், பிளாரிஸெலை நோக்கி, 'நீங்கள் அரச குமாரராதலால் உங்கள் பெருமையை நீங்கள் வைத்துக்கொள்வதுபற்றி எனக்குத் தடையில்லை' என்று பெருமிதத்துடன் கூறிப் பின் பெருமூச்சுடன், 'ஆயின் என் கனவு மட்டும் பாழாயிற்று' என்றுள். பிளாரிஸெல் 'உடனே வெட்டென நான் உனக்கு அரசகுமாரனல்லன். காதலனே; என் உறுதியை மறக்கவேண்டாம்' என்றுன். அவளது உளச் செம்மையையும் உயர்வையும் கண்டு காமில்லோவும், அவளையும் பிளாரிஸெலையும் சேர்த்துவைக்க எண்ணினுன்.

## ரு. திரை நீக்கம்

லியோன்டிஸ் இப்பொழுது தன் மனைவிக்கும் நண்பனுக்கும் செய்த தீங்கை எண்ணி வருந்துவது காமில்லோவுக்குத் தெரியும். ஆகவே அவன் லியோன்டிஸ் நாடாகிய ஸிஸிலிக்கே அக்காதல் துணைவருடன் சென்று லியோன்டிஸின் உதவியால் பாலிக்ஸெனிஸ் இவர்களை ஒப்புக் கொள்ளும்படி செய்யலாம் என்று நினைத்தான். காதலரும் அதற்கிணங்கவே, அவர்கள் மூவரும், பெர்திதாவை வளர்த்த இடையனுடன் புறப்பட்டு ஸிஸிலி வந்து சேர்ந்தார்கள்.

லியோன்டிஸ் காமில்லோவை அன்புடன் வரவேற்றான். பின் தன் நண்பனாகிய பாலிக்ஸெனிஸின் மகனை வரவேற்றுத் தழுவிக்கொண்டு,'உன் தந்தைக்கு நான் பெரும்பிழை செய்துவிட்டேன்; உன்னைக் கண்டதும் அவனையே கண்டாற்போன்று மகிழ்கிறேன்,' என்று அளவளாவினான்.

அப்போது அவன்பின் நின்ற பெர்திதாவைக் கண்டதும் அவன் கொண்ட வியப்பிற் களவில்லை. அவன் கண்ணுக்கு அவள் ஹெர்மியோனை அப்படியே உரித்துவைத்தாற்போன் றிருந்தாள். அவன் மனம் கனவுலகிற் சென்று உலவத் தொடங்கிற்று. 'ஆ! என் குழந்தையை நான் கொல்லாதிருந்தால், அல்லது அந்த அந்திகோனஸ் அவளைக் கொல்லாது விட்டிருந்தால் அவள் இன்று இவளே மாதிரி, இவள் பருவத்தில் இருப்பாளே.' என்று கூறி அவன் பெருமூச்சு விட்டான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த இடையன் மனத்தில் உண்மையின் ஒரு சாயல் தென்பட்டது. அவன் உடனே பெர்திதாவின் நகையுடனிருந்த கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். நகைகள் தான் குழந்தையுடன் வைத்துக் கொடுத்த அந்த நகைகளே என்பதை அரசன் உணர்ந்தான். உணர்ந்து பெர்திதாவைத் தன் புதல்வியென் றறிந்து அவளை ஏற்று மகிழ்ந்தான்.

இதற்கிடையில் பாலினா வந்து அக்கடிதத்தின் எழுத்துக்களைப் பார்த்து அது தன் கணவன் (அந்திகோனஸ்) எழுதியதே என்று ஒப்புக்கொண்டாள்.

தன் கணவன் இப்போது எங்கே என அவள் அறிய விரும்பினாள். அப்போது இடையன் வருத்தத்துடன், 'இக் குழந்தையை நான் காணும்படி கடற் கரையிலிட்டவர் தங்கள் கணவராகவே இருக்க வேண்டும். அவரை ஒரு கரடி விழுங்கியதை நான் கண்டேன். அதனைத் தங்களுக்கு இவ்வளவு நாட் கழித்து நான் சொல்லவேண்டி யிருக்கிறதே என்று வருந்துகிறேன்,' என்றான். பாலினா ஒருபுறம் தன் கணவன் இறந்ததற்காக வருத்தமும், இன்னொருபுறம் பெர்திதா மீட்கப்பட்டாள் என்றதற்காக மகிழ்ச்சியும் கொண்டாள்.

பெர்திதாவை மீண்டும் பெற்றது லியோன்டிஸுக்கு மகிழ்ச்சியே யென்றாலும், அவள் உருவைக் கண்டதால் அவள் தாயின் உருவையும் அதனுடன் சேர்த்து, 'ஆ, உன் தாயைக் கொன்ற தீவினையேனாயினேனே' என்று உருகினான். அதனைக் கேட்டு நின்ற பாலினா இரங்கி, 'ஐயா, உயிருடன் ஹெர்மியோன் உங்களிடம் வரமுடியாது. ஆனாலும் [1]ஜூலியோ ரோமானோ என்ற ஓர் அரிய செதுக்குக் கலைஞனால் செதுக்கப்பெற்ற உயிர்த்தன்மையுடைய உருவம் ஒன்று என் வீட்டில் உள்ளது. அதை அங்கு வந்தால் தாங்கள் காணலாம்' என்றாள்.

அதன்படியே லியோன்டிஸும், பிறரும் பாலினாவின் வீடு சென்றனர். அங்கே ஓர் அறையின் நடுவில் ஒரு திரை கட்டப்பட்டிருந்தது. அனைவரும் வந்து அமர்ந்தபின் பாலினா திரையை ஒதுக்கினாள்.

---

[1]**Julio Romano.**

## ௬. ஓவியமா உயிருருவமா?

அப்போது சலவைக்கல் இருக்கைத்தட்டொன்றின்மீது நிற்கும் பெருமிதத் தோற்றமுடைய ஓர் உருவை அனைவருங் கண்டனர். அதில் உருவின் அமைதியும் இருந்தது. உயிரின் களையும் இருந்தது.



ஹெர்மியோன் சிலையுருவம்

'அஃது உருவாயின், அமைத்தோன் ஒரு சிறு கடவுளே யாவன். அஃது உயிராயின், அது கடவுளின் படைப்புத் திறனுக்கு ஓர் உயரிய சான்றேயாகும்' என்றெல்லாம் பலரும் நினைத்தனர்.

அரசனுடைய கண்கள் அச் சிலையைப் பார்த்த பார்வையில் பார்த்தபடியே நின்றன; அவன் பார்க்கும்போது, அவன் நின்ற நிலையிலேயே அவன் உடல் நின்றுவிட்டது. அவ்வுரு உயிருடையதே போன்று நின்றதெனில், அதைப் பார்த்து நின்ற அவ்வரசன் உருவெனச் சமைந்தான் எனல் வேண்டும். அப்போது பாலினா, 'அரசே, தாங்கள் வாளா நிற்ப தொன்றே தாங்கள் இவ்வுருவை மெச்சுகின்றீர்கள் என்று காட்டுகிறது; ஆயினும் இஃது எவ்வளவு தங்கள் அரசிக்கு ஒத்ததாக இருக்கிறது,' என்று கேட்டாள்.

அரசன்: 'ஆம். நான் முதலிற் கண்டபோது அவள் இப்படித்தான் நின்றாள். அதே நிலைதான்; ஆனாலும் ஒரு செய்தி. இந்த உருவில் தோன்றுமளவு அவள் ஆண்டு சென்றவள் அல்லளே!'

பாலி: அந்த அளவு அந்தக் கலைஞன் திறனுடையவனே என்று தோற்றுகிறது. அவள் இன்றிருந்தால் எப்படி யிருப்பாளோ அப்படி அவளை அவன் தன் மனக்கண் முன் பார்த்து எழுதியிருக்கிறான்! ஆ! எவ்வளவு திறன்!

அரசன்: அதுமட்டுமன்று, அந்த உருவில் அவளுயிர் அப்படியே இருக்கிறது. அதோடு அக்கண்கள் அசையவே செய்கின்றன. ஆம்; அம்முகம் நிறம் மாறவே செய்கிறது. ஆம்; இஃது அவளே.

பாலினா: சரி, அரசே, இனி நான் திரையைப் போட்டுவிடுகிறேன். இப்பொழுதே அதன் கண்ணசைகிறது, காதசைகிறது, என்கிறீர்கள். இன்னுங்

கொஞ்சம் சென்றால், நடக்கிறது பறக்கிறது என்று கூடக் கூறுவீர்கள்.

அரசன் : இல்லை, இல்லை; திரையை இழுக்காதே. ஆ, அவ்வுருவுக்கு உயிரிருந்து நான் உருவாய் உயிரற்றிருக்கக் கூடாதா? ஆ, அஃது உருவன்று; அவள் உயிர்க்கின்றாள். அவள் உயிர்ப்பு என்மீது படுகிறது!

பாலினா : அரசே, தங்கள் மனம் நல்ல நிலையிலில்லை. இன்னுங் கொஞ்சம் சென்றால் அஃது உங்கள் கண்ணுக்கு உயிர் உள்ள பெண்ணாய் விடும், வேண்டா. திரையைப் போட்டுவிடுகிறேன்.

அரசன் : ஓரிரண்டு நொடி பொறு. பாலினா, உனக்குப் புண்ணியம் உண்டு. ஒருவரும் என்னை எள்ளி நகையாடாதீர்கள். நான் கிட்டப்போய் அவளுக்கு ஒரு முத்தமளிக்கவேண்டும்.

பாலினா: சரி, விரைவில்! நான் திரையை ஒரு நொடியில் மூடவேண்டும்.

அரசன் : முடியாது, பாலினா. ஒரு நொடியன்று ஓர் ஆண்டாயினும் திரையைக் கீழே விடவிடேன். நான் இங்கேயே இருந்து என் ஹெர்மியோனைப் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறேன்.

பெர்திதா : ஆம் அப்பா, நானும் அப்படியே என் தாயைப் பார்த்துக்கொண்டே இருக்கப்போகிறேன்.

பாலினா : தந்தையும் மகளும் இப்படிப் பித்துக் கொள்ளக்கூடாது. உங்களுக்கு வேண்டுமானால் இந்த உருவுக்கு உயிர் கொடுக்கக்கூட என்னால் முடியும். ஆனால் நீங்கள் சூனியக்காரியின் செயல் என்று எளனம் செய்யக்கூடுமே.

அரசனும், பெர்திதாவும்: இல்லை, இல்லை; அப்படியே வரச்செய்.

இவ்வளவு சொன்னதுதான் தாமதம். பாலினு ஒரு சொடக்கிட்டாள். உடனே பக்கத்தில் மெல்லிய இன்னிசை எழுந்தது. அதன் நடைக்கிசைய உருவம் மெல்ல மெல்ல அசைந்து இருக்கையினின்றும் சரேலென் றிறங்கிவந்து, அரசனையும் பெர்திதாவையும் கட்டிக்கொண் டழுதது.

அவ்வுருவம் உருவமன்று; ஹெர்மியோனே.

முன்னர் லியோன்டிஸின் கொடுமையி லிருந்து இனி ஹெர்மியோனைத் தப்புவிக்க முடியாதென்று கண்ட பாலினு அவளை இங்ஙனம் தன் வீட்டிலேயே மறைத்து வைத்துவிட்டு இறந்துவிட்டதாகக் கூறி விட்டாள்.

மகளைப் பெற்ற அன்றே அரசன் மனைவியையும் பெற்று இன்புற்றான்.

அதே சமயத்தில் பிளாரிஸெலைத் தேடிப் பாலிக்ஸெனிஸும் வந்தான். வந்து செய்தியனைத்தையுங் கேட்டு, அவன் இதுவரையிற் பெற்ற துன்பமெல்லாம் இவ்வின்பத்திற்கே என மகிழ்ந்து மைந்தனையும் தன் பழைய நண்பனான லியோன்டிஸையும் தழுவிக் கொண்டான். தங்கள் நட்புக்குப் புத்துயிர் தரும் தம் புதல்வர் புதல்வியர் காதலை இருவரும் மணவினையால் நிறைவேற்றி இன்புற்றனர்.

மகளை யிழந்த ஹெர்மியோன் ஒரேநாளில் மகளைத் திரும்பப் பெற்றதன்றி மருமகனையும் பெற்றுக் களித்தாள்.

---

# 4. ஒதெல்லோ[1]

## (கதை உறுப்பினர்)

### ஆடவர்

1. பிரபான்ஸியோ :—வெனிஸ் நகர்ச் செல்வன்—டெஸ்டி மோனா தந்தை.

2. ஒதெல்லோ :—கருநிற மூர் வகுப்பினன்—சிறந்த வீரன்—வெனிஸ் படைத்தலைவன்—டெஸ்டிமோனா காதற் கணவன்.

3. மைக்கேல் காசியோ :—படைத் துணைத்தலைவன்—ஒதெல்லோவின் நண்பன்—காதல் தூதன்—ஒதெல்லோ தந்த உயர்வால் அயாகோ பகைமை ஏற்றவன்.

4. அயாகோ :—படைஞன்—காசியோ உயர்நிலையால் ஒதெல்லோவிடம் பகைமை கொண்டவன்—வஞ்சகன்.

5. ராடெரிகோ :—டெஸ்டிமோனாவின் மறுக்கப்பட்ட செல்வனை பழங் காதலன்.

6. மொந்தானோ :—படைக்கலப் பணியாள்.

### பெண்டிர்

1. டெஸ்டிமோனா :—பிரபான்ஸியோ மகள்—ஒதெல்லோவின் காதல் மனைவி.

2. அயாகோ மனைவி.

---

[1]Othello.

## கதைச் சுருக்கம்

வெனிஸ் நகர்ச் செல்வனான பிரபான்ஸியோவின் மகள் டெஸ்டிமோனாவை அந் நகர்ப் படைத்தலைவனான கருநிற மூர் வகுப்பைச் சேர்ந்த ஒதெல்லோ காதலித்து, மறைவாய் அழைத்துச்சென்று மணந்துகொண்டான். அது வகையில் உதவிய மைக்கேல் காசியோ என்ற நண்பனைத் தன் படையில் ஒதெல்லோ உயர்பணி தர, அதனால் பகைமையும் பொறாமையும் கொண்ட அயாகோ என்ற படைஞன், டெஸ்டிமோனாவின் மறுக்கப்பட்ட பழங்காதலனும் அறிவிலியுமான ராடரிகோ என்ற செல்வனை ஏவி அவன் மூலம் இரவில் மறைந்து வெளியேறும் காதலரைப் பிரபான்ஸியோவின் ஆட்களைத் தேடும்படி செய்தான். பிரபான்ஸியோ பேரவையில் ஒதெல்லோமீது மாயத்தால் தம் மகளை மருட்டியதாகக் குற்றம் சாட்டினான். டெஸ்டிமோனாவின் காதற் சொற்கள் ஒருபுறம், அத்தறுவாயில் ஸைப்பிரஸில் துருக்கிப்படையை எதிர்க்க ஒதெல்லோவின் பணி இன்றியமையாதிருந்தது மற்றொருபுறம், அவ்வழக்கைப் புறக்கணிக்க வைத்தது. ஒதெல்லோ டெஸ்டிமோனாவுடன் ஸைப்பிரஸ் சென்றான்.

அத் தீவில் முதல் நாள் காவலுக்கு வைக்கப்பெற்ற காசியோ அயாகோ தூண்டுதலால் குடித்து நிலைதவற, அந்த அயாகோ ராடரிகோ மூலம் மணியடித்து இதனை வெளிப்படுத்திக் காசியோவைப் பணியினின்றும் அகற்றும்படி செய்தான். பின் காசியோவிடம் டெஸ்டிமோனா மூலம் ஒதெல்லோவை மனமிரங்கச் செய்யலாம் என்று தூண்டி, மறுபுறம் அவன் டெஸ்டிமோனாவிடம் மறைவாகப் பேசுகிறான் என்று ஒதெல்லோ மனத்தில் பொறாமையையும் தூண்டினான். டெஸ்டிமோனாவின் கைக்குட்டையைத் திருடிக் காசியோவிடம் சேர்ப்பித்து அதனையும் ஒரு தெளிவாகக் காட்டி ஒதெல்லோவை வெறிப்படுத்த, அவன் டெஸ்டிமோனாவைக் கொன்றான். அதற்கிடையில் ராடரிகோவைத் தூண்டிக் காஸியஸும் கொல்லப்பட்டான். சாகுமுன் ராடரிகோ சொற்களாலும், அவன் பையில் இருந்த கடிதத்தாலும், காசியோ தூய்மையும் அயாகோ சூழ்ச்சியும் தெளிவுபட்டுப்போயின. தன் பிழை யுணர்ந்து ஒதெல்லோ வாள்மீது வீழ்ந்திறந்தான். அவன் பெருமிதத்தையும், டெஸ்டிமோனா தூய்மையையும் காசியோவின் எளிமையையும் மக்கள் போற்றினர்.

# 4. ஒதெல்லோ

## க. ஒதெல்லோவின் காதல்

இத்தாலி நாட்டின் சிறந்த நகரங்களுள் [1]வெனிஸ் ஒன்று. அதன் நகரவை உறுப்பினருள் [2]பிரபான்சியோ என்ற செல்வர் ஒருவர் இருந்தார். அவருடைய புதல்வி எல்லாவகையான நற்குண நற்செய்கைகளும் பொருந்திய [3]டெஸ்டிமோனு ஆவள். அவளை அடையும் விருப்பத்துடன் பல நாட்டிலிருந்து செல்வக் குமரர் பலர் வந்து வந்து, தம் விருப்பம் ஈடேருது ஏமாந்து போயினர். புற அழகேபோன்ற அக அழகும் மிக்க இவ்வரிய நங்கை அவர்களது புற அழகில் மயங்காது அக அழகே அழகென நாடி நின்ருள். அதனுல் பிறர் எதிர்பாரா வகையில் அவள் தன் நாட்டினர் அனை வரையும் விடுத்து மூர் என்ற கரு நிறமுடைய வகுப் பைச் சார்ந்த ஒதெல்லோ என்பவனுக்கே தனது காதலை உரிமைப்படுத்தினுள்.

டெஸ்டிமோனுவின் காதலுக்கு உண்மையில் ஒதெல்லோ தகுதியுடையவன் என்பதில் ஐயமில்லை. அவன் உடல் நிறம் கறுப்பாயினும், உள்ள உயர்வு எத்தகைய உயரிய பண்புடைய செல்வ நங்கையும் பாராட்டத்தக்க தன்மையுடையதாகவே இருந்தது. அவன் ஒரு சிறந்த போர் வீரன்; போரில் அஞ்சா நெஞ்சமுடையவன்; வீரம் ஒன்றின் மூலமாகவே போரில் சிறைப்படுத்தப்பட்ட ஓர் அடிமையின் நிலையி னின்று படிப்படியாக உயர்ந்து வெனிஸ் படையின் தலைவனுனவன். நகராண்மை மன்றத்தின் பகைவர்க ளாகிய துருக்கியரை அடக்கி ஒடுக்கி அதனைக் காத்த

---

[1]Venice. [2]Brabantio. [3]Desdemona.

வன் அவனே. நகராண்மைக் கழகத்தார் அவனை மிகவும் நன்கு மதித்திருந்தனர். அதோடு டெஸ்டி மோனாவின் தந்தையும் அவனிடம் மிகுந்த நட்புக் கொண்டு தம் வீட்டிற்கு அவனை அடிக்கடி அழைத்து அவனுடன் விருந்துண்டு மகிழ்வார்.

ஒதெல்லோ பல நாடுகளையும் சுற்றிப்பார்த்தவன்: டெஸ்டிமோனாவிற்குப் பெண்களின் இயற்கைப்படி அவனுடைய பலவகையான வாழ்க்கைச் செய்திகளை யுங் கேட்பதில் ஆர்வம் மிகுதி. அவனும் அதற்கேற் பத் தான் ஈடுபட்டிருந்த போர்கள், முற்றுகைகள், படையெடுப்புக்கள்; நிலத்திலும் நீரிலும் தனக்கு நிகழ்ந்த இடையூறுகள்; பீரங்கி முனைகளிலும், கோட்டை மதிற் பிளவுகளிடையே இரு திறத்துப் படைகளும் எதிரிட்டுக் கைகலந்த சண்டைகளிலும் மயிரிழை அளவில் தான் தப்பிய அருஞ் செய்திகள்; தான் சிறைப்பட்டமை; அடிமையாக விற்கப்பட் டமை; வாங்கப்பட்டமை; விடுதலை செய்யப்பட் டமை முதலிய தன் வரலாறுகளை அவளிடம் கூறு வான். அவ்வரலாற்றினிடையிடையே தான் கண்ட புதுமை வாய்ந்த செய்திகள்; அகன்ற பாலை வனங் கள், நினைப்பினும் மயிர்க் கூச்செறியும் இரு நிலக் குகைகள், முகில் தவழும் மலைகள்; மனிதரைத் தின் னும் அரக்கர்கள், தோள்களுக்குக் கீழ்ப்பக்கந் தலையையுடைய கவந்தர்கள் முதலிய வியத்தகு மக்க ளின் கதைகள் பலவும் விரித்துரைத்து அவளுக்கு எல்லையில்லாக் களிப்பு உண்டுபண்ணுவான்.

இக் கதைகளினிடையே அவள் மனம் ஈடுபட் டிருக்கும்போது சில சமயம் வீட்டுவேலைக்காக அவள்

அவ்விடம் விட்டுப் போகவேண்டி வரும். அப்போது அவள் மனமெல்லாம் ஒதெல்லோவின் கதையில் ஈடு



ஒதெல்லோ பிரபான்ஸியோவிடம் தன் வரலாறு கூறுதல்

பட்டிருக்கும். ஆகவே அவள் வேலையை மிக விரைவில் முடித்துவிட்டு, முன்னிலும் பன்மடங்கு ஆர்வத்துடன் அவன் கதையைக் கேட்க அவன் முன் வந்து உட்கார்ந்துகொள்வாள். ஒருசமயம் அவள் இங்ஙனம் தான் துண்டு துண்டாகக் கேட்ட அவன் வாழ்க்கை வரலாறு முழுமையும் அடிமுதல் முடிவுவரை ஒரே கோவையாக உரைக்கும்படி அவனைக் கோரினாள். அவனும் அவள் கண்களில் இன்பநீர் ஊற்றெடுக்க மெய்ம்மயிர் சிலிர்ப்ப அதனை உருக்கத்துடன் கூறி, அவளைத் தன் அன்புக்கு உரிமைப்படுத்தினான்.

அக்கதையின் நற்பகுதிகளைக் கேட்கும் சமயம் அவள் மனமென்னும் பெட்டகத்தினின்றும் வெளிப்பட்ட ஒவ்வொரு பெருமூச்சும் புலவருடைய பாட்டுக்களைக் கேட்டுக் களித்து அவர்களுக்கு முடிமன்னர்

ஈயும் ஒவ்வொரு பொற்காசுக் கொப்பாக அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஆகா! அப்போது அவள் முகத்தில் கண்ட வியப்பென்ன, இரக்கமென்ன! அவற்றைக் கேட்டு அவள் தான் அடைந்த துயரத்தை எண்ணி, 'நான் கேட்டதே தவறு' என்பாள். ஆனால், அதே சமயம், 'ஆ! கடவுள் என்னையும் இத்தகைய வீரச்செயல்கள் செய்யத்தக்க ஆடவனாகப் படைத்தா னில்லையே!' என மறைமுகமாக அவனைப் பாராட்டு வாள். 'என் காதலைப் பெறவேண்டுமென்று உன் நண்பர் எவரேனும் விரும்புவராயின், இக்கதையை இப்படிச் சொல்லும்படி நீ அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தால் போதும்', என்பாள். பெண்களது மடமையைப் பீறிட்டெழுந்த இக் காதற் குறிப்பைத் துணைகொண்டு, வெற்றி தராதெனத் தான் ஒதுக்கித் தன்னகத்தே வைத்திருந்த தனது காதலை அவனும் வெளிப்படையாகக் காட்டலானான். நாளடைவில் அவர்கள் காதல் முற்றிக் களவியல் முறையில் மனம் ஒத்து மணம் புரிந்துகொண்டனர்.

இந்த அகமணத்தை வெளிப்படையாகக் கூறிப் பிரபான்ஸியோவின் மருமகனாக ஏற்கப்படுவதற்கு ஒதெல்லோவின் பிறப்புரிமையும் நிறமும் ஒரு புறமும் வாழ்க்கை முறையில் அவனுக்கு ஏற்பட்டிருந்த நிலை மற்றொருபுறமும் தடையாயிருந்தன. பிரபான்ஸியோ தன் புதல்வி டெஸ்டிமோனாவுக்குத் தனது மனப் போக்கின்படி நடக்க உரிமை தந்திருந்தது உண் மையே. ஆனால், அவ்வுரிமையை நன்முறையில் தன் கருத்துப்படியே பயன்படுத்துவாள்; பிற வெனிஸிய மங்கையரைப்போலவே தானும் உயர்நிலை யுள்ள

நகரவை உறுப்பினர் ஒருவரையோ, அல்லது அதற்கும் மேற்பட்ட நிலையுடைய ஒருவரையோ தனக்குத்துணைவனாகத் தேர்ந்தெடுப்பாள்' என்றுதான் அவன் மனப்பால் குடித்து வந்தான்.

அவர்கள் தம் உறவை எவ்வளவு நாள் மறைத்து வைத்திருக்க முடியும்? விரைவில் அது பிரபான்ஸியோவுக்கும் தெரியவந்தது. அவன் உடனே சீறியெழுந்து, நகராண்மை மன்றத்திற்குச் சென்று ஒதெல்லோவின்மீது குற்றஞ்சாட்டி, 'இக் கருநிற அடிமை நன்றி கெட்டவன்; என் நட்புரிமையைப் பாழ்படுத்தித் தூய உள்ளத்தினளாகிய என் புதல்வியை மாயத்தாலோ மந்திரத்தாலோ கெடுத்து, அவளை என் விருப்பத்திற்கும் மனித இயற்கைக்கும் மாருக நடக்கும்படி வற்புறுத்தியிருக்கிருன்', என்று முழங்கினுன்.

வெனிஸ் நகரச் சட்டப்படி மந்திரத்தால் பிறரை மயக்குவோருக்குக் கொலைத்தண்டனை அளிக்கப்பட்டு வந்தது. ஆயினும், ஒதெல்லோவுக்கு வாய்ப்பாக அந்நேரம் துருக்கியர் ஸைப்பிரஸ்மீது படையெடுப்பதாகச் செய்தி வந்தது. ஸைப்பிரஸ் தீவு அந்நாள் வெனிஸியர் ஆட்சிக் குட்பட்டிருந்தது. எனவே, அதைப் பாதுகாக்க வெனிஸ் நகராண்மை மன்றத்தார்க்கு ஒதெல்லோவின் உதவி இன்றியமையாதிருந்தது. அவனைவிட அப்பொறுப்பு வாய்ந்த பணிக்கு ஏற்றவர் அந்நகரில் இலர். எனவே, ஒதெல்லோ உயிருக்கு இடையூறு தரும் குற்றம் சாட்டப்பட்ட அதே நேரத்தில் வெனிஸின் உயிருக்கே அவன் உதவியும் இன்றியமையாததாய் இருந்தது.

பிரபான்ஸியோவின் பெருஞ் செல்வத்தையும் நகராண்மை மன்றில் அவர் உறுப்பினர் என்பதையும் நோக்க, அவர் வழக்குப் புறக்கணிக்கத் தக்கதாக இல்லை. அதோடு அவர், சீற்றத்தால் எதிரியின் குற்றத்தை மிகைப்படுத்திக் கூறினர். ஆனால், அச் சீற்றமே ஒதெல்லோவின் பக்கமாக நின்று உதவிற்று என்னலாம். ஒதெல்லோவிடம் இக் குற்றச்சாட்டு வகையில் உனது விடை என்ன என்று கேட்டபோது, அவன், சீற்றத்திற்கு எதிர்ச் சீற்றம் இன்றி, 'காதலர் காதற் கன்னியர் மனத்தைக் கவரப் பொதுப்படையாகக் கையாளும் மாய வித்தைகளையன்றி வேறெவ்வகை மாயத்தையும் நான் அறியேன். அன்பு கனிந்த மொழிகளும் உரையாடலுமே நான் இழைத்த மாயம், என்று உண்மைக் கதையை உள்ளவாறே கூறினன். இதுவும், தமது நகர்ப்பணிக்கு அவனது இன்றியமையாமையும் சேர்ந்து, நகர்த்தலைவர் மனத்திலும் நகரத்தார் மனத்திலும் அவன்மீது நன்மதிப்பை உண்டுபண்ணின. நகரத்தலைவர், "இத்தகைய கபடற்ற நேரடியான காதல் பிரபான்ஸியோவின் மகளை மட்டுமன்று; யார் மகளையும், என் மகளைக்கூடக் கவர்ந்திருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை," என்று வெளிப்படையாகக் கூறினர்.

ஒதெல்லோவின் இக் கூற்றிற்கு டெஸ்டிமோனவின் உரைகளும் சான்று பகர்ந்தன. வெளியே வந்து ஆடவர் முன் பேசியறியாதவள் அவள்; ஆயினும் அன்று தந்தை எதிரிலும், அவரையொத்த நகரத்துப் பெரியார் அனைவரது முன்னிலையிலும்

வந்து நின்று அவள், 'நான் ஒழுக்கத்துடன் வாழ்ந்து வந்தவள்; கல்வி கேள்விகளில் தேர்ச்சி யுடையவள்; எனவே, என் கட்சியை உரைக்க எனக்கு உரிமை உண்டு. என் தந்தைக்குக் கீழ்ப்படிவது எனக்குக் கடமையே என்பதை நான் நன்கு அறிவேன்; ஆனால் என் தலைவனுக்கும் கணவனுக்கும் நான் அதனினும் உயர்ந்ததோர் கடப்பாடுடையேன்; இதனை என் தந்தை அறிவர்; இவ்வுரிமைபற்றியே என் தாய் தன் தந்தையினும் அவரை உரிமையுடையவராகப் பின் பற்றினள்' என்று அவள் கூறிய மொழிகள் பசுமரத் தாணி போல் நயமுடையவையாகவும் மறுக்கக்கூடா தவையாகவும் இருந்தன.

இங்ஙனம் தமது தசையே தமக்கு எதிர்வழக் காடித் தமது கட்சியை முறித்ததென்று பிரபான் ஸியோ கண்டார். கண்டு நிலைமைக் கேற்ப அவர் தம் மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு தம் புதல் வியை வேண்டா வெறுப்பாக ஒதெல்லோவிடம் ஒப்ப டைக்க இசைந்தார். ஆயினும், அவளது முடிவால் தமக்கேற்பட்ட மன எரிவை அவர் வெளிப்படை யாகக் காட்டாதிருக்க முடியவில்லை. 'எனக்கு டெஸ்டிமோனவை யன்றி வேறு பிள்ளை யில்லாதது நன்றாயிற்று; அன்றேல், அவள் நடந்து கொண்ட முறையைப் பார்த்தபின் பிற குழந்தைகளை அடக்கு முறையால் கட்டுப்படுத்தி, அவர்கள் வாழ்வுக்கு இடையூறு செய்யவேண்டி நேர்ந்திருக்கும்' என்று அவர் முணுமுணுத்துக் கொண்டார்.

## உ. அயாகோவின் பொறாமைப் புயல்

காதற்போரில் இங்ஙனம் ஒருவகையாக வெற்றி கண்டபின் உடன்தானே படைப்போருக்கும் ஏற்பாடு செய்யவேண்டியதாயிருந்தது. டெஸ்டிமோனா பட்டுடுத்துப் பஞ்சணை மெத்தையிற் கிடப்பதே காதல் எனக் கொள்ளாது கணவனுடன் இன்ப துன்ப மனைத்தையும் பங்கு கொள்வதே காதல் எனக் கொண்டவள். எனவே தானும் கணவனுடன் போரில் கடுமையையும் இடையூறுகளையுந் தாங்கத் துணிந்து முன்வந்தாள்.

ஒதெல்லோவும் டெஸ்டிமோனாவும் [1]ஸைப்பிரஸில் இறங்கியதும், புயலால் துருக்கியப் படை தானாகவே சிதறடிக்கப்பட்டதென்று நற்செய்தி வந்தது. எதிர்பார்த்த பகைவரினிடையூறு இதனால் அகன்றது. ஆயினும், புறப் பகைவரது போர்தான் நின்றது. ஒதெல்லோவின் பக்கத்தே அவன் எதிர்பாராத இடத்திலும் உள்ளமொத்த வாழ்க்கையிலும் அவனுக்கெதிராக ஒரு வாழ்க்கைப்போர் அவனை நிலைகுலைக்க எழுந்தது.

ஒதெல்லோ தன் நண்பர்களுள் [2]மைக்கேல் காசியோ என்பவனையே முதன்மையான நண்பனாகக் கொண்டிருந்தான். இவன் வீரமும், நேரிய தோற்றமும் உடையவன். பெண்களிடம் நாகரிகமாகவும் நயமாகவும் நடந்துகொள்ளும் இயல்பினன். ஒதெல்லோ டெஸ்டிமோனாவின் காதலை நாடி நின்ற சமயம் அவனது திறனைப் பயன்படுத்தி, அவனைத் தன் காதல்

---

[1]Cyprus. [2]Michael Cassio.

தூதனுக்கிக்கொண்டான். கள்ளங் கபடற்ற மனமும் சிறுமையான நினைவுகளுக்கு இடந்தராப் பெருந்தகைமையும் உடைய ஒதெல்லோ அவனிடம் பற்றும் நம்பிக்கையும் வைத்திருந்தது இயல்பே. டெஸ்டிமோனுவும் தான் காதலித்த கணவன் நீங்கலாக, வேறெவரையும் விட அவனிடம் நம்பிக்கையும் நல்லெண்ணமும் உடையவளாகவே இருந்தாள். மணவினைக்கு முன் இருந்த இந் நட்புறவு மணவினைக்குப் பின்னும் அவனுடன் இருவருக்கும் இருந்தே வந்தது. யாதொரு தங்கு தடையுமின்றிச் சூதற்ற நிலையில், ஒதெல்லோ இருக்கும்போதும் சரி இல்லாதபோதும் சரி, மைக்கேல் காசியோவும் டெஸ்டிமோனுவும் நகைத்து உரையாடியும் களித்தும் நேரம் போக்குவதுண்டு. இந்நட்பின் குற்றமற்ற தன்மையும் உயர்வுமே தீயோன் ஒருவன் எறிந்த தீக்கணைக்கு அதனை எளிதில் இரையாகச் செய்தல் என்னல் வேண்டும்.

சைப்பிரஸுக்கு வருவதற்குச் சற்று முன்னதாகவே ஒதெல்லோ காசியோவுக்குத் தனக்கடுத்ததோர் உயர்பணி தந்தான். காசியோவைவிட முதலில் உயர்ந்த நிலையில் இருந்து இவ்வுயர்வால் அவனுக்குக் கீழ்ப்பட்டுவிட்ட [1]அயாகோ என்னும் படைஞனுக்கு இவ்வுயர்வு கண்ணுறுத்தலா யிருந்தது. அயாகோ பார்வையில் காசியோ அதற்கு எவ்வகையிலும் தகுதியுடையவனாகப் படவில்லை. 'பெண்களிடையே பசப்பித் திரிவதற்குத்தானே இவன் தகுதியுடையவன்? இவனுக்குப் போரைப்பற்றி என்ன தெரியும்?' என அவன் கூறுவதுண்டு. இதுமுதல் அவனுக்குக் 'காசி

---

[1]Iago.

யோ'வின் பெயர் நஞ்சாயிற்று. காசியோவுக்கு உயர்வு தந்ததாலோ அல்லது வேறெவ்வகை நினைவாலோ ஒதெல்லோவின்பேரிலும் எல்லையிலாக் கசப்பும் வயிற்றெரிச்சலும் ஏற்பட்டு நாளாக நாளாக வேரூன்றித் தழைத்து வளர்ந்து வந்தது. சமயம் ஏற்பட்டபோதெல்லாம் அவன் உள்ளதும் இல்லதும் ஆக ஒதெல்லோ காசியோ இவர்களைப் பற்றிய தீய கருத்துக்களைப் போற்றிப் பெரிதாக்கிப் பொருமைத் தீயை வளர்த்துவந்தான்.

அயாகோ இயற்கையாகவே வஞ்சமும் கைத்திறனும் உடையவன். மனித இயல்பையும் மனிதர் மனப்போக்கையும் அறிந்தவன். மனிதர் மனத்தை உள்ளூர நின்று ஆற்றி வைக்கும் உணர்ச்சியாற்றல்களையும், அவற்றை இயக்கும் நெறியையும், அவற்ருல் துன்பத்தை மிகுதியாக விளைத்துப் பிறரைத் துன்புறுத்தும் வகையையும் அவன் நன்குணர்ந்தவன். தன் எதிரிகளாகிய ஒதெல்லோ, காசியோ ஆகிய இவர்களுள் காசியோமீது ஒதெல்லோவுக்குத் தப்பெண்ணம் உண்டாகும்படி மட்டும் செய்துவிட்டால், எதிரி கையாலேயே எதிரியை—ஒரு வேளை எதிரிகள் இருவரையும் கொன்று—ஒழித்துவிடலாகும் என்று அவன் எண்ணி மனக்கோட்டை கட்டலானுன்.

## ௩. காசியோமீது குற்றச்சாட்டு

பகைவர் படை உலைந்ததும், படைத்தலைவரும் அவர் தலைவியும் தம்மிடையே வந்திருப்பதும், சைப்பிரஸ் மக்களுக்கு எல்லையில்லாக் களிப்புத் தந்தன. அக் களிப்பில் அவர்கள் எங்கும் விழாக் கொண்

டாடத் தொடங்கினர். பாலும் நறுந்தேனும் எங்கும் ஒழுகின. 'ஒதெல்லோ வாழ்க, டெஸ்டிமோனு வாழ்க' என்னும் ஆரவாரத்தினிடையே பொற் கலங்களும் வெள்ளிக்கிண்ணங்களும் கணகண என ஒலித்தன.

அன்றிரவு படைப்புலம் காவல்காக்கக் காசியோ அமர்த்தப்பட்டான். படைஞர்கள் மட்டுக்கு மிஞ்சிக் குடிக்கவோ, தம்முட் சண்டையிட்டு மக்களை வெருட்டவோ செய்யாதபடி பார்க்க அவனுக்கு ஆணை தரப்பட்டது. அயாகோவின் ஆழ்ந்த சூழ்ச்சிகளுக்கு அன்றைய இரவே மிகவும் வாய்ப்புடையதா யமைந்தது. அவன் துணைத்தலைவனுகிய காசியோவிடம் பொய்ப்பற்றுக் காட்டி, அவனது உடல் நலத்தையே விரும்பி வற்புறுத்துபவன் போல அவனை மேன்மேலும் குடிக்கச் செய்தான். குடிக்கும், இன்மொழிக்கும் இணங்கும் இயல்புடைய காசியோ அயாகோவின் சூதை அறியாது வரம்பற்றுக் குடியில் மூழ்கி அறிவிழந்தான். அந்நிலையில் அயாகோ தனது அரிய வேலைப்பாட்டை இன்னும் மிகைப்படுத்தி டெஸ்டிமோனுவின் பெயரையும் புகழையும் இடையே இழுக்க, அவன் அப் பெயரைத் தகாத வகையில் கூறிப் பிதற்றத் தொடங்கினன். டெஸ்டிமோனுவின் பழங் காதலர்களுள் செல்வச் செருக்கில் மிகுந்தும், அறிவில் குறைந்தும் விளங்கிய [1]ராடரிகோ என்பவனை அயாகோ வேண்டுமென்றே அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்திருந்தான். அவனும் குடித்திருந்ததால் டெஸ்டிமோனுவின் பெயரைக்

[1]Roderigo.

கேட்டதும் காசியோவை எதிர்க்க, இருவர்க்கும் இடையே கடுமொழிகளும் அடிதடியுமாயின. அவர்களை விலக்கும் நோக்கம் கொண்டு வந்த [1]மொந்தானே என்னும் பணியாளனும் இப் பூசலில் காயமடைந்தான்.

இவ்வளவையும் பார்த்து இதுதான் குழப்பத்தைப் பெருக்கச் சமயமென்று நினைத்து அயாகோ சென்று நகர மண்டபத்தின் மணியை அடித்தான், நகர மக்கள் அதுகேட்டுக் கலவர மடைந்து வந்து கூடுவாராயினர். ஒதெல்லோவும் விரைந்து எழுந்து வந்து பார்த்துக் காசியோவின் நிலையைக் கண்டு வியப்படைந்தான். அயாகோ மிகுந்த திறமையுடன் தான் காசியோவுக்கு உற்ற நண்பன் போலவும் அவனை மறைத்துப் பேசுபவன் போலவும் நடித்து, அவனிடம் தானே உண்டு பண்ணிய குற்றத்தைப் பன்மடங்கு மிகைப்படுத்திக் காட்டினான். அவன் நட்பின் பெயரால் காசியோவைப் பாதுகாக்க விரும்புவதாகக் காட்டக் காட்ட, ஒதெல்லோவுக்குக் காசியோவின் பேரில் தப்பெண்ணம் வளர்ந்துகொண்டே வந்தது. அது, அயாகோ குறிப்பாக மறைத்துரைக்கும் உரைகளைப் பன்முறையும் வருந்திக் கிளறி முழுப்பொய்ம்மைத் திறனையும் காட்ட அவனுக்கு இடம் கொடுத்தது. போர்க்களத்தில் விருப்பு வெறுப்பென்று பாராமல் ஒழுங்கொன்றையே தலைமையாகக் கவனிக்கும் இயல்புடையவன் ஒதெல்லோ. ஆதலால் காசியோவைத் தன் நண்பனென்றும் பாராமல் ஒதெல்லோ பணியினின்றும் நீக்கிவிட்டான்.

---

[1]Montano.

## ச. டெஸ்டிமோனுவின் இல்வாழ்க்கைக்கு உலை

இங்ஙனமாக அயாகோவின் சூழ்ச்சித் திட்டத்தின் முதல்படி நிறைவேறிற்று. காசியோவைப் பணியிலிருந்து நீக்கியாயிற்று. அவனிடம் ஒதெல்லோவுக் கிருந்த பற்றுதலைக் கலைத்தாயிற்று. ஆனால், இவ்வளவில் நின்றுவிட அவனது பொறாமைத் தீ இடம் தரவில்லை. அவ்வெறுப்பை விதையாக மட்டும் வைத்துக்கொண்டு பகைப்புலத்தில் அழிவுப் பயிரை வளர்க்க அவன் எண்ணினான்.

அதற்கிசையக் காசியோ அவனையே தன் உற்ற நண்பனாக நினைத்து அவனிடம் சென்று 'நான் இப்படி அறிவிழந்து கீழ்மகனது செயல் செய்துவிட்டேனே! எனக்கு இத் தண்டனைகூடப் போதாது' என்று வருந்தினான். ஆனால், அயாகோ வினயமாக, அவன் குற்றம் அவ்வளவு பெரிதொன்று மில்லை. யாவர்க்கும் இயற்கையானதே என்றும், ஒதெல்லோ முன் சினத்தாலேயே இத் தண்டனை தந்தான் என்றும் கூறினான். மேலும், 'தலைவர் எவ்வளவோ பெரியவர்; ஆயினும் அவருக்குந் தலைவியான டெஸ்டிமோனாவினிடமே உண்மையில் எல்லா வல்லமைகளும் அடங்கியுள்ளன' என்றும், 'அவள் இரக்கமான உள்ளமும் அன்பும், உடையவளாதலால் தலைவரை அடுப்பதைவிட அவளை அடுத்தால் இச்சிறு குற்றம் மன்னிக்கப்பட்டுக் காசியோ மீண்டும் தன் பணியைப் பெறலாம்' என்றும் அவன் எடுத்துக் கூறினான். இம்மொழிகள் இனிமையும் தகுதியும் உடையவையேயாயினும்,

அவற்றைக் கூறும் உள்ளத்தின் நஞ்சால் அவை தீய முடிபுகளுக்குப் பயன்படுத்தப்பட்டன.



டெஸ்டிமோனுவினிடம் காசியோ முறையீடு

அயாகோவின் உரைப்படியே காசியோ நடந்தான். எதிர்பார்த்தபடியே டெஸ்டிமோனுவின் கனிந்த உள்ளத்தில் காசியோவின் வேண்டுகோள் நற்பயன் அளித்தது. 'என் தலைவரிடம் நல்லுரை கூறி உனக்குக் கட்டாயம் உன் பணியை நான் மீட்டும் வாங்கித் தருவேன். உனக்கு உதவி செய்யக் கிடைத்த இத்தறுவாயில் நான் உனக்காக உயிரிழப்பதாயினும் பின் வாங்கேன்' என்ற பெருந்தகை மொழிகள் ஊழ்வலி முந்துறுவதாலோ என்னவோ அவள் நாவினின் றெழுந்தன.

அம் மொழிகளின்படியே ஒதெல்லோ வந்ததும் அவள் அவனுக்காகப் பரிந்து பேசினுள். ஒதெல்லோ

எளிதில் அவள் மொழிகளை மறுக்கக் கூடவில்லை யாயினும், அன்று காசியோ மீதிருந்த கடுஞ்சினத்தின் ஆற்றலால் 'சரி பார்ப்போம், வரட்டும்' என்று இழுத்துக் கூறவே அவள் அவன் குறிப்பறியாமல் (பெருந்தன்மை யுடையோர் பலரது அழிவுக்கு இக் குணமே காரணம் என்பது காண்க.) அடுத்தடுத்து இச்செய்தியை வற்புறுத்திக் கூறுவாளாயினள். 'இத்தகைய மாபெரும் குற்றம் அவ்வளவு விரைவில் மன்னித்துத் தள்ளத்தக்கதன்'றென அவன் கூறிய தற்கு மாறாக அவள், 'இன்னே மன்னிக்கவேண்டும்; தவறினால் இன்றே மன்னிக்கவேண்டும். அன்றேல், நாளை விடிந்த உடனாவது மன்னிக்கவேண்டும்' என்று பன்னிப்பன்னி மன்றாடினாள். காசியோவின் கழிவிரக்கத்தையும் பணிவையும் அவள் விரித்துரைத் தாள். அவன் குற்றம் சிறிது; இத்தகைய பெருந் தண்டனை அதற்குத் தகாதென வாதாடினாள்.

இவ்வளவுக்கும் இணங்காது அவன் தயங்கு வதைக் கண்டு தீவினையால் அவள் தன் பழங்காதல் நினைவுகளையே தனது இறுதித் துருப்பாகப் பயன் படுத்தினாள். 'என் தலைவ! இச் சிறு செய்திக்காக நான் இவ்வளவு கூறவேண்டுமா? அதுவும் காசியோ வகையில்! தாங்கள் என்னை அடையும் எண்ணத் துடன் காதல் தூதனாக அனுப்பப்பட்டவனும், நான் உங்களைக் குறைவாகப் பேசியபோது மறுத்து உங் களைப் புகழ்ந்து என்னை உங்களுக்குரியவளாகச் செய் தவனுமான காசியோ வகையில் நான் இவ்வளவு கூறவேண்டுமா? காதலுக்காக எவ்வளவோ பெரிய செய்திகளையும் மனிதர் விட்டுக்கொடுப்பர். இச் சிறு செய்திக்கே இடந்தராவிட்டால் அத்தகைய பெருஞ்

தேர்வுகளை உங்கள் காதலுக்கு நான் கொடுப்ப தெவ் வாறு?' என்று பலவாறாகப் பேசினாள். ஒதெல்லோ மறுக்கக் கூடாமல், 'சற்றுப் பொறுமையாக மட்டும் இரு; உன் விருப்பப்படி எப்படியும் செய்வேன்' என்றான்.

டெஸ்டிமோனாவிடம் மீண்டும் ஒருமுறை தனது வேண்டுகோளை வற்புறுத்திவிட்டுக் காசியோ மறைவாக வெளியேகும் சமயம் பார்த்து, அயாகோ ஒதெல்லோவை அவ்விடம் கூட்டிக்கொண்டு வந்தான். அப்போது அயாகோ தனக்குள் சொல்லிக்கொள்வது போல மெல்ல 'இதெல்லாம் நன்றாயில்லை' என்று மறைவில் சிறுபொடி வைத்துக் கூறினான். ஒதெல்லோ அச்சமயம் அதனைக் கவனிக்கவில்லை. ஆனால், அஃது அவன் மனநிலையறிந்து பக்குவமாக நல்ல நிலத்தில் விதைத்த விதையாய்ப் பின் பயன் விளைத்தது. அவ் விதைக்கு உயிரூட்டுவதுபோல் டெஸ்டிமோனா இல்லாதபோது அவன், 'நீங்கள் டெஸ்டிமோனாவைக் காதலித்தபோது காசியோவுக்கு அக்காதல் செய்தி தெரியுமோ?' என்று ஒரு கேள்வி கேட்டான். ஒதெல்லோ அவனே அக் காதலுக்கு இடையீடாய் நின்றவன் என்றபோது, அயாகோ ஏதோ பெரியதோர் உள்ளுறைக் கருத்துடையவன் போலப் புருவங்களை நெரித்துக்கொண்டு தன்னை அறியாமல் உட்கிடக்கையை வெளியிடுபவன் மாதிரி, 'அதுவும் அப்படியா!' என்று பெருமூச்சு விட்டான்.

இப்போது ஒதெல்லோவின் மனத்தில் சிதறிக் கிடந்த பல செய்திகளும் ஐயப்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று கலந்து உருப்பெறத் தொடங்கின. 'அயாகோ

நேர்மையுடையவன், சர்சியோவிடம் கொண்ட நட்பி ஞலேதான் உண்மையை வெளியிடத் தயங்குகிருன்' என்ற எண்ணம், அவனது ஒவ்வொரு குறிப்பிற்கும் எல்லையற்ற பொருள் கொடுக்கும்படி அவனைத் தூண்டிற்று. எனவே, அவன் அயாகோவிடம் 'ஒளிவு மறைவின்றி எனக்கு உண்மையைக் கூறுக' என்ருன்.

## ரு. பொய்யும் சொல்வன்மையினுல் மெய்யாம்

ஓர் உயரிய நாடக ஆசிரியன் தன் கதைப் போக்கைத் தன் உரைகளாற் கூருமல் பிறருடைய உரையாடல்களாலேயே இணைத்துக்கொண்டு கூட்டுவான். அதுபோல அயாகோவும் தான் ஒதெல்லோவின் மனத்தில் எழுப்ப நினைத்த இருண்ட எண்ணங்களை நேரிடையான மொழிகளால் கூருமல், குறிப்பாகப் பல செய்திகளாலும் புனைவுரைகளாலும் இயற்கையாய் எழும் வண்ணம் கூறத்தொடங்கினுன். 'மனதிற்பட்டவை யெல்லாம் உண்மைகள் ஆகுமா? பல சமயம் மிக இருண்ட நினைவுகள் மனத்தில் எழுவதுண்டு. அவை உண்மையாயும் இருக்கலாம்; பொய்யாகவும் இருக்கலாம். அவற்றை ஆராயாது கூறினுல் எவ்வளவு தீங்கு விளையும்' என்று தன்னையும் காத்துத் தான் கூறவிரும்பும் செய்தியின் இயல்பையும் குறிப்பாகக் காட்டினுன். 'அதனுல் எத்தனையோ நல்லவர்கள் கெட்டபெயர் அடையும்படி நேரும்' என்று கூறி ஒதெல்லோவின் குழம்பிய ஐயத்தை ஒருவரிருவர்மீது செலுத்தினுன். 'அதிலும் மனைவியைப்பற்றிக் கணவன் ஐயம் கொள்ளுதல் மிகக் கொடிது. இருவர்க்

கும் அது தீது. வாழ்க்கை அமைதியும் அதனால் கெடும்' என்று கூறி, ஒதெல்லோவின் மனத்தில் குமுறி யெழும் ஐயப் புயலை டெஸ்டிமோனா பக்கமாகச் சாய்த்தான்.

யானைகளையும் சிங்கங்களையும் எதிர்த்துப் போரிட்டு வெல்லும் வல்லமையுடைய சிங்கவேற்றைப் பல்லாயிரக்கணக்கான சுண்டெலிகள் பலநாள் தொடுத்துப் பொருது வதைத்துக் கொல்ல முடியுமன்றோ? அதுபோல் டெஸ்டிமோனாவின் மீதும் அவளது கற்பின் மீதும் ஒதெல்லோ வைத்திருந்த மாறாத பற்றையும் நன்மதிப்பையும் அயாகோ என்னும் மந்திரக்காரன் ஏவிய ஐயங்களும் தூண்டுதல்களும் சென்று தாக்கத் தொடங்கின. அப் பற்றின் உறுதி முதலில் அவற்றைச் சிதறடித்தது. 'என் மனைவி ஓர் அழகி என்பதும், மனிதரது கூட்டுறவு களியாட்டம் உரையாடல் இவற்றில் விருப்புடையவள் என்பதும் எனக்குத் தெரிந்தவையே, ஆனால் இவை மட்டிலும் குற்றங்கள் ஆகிவிடா. உண்மையில் கற்பு இருக்கும் இடத்தில் இவை சிறந்த குணங்கள் ஆம். அக் கற்புக்குக் குறைவு கூற நான் மும்முறை தயங்குவேன்' என்று ஒதெல்லோ கூறினான்.

ஒதெல்லோவின் இவ்வுறுதியையும், மனைவியின் கற்பில் குறைவு கருதத் தயங்குவதையும் அயாகோ மிகவும் போற்றினான். 'டெஸ்டிமோனா கறையுடையவள் என்பதற்குத் தெளிவென்ன?' என்று அவன் நேரில் கேட்டபோது, 'அதற்குத் தெளிவே இல்லை. அது வெறும் ஐயப்பாடே. அதன் சுழலில் நீங்கள் விழவே கூடாது' என்று அயாகோ தனது உண்மை

எண்ணத்திற்கு நேரெதிரான மொழிகள் கூறினான். 'ஆனால் அவள்மீது குருட்டு ஐயுறவு கொள்வது எவ்வளவு தவறோ அவ்வளவு அவள்மீது குருட்டு நம்பிக்கை வைப்பதும் தவறேயாகும். கறுப்பர்களாகிய நீங்கள் கபடறியாதவர்கள். இத்தாலியர், அதிலும் இத்தாலியப் பெண்கள் இயல்பை இத்தாலியராகிய நாங்களே நன்கு அறிவோம்' என்று ஐயத்தின்மீது அயாகோ தன் சொல் துருத்தியால் காற்றை ஊதினான். மேலும், உங்கள் காதலை ஏற்றதே அவள் இயற்கைக்கு மாறானது அன்றோ? அவள் தந்தைகூட அதனை ஏதோ மாயக்காரத்தனம் என்றுதானே நம்ப இடமிருந்தது!' 'காதலுக்காகத் தந்தையை வஞ்சிக்கத் துணிவு கொண்டவள் கணவனையும் வஞ்சிக்கலாமன்றோ?' என்று கூறிய உரை கணைபோல் ஒதெல்லோவின் உள்ளத்தையுங் கடந்து அவனது உயிர் நிலையையே ஊடுருவிச் சென்றது.

இவ்வளவு சொல்லிவிட்டு, 'ஐயையோ, என்ன காரியம் செய்துவிட்டோம்; ஒருவர் மனை வாழ்க்கைக்கு உலைவைத்துவிட்டோமே' என்று திடுக்கிட்டுப் பின்வாங்குபவன் போல அயாகோ பின் வாங்கினான். ஆனால் ஒதெல்லோ அதற்கு இடங்கொடாமல் தன் மனத்தில் எழுந்த காட்டுத்தீயை வெளிக் காட்டாது மறைத்துக்கொண்டு, 'நீ அறிந்ததைக் கூறுவதில் பிழையில்லை. நான் ஒன்றும் ஆய்ந்தோயாது நம்புபவன் அல்லன். காசியோமீது ஐயப்பட இடமுண்டா என்பதைக் கூறுக' என்றான். வானம் பார்த்த வறண்ட புலம்போல் இப்பணிக்கே காத்திருந்த அயாகோ காசியோவின் நேர்மைக் குணத்தின்மீதும் போர் தொடுக்கலானான். தன் இனத்தாரிடையே

அழகுமிக்கார் பலரை வெறுத்து டெஸ்டிமோனு ஒதெல்லோவைத் தெரிந்தெடுத்தது பிறர்க்கிணங்காத் தன் ஆண்மையை உணர்த்தவில்லையா? காதலிக்கும் போதே உங்களையும் காசியோவையும் அவள் ஒப்பிட்டு உங்க ளிருவரிடையே யுள்ள தோற்ற வேற்றுமை, நடை வேற்றுமை இவற்றைக் கவனித்துத் தானே இருப்பாள்? அவள் காசியோவுக்காக மன்ருடுவது வெறும் பரிவுக்கு மேற்பட்டதாக இல்லையா?' என்றெல்லாம் ஒதெல்லோ மனதிற் படக் கூறியபின், 'இதனைத் தேர்ந்தறிய வேண்டின், காசியோவை மன்னித்துப் பணியில் ஏற்றுக்கொள்ளும் வகையில் சற்றுத் தாமதம் செய்தால் போதும். அப்போது அவள் நடையிலிருந்து உண்மை அறியலாகும்' என்று தூண்டினுன். இங்ஙனம் டெஸ்டிமோனுவின் நற்குணமும் உயர்வுமே இந் நயவஞ்சகக் கொடியோன் கையில் அவள் அழிவுக்காக விரிக்கப்பெற்ற வலையாயிற்று.

## ௬. கைக்குட்டையே கழுத்துக் குட்டையாதல்

தக்க முடிவான சான்றுகளின்றி மனைவிமீது ஐயம் கொள்ளலாகாதென அயாகோ ஒதெல்லோவை வற்புறுத்தி வேண்டிக்கொண்டான். ஒதெல்லோவும் அங்ஙனமே பொறுமையை இழவாமல் அவள் செயலை ஆராய்வதாக உறுதி கூறினுன்! ஆனுல் நாவின் உறுதி எங்கே, மன உறுதி எங்கே. இனி, ஒதெல்லோ இழந்த அமைதி இழந்த அமைதிதான்! அபினி முதலிய மயக்க மருந்துகளாலோ மந்திரத்தாலோ அஃது

அமைவதும் அன்று. அவன் எண்ணத்துக்கும் மொழிக்கும் செயலுக்கும் உள்ள தொடர்பு அற்றது. உண்ணும்போது அவன் உண்டானும் அல்லன்; உடுக்கும்போது அவன் உடுத்தானும் அல்லன், துயிலோ அவன் கண்களிடம் விடைபெற்றுச் சென்று விட்டது. இனி அவை சென்றடையும் துயில் ஒழியாத் துயில் ஒன்றேயாம். அணிவகுப்பையும் கொடி வகுப்பையும் கண்டு துள்ளிக் குதிக்கும் அவன் உள்ளம், போர்முரசு கேட்டுப் போருக்கு முனைந்து துடிக்கும் அவன் உள்ளம், குருதியாறுகளிடையேயும் கொன்று வீழ்த்தப்பட்டுருளும் யானைகளிடையேயும் கலங்காத உறுதியுடைய அவனது உள்ளம், இன்று இப்பொய்மைப் புனைவின் முன் அறிவற்று உரையற்று செயலற்றுத் தத்தளித்தது.

அவர் மனம் பித்துக்கொண்டவர் மனம்போல் ஊசலாடியது. ஒரு சமயம் டெஸ்டிமோனா உண்மையில் தூயளே என்று எண்ணுவான்; ஒரு சமயம் அவள் கபடியே என்பான்; இன்னொரு சமயம் அவள், எப்படியிருந்தால் என்ன, நான் அவளை அணுகாதிருந்தேனில்லையே என்பான். வேட்டை நாய்களாலும் வேடர்களின் சுழல் வெடிகளாலும் காயமடைந்து விழப்போகும் காட்டுமுள்ளம்பன்றி இறுதியாகத் தன் முழுவன்மையையும் காட்டிச் சீறிவிழுவதுபோல் அவன் ஒருதடவை தன் சினமனைத்தையும் சேர்த்து அயாகோவின்மீதே பாய்ந்து அவன் கழுத்தைப்பற்றி இழுத்து, 'எனக்குக் கண்கூடான சான்று வேண்டும்; கண்கூடான சான்றுவேண்டும்' என்று கூறி அவனை உறுக்கினான். அதனைச் சரியான தறுவாயாகக் கொண்டு அயாகோ தன்னைப்

பொய்யன் என்று சொன்னதற்காகச் சினங்கொண்டவன்போன்று, 'நானுக என் நன்மைக்காகவா இவ்வளவு உமக்குச் சொன்னது? யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? இதோ, உமக்குக் கண்கூடான சான்ருவேண்டும்; சரி தருகிறேன்! உம் மனைவி கையில் முன் இலந்தைப்பழம் போன்ற புள்ளிகள் உடைய கைக்குட்டை இருந்ததன்றே? அஃது இப்போது காசியோவிடம் எப்படி வந்தது என்று கேளும்" என்றான். அத்தகைய ஒரு கைக்குட்டை உண்மையில் தானே அவளுக்கு அளித்தது என்று ஒதெல்லோ ஒத்துக்கொண்டான்.

ஒதெல்லோ: இப்போது அது காசியோவிடம் இருக்கிறதென்று உமக்கு எப்படித் தெரியும்?

அயாகோ: அவன் அதைக் கொண்டு முகந் துடைப்பதை இன்று காலையில் கண்டேன்.

ஒதெல்லோ: 'சரி; நான் நேரில் ஆராய்கிறேன். நீர் சொல்வது உண்மையாயின், அக் காசியோவை மூன்று நாட்களுக்குள் தூக்கிலிடுவேன். அதன்பின், அந்தக் கொடிய அழகிய நச்சுப் பாம்பைக் கொல்ல உலகில் இல்லாப் புதுவகை தேடுவேன்' என்றான்.

'சீற்றத்திற்குக் கண்ணில்லை' என்பர். ஒதெல்லோவிற்குத் தன் மனைவி, தன் நண்பன் இருவர் உயிரையும் ஒழிக்கத்தக்க பெரிய குற்றச்சாட்டிற்கு இந்தச் சிறு கைக்குட்டையே போதிய சான்ருகப் பட்டது. உண்மையில் டெஸ்டிமோனுவுக்கோ, காசியோவுக்கோ இக்கைக்குட்டைக் கதை ஏற்பட்ட

வகை தெரியாது. அயாகோவின் மனைவி டெஸ்டி மோனாவுக்குத் தோழியாயிருந்தாள். அயாகோ அக் குட்டையைப் பார்த்து மாதிரி எடுத்துக்கொண்டு தருவதாக அதனை மறைவாய் எடுத்துவரச் செய்து காசியோ கண்ணிற்படும்படி வழியில் போட்டு வைத்தான். அதன் அழகைக் கண்டு வியந்த காசியோ, வினைவலி முன் இழுப்ப, அதனை எடுத்துக்கொண்டதனாலேயே அயாகோ இவ்வளவு புனைவும் செய்ய முடிந்தது.

அன்றிரவு ஒதெல்லோ தன் மனைவியைக் கண்டபோது தனக்குத் தலையிடிப்பதாகவும், எனவே நெற்றியில் அவளது கைக்குட்டையைக் கட்டும்படியும் கூறினான். அவள் அதற்கு ஏதோ ஒரு கைக்குட்டை கொணரவும், 'இது வேண்டா. நான் கொடுத்த கைக்குட்டையை எடு' என்றான். அவள் தேடிப் பார்த்துக் 'காணவில்லை' என்றாள். உடனே ஒதெல்லோ, அக் கைக்குட்டை தன் குடும்பத்தில் வழி வழி வந்த தெய்வத்தன்மை மிக்கதொரு கைக்குட்டை என்றும், அதை இழந்தவர் கணவன் அன்பை இழப்பர் என்றும் அச்சுறுத்தினான். டெஸ்டிமோனா இது கேட்டு உண்மையிலேயே தன் கணவன் அன்பை இழப்போமோ என்று அஞ்சினாள்; (இழந்துவிட்டோம் என்பதை அடுத்த நொடியே அவள் அறிய இருந்தாள்!) அதன்பின் ஒதெல்லோவின் முகமும் மொழியும்செயலும் மாறிவிட்டன. பேய்போல் விழித்தான்; பாம்புபோல் சீறினான்; புலிபோல் பாய்ந்தான். டெஸ்டிமோனா இதன் மாயம் ஒன்றும் அறியாமல் இதெல்லாம் காசியோவுக்காகத் தான் பரிந்து பேசு

வதைத் தடுக்கும் நோக்கத்துடன் நடிக்கும் நடிப்புப் போலும் என்று நினைத்தாள்.

தன் கணவனது மனத்தில் ஏதேனும் தப்பெண்ணம் இருக்குமோ என்று ஒரு சமயம் அவள் ஐயுறுவாள். ஆனால் அவள் கற்பின் உயர்வே இவ்வையத்தைக் கண்டித்தது. 'என் கணவனாவது, தப்பெண்ணமாவது; கதிரவனிலும் கறை இருக்குமோ?' என்று அவள் மனம் கூறிற்று. 'வெளியுலகில் அவருக்கு ஏதோ மனக்குழப்பம் தரும் செய்தி கிடைத்திருக்கும். அதனாலேயே என்னிடம் இப்படி நடந்துகொள்கிறார்;' என்று நினைத்தாள் உலகின் சூதறியாத அவ் ஆரணங்கு. 'மனிதர் என்ன இருந்தாலும் மனிதர்தானே' வானவர் அல்லரே. மணநாள் அன்றுபோல் என்றும் இருப்பர் என்றெண்ண முடியுமா? அவரது காதலில் சற்று ஏற்றத்தாழ்வு இருக்கத்தானே செய்யும்' என்று தன்னைத் தேற்றிக்கொண்டாள், உயர்நெறியில் தளராத அந் நங்கை நல்லாள்.

## எ. டெஸ்டிமோனாவின் முடிவு

அடுத்த தடவை ஒதெல்லோ டெஸ்டிமொனாவைக் கண்டபோது, தெளிவாகவே அவள் கற்புநெறி தவறி, இன்னொருவனைக் காதலிப்பவள் என்று அவளிடம் கூறி அவளை வைதான். காதலிக்கப்பட்டவன் எவன் என்று மட்டும் கூறவில்லை. இதைக்கேட்டதும் அவள் உள்ளம் பருந்தின் பிடியுட்பட்ட புறாப்போல் துடித்தது. அவள் கண்கள் கலங்கிக் கண்ணீர் வழிந்தன. நேர்மையான காலங்களில் அதன் ஒரு துளி விழுமுன், அவன் ஒரு நூறு தடவை உயிர் விட்டிருப்

பான். இப்போது அவன் மனம் கல்லாய்விட்டது. உணர்ச்சியற்று, 'இந்த நாள் மட்டுந்தான் உனக்குத் துன்ப நாளென்று நீ அழுகிருய்போலும்' என்ருன். அவன் குறிப்பைத் தன் உயர் குணத்தின் காரண மாகவே அவள் அறிந்தாளில்லை. 'எனக்கு எல்லாத் தீமைகளையும் தாங்க முடியும். வறுமையும் சரி, பிணி யும் சரி, அவமதிப்பும் சரி; எனக்கு ஒன்றுமில்லை. ஆயின், உன் வஞ்சம், உன் ஏமாற்று, உன் அடாப்பழி என் நெஞ்சை அடர்த்துவிட்டது. நீ என் வாழ்க்கைக் கொரு களை; நீ அழகால் மயக்கும் நமன்; நீ கண் பார்வை ஒன்றினலேயே கொல்லும் நச்சுப் பாம்பு' என்று பலவாருக அவன் பிதற்றிப் புலம்பினுன், ஏசி ஞன், அழுதான். அவன் தன் கையை நெரித்துக் கற கறவென்று பற்களைக் கடித்தான். விழிகள் அழலெழ உறுத்து நோக்கினுன். 'நீ உலகில் பிறந்த நாள் எத்தகைய கரி நாளோ' வென்ருன். இறுதியில் எதையோ எண்ணி, அவன் சட்டென்று வெளியே சென்ருன்.

இவ்வளவும் கேட்டும் அவள் கலங்கினுளேயன்றி உரைக்கு உரை பகரவும் இல்லை. என்ன என்ருே, ஏன் என்ருே காரணம் வினுவவும் இல்லை. கணவன் மொழியில் அன்பில்லை என்ற ஒன்றிலேயே அவள் உள்ளம் கல்லாய்ப் போயிற்றுப் போலும். உரைக்கு மாருக உரைதரல் அவள் அறிந்தது. அன்பிற்கு மாருக அன்பு தருதல் அவள் செயல். கொடுமைக்கு மாருக அவள் செய்வதெல்லாம் செயலற்றுச் சாவாமல் சாவது ஒன்றே. 'என்னைக் குறைகூறும்போது நான் குழந்தையாகிவிடுகின்றேன். குழந்தையை மென் மொழிகளால் அல்லவோ திருத்தல்வேண்டும். வன்

மொழி கூறினால் அஃது என்ன செய்யும்' என்றாள், உடலென்னும் சிறு சிறையுட்பட்ட இப்பேருயிர்க் காரிகை.

கணவனை நெடுநேரம் எதிர்பார்த்திருந்து பின் டெஸ்டிமோனா படுக்கை சென்று கண்ணயர்ந்தாள். வெளியிருளை நிலவாக்கும் காரிருள் செறிந்த கருத்துக்களுடன்—கற்புக்கே கனிவு தரும் அக் காரிகையைக் கொல்லும் முடிவுடன், ஒதெல்லோ அவள் படுக்கையறையுள் நுழைந்தான். வானுலகத்து அரம்பையர் அழகும் பின்னிட, மாசு மறுவற்ற சலவைக் கல்லிற் கடைந்த பொற்பு மிக்க பதுமைபோன்று அவள் கிடந்ததைக் கண்டு, கொல்லவந்த அவன் கண்களும் கதறிக் கண்ணீருகுத்தன. புன்முறுவல் பூத்து வாடியதுபோன்ற அவளது முகத்தில் அந்நேரத்திலும் முத்தமிடாதிருக்க—மீண்டும் மீண்டும் முத்தமிடாதிருக்க அவனால் முடியவில்லை. ஆனால், அவன் தன் மனத்தை உளியாக்கிக்கொண்டு வந்திருந்தான். அக் கண்ணீர்களைப் பார்த்து, 'நீங்களும் அவள் பக்கத்தில் நிற்கும் கொடியவர்கள்' என்றான். முத்தங்களைப் பார்த்து, 'நீங்களே அவளுக்குப் பிறந்த கடைசிக் குறளிகள்' என்றான்.

அவன் கண்ணீரின் ஈரமும் முத்தங்களின் வெம்மையும் அவளைத் துயிலினின்றெழுப்பின. அவனது கலங்கிச் சிவந்த கண்களிலும், துடிதுடிக்கும் உதடுகளிலும், முகத்தோற்றத்திலும் அவனது கொடிய கருத்து வெளிப்பட்டது. அடுத்த நொடியில் அவன் உரைகளும் அதனைத் தெளிவுபடுத்தின. 'உனது இறுதி வணக்கத்தை இறைவனுக்குத் தெரிவித்துக்

கொள். உன் உடலைக் கொன்றாலும் உன் உயிர் நலனைக் கொல்ல நான் விரும்பவில்லை' என்றான் அவன். அப்போதுதான் (முன் கேட்டிருந்தால் எவ்



டெஸ்டிமோனா கொலையுறுதல்

வளவு நன்றாயிருந்திருக்கும்!) அவள் அவன் சினத்தின் காரணம் கேட்டாள். விளக்கிக் காரண காரியங்களை ஆராயும் நேரமா அது! அவன் தொடர்பற்ற பிதற்றுதலிடையே 'கைக்குட்டை' 'காசியோ' என்ற மொழிகள் மட்டுமே அவள் செவியின் உட்புல

னிடையே பட்டன. அதற்குள் ஒதெல்லோ, குருதி யின் ஒரு சொட்டுக்கூடச் சிந்தாது அவளைக் கொல் வேன் என்று கருதிப் படுக்கையிற் கிடந்த தலையணை களை அவள்மீது அடுக்கி அவற்றாலேயே அவளை அழுத் தித் திணறவைத்து உயிரை மாய்த்தான்.

## அ. புயலுக்குப்பின்

இதற்குள் அயாகோவின் கையாள் ஒருவனால்



ஒதெல்லோ மடிதல்

காசியோ உடலெங்கும் குத்துண்டு ஒதெல்லோ முன் குற்றுயிருடன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான்.

தன் உள்ளுறைகளைக் காக்க எத்தகைய தீச்செயலுக்கும் அஞ்சாத அயாகோ காசியோவைக் கொல்ல ஏவிய ஆளையும் கொன்றுவிட்டான். ஆனால், அவன் சட்டைப்பையில் கிடைத்த கடிதங்களால் காசியோவின் தூய்மையும் அயாகோவின் பழிச்செயல்களும் காவலருக்கு வெளிப்பட்டன. இவற்றைக் கேட்ட ஒதெல்லோ இடியுண்ட நாகம்போல் அறிவிழந்து விழித்தான். தன் மனைவியின் உயர்வையும் தன் அறியாமையின் தடிப்பையும் உணர்ந்து அவன் உயிர்நிலை மின்னலால் கருகியதுபோல் கருகிற்று. இனித் தன் வாழ்நாளின் ஒவ்வொரு நொடியும் தனக்கு மீளா நரகினும் கொடிதாம் என உணர்ந்து அவன் தன் வாள்மீது வீழ்ந்து மடிந்தான்.

டெஸ்டிமோனாவின் மாசற்ற கற்பையும், ஒதெல்லோவின் உயர்வையும் வெனிஸ் மக்கள் அனைவரும் கண்களில் நீர் சொரியப் போற்றி, அவர்கள் வாழ்க்கையை அழித்த கொடியோனாகிய அயாகோவைத் தூக்கிலிட்டனர்.

---

The Jupiter Press Ltd., Madras. for M. S. 95—2-47—2000 cs.

கழக வெளியீடு—உஅ௬

சிறுவர்க்கான

# ஷேக்ஸ்பியர் கதைகள்

விளக்கப் படங்களுடன்

(நான்காம் புத்தகம்)

திரு. K. அப்பாத்துரைப் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.,
அவர்கள் எழுதியது

: திருநெல்வேலி, தென்னிந்திய :
: சைவசித்தாந்த :
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை

*Second Edition* :: 1945
*Third Edition—March* 1945
*Fourth Edition—April* 1946

(*Copy—right*)

PUBLISHED BY
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS,
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
THIRUNELVELI & MADRAS

JULY 1948

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS

# முன்னுரை

ஷேக்ஸ்பியர் உலகறிந்த புலவர் என்பது யாவரும் அறிவர். அவர்தம் நாடகங்கள் நவில்தொறும் நயம் பயப்பன. அவற்றுள் வெனிஸ் வணிகன் (The Merchant of Venice), விரும்பிய வண்ணமே (As You Like It), மாக்பெத் (Macbeth) என்னும் மூன்று கதைகள் முதற் புத்தகத்திலும்; புயற்காற்று (The Tempest), லியர் மன்னன் (King Lear), ஹாம்லெத் (Hamlet) என்னும் மூன்று கதைகள் இரண்டாம் புத்தகத்திலும்; நடுவேனிற் கனவு (A Midsummer Night's Dream), ஸிம்பலின் (Cymbeline), கார்காலக் கதை (The Winter's Tale), ஒதெல்லோ (Othello) ஆகிய நான்கு கதைகள் மூன்றாம் புத்தகத்திலும் வெளிவந்திருக்கின்றன. ஆங்கிலத்தில் சார்ல்ஸ் லாம் (Charles Lamb) எழுதிய ஷேக்ஸ்பியர் கதைகளைத் தழுவியே தமிழில் மேற்கண்ட பத்துக் கதைகளும் எழுதப்பெற்றுள்ளன.

இந் நான்காம் புத்தகத்தில் பன்னிரண்டாம் இரவு (Twelfth Night), சிறுபிழையால் நேர்ந்த பெருந்தொல்லை (Much Ado About Nothing), சரிக்குச் சரி (Measure for Measure), ரோமியோவும் ஜூலியட்டும் (Romeo and Juliet) ஆகிய நான்கு கதைகளும் வெளிவருகின்றன.

இவை இளைஞர்கள் படித்து இன்புறத்தக்க எளிய இனிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆதலின், இவற்றைக் கற்கும் மாணவர் அறிவு வளர்ச்சியுடன் மொழித் தேர்ச்சியும் பெறுவர் என்பது திண்ணம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

## பொருளடக்கம்

### 1. பன்னிரண்டாம் இரவு


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | உடன்பிறந்தார் பிரிவு | ... | 3 |
| 2. | காதலின் தன்மறுப்பு | ... | 6 |
| 3. | மாற்றுருவால் நேர்ந்த மாயக் காதல் | ... | 11 |
| 4. | மாரன் விளையாட்டுகள் | ... | 16 |
| 5. | கலங்கிய நீர் | ... | 21 |
| 6. | முடிவு | ... | 26 |


### 2. சிறுபிழையால் நேர்ந்த பெருந் தொல்லை


| | | | |
|---|---|---|---|
| 1. | காதல் ஒருபுறம், பூசல் ஒருபுறம் | ... | 30 |
| 2. | சூழ்ச்சியால் வெறுப்பு விருப்பாக மாறுதல் | | 33 |
| 3. | வஞ்சத்தால் விளைந்த பேரிடர் | ... | 39 |
| 4. | உற்றவிடத் துதவும் உரவோர் | ... | 43 |
| 5. | உண்மை விளங்குதல் | ... | 45 |


### 3. சரிக்குச் சரி


| | | | |
|---|---|---|---|
| 1. | சட்டப் பொறி | ... | 50 |
| 2. | நடுநிலையா ? அருளா ? | ... | 54 |
| 3. | போலித் துறவி | ... | 60 |
| 4. | மறைந்துநின் றருள்புரியும் அண்ணல் | ... | 65 |
| 5. | கற்பரசிகளின் வெற்றி | ... | 72 |


### 4. ரோமியோவும் ஜூலியட்டும்


| | | | |
|---|---|---|---|
| 1. | எதிர்பாரா விருந்தினர் | ... | 77 |
| 2. | காற்று நுழையா இடத்தும் நுழையும் காதல் | | 80 |
| 3. | காதலர் கண்ட இன்பம் | ... | 85 |
| 4. | துயரமும் பிரிவும் | ... | 91 |
| 5. | துறவியின் திட்டமும் முடிவும் | ... | 96 |

# சிறுவர்க்கான

# ஷேக்ஸ்பியர் கதைகள்

## (நான்காம் புத்தகம்)

## 1. பன்னிரண்டாம் இரவு

## (அன்றேல்) உன் விருப்பம்

### கதை உறுப்பினர்கள்

**ஆடவர்**

1. **ஸெபாஸ்தியன் ;** மெஸ்ஸலின் நகர் இளைஞன் - வயோலாவின் உடன் பிறந்தான்.
2. **ஆர்ஸினோ :** இல்லிரியா நாட்டுத் தலைவன்.
3. **அந்தோனியோ :** ஸெபாஸ்தியனை மீட்ட மீகாமன் -அவன் ஆருயிர் நண்பன்.
4. **வேறு மீகாமன் :** வயோலாவை மீட்டு உதவியவன்,
5. **ஸர் ஆன்ட்ரு ஏக்சீக் :** ஒலிவியாவின் பழங் காதலன் -மேரியாவின் குறும்புக்காளாய் இறுதியில் அவளை மனைவியாகப் பெற்றவன்.
6. **ஸெஸாரியோ :** வயோலாவின் ஆணுரு - ஒலிவியாவிடம் ஆர்சிநோவின் காதல் தூதன்.

**பெண்டிர்**

1. **வயோலா :** ஸெபாஸ்தியனின் தங்கை - ஆணுருவுடன் மறைவில் ஆர்ஸினோவைக் காதலித்து இறுதியில் அவனை மணந்தவள் - ஆணுருவில் ஸெஸாரியோ :
2. **ஒலிவியா :** உயர்குடி மங்கை - ஆர்ஸினோகாதலை மறுத்தவள்-வயோலா ஆணுருவில் மயங்கிப் பின் ஸெபாஸ்தியனை மணந்தவள்.
3. **மேரியா :** பணிப்பெண்—ஸர் ஆன்ட்ரூவைக் குறும்புடன் தூண்டிப் பின் அவனையே மணந்தவள்.
4. **வேறு பணிப்பெண்**

# கதைச் சுருக்கம்

உருவில் ஒருவரை ஒருவர் ஒத்த ஸெபாஸ்தியன் வயோலா என்ற இரட்டையரான அண்ணன் தங்கையர் கடற்பயணத்தின் போது இல்லிரியா அருகில் கப்பலுடைந்ததனால் ஒருவர் நிலைமை ஒருவர் அறியாதவகையில் வேறு வேறு மீகாமன்களால் காப்பாற்றப்பட்டனர்.

வயோலா தன்னைக் காப்பாற்றிய மீகாமன் நல்லுரையால் ஆணுருவில் ஸெஸாரியோ என்ற பெயருடன் இல்லிரியாத் தலைவன் ஆர்ஸினோவிடம் வேலைக்கமர்ந்தாள். ஆர்ஸினோ உயர் குடி மங்கையாகிய ஒலிவியாவைக் காதலித்தும் அவள் அவனைப் பொருட்படுத்தாத நிலையில் வயோலாவைக் காதல் தூதனாக அனுப்பினான். வயோலா மனத்துள் ஆர்ஸினோவைக் காதலித்தாள்- ஆனால் அவள் ஆணுருவில் மயங்கி ஒலிவியாவும் காதல்வயப்பட்டாள். போதாக்குறைக்கு இக் காதலைக் கண்டு பழங்காதலனான ஸர் ஆன்ட்ரூ, மேரியா என்ற குறும்புப் பணிப்பெண்ணால் தூண்டப் பெற்று அவனை எதிர்த்தான்.

ஸெபாஸ்தியனைக் காப்பாற்றிய மீகாமனாகிய அந்தோனியோ ஆர்ஸினோவின் உறவினனை எதிர்த்த குற்றத்தால் இல்லிரியாவுக்குள் வரமுடியாதவன்: ஆகவே இல்லிரியாவைக் காணவந்த ஸெபாஸ்தியனிடம் பணப் பையைக் கொடுத்துவிட்டு நெடுநேரமானதால் தேடவந்தான். வயோலாவை ஸெபாஸ்தியனென்றெண்ணி ஸர் ஆன்ட்ரூவுக்கெதிராக உதவிப் பின் காவலர் கையில்பட்டு பணப்பையைக் கேட்டான். வயோலா விழிக்க அவனைக் காவலர் கொண்டேகினர்.

இன்னொருபுறம் ஸெபாஸ்தியனை வயோலா என்றெண்ணி உரையாடிய ஒலிவியாமீது ஸெபாஸ்தியன் காதல்கொள்ள, அவர்கள் மணம் செய்துகொண்டனர். பின் அவனைத் தேடி ஒலிவியா ஆர்ஸினோவிடம் வந்து வயோலாவைக் கணவனென்றழைத்தாள். அதே சமயம் காவலருடன் அந்தோனியோவும் வந்து வயோலாவை ஸெபாஸ்தியனென்றெண்ணித் தன்னை ஏமாற்றியதாகக் கூறினான். சற்று நேரத்தில் ஸெபாஸ்தியன் வரக் குழப்பம் அகன்றது. ஆர்ஸினோ பயனற்ற ஒலிவியா காதலை விடுத்து வயோலாவைக் கடிமணம் செய்து கொண்டான்.

# 1. உடன் பிறந்தார் பிரிவு

மேஸ்ஸலின்[1] என்ற இடத்தில் ஸேபாஸ்தியன்[2] என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவனுக்கு வயோலா[3] என்பவள் தங்கை. இருவரும் ஒரே நாளில் பிறந்தவர்கள். ஒரே உருவமும் தோற்றமும் உடையவர்கள். ஆண் பெண் என்ற முறையில் அவர்கள் நடை உடை முதலியவற்றாலல்லது அவர்களைப் பிரித்துணரல் அரிது.

அவர்களிருவரும் கடலிற் பயணம் செய்து கொண்டிருக்கையில் இல்லிரியா[4] என்ற நாட்டினருகில் வந்து அவர்கள் கப்பல் உடைந்து போயிற்று. பலர் கடலில் மூழ்கி இறந்து போயினர். கப்பல் மீகாமன் சிலரை மட்டுமே படகு மூலம் காப்பாற்ற முடிந்தது. அங்ஙனம் காப்பாற்றப்பட்டவர்களுள் வயோலாவும் ஒருத்தி. ஆனல் ஸெபாஸ்தியன் என்ன நிலையை அடைந்தான் என்பது விளங்கவில்லை. வயோலாவுக்குத் தான் பிழைத்ததால் ஒரு சிறிதும் களிப்பேற்படவில்லை. தன் அண்ணனைப் பற்றிய கவலையே முகத்திற் குடிகொண்டிருந்தது.

அக் கப்பலின் மீகாமன் அருள் நிறைந்த உள்ளமுடையவன். வயோலாவுக்கு அவன் தேறுதல் கூறி, "ஸெபாஸ்தியன் இறந்திருக்க முடியாது. ஒரு பாய் மரத்தைப் பற்றிக்கொண்டு அவன் மிதந்ததை நான் கண்டேன். ஆனல் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு சிலரைப் படகில் கொண்டுவந்து விட்டு அவனைப் போய்ப் பார்க்குமுன், இருட்டில் அவன் எங்கேயோ மறைந்துவிட்டான். அவன் நீரில் மூழ்கியிருக்க மாட்டான் என்பதை மட்டும் நான் உறுதியாய்ச் சொல்ல முடியும். ஏனெனில்

---

1. Messaline. 2. Sebastine. 3. Viola, 4. Illyria.

அவன் பற்றியிருந்த பாய்மரம் அங்குக் காணப்படவில்லை" என்றான். அது கேட்டு வயோலா ஒருவாறு தேறுதல் அடைந்தனளாயினும், உடன் பிறந்தான் பிரிவால் நேர்ந்த துயரம் மட்டும் மனத்தில் மாறாதிருந்தது.

இதற்கிடையில், இனித் தான் என்ன செய்வது என்ற கவலையும் இன்னொரு புறம் அவளுக் குண்டாயிற்று. மீகாமனிடம் அதுபற்றி அவள் உரையாடலாயினள்.

**வயோலா :** ஐயா, இந் நாட்டின் பெயர் முதலிய விவரங்கள் உங்களுக்குத் தெரியுமா?

**மீகாமன் :** நான் இந் நாட்டிலேயே பிறந்தவன். ஆதலால் இதனை நன்கு அறிவேன். இதன் பெயர் இல்லிரியா என்பது. இந்நாட்டை[1] ஆர்ஸினோ என்பவர் ஆள்கின்றார்.

**வயோலா :** ஆர்ஸினோ நெடுநாள் மணமாகாதிருந்தவர் என்று என் தந்தை கூற நான் கேட்டிருக்கிறேன். அவர் அரண்மனையில் ஏதேனும் பணி பெற முடியுமா என்று நான் அறிய விரும்புகிறேன். அவர் இப்போது என்ன நிலையிலிருக்கிறார்?

**மீகாமன் :** இப்போதும் அதே நிலையிலேதான் இருக்கிறார். அதற்குக் காரணம் ஒலிவியா[2] என்ற ஓர் உயர்குல மாதினிடம் அவர் வைத்துள்ள பற்றுதல் ஆகும். ஒலிவியாவின் தந்தை ஓராண்டிற்கு முன்னதாக இறந்து போனார். அதன்பின் தந்தையினிடம் வைத்த பற்றுதலையுஞ் சேர்த்து அவள் தமையனிடம் மிக்க அன்பு காட்டினாள். அண்மையில் அவனும் இறந்துபோகவே, அவள் ஆற்றொ

1. Orsino. 2. Olivia

ணைத் துயரில் மூழ்கி அதுமுதல் ஆடவர் முகத்தி லேயே விழிக்காது வீட்டினுள் அடைப்பட்டுக் கிடக் கிருள். ஆர்ஸினே அவளையன்றி வேறெவளையும் மணப்பதில்லை என உறுதிகொண்டுளளான். ஆனல்



ஆர்ஸினேவின் காதல்

அவளோ அதற்கு நேர்மாருக யாரையும் மணப்ப தில்லை என்று கூறிக்கொண்டு, அவனுடைய தூதர் களைக் கண்கொண்டுகூடப் பாராமல் தடைப்படுத்தி வருகிருள்.

**வயோலா:** ஓ, அப்படியானால் நான் இந்த ஒலிவியாவிடம் சென்று அவளிடம் பணி ஏற்க முடியுமன்றோ?

**மீகாமன்:** அங்ஙனம் முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில், இன்றிருக்கும் நிலையில் ஒலிவியா யாரையும் புதிதாக வரவேற்கவும் மாட்டாள். நட்புக் கொள்ளவும் மாட்டாள்.

**வயோலா:** அப்படியானால் நான் முதலில் எண்ணியவாறாகவே ஆர்ஸினோ அரசர் அரண்மனையிலேயே பணிதேட வேண்டியதுதான்.

**மீகாமன்:** ஆம். ஆனால் நீயோ சிறுமி. உலகின் சூது அறியாதவள். ஆகவே இப் பெண் உடையில் செல்வதைவிட ஆண் உடையில் செல்வதே பாது காப்பாயிருக்குமென்று எண்ணுகிறேன்.

வயோலா இவ்வுரையை நல்லுரையாகக் கொண்டு அதன்படியே நடப்பதாக ஒப்புக்கொண்டாள். அதன்பின் அவள் விருப்பப்படி மீகாமன் அவள் அண்ணனது உடையை ஒத்த ஆணுடைகளை வாங்கி அவளுக்குக் கொடுத்தான். அதோடு அரண்மனையில் தனக்குத் தெரிந்தவர்கள் வாயிலாக அவளுக்கு அரசனுடைய தோழமைப் பணியையும் தேடிக் கொடுத்தான்.

இப் புதிய ஆணுருவில் வயோலா தனது பெயர் **ஸெஸாரியோ**[1] என்று வைத்துக்கொண்டாள்.

## 2. காதலின் தன்மறுப்பு

வடிவழகனும் உயர்நடை உடையவனுமாகத் தோற்றிய ஸெஸாரியோ என்ற இவ் வயோலாவிடம் ஆர்ஸினோ அரசன் மிகுந்த மதிப்பும் நட்பும்

---

1. Cesario.

உடையவனானன். வயோலாவும் இதற்கேற்பத் தன் கடமைகளைச் சரிவரச் சுறுசுறுப்புடன் செய்து வந்தாள். ஆர்஻ஸினோ அவளிடம் தோழமைபூண்டு அவளிடம் மனந்திறந்து தன் காதல் தன்மையையும்



வயோலா ஆணுருவில்

காதல் கதையையும் உரைக்கலானான். அதைக் கேட்கக் கேட்க அவளுக்கு ஆர்ஸினோவிடம் மதிப்பு மிகுந்தது. இத்தகைய காதலை உதறித் தள்ளும் ஒலிவியாமீது அவளுக்கு ஒருவகையான வெறுப்பும் ஏற்பட்டது. அவள், அவன் காதல் துயரத்தைத் தணிக்கப் பலவகையாக ஆறுதல் மொழிகள் கூறினாள். அப்போது அவள், "இத்தகைய தங்கள் காதலை ஒலிவியா ஏற்கவில்லை என்று சொல்வதை நான் நம்பக்கூடவில்லை" என்றாள். இது கேட்டதும் ஆர்ஸினோ மனத்தில் ஓர் எண்ணம் உண்டாயிற்று. "தன்மீது இவ்வளவு நம்பிக்கையுடைய இவ் இளைஞனையே அனுப்பி ஏன் தன் காதலை அவளுக்குத் தெளிவாக்கக்கூடாது" என்று அவன் நினைத்தான். வயோலாவின் நேரிய தோற்றம், இன்சொல் முதலியவை தன்னை வென்றது

போலவே ஒலிவியாவின் உறுதியையும் வெல்லக் கூடும் என்று அவனுக்குப்பட்டது.

இப்போது வயோலாவின் மனம் இருதலைப் பட்டு வருந்தியது. ஆர்ஸினோவின் நேர்மை, உயர் குணம், அவன் காதலின் ஆழம் இவற்றைக் கண்ட பின், அவள் தன் உள்ளத்தையே அவனுக்குப் பறிகொடுத்துவிட்டாள். ஆனால் அவள் பெண் என்றுகூடத் தெரியாமல், ஆண் என்று நினைத்த ஆர்ஸினோ, அவள் காதலை அறியாததுடன்மட்டு மல்லாமல் தன் காதலை மறுக்கும் இன்னொருத்தியிடம் அதனை வளர்க்கும்படி அவளை அனுப்ப எண்ணினான். தன்னையும் அறியாமல் அவள், "அரசே, நீங்கள் ஒலிவியாவைக் காதலிப்பது போலவே தங்களை ஒரு பெண் காதலிப்பதாகவும், நீங்கள் மாறாக அவளைக் காதலிக்க முடியாத நிலையில் உள்ளீர்கள் என்றும் வைத்துக் கொள்வோம். அப்போது, அவள் நீங்கள் மறுப்பதை ஏற்றுக்கொண்டு உங்களை மறந்துவிடவேண்டும் என்றுதானே சொல்வீர்கள். ஒலிவியா இப்போது அப்படித்தானே சொல்கிறாள். அதனை ஏற்று அவளை மறப்பதன்றோ நல்லது" என்றாள். ஆனால் இவ் வழக்கு ஆர்ஸினோவுக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை. "நான் ஒலிவியாவைக் காதலிப்பதுபோல் ஒரு பெண் என்னைக் காதலிப்பது முடியாத காரியம். எனவே, 'அப்படி வைத்துக் கொள்வோம்' என்று பேச இடமேயில்லை. இது மறக்கமுடியாத காதல்; எனவே, மறுக்கமுடியாத காதல்" என்றான் அவன்.

**வயோலா :** அரசே, நீங்கள் அப்படிச் சொல்வதற்கில்லை. என் நடைமுறை அறிவிலேயே...........

**ஆர்ஸினோ :** சரி, சரி, அப்படி வழிக்குவா. உன்

நடைமுறை அறிவிலேயே நீ காதலை நன்றாய் அறிந்தவன் என்று புலப்பட்டுவிட்டது.

வயோலா: ஆம், ஒரு பெண் ஆடவனைக் காதலிக்கும் காதல் எத்தகையது என்பதை நான் நன்றாய் அறிவேன். என் தந்தைக்கு ஒரு புதல்வி உள்ளாள். அவள் ஒருவரை உண்மையாகக் காதலிப்பவள். நான் ஒரு பெண்ணாயிருந்து உங்கள் காதலுக்குச் சரியாக உங்களைக் காதலிப்பதானால் கூட அவளை விட மிகுதியாகக் காதலிக்க முடியாது.

ஆர்ஸினோ: ஆ! நீ வேறு காதற் கதைகள் வைத்திருக்கிறாயா! சரி, அவள் காதல் என்னையிற்று?

வயோலா: என்னையிற்று, ஒன்றும் ஆகவில்லை. அவள் தன் காதலை யாரிடமும் வெளியிட்டுக் கூறினாளில்லை. 'அரும்பினுள்ளிருந்து அதனை அழிக்கும் புழுப்போல அவள் நெஞ்சகத்தே அது கிடந்து அவள் இளமை நலனை அரித்துத் தின்றது. அவள் பெருமூச்சு விடுவாள்; ஆனால் வாய்விட்டு ஒரு மொழியும் பேசாள். அவள் பொறுமையே உருவாக நின்று துயரமாகிய தெய்வத்திற்குத் தன்னை இரையாக்கினாள்' என்றாள்.

ஆர்ஸினோ இப் பேச்சைத் தொடர்ந்த வேறு கேள்வி கேட்குமுன் ஒலிவியாவிடம் தூதாக அனுப்பப்பட்ட ஒருவன் வந்தான். 'ஐய, அவளை நேரில் பார்க்கக் கூடவில்லை. தோழிவாயிலாக அவள் தந்த விடை இது. "என் தமையன் இறந்து ஏழு ஆண்டு செல்லும்வரை காற்று, வெயில் முதலியவற்றின் முகத்தில்கூட விழிப்பதில்லை என்று நான் நோன்பு கொண்டுள்ளேன். அத் தமையனது நினைவைத் தூண்டிவரும் இவ்வீட்டை அதுவரை எனது கண்ணீரால் கழுவிவர எண்ணமுடையேன்!" இது அவ

ளது மாறு உறுதியாம்? என்று அவன் கூறினன்.

இம் மொழிகளைக் கேட்டதும் ஆர்ஸினோ, "ஆ, என்ன பெண்மை! அண்ணனுக்கு இத்தனை அன்பு செலுத்துகின்றவள், மாரன் கணைமட்டும் அவள் நெஞ்சிற் பாய்ந்து நோய் செய்வதாயின் அந் நோய்க்கு மருந்தாய் வருந் தலைவனிடம் எவ்வளவு அன்பு கொள்ளமாட்டாள்!" என ஒலிவியாவைப் புகழ்ந்தான்.

அதன்பின் அவன் வயோலாவைப் பார்த்து, "என் அருமை ஸெஸாரியோ, என் உள்ளத்தின் உட்கிடக்கை முற்றும் ஒளியாது உனக்கு உரைத்து விட்டேன். ஆகவே, நீ என் நட்பினை ஒரு பொருட்டாகக் கொண்டு ஒலிவியாவினிடம் செல்வாய்; சென்று, அவள் உனக்கு உட்செல்ல இணக்கமளிக்கவில்லையாயினும் விடாப்பிடியாய், இங்கேயே வேரிட்டு நிலைத்துவிடுவேன் என்று முரண்டி என் காதற்பிணிக்கு மருந்து பெற்று வருவாய்," என்றான்.

வயோலா: அரசே! தங்களுக்காக நான் செய்யித் தகாத தொன்றுமில்லை. ஆயினும், இவ் வகையில் நான் செய்யக்கூடியதென்ன? தாங்கள் சொல்வது போலப் பிடிமுரண்டாயிருந்து உட்செல்ல இணக்கமே வந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம்; அப்பொழுதுதான் என்ன ஆய்விட்டது!

ஆர்ஸினோ: உன் திறனைப்பற்றி நீ அவ்வளவாக அறியமாட்டாய். இதுவரை என் காதலைத் திறம்பட உன்போன்றார் எடுத்துக் கூறாக் குறைதான் அவள் என் பக்கம் இன்னும் நாடாதது. நீ பொற்பும் இனிமையும் மிகக தோற்றமுடையாய்! அதோடு, காதலின் உயிர் நாடியை அறிந்து, நயத்

துடன் மருந்துதவும் மருத்துவன் போன்றவனாயுந் திகழ்கின்றாய். ஆடவனாகிய என்னை வென்ற நீ பெண்ணாகிய ஒலிவியாவை வெல்வது அருமையன்று என்று நான் அறிவேன்.

வயோலா மனத்திற்குள், 'ஆ' ஆடவரைத்தான் நான் வெல்ல விரும்புகின்றேனேயன்றிப் பெண்டிரை வெல்ல விரும்பவில்லையே' என்று நினைத்துக்கொண்டாளாயினும், வெளிப்பட "என்னாலானவரை அவ் ஒலிவியாவின் கல் மனத்தைக் கரைக்க முயல்வேன்", என்று கூறிவிட்டுச் சென்றாள். ஆயினும் அவள் கால்கள் ஒவ்வோரடியும் முன் செல்லுந்தோறும் இரண்டடி பின் செல்ல வேண்டும் என்று நினைத்தனவென்றே கூறவேண்டும்.

### 3. மாற்றுருவால் நேர்ந்த மாயக் காதல்

ஆர்ஸினோவிடமிருந்து மீண்டும் இளைஞன் ஒருவன் வந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டதும் ஒலிவியா பணிப்பெண்ணைச் சினந்து, "அதை என்னிடம் வந்து சொல்வானேன். அவளுக்கு உடம்புக்குக் குணமில்லை; துயில்விட்டு எழவில்லை; குளிக்கிறாள் என்று ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அனுப்பிவிடுகிறதுதானே," என்றாள்.

பணிப்பெண் : நான் சாக்குப் போக்குகள் என்னென்னவெல்லாம் சொல்ல முடியுமோ அவற்றையெல்லாம் சொல்லிப் பார்த்தாயிற்று, அம்மணி! அவன் ஒவ்வொன்றுக்கும் நம்மைவிடத் திறம்பட வாயடைத்துப் பேசிக்கொண்டு இங்கேயே இருப்பேனென்று காத்திருக்கிறான். அவளுக்கு உடம்பு நலமில்லை என்றால், அதையறிந்து நலஞ் செய்யவே வந்திருக்கிறேன் என்கிறான். துயிலுகின்றாள் என்

ருல், அவளைத் துயிலினின்றும் உணர்த்துவேன் அல்லது துயிலுணரும் வரையிற் காத்திருந்து பார்ப்பேன் என்று இருப்பதாகக் கூறுகிறன். அவள் இன்னும் குளித்து உணவருந்தவில்லை என்றுல், அதற்கென்ன, நான் குளித்து உணவருந்தியாயிற்று; ஆகலால் பொறுமையுடன் மெல்ல குளித்து உண்டபின் பார்த்துக்கொள்வேன் என்கிறன். இனி என்ன சாக்குப் போக்குச் சொல்வதென்று விளங்கவில்லை. அதனுலேதான் உங்களிடம் வந்தேன்.

ஒலிவியா: அப்படியா, பெண்களிடமும் இப்படித் திறங்காட்டும் அந்த மனிதனைச் சற்றுப் பார்க்க வேண்டுந்தான். அவனை வரச்சொன்னதாகச் சொல்.

துறக்கவாசல் திறந்துவிட்டது; இனி இறைவியின் அருள் ஒன்றே வேண்டும்.

பெண்மையில் ஓர் ஆண் அழகும், ஆண்மையில் ஒரு பெண்ணழகுந் தோன்ற வயோலா வணங்கிய வடிவுடன் மெல்லென உட்புகுந்தாள்.

வயோலா: ஒளியும் பொலிவும் ஒப்பற்ற அழகும் உடைய நங்கையே! உனக்கு வணக்கம். நான் பேசப் புகுமுன் நீதான் இவ்விடம் கோயில்கொண்ட இறைவி என்பதை உறுதியுடன் அறிய விரும்புகிறேன். ஏனெனில், நான் பேச வந்த மொழிகள் வேறெவர் காதிலும் விழத்தகாத பொன்மொழிகள். இதற்குமுன் எவரும இத்தகைய மொழிகள் கேட்டிரார். இதனை வழுவாது சொல்லவேண்டுமென்றே திருத்தமுற எழுதிப் பல கால் உருவிட்டுப் படித்து வந்துள்ளேன். ஆதலால் அருள்கூர்ந்து, நான் நாடிவந்த இறைவி நீயே என்பதை வலியுறுத்தக் கோருகிறேன்.

ஒலிவியா: அங்ஙனம் எழுதிப் படித்துப் பேச வருவதற்கு ஈதென்ன நாடக மேடையா? நீர் என்ன நாடகக்காரரா?

வயோலா: நாடகக்கார னல்லேன். ஆயினும், இன்று நடிக்கும் நடிப்பு என்னது அன்றுதான். நான் என்முன் காண்பது இவ்வீட்டின் இறைவியைத்தானு என்பதைத் தெரிவிக்கும்படி மீண்டுங் கோருகிறேன்.

ஒலிவியா: ஆம்; இறைவிதான்.

வயோலா: ஆர்ஸினேவின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட இறைவிக்கு வணக்கம்.

இறைவி! நான் வந்த செய்தியைக் கூறுமுன் இன்னொரு நலனை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்போன்றார் நட்பைத் திறை கொண்ட இறைவனையே திறையாகக் கொண்டது தங்களது திங்கள் முகம்! அஃது எவ்வாறிருக்குமோ என்பதை நான் சற்றுப் பார்க்கலாமா?

வயோலா உட்புகுந்தபொழுதே மாரன் தன் கருப்புவில்லைக் கையிலெடுத்தான். அவள் பேசத் தொடங்கியபோதே அவன் வில்லை வளைத்துவிட்டான். இம்மொழிகள் அவள் செவியில் விழுமுன் அவனது மலர்க்கணை ஒலிவியாவின் நெஞ்சை ஊடுருவிற்று. அவள் உடனே திங்களின் பரிவட்டபோன்ற தனது மெல்லிய முகமூடியை ஒதுக்கினுள். திங்களின் பின்புறம் கதிரவன் ஒளிந்து கொண்டால் எப்படியோ அப்படி அவள் முகம் ஒளி விசிற்று.

ஒலிவியா: சொல் நய மிக்க செல்வரே! நீர் என் முகத்தைப் பார்க்க விரும்புவதேன்? உம்

முடைய தலைவர் உம்மை இம் முகத்தினிடமா தூதாக அனுப்பினர்? சரி, என் முகத்தைப் பற்றிய உமது எண்ணமென்ன?

வயோலா: அதன் அமைப்பு நான்முகன் கைக்கு ஒரு நற்சான்றே. பொன்மையும் செம்மையும் நீலமும இடையிடை இட்டுக் கலந்த இவ் வொப்பற்ற ஓவியம் மனிதர் கையால் என்றுந் தீட்டுந் தரத்ததன்று. ஆம், என்ன அருமையான அழகு! இத்தகைய அழகை உலகிற்குக் காட்ட வந்த நீ அதன் மாதிரியை உலகத்திற் படியவிடாதது எவ்வளவு கொடுமை!

ஒலிவியா: நீர் என்ன தூதரா, கவிஞரா? என் அழகைப் பார்த்துக் குறிப்பெடுத்து வரவா உம் தலைவர் உம்மை அனுப்பினர்? அப்படியானல் உமக்குத் துணைசெய்கின்றேன். இதை எழுதிக் கொள்ளும். கொவ்வைப்பழம் போன்ற இதழ்கள் இரண்டு; கதிரொளியோடிய வானொத்த நீலக கண்களும் அவற்றைக் கவிந்து பொதிந்த இமைகளும் இரண்டிரண்டு; எட்பூவொத்த மூக்கு ஒன்று; இவ்வளவு போதுமா?

வயோலா: உனது தற்பெருமை ஏட்டிலடங்காதது; ஆனல் உன் அழகும் அப்படியே. அதில் விழுந்து என் தலைவர் அழுந்துகிறார். ஓ! அவர் காதல் துயரை நான் அறிவேன்! நீ மட்டும் அவர் காதலுக்கு இணையாகக் காதல் தர முடியுமாயின், எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆனல் அக் காதலுக்கு இணை ஏற்படல் அரிதினும் அரிது. அழகினுக்கு அரசியாய் விட்ட நீகூட அக் காதலைத் தாங்குதல், அதற்குத் தகுதியுடையவளாதல், கூடியதன்று. வானின்று பொழியும் மழை அவர் காதற் கண்ணீர்ப் பெருக்கிற்கு இணையன்று; கடலின் இரைச்

சல் அவரது நெஞ்சகத்து ஏற்படும் பேராரவாரத்தினுக்கு ஈடன்று; அவரது பெருமூச்சு வடவைத் தீயினும் வெம்மையானது.

ஒலிவியா: இத்தகைய கவிதைகளாற் பயனென்ன? உம்முடைய தலைவருக்கு எனது முடிவைத்தான் நான் தெரிவித்துவிட்டேன். அவரிடம் எனக்குக் காதலில்லை. அவர் நற்குணம் உடையவர்; பெருந்தன்மையுடையவர்; தூய இளமை நலம் உடையவர். ஆயினும் அவரிடம் என் மனம் செல்லவில்லை. அவர் வீரர் என்றும், அறிஞர் என்றும் அன்புடையவர் என்றும் நாற்புறத்தாரும் புகழும் புகழை நான் கேளாமலில்லை. ஆனல் என் மனம் அவரை நாடவில்லை! இந்த ஒரே முடிவை நான் இன்னும் எத்தனை தடவை சொல்லவேண்டும்?

வயோலா: நீ எத்தனை தடவைதான் சொல்லேன்! அதனை அவர் ஏற்கமாட்டார். அவர் உன்னிடங் கொண்ட காதலை என் போன்ற எளியோர் கொண்டால் உன் வாயிலில் வேங்கையாய் நிற்பரேயன்றிப் போகமாட்டார். காற்றில் இலைகள் ஆடுந்தோறும் வேங்கைமரம் அகவுவதுபோல உன் பெயரையே கூறிக்கொண்டிருப்பார். காதற் பாட்டுக்கள் வரைந்து பாடுவர்; காற்றும், மரமும், குன்றும், மேடும் ஒலிவியா, ஒலிவியா என்று ஒன்றுபோலக் கத்தும்படி செய்வர். ஐம்பெரும் பூதங்களுங் கூடி உன்னைத் தம்மீது இரங்கவைக்கும்படி செய்வர்.

ஒலிவியா: நும் போன்றவர் பலவும் செய்யக் கூடியவரே. உமது குடி யாதோ?

வயோலா: என் குடி நற்குடியே. நீ காணும் நிலையினும் உயரியதே. நான் ஒரு நன்மகன்.

ஒலிவியா: அப்படியா, நல்லது; உமது தலைவரிடம் போய் என் முடிவை வலுவறக் கூறி, 'அவள் உம்மைக் காதலிக்கமாட்டாள்' என்று தெரிவித்து விடும். 'இனி இப் பக்கம் ஆள் அனுப்ப வேண்டாம்' என்றும் உறுதியாய்க் கூறிவிடும்....ஆயினும் நீர்—நீர் இன்னொரு தடவை வந்து, வேண்டுமானால் அவர் நிலைமையை அறிவிக்கலாம்.

வயோலா இனி நிற்பது பயனற்றதெனக் கருதித் திரும்பலானாள். ஆனால், ஒலிவியாவுக்கு அவள் போவது தன் உயிர் போவதுபோன்றிருந்தது. உள்ளே ததும்பிநின்ற காதலால் தூண்டப்பெற்ற குறிப்புடன், அவள் ஆர்ஸினோவுக்கு மறுப்புக் கூறும் மொழிகளோடு அவளுக்கு அழைப்பும் மறைவாகத் தந்தாள்.

## 4. மாரன் விளையாட்டுகள்

அவள் போனபின் ஒலிவியா மீண்டும் மீண்டும் "என் குடி நற்குடியே; நீ காணும் நிலையினும் உயரியதே; நான் ஒரு நன்மகன்" என்ற மொழிகளைத் தனக்குள் சொல்லிச்சொல்லி நினைவில் ஆழ்ந்துவிடலானாள். திடீரெனச் சில சமயம் 'ஆம், அவர் உயர் குடியினர் என்பதற்கு ஐயமிருகக முடியாது. அவர் பேச்சு, அவர் தோற்றம் அவர் சாயல், அவர் நடை, அவர் செயல் ஆகிய யாவும் அவர் ஒரு நன்மகனே என்பதை எடுத்துக் காட்டுகின்றன' என்பாள். 'இந்த அரசர் என்னைக் காதலிப்பதில் எத்தனையிலொரு பங்கேனும் இவர் என்னைக் காதலிக்கக் கூடாதா' என்பாள். சில சமயம் 'ஆ,' அவர் நிலைமையை ஆய்ந்தோய்ந்து பாராது இப்படிக் காதல் வெள்ளத்துள் குதித்து விட்டேனே' என்று நினைப்பாள். ஆனால் அப்படி

யும் இப்படியும் அலையும் அவள் உள்ள நினைவுகள் அனைத்தும் 'ஸெஸாரியோ' என்ற வயோலாவின் ஆண் உருவைச் சுற்றியே வட்டமிட்டன.

வழியில்லா இடத்தும் காதல் வழிசெய்யும் இயல்பினதன்றோ? எனவே, அவள் பொறுமை யிழந்தாள். பெண்களுக் கியற்கையான நாணம் துறந்து, தனக்கும் தான் கருதிய இளைஞனுக்கும் உள்ள உயர்வு தாழ்வையும் பொருட்படுத்தாது, நேரடியாக ஸெஸாரியோவுக்குத் தன் காதலை அறிவிக்கத் துணிந்தாள். அதன்படி ஒரு பணிப் பெண்ணினிடம் ஒரு வைரக் கணையாழியைக் கொடுத்து, ' இஃது ஆர்ஸினோவுடையது; இப்போது வந்த இளைஞர் இதனை மறைவாக இங்கே போட்டு விட்டுப் போயிருக்கிறார். ' இத்தகைய கைத்திறன் இங்கே வேண்டா; இதனை உம் தலைவருக்கே கொடுத்துவிடும்' என்று சொல்லி இதனை அவரிடமே கொடுத்து விடு" என்று கூறி அனுப்பினாள்.

இக் கணையாழி உண்மையில் ஆர்ஸினோ அனுப்பியதன்று. ஒலிவியாவினுடையதே. பணிப்பெண்ணுக்குத் தெரியாதபடி அவள் இதன் மூலம் தன் காதலை வயோலாவுக்குக் குறிப்பாக அறிவித்ததேயன்றி வேறன்று.

தான் விடை கொள்ளும்போதே ஒலிவியாவின் உள்ள நிலையை உன்னிப்பாய் அறிந்த வயோலாவுக்கு இப்போது அவ்வெண்ணம் உறுதியாயிற்று. ' அந்தோ! என் மாற்றுருவால் விளைந்த தீவினைகள் தாம் என்னே! ஒரு புறம் ஆணுருவில் என் காதலை ஆர்ஸினோ அறியவில்லை. இன்னொருபுறம் அவ்வுருவை உண்மை என்று மயங்கி ஏழை ஒலிவியா இம் மாய உருமீது காதல் கொண்டுவிட்டாள்! எனக்காவது ஒரு போக்கு உண்டு. பெண்ணைக்

காதலித்த பெண்ணே, உன் நிலை யாதோ? என அவள் எண்ணமிடலானாள்.

ஆர்ஸினோ ஒலிவியாவின் மொழிகேட்டு மனம் உளைந்தான்; ஆனால் காதலால் கனிவுற்ற உள்ளம் முறிவுபெறாது, பன்னிப் பன்னி மீண்டும் வயோலாவை அவளிடம் அனுப்பவே எண்ணங் கொண்டது. அரசர்க்குரிய போரும் வேட்டையும் நீத்து அவன் ஒலிவியாவின் பெயரிலும், காதற்பாட்டுக் களிலுமே பொழுதைப் போக்கிவந்தான். பாணர் அவன் பக்கமிருந்து ஓயாது யாழ்மீட்டி அத்தகைய பாட்டுக்களை மீண்டும் மீண்டும் பாடி அரசனைச் சுற்றிலும் காதல் புகையும் துயரப் புகையும் பரப்பி வந்தனர்.

(பாட்டு)

1. வருதி, வருதி, மறலி! நீ
வந்து பைம்பணை ஏற்றியே
அரிதின் எனைக்கொ டேகுவாய்!
அணங்கி னுளம் நைந்துளேன்;
விரிது கில்கவித் தோலையும்
வேய்ந்தி டாய்! எரி காய்ந்திடாய்!
நரிகள் சூழ்சுடு காடென்போல்
நயந்து ளார்எவர்? தோய்ந்திடாய்!

2. மலர்கள் நறிய மலர்களை
வந்தென் பாடையில் தூவலீர்!
பலரும் நண்பர் என்னவே
பண்பின் எலும்பு பொறுக்கலீர்
கலந்து நூறு பேர் அழல்
கருதிலேன், ஆ, கருதிலேன்!
மெலிந்த காதலார்கணீர்
விழைந்திலேன்! ஆ, விழைந்திலேன்

காதலா லுடைந்த உள்ளத்தின் நிலைமையை எடுத்துரைக்கும் துயர்மிக்க இவ் வுருக்கமான பாடல் வயோலாவின் உள நிலைக்கும் ஒத்ததாகவே இருந்தது. அதன் துயர் அவள் உள்ளத்திற் புகுந்து முகம் வழியே வெளிப்படக் கண்ட ஆர்ஸினோ 'என் அரிய ஸெஸாரியோ, நீ பிறர் காதலை யன்றி நேரடியாகவே காதலை உணர்ந் தவ னல்லையோ?' என்றான்.

**வயோலா:** மன்னிக்கவும், அரசே! அமிழ்தினும் இனிதாய் நஞ்சுபோல் கெடுக்கும் அக்கனியின் சுவையை நானும் சற்று அறிந்துள்ளேன்.

**ஆர்ஸினோ:** நீ காதலித்த பெண் எப்படிப் பட்டவள்? அவள் ஆண்டு எவ்வளவு இருக்கும்?

**வயோலா:** அவள் தங்கள் உயரம், தங்கள் சாயலாகவே இருப்பாள். அவள் ஆண்டும் தங்கள் அளவே இருக்கும்.

வயோலாவின் உருவிற் கரந்திருந்த உள் ளுறை உண்மையை அறியாத ஆர்ஸினோ இது கேட்டு, 'இச்சிறிய இளைஞனெங்கே, என்னளவு வளர்ந்த மாதெங்கே—என்னளவு ஆண்டில் ஒரு மாது பேரிளம் பெண்ணாக அன்றோ இருப்பள்' என எண்ணங்கொண்டு வியப்பு ஒருபுறமும் நகைப்பு ஒருபுறமுங் கொண்டான்.

தான் ஆர்ஸினோ போன்ற பெண்ணைக் காத லித்ததாக வயோலா கூறியபோது அவள் உண்மை யில் மனத்துக் கொண்டது தான் பெண், தான் காதலித்த ஆடவன் ஆர்ஸினோ என்பதேயாம்.

ஒலிவியா வயோலா வரவை எதிர்ப்பார்ப்பதை அவள் பணிப்பெண்களும் பணியாட்களும் எளி தில் அறிந்துகொண்டனர். ஆகவே, அவள் மறு

முறை வந்தபோது அவர்கள் அவளைத் தடை யின்றி வரவேற்று உள் அனுப்பினர். ஆனால் வயோலா ஆர்ஸினோவின் பேச்செடுத்ததும் ஒலி வியா அவள் பேச்சை இடைமறித்து, 'அவர் காத லுக்காகப் பரிந்து பேசுவதில் பயனில்லை என்று தான் முன்னமே கூறிவிட்டேனே. அதை விடுத்து, நான் கனவு கண்டுகொண்டிருக்கும் காதலின் பேச்சை யெடுத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!' என்று நயந்து கூறினாள். வயோலா அக் குறிப்பை யறிந்தும் அறியாதவள் போலிருக்கவே அவள் நாண் துறந்து நேரடியாகவே வயோலாவின் காதலை வேண்டி அவள் நாடியைத் தாங்கலா னாள். இதற்கு இன்னும் இடம் கொடுத்தால் தன் நிலை கெட்டுவிடும் என்று கண்டு வயோலா அங்கே நின்றும் விரைந்து வெளியேறத் தொடங்கினாள்.

ஒலிவியாவின் பழங் காதலருள் ஸர் ஆன்ட்ரு ஏக்ச்சீக் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் உயர் குடியுட் பிறந்தவனாயினும் அறிவற்றவன்; கோழை; வாயாடி; இவ்வளவு போதாமல் தற் பெருமை வேறு. அவன் உண்மையில் அருவருக் கத்தக்க தோற்றம் உடையவனாயினும் பெண்கள் பலர் தன்னை நினைத்தேங்குவதாக நினைத்துக் களித் துக்கொள்பவன். ஒலிவியாவின் பணிப்பெண்க ளுள் நகைத்திறனும், அறிவுநுட்பமும் உடைய மேரியா என்பவள் அவனைப் பல வகையிலும் எள்ளி நகையாடுவாள். ஸெஸாரியோ ஒலிவியாவின் காதலைப் பெற வந்துள்ளான் என்று அவனிடம் அவள் கூறி அவனை ஸெஸாரியோவுடன் போர் செய்யும்படி தூண்டினாள். அவன் கோழையான தால் போர் செய்ய அஞ்சினான். மேரியாவே விடா மல் அவனைக் கிண்டித் தள்ளிவிட அவன் வேண்டா

வெறுப்பாய் வயோலாவிடம் போருக்கு வந்தான். வாளையே காணாத பெண்ணாகிய வயோலாவும் அவனது இயல்பை யறியாமல் வலைப்பட்ட மான் போல் மருள மருள விழித்தாள்.

## 5. கலங்கிய நீர்

அச்சமயம் எங்கிருந்தோ ஒரு வீரன் வந்து அவளுக்குத் துணையாக நின்று ஸர் ஆன்ட்ரூவைத் துரத்தினான். வயோலா, எதிர்பாரா வகையில் இறைவன் அருளே வந்ததுபோல் வந்த அவனுக்கு நன்றி கூறினாள். ஆனால் அங்ஙனங் கூறி முடிப்பதற்குள் அரசன் ஆட்கள் அவனைப் பிடித்துக்கொண்டு, "என்ன ஓடப் பார்க்கிறாய்; இத்தனை நாள் தப்பித் திரிந்தவன் இன்று அகப் பட்டாயா?" என்று கட்டிக்கொண்டு போகத் தொடங்கினர். அப்போது அவன் வயோலாவை நன்கறிந்தவன்போல அவளை நோக்கி, "இவ்வளவு தொல்லையும் உன் பொருட்டாக ஏற்பட்டதே. சரி, இனிச் செய்யவேண்டியதைப் பார்ப்போம். நான் திரும்பி வாங்கும் எண்ணமில்லாமலேயே உனக்கெனக் கொடுத்த பணப்பையை இப்போது என் நிலைமையில் கேட்கவேண்டியவனாய் இருக்கிறேன். அருள்கூர்ந்து அதனைத் தந்துதவுவாய்! என்றான்.

வயோலா அவனை முன்பின் தெரியாதவளானபடியால் ஒன்றுந் தோன்றாது விழித்தாள். அவன் செய்த உதவிக்கு நன்றியுடையவளாயினும், அவனையோ அவன் பணப்பையையோ தான் அறிந்தவள் அல்லளென அவள் மறுத்தாள். அவன் அதுகேட்டு வெகுளிநகை நகைத்துக் காவலரைப் பார்த்து, அவளைச் சுட்டிக்காட்டி, "ஆ, உல

கம் இருந்தவாறு காணுங்கள், இதோ இச்சிறுவனை இறப்பிலிருந்து மீட்டவன் நான். போதாக் குறைக்குப் பிள்ளைபோல் நடத்தி என் பணப்பையை உரிமையுடன் அவனுக்குக் கொடுத்தேன். அவனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற பாழுங் கவலையினாலேயே உயிரையும் பொருட்படுத்தாது இந் நகர் வந்து உங்கள் கையில் சிக்கினேன். இத்தகைய நன்றியின்மையைப் பார்த்தபிறகு எனக்குச் சிறையைப் பற்றியோ தூக்கைப்பற்றியோகூடக் கவலையில்லை. இத்தகைய பொய்மை வாழும் உலகிலிருந்து விடுபட வேண்டியதே' என்று வெறுத்துப் பேசினான். கடைசியாக அவன் காவலருடன் செல்கையில் அவள் பக்கமாகப் பார்த்து, 'நன்றிகெட்ட ஸெபாஸ்தியன்! என்னை விற்று நீயாவது நன்மை அடைக' என்று கூறிவிட்டுச் சென்றான்.

ஸெபாஸ்தியன் என்றது வயோலாவின் அண்ணன் பெயர் என்று மேலே கூறியுள்ளோம். வீரன் தன்னை அப் பெயர்கொண்டு அழைத்தவுடன் தன்னைத் தன் அண்ணனாகவே நினைத்திருக்கலாம் என்று வயோலா கண்டாள். எனவே, அண்ணன் உயிருடன் இருக்கிறான் என்றறிந்து கரைகாணா மகிழ்ச்சியுடன் அவள் அரண்மனை யடைந்தாள்.

வயோலா நினைத்தது உண்மையே. அவ் வீரன் உண்மையில் அந்தோனியா என்னும் ஒரு மீகாமனே யாவன். இக் கதைத் தொடக்கத்திற் கூறப்பட்டபடி கப்பலுடைந்தபின் பாய்மரத்தைப் பற்றியிருந்த ஸெபாஸ்தியன் இம்மீகாமனால் காப்பாற்றப்பட்டுப் பிள்ளைபோல நடத்தப்பட்டான். ஸெபாஸ்தியன் இல்லிரியாப் பக்கம் அன்றுவந்தபோது அந்நாட்டைப் பார்க்க விரும்பினான். ஆனால் மீகாமன் அந்நாட்டில் முன் குற்றவாளியாக நாடு

கடத்தப்பட்டவன். ஆதலால் தான் உள்ளே வராது ஸெபாஸ்தியனிடம் வேண்டிய பொருள்கள் வாங்கும் படி தன் பணப்பையைக் கொடுத்தனுப்பினன். பின் அவன் வரத் தாமதிக்கவே கவலைகொண்டு அவனைப் பின் தொடர்ந்து வருகையில், ஸர் ஆன்ட்ரூவுடன் சண்டைக்கு அஞ்சிநின்ற ஆணுடை யுடுத்த வயோலாவை ஸெபாஸ்தியன் என்று கருதி, அவளைக்காப்பாற்றினன். அப்போதுதான் அரசன் காவலர் அவனை அடையாளங் கண்டு சிறைப்படுத் தியது.

அதே சமயம் வயோலாவின் அண்ணனாகிய ஸெபாஸ்தியன் நகரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு ஒலிவியாவின் வீட்டுப் பக்கம் வந்தான். அப்போது ஸர் ஆன்ட்ரூ அவனைக் கண்டு முன் அந்தோனியா வால் பாதுகாக்கப்பட்டுப் பிழைத்த வயோலாவும் அவனும் ஒருவரே என்று நினைதது ஓங்கி அடிக்கப் போனன். உண்மையிலேயே ஆடவனும் வீரனுமான ஸெபாஸ்தியன் அப் பேடியை நொடியில் அடக்கித் தண்டித்தான்.

இச் சமயம் சண்டையின் அரவங் கேட்டு ஒலிவியா வெளியே வந்தாள். அவள் ஸர் ஆண்ட்ரூ வைச் சினந்து எச்சரித்தபின், வெற்றிகொண்டு விளங்கிய ஸெபாஸ்தியனை மெச்சி உள் அழைத் தாள். ஸர் ஆண்ட்ரூவின் பூசல் எப்படியோ அப் படியே ஒலிவியாவின் பாராட்டும் அவனுக்கு வியப் பாயிருந்தது. ஆபினும் ஒலிவியாவின் அழகிலீடுபட் டுக் காதலித்துவிட்ட ஸெபாஸ்தியன் அவளுடன் சென்று அவள் காதலை ஏற்று மகிழ்ந்தான். ஒலிவியாவும் சற்றுமுன் தன்னை வெறுத்துச்சென்ற தன் தலைவன் விருப்புடன் தன்னை ஏற்ற வகை தெரியாவிடினும், அதனை இறையருளாக நினைத்து

அவனுடன் அளவளாவினள். அவள் ஏவலால் நொடிக்குள் ஓர் அந்தணன் வந்து அவர்கள் மண வினையையும் முடித்து விட்டான். ஸெபாஸ்தியனுக்கு மட்டும் அவள் முன் பின் அறியாமல் தன்னைக் காத லித்தது நோக்க அவள் மூளைக்கோளாறுடையவளா யிருப்பாளோ என்ற ஓர் ஐயம் இருந்தது.



ஒலிவியா ஸெபாஸ்தியனை வயோலா என்று கொண்டு காதலித்தல்

அந்தோனியோ அரசன் முன்கொண்டு நிறுத் தப்பட்டான். அப்போது வயோலா அரசனுடன் நின்றிருந்தாள். அந்தோனியோ அவளைப் பின்னும் ஸெபாஸ்தியனாகவே கருதி அரசனிடம் அவளைச் சுட் டிக் காட்டி, "என் பிழையை நான் ஏற்றுத் தண் டனை பெறுவதில் ஒன்றுந் தடையில்லை; ஆனால் தங்

கள் பக்கம் நிற்கின்றானே, அந்த இளைஞன் நன்றி கொன்றவன்; மூன்று திங்களாக என்னுடன் இருந்துவிட்டு இன்று என்னை அறியேன் என்று மறுக்கிறான்; இதன் புதுமையைப் பாருங்கள்" என்றான். அரசன் சிரித்து, "அப்பனே, நீ சொல்வது எப்படிப் பொருந்தும்? இவன் மூன்று திங்களாக என்னுடனேயே இருக்கிறானே" என்றான்.

இதே சமயத்தில் 'வெயிலும் காற்றும் என்முகத்தில் விழிக்கமாட்டா' என்றிருந்த ஒலிவியா அரசனை நோக்கி வந்தாள். கடவுளே நேரில் வந்ததைக் கண்ட அடியவர்போல் அரசன் விதிர்விதிர்ப்புடன் "இதென்ன புதுமை! உன் வரவு என் நல்வினை" என்று வரவேற்றான். ஆனால் அவள் அம்மொழிகளைச் செவியில் வாங்காமல் அந்தோனியையாவைப் போலவே வயோலாவை முறைக்க முறைக்கப் பார்த்துக்கொண்டு அரசனிடம், "இதோ நிற்குங்கள்வர் என் உள்ளத்தையும் உயிரையுங் கைக்கொண்டு என்னைத் தனியே புறக்கணித்துவிட்டு, இங்கே உங்களுடன் வந்திருக்கிறார்," என்றாள். தன் தோழனும் பணியாளனுமான ஸெஸாரியோ ஒலிவியாவிடம் காதல் தூதாகப் போய்த் தானே அக்காதலை அடைந்து வந்திருக்கிறான் என்று நினைத்து அரசன் அழலெழ வெகுண்டு, "இழிதகைமையையுடைய சிறுவனே! உன்னை எப்பாடு படுத்துகிறேன் பார்," என்று பிடித்திழுத்தான்.

வயோலா அந்நேரம் "ஐய, தங்கள் மன அமைதிக்கு என் உயிர் உதவுமாயின் தட்டின்றி எடுத்துக்கொள்க; தங்களதே என் உயிர்," என்று காதலின் பெருமிதத் தன்மை தோன்றக் கூறினாள். ஆனால் ஒலிவியா, "என் காதலனை-என் உயிரை-ஊறுபட விடேன். என்னையே முதலில் கொல்க, அரசே!"

என்று இடையே வந்து நின்று அரசனைத் தடுத்தாள். அதோடு அவள், 'இவர் என் கணவர். அந்தணர் சான்றாக இவர் என்னை மணந்தவரேயாயினும் எக் காரணத்தினாலோ அடிக்கடி வெறுத்துச் செல்கிறார்,' என்றாள்.

## 6. முடிவு

இச்சமயம் எல்லாரும் வியக்கும் செய்தி ஒன்று நிகழ்ந்தது. ஒலிவியாவை விட்டுச் சற்று வெளியே போயிருந்த ஸெபாஸ்தியன் திரும்பிவந்து, அவளைக் காணாமல் பின் தொடர்ந்து அரசன் முன் வந்தான். வந்து அவளை அங்கே காணவும், அவளை வெளிப் படையாக மனைவி என்ற உரிமையுடன் அழைத்தான். அவன் எல்லா வகைகளிலும் ஆணுடையுடுத்த வயோலாவைப்போலவே இருந்ததனால், அவ் விருவருள் 'யார் தன் கணவர்?' என அறியாது ஒலிவியா திகைத்தாள். அரசனும், 'யார் தன் தோழன்?' என அறியாதவன் ஆனான். ஸெபாஸ்தியனும் ஆணுடையில் வயோலாவை உணரவில்லை. ஆனால் வயோலாவுக்கு மட்டும், 'இவன் தன் அண்ணனே!' என்பது தெளிவாயிற்று. உடனே பேராவலுடன் அவனருகில் ஓடி அவனைக் கட்டிக் கொண்டு "அண்ணா! நான் வயோலா; தங்கை வயோலா, இவ்வளவு நாள், நீ வருவையோ, இறந்தனையோ, என்று இருந்தேன்" என்று வாய்விட்டுக் கூறி நின்றாள். அவனும், "ஆ, வயோலா! நானும் உன்னை இழந்து விட்டதாகவே நினைத்தேன்; ஆ, ஆ! திரும்பவும் பெற்றேன்." என்று மகிழ்ந்து ஆரவாரித்துரைத்தான்.

ஒலிவியாவுக்கும் அரசனுக்கும் இப்போது உண்மை விளங்கத் தொடங்கிற்று. தன்னிடம்

தூதனாக வந்தவன் ஆணல்லன்; பெண்ணேயென்றறிந்து ஒலிவியா முதலில் வெட்கமுற்றனள். ஆயினும், உண்மையில் அவளைப் போன்ற ஸெபாஸ்தியனை அடைந்ததனால் நிறைவெய்தினள். அரசனுக்கு இப்போது, முன் ஆணுருவில் வயோலா கூறிய அவள் காதலின் உண்மைத் தன்மை தெரியவே, கானல் நீர்போல் ஒலிவியாவின் காதல் மறைந்து வயோலாவின் உயரிய காதலையே பெறவேண்டுமென்னும் விருப்பு ஏற்பட்டது. வயோலாவுக்கு அது பாலில் பழம் நழுவியதெனப் பெரு மகிழ்வு அளித்தது.

ஸெபாஸ்தியனுக்கும் ஒலிவியாவுக்கும் மணம் புரிவித்த அதே அந்தணன் அரசனுக்கும் வயோலாவுக்கும் மணவினை நிகழ்த்தினன்.

மேரியாகூட அவளது ஏளனத்திற்கு ஆளாயிருந்த ஸர் ஆன்ட்ரூவை மணந்துகொண்டாள்.

# 2. சிறுபிழையால் நேர்ந்த பெருந் தொல்லை

## (Much Ado About Nothing)

### (கதை உறுப்பினர்)

**ஆடவர்**

1. **லியோனதோ :** மெஸ்ஸினாத் தலைவன் - ஹீரோ தந்தை-பியாத்ரிஸ் மாமன்.
2. **கிளாடியோ :** பிளாரென்ஸ் நகரத்துப் பெருமகன்—ஹீரோவின் காதலன்.
3. **பெனிடிக்:** பாதுவா நகரத்துப் பெருமகன் பீயாத்ரிஸை வெறுத்தெதிர்த்துப் பின் காதலித்தவன்.
4. **தான் பெத்ரோ :** ஆரகன் இளவரசன் - கிளாடியோ, பெனிடிக் ஆகிய இருவருக்கும் நண்பன்.
5. **தான்ஜான் :** தான்பெத்ரோவின் மாற்றாந்தாய் மகன் - அவன் மீதும் அவன் நண்பன் மீதும் பொறாமை கொண்டவன்.
6. **பொராகியோ :** ஹீரோவின் தோழியாகிய மார்கரட்டின் காதலன்—தான் ஜானின் நண்பனாதலின் அவன் தூண்டுதலால் ஹீரோமீது பழி சுமத்தியவன்.

**பெண்டிர்**

1. **ஹீரோ :** லியோனதோவின் மகள் - கிளாடியோ காதலி.
2. **பியாத்ரிஸ் :** லியோனதோவின் மருமகள் - முதலில் பெனிடிக்குடன் பூசலிட்டுப் பின் நண்பர் சூழ்ச்சியால் அவன் காதலியானவள்.
3. **உர்ஸூலா**
4. **மார்கரட்**

(3, 4) ஹீரோவின் தோழியர்.

# கதைச் சுருக்கம்

பிளாரென்ஸ் பெருமகனை கிளாடியோவும், பாதுவாப் பெருமகனன் பெனிடிக்கும் தம் நண்பனை ஆரகன் இளவரசன் தான் பெத்ரோவுடன் போருக்குச் சென்று வெற்றியுடன் மீளும் வழியில் மெஸ்ஸினாத்தலைவன் லியோனதோவின் அரண்மனையில் தங்கினர். கிளாடியோ லியோனதோவின் மகள் ஹீரோவைக் காதலித்தான். ஆனல் பெனிடிக்கும் லியோனதோ மருமகள் பியாத்ரிஸம் இதற்கு நேர்மாருகப் பூசலிடவே, நண்பரனைவரும் லியோனதோவும் சேர்ந்து அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்மீது காதல்கொண்டு தவிப்பதாக மற்றவர்க்குத் தெரியக்கூறிச் சூழ்ச்சியால் அவர்களிடையே காதல் உண்டுபண்ணினர்.

இதற்குள் தான்பெத்ரோவினிடமும் நண்பரிடமும் பொருமை கொண்ட அவன் மாற்றாந்தாய் மகன் தான்ஜான் தன் நண்பனும் ஹீரோவின் தோழியாகிய மார்கரட்டின் காதலனுமான பொராகியோவை ஏவி ஹீரோமீது பழிசுமத்தி அவளை அவள் காதலன் கிளாடியோ மணவினையின்போது வெறுத்து அவமதித்தொதுக்கச் செய்தான். தோழிசிலையைத் திருத்தியன்றித் தான் மணப்பதில்லை என்று பியாத்ரீஸ் கூறிவிட்டாள். லியோனதோ ஹீரோ இறந்ததாகக் கூறி அவள் மானங்காத்தான்.

அதற்குள் ஒரு வழக்கறிஞர்முன் தான்ஜான் தன் வஞ்சச் செயல்கூறி வீம்படித்ததால் ஹீரோவின் தூய்மை விளங்கவே, கிளாடியோ கழிவிரக்கங்கொண்டு துடித்தான். அப்போது லியோனதோ தேற்றி அவள் போன்ற அவள் தங்கையை மணக்கும்படி வேண்டிக்கொண்டு உண்மையில் ஹீரோவையே மணக்கச் செய்தான். அதனையறிந்த கிளாடியோ மகிழ்ந்தான். பெனிடிக்கும் பியாத்ரீஸை மணந்து மகிழ்ந்தான்.

---

## 1. காதல் ஒருபுறம் : பூசல் ஒருபுறம்

[1]லியோனதோ என்பவன் [2]மெஸ்ஸினு நகரத்து அரசியல் தலைவன். அவனுக்கு ஒரு மகளும் ஒரு மருமகளும் இருந்தனர். மகள் பெயர் [3]ஹீரோ ; மருமகள் பெயர் [4]பீயாத்ரிஸ் என்பது.

இவர்களுள் ஹீரோ அடக்கமான பேச்சு உடையவள். பீயாத்ரிஸோ கலகலத்த பேச்சும் பிறரை எளிதில் எள்ளி நகையாடும் குணமும் உடையவள்.

அந்நாட்டரசனுக்குப் போரில் உதவி செய்யச் சென்ற வீர இளைஞர் சிலர் வழியில் மெஸ்ஸினுவில் தங்கினர். அவர்களுள், [5]ஆரகன் இளவரசனுன தான் பெத்ரோ தலைமையானவன். அவனுடன் வந்தவர்கள் [6]பிளாரன்ஸ் நகரத்துப் பெருமகனுன [7]கிளாடியோவும், [8]பாதுவா நகரத்துப் பெருமகனுன [9]பெனிடிக்கும் ஆவர்.

போரிலேயே அப்போது அவர்கள் கவனம் இருந்தபடியால் லியோனதோவின் மாளிகையில் இருந்த பெண்களை அவர்கள் அவ்வளவாகப் பார்க்கவில்லை. ஆனுல் போரில் அருஞ்செயல் புரிந்து புகழும் வெற்றியும் பூண்டு திரும்பி வந்தபோது அவர்கள் கண்ணுக்கு அப்பெண்கள் அரமங்கையராகத் திகழ்ந்தனர்.

கிளாடியோ ஹீரோவைக் கண்ணுற்றது முதல் மதிமயக்க முற்றவன் ஆனுன். அவள் அழகில் ஈடுபட்ட அவன் கண்கள் தேனுண்ட வண்டுகள் போல் அவளை விட்டகலாமற் சுற்றின. அவளுடைய அடக்க ஒடுக்கமான போக்கும், நடையும், நயமிக்க

---

1. Leonato. 2. Messina. 3. Hero. 4. Beatrice. 5. Don Pedro Prince of Arragon. 6. Florence. 7. Claudio. 8. Padwa. 9. Benedict.

மொழிகளும் அவன் உள்ளத்தை அரித்தன. அவன் கண்கள் தன் பக்கம் நாடுவதைக் குறிப்பாக அறிந்த ஹீரோவின் உள்ளமும் அவள் இணக்கத்தை நாடாமலே அவன் பக்கம் ஒன்றிவிட்டது. இருவர் மன நிலைகளையும் உய்த்துணர்ந்துகொண்ட இளவரசன் தலைவனுடன் இதுபற்றிக் கலந்து பேசினான். ஹீரோவுக்குக் கிளாடியோ ஏற்ற காதலனே என்று எண்ணி அவர்களை மணவினையால் இணைக்கத் தலைவனும் ஒப்புக்கொண்டான். காதலருக்கும் இது தனித்தனியே நண்பர்கள் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் இது கேட்டுத் தம்மையே மறந்து மகிழ்வுற்றனர்.

ஹீரோவும் கிளாடியோவும் இங்ஙனம் மனமொத்து ஒன்றுபட்டதற்கு நேர் மாறாகப் பெனிடிக்கும் பீயாத்ரிஸூம் ஓயாது கலவரமிடுவாராயினர். பெனிடிக்குப் பீயாத்ரிஸூக் கிணையான வாயடியும் நகைத்திறனும் உடையவனாயினும் அவன், கிளாடியோவும் தலைவனும் பேசுவதையே கவனித்து அவர்களிடம் பேசிகொண்டிருந்தான். தன்னிடம் ஒருவரும் பேசாதது கண்டு, பீயாத்ரிஸ் சினங்கொண்டாள். பிறரிடங் கடகடவென்று பேசிக்கொண்டிருக்கும் பெனிடிக்கைக் கண்டதும் தன் நகைத்திறனுக்கும் வாயடிக்கும் ஏற்ற பேர்வழி இவனே என்று எப்படியோ அவள் மனந்துணிந்துவிட்டது. உடனே அவள் அவனை அணுகி, ‘ஐயோ பாவம்! ஓயாது பேசியும் உன்னை ஒருவருங் கவனிப்பாரில்லை. அப்படியும் நீ பேசிக்கொண்டே இருப்பதுதான் வியப்பாயிருக்கிறது,’ என்றாள்.

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாதன்றோ? அதுபோல் பெனிடிக் இதை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. மாறாக அவளுக்கு நலல பாடம்

படிப்பிக்க எண்ணிச் சற்று நேரம் பொறுத்து அவளை அப்பொழுதுதான் கண்டவன்போல் பாவித்து, 'அடடா, நான் பார்க்கவில்லையே; இந்தத் திருமகளுக்கு மூத்த பெருமகள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறாளா ?' என்றான்.



கிளாடியோவும் ஹீரோவும்

பிறரை ஏளனம் செய்பவருக்குத்தான் ஏளனம் சுடும். தன்னை மூத்தாள் என்று அவன் சொன்னதும் அவள் பின்னுஞ் சினங்கொண்டு அவனைக் குறைத்துக் கூறலானாள். மேலும் இளவரசன் பெனிடிக் பேசுவதையெல்லாங் கேட்டு, அவனுக்குப் பக்கத்துணையாக நிற்பது கண்டு இருவரையும ஒரே சொல்லால் இழிவுபடுத்த எண்ணி, அவள் 'பெனிடிக், உன் திறத்தைப் பார்த்து இவ்விளவரசர் சிரிக்கிறதைப் பார். அவருக்கு எங்கிருந்து இவ்வளவு நல்ல கோமாளி கிடைத்ததென்று விளங்கவில்லை' என்றாள். கேலியில் உண்மை கலந்திருந்தால் அஃது ஆழ்ந்து பதியும். ஆதலால் தன்னை இங்ஙனம் இள

வரசனுக்குக் கோமாளி என அவள் அழைத்தது பெனிடிக்கின் மனத்திற் சுறுக்கெனத் தைத்தது.

அதோடு, போரைப் பற்றிய பேச்சு வந்த போதும், அவள் அவனுடைய வீரத்தை மதியாமல் 'இந்தப் போரில் நான் மட்டும் உன்னுடன் வந்திருந்தால், நீ கொன்றதனைத்தும் நான் தின்றிருக்கக் கூடுமே,' என்றாள். அவன் போரில் மிகுதியாகக் கொன்றிருக்க முடியாது என்ற இக்குறிப்புப் பொய்யேயாயினும் அவனுக்கு அது மிகுந்த அவமதிப்பைத் தருவதாக இருந்தது.

பீயாத்ரீஸின் சுடுமொழிகள் ஒவ்வொன்றிற்கும் பெனிடிக்கும் சரியாக இரண்டுபங்கு சுடுமொழிகள் தந்தான். இங்ஙனமாக இவர்களிருவரும் ஒருவரை யொருவர் குத்தலாகப் பேசுவதில் தம் திறனையெல்லாங் காட்டிவந்தனர்.

## 2. சூழ்ச்சியால் வெறுப்பு விருப்பாக மாறுதல்

கிளாடியோவும் ஹீரோவும் கொண்ட காதல் முதிர்ந்து அவர்கள் விரைவில் இணைபிரியாத் தோழராயினர். அவ்விருவரும் தம்மணவினை நாளை மிகவும் பரபரப்புடன் எதிர்பார்த்திருந்தனராதலின், அந்நன்னாள்வரையிற் பொழுதுபோவது அருமையாயிருந்தது. இதனைக் குறிப்பாய் அறிந்த இளவரசன் அவர்களுக்குக் களிப்பையூட்டி நேரத்தைப்போக்கியுதவ ஓர் இனிய வேலையை உண்டுபண்ணினான். கலகலப்பாய்ப் பூசல் விளைத்துவரும் பெனிடிக்கும் பீயாத்ரிஸும் ஒருவரை யொருவர் காதல் கொள்ளும்படி செய்யவேண்டுமென்பதே அவ் வேலை. முதலில் பெனிடிக்கின் தோழர்கள் அவன்மீது பீயாத்ரீஸ் காதல் கொண்டுள்ளாள் என்று அவனை நம்பச் செய்யவேண்டும். அதுபோல் பீயாத்ரீஸின்

தோழியர் பெனிடிக் அவள்மீது காதல் கொண்டிருப்பதாக அவளை நம்பச் செய்யவேண்டும். அப்போது இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கும் வகையைப் பார்த்து அவர்களை எல்லாரும் சேர்ந்து ஏளனம் செய்யலாம் என்று இளவரசன் எடுத்துரைத்தான்.



பெனிடிக் ஒளிந்து பியாத்ரிஸின் காதலைப்பற்றிக் கேட்டல்

இதன்படியே லியோனதோவும் கிளாடியோவும் பெனிடிக்குத் தெரியாமல் பேசுவதுமாதிரித் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது, பெனிடிக் தமக்கருகில் செடி கொடி வரிசைகளுக்கப்புறம் ஓர் இருக்கையில் உட்கார்ந்து வாசித்துக்கொண்

டிருந்தான் என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும்.

தற்போக்காகப் பேசுவதுபோல் வேறு பொதுச் செய்திகளைப் பற்றிச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தபின், திடீரென்று கிளாடியோ லியோனதோவைப் பார்த்து, 'அஃதிருக்கட்டும் நண்பரே! நீர் உமது மருகியைப் பற்றிச் சொன்ன செய்தி என்னயிற்று? என்னல் அதை நம்பவே கூடவில்லை' என்ருன்.

லியோனதோ: 'ஆம்' முதலில் என்னலும் நம்ப முடியாமலேதான் இருந்தது. பெனிடிக்கைப் பற்றி அவள் பேசுவதைக கேட்டால் அவள் அவனை வெறுக்கிறவள் என்றுதான் எவரும் சொல்லுவர். அப்படியிருந்தும், அவள் அவனைக் காணுதவிடத்து அவன் பெயரையே நினைத்துப் புலம்பி அவனைப் புகழ்ந்து புகழ்ந்து அழுங்குவானேன்? பாவம். அவள் நல்லவள்; அறிவுடையவளும்கூட. இந்த ஒரு வகையிலேதான் அவள் தன் அறிவைப் பறி கொடுத்துவிட்டுப் பெண்ணே பிடிககாத இந்தக் காட்டானிடம் மனம் செலுத்துகிருள்.'

கிளாடியோ: 'ஆம். அது வொன்றுதான் அவள் அறிவுக்குப் பொருந்தாச் செயல் என்று ஹீரோகூடக் கூறுகிருள். எப்படியும் அவனிடம் இதைக் கூறி அவளைக் காதலிக்கச் செய்யவேண்டு மென்றும் ஹீரோ என்னிடம் சொன்னுள். அதற்கு நான், 'அவனிடம் இதைச் சொல்வதில் பயனில்லை. காதலுக்கும் அவனுககும் தொலை மிகுதி. அதிலும் பீயாத்ரிஸையாவது அவன் விரும்பவாவது' என்று சொல்லித் தடுத்துவிட்டேன்.

முதலில் அவர்கள் யாரோ ஒரு பெண்ணைப் பற்றிப் பேசுவதாக எண்ணி, பெனிடிக் அக்

கதையை அரை மனத்துடன் கேட்டுக்கொண்டிருந் தான். பின் அது பீயாத்ரிஸையும் தன்னையும் குறிப்பதாகக்கண்டு அதனைக் கூர்ந்து கவனித்தான். பிறர் தன்னைக் குறைவாக நினைத்தும் பீயாத்ரிஸ் மட்டும் தன்னை உயர்வாக மதித்துக் காதலிப்பதைக் கேட்டதும் அவள்மீது அவனுக்கிருந்த வெறுப்பே விருப்பாக மாறிவிட்டது. 'ஆ, இதுவரை நான் பெண்கள் பக்கம் நாடா திருந்ததெல்லாம் இப் பெண்ணரசிக்காகவே போலும்' என்று அவன் வாய்விட்டுக் கூறினன். கிளாடியோவும் லியோன தோவும் இதனைச் செவியுற்று முதல் படியிலேயே தமது சூழ்ச்சி வெற்றியுற்றதென மகிழ்ந்தனர்.

இச்சமயம் மறுபுறம் ஹீரோவின் வேலையும் நன்கு தொடங்கிற்று. 'உணவு வேளையாயிற்று; எல்லோரும் வந்துவிட்டார்கள். உன் நாக்குக்கு அஞ்சியோ என்னவோ பெனிடிக் வரவில்லை. அவனை நீயே இழுத்து வா,' என்று அவள் பீயாத் ரிஸை அனுப்பினாள். பீயாத்ரிஸும் அதனைப் பின் பற்றி வேண்டா வெறுப்பாகத் தோட்டத்திற்குள் வந்து பெனிடிக்கைப் பார்த்துத் தன் வழக்கப்படி கடுகடுத்த குரலில், 'வயிற்றில் பசி கூடவா உனக் குத் தெரியவில்லை. இங்கு உன்னை அழைத்துவர வும் வேறு போக்கற்றவர்கள் அகப்படவில்லையாம்!' என்றாள். அவள் மொழிகள் உண்மையில் எப்படி யிருந்தாலும் பெனிடிக்கின் காதுக்குமட்டும் அன்று அதில் அன்பும் காதலும் உள்ளடங்கி யிருப்பன வாகப் பட்டது. அன்று ஒருநாள் மட்டும் அவன் அதற்கு மாறாகக் கடுமொழி கூறாது, 'சரி, இதோ வருகிறேன். நீ இன்னும் உணவருந்தாமலா இருக் கிறாய்,' என்றான். அவனது பேச்சில் ஏற்பட்ட மாற்றத்தைப் பீயாத்ரிஸ் கவனியாமலில்லை.

பீயாத்ரிஸினது காதல் வளர்ச்சியின் அடுத்த படி அன்று மாலையே தொடங்கிற்று. ஹீரோ அப்போது தன் தோழியராகிய [1]உர்ஸுலா [2]மார்கரட் ஆகிய இருவருடனும் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். அப்போது ஹீரோ மார்கரட்டை அனுப்பிப் 'பீயாத்ரிஸிடம் ஹீரோவும், உர்ஸுலாவும் உன்னைப்பற்றிப் பேசிக்கொண்டே போகிறார்கள்,' என்று கூறும்படி செய்தாள். பீயாத்ரிஸும் இதைக் கேட்டவுடன் எதிர்பார்த்தபடி தோட்டத்திற்கு வந்து தொலைவிலிருந்தே பதுங்கிப் பதுங்கி ஹீரோவும் உர்ஸுலாவும் பேசிக்கொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்திலுள்ள பூம்பந்தருக் கருகில் மறைந்து நின்றாள்.

அவள் வந்திருப்பதை அறிந்தும் அறியாதது போல ஹீரோ உர்ஸுலாவுடன் முன் பேசியதைப் போலத் தொடர்ந்து பேசும் முறையில் பேசத் தொடங்கினாள்.

**ஹீரோ:** அவள் எவ்வளவோ பெருமைக்காரி, உர்ஸுலா! அதோடு ஆடவர் என்றாலே அவளுக்குப் பிடிப்பதில்லை. இப்படிப்பட்டவளைப் பார்த்துப் பெனிடிக் காதல் கொண்டது வியப்பாகவே இருக்கிறது. இதை அவளிடம் சொன்னால் அவள் ஏளனந்தான் பண்ணுவாள். ஆதலால் அவளிடம் சொல்ல வேண்டா.'

**உர்ஸுலா:** 'சரி, எளிதாகச் சொல்லிவிட்டாய். சொல்லாவிடில் பெனிடிக்கின் நிலை என்னாவது? எப்படியும் சொல்லித்தான் ஆகவேண்டும். என் அறிவுக்கு, அவள் வெளிக்கு வாயடி அடிக்கிறாள்; அடித்தாலும் அவனுடைய உயர் நடையை

---

1. Ursula. 2. Margaret.

யும் அறிவையும் உள்ளூரப் பாராட்டாமலிருக்கும் படி அவ்வளவு அறிவில்லாதவளல்லள் அவள். என்னவோ அவள் மனத்தை யார் கண்டார்கள்? பெனிடிக்கைப் போன்ற வீரமும் அறிவும் உடைய இளைஞன் இந்த இத்தாலி நாடு முழுமையுந் தேடினு



பியாத்ரிஸ் ஒளிந்து பெனிடிக்கின்
காதலைப்பற்றிக் கேட்டல்

லும் அகப்படப் போவதில்லை. அவனைத் தெய்வம் யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ?........சரி, அவள் காரியம் எப்படியாவது இருக்கட்டும். உனக்கும் கிளாடியோவுக்கும் மணவினை எப்போது?

ஹீரோ: நாளையே. அதற்கான ஆடைகள் எல்லாம் வந்துவிட்டன. மணவறைக்கான ஆடைகளைத்

தெரிந்தெடுத்து அணிவதில் உன் துணை வேண்டும்; வா போகலாம்.

ஹீரோவும் உர்ஸுலாவும் போனபின் பீயாத்ரிஸ் தனக்குள், 'ஆ, இம்மட்டில் இப்பெண்கள் என்னை உதவாக்கரை என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் பெனிடிக்கைக் கைக்கொள்வதன் மூலம் என் திறனை அவர்களுக்குக் காட்டுகிறேன்,' என்றெழுந்தாள்.

பெனிடிக்கும் பீயாத்ரிஸும் அதன்பின் தாம் முன் ஒருவரை யொருவர் திட்டியதை மறந்து கலந்துறவாடத் தொடங்கினர். கிளாடியோவும் ஹீரோவும் தொடங்கிய கைத்திறன் அவர்கள் எதிர்பார்த்ததைவிடப் பன்மடங்கு பயன் தந்தது. ஆனால் அதனைக் கண்டு அவர்கள் நெடுநாள் மகிழ்வதற்கின்றி, ஊழ் அவர்கள் வாழ்க்கையில் எதிர்பாராத புயல் ஒன்றைக் கொண்டுவந்து விட்டது.

## 3. வஞ்சத்தால் விளைந்த பேரிடர்

இளவரசன் 'தான்பெத்ரோ'வுக்கு ஒரு மாற்றாந்தாய் மகன் இருந்தான். அவன் பெயர் தான் ஜான் என்பது. அவன் கெட்ட குணமும் குறுகிய நோக்கமும் உடையவன். அவனுக்கு இளவரசனிடமும் அவனுடைய நண்பர்களிடமும் பொறாமை மிகுதி. அவர்களுக்கு ஒரு நன்மை வந்தால் அவனுக்கு அஃது ஒரு தீமைபோலக் குத்துதலாயிருக்கும். இளவரசன் கிளாடியோவின் மணவினைக்கு உள்ளீடானவன் என்பதைக் கண்டதும் எப்படியாவது அவர்களது கனவுலகை உடைக்கவேண்டும் என்று உறுதிகொண்டான்.

தான்ஜானின் நண்பனாகிய [1]பொராகியோ ஹீரோவின் தோழி மார்கரட்டைக் காதலித்து வந்தான். தான்ஜான் அவனுக்கும் அவன் மூலமாக மார்கரட்டுக்கும் நிரம்பப் பொருள் கொடுத்து அவர்களைத் தன் வசப்படுத்தினான். பின் அவன் பொராகியோவிடம் 'ஹீரோவின் உடையணிந்து உன் காதலியைப் பலகணி வழியாக நள்ளிரவில் வந்து உன்னுடன் பேசச் செய். நான் அச்சமயம் பார்த்துக் கிளாடியோவை அங்கே அழைத்து வந்து ஹீரோ மீது அவனுக்குக் கெட்ட எண்ணம் உண்டாகும்படி செய்கிறேன். அப்போது இம் மணவினை முறிவடையும்,' என்றான்.

அதன்படியே அன்று நள்ளிரவு நடைபெற்றது. தான்ஜான் அன்று கிளாடியோவினிடமும் இளவரசனிடமும் சென்று 'ஹீரோவைக் கிளாடியோ மணப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அவள் தீயவள்' என்றான். இளவரசனும் கிளாடியோவும், 'இதென்ன, உனக்கு மட்டுமா அவள் தீயவள் என்று பட்டுவிட்டது. அவளை அனைவரும் பெருமையாகவே பேசுகின்றார்கள். எங்கள் கண்ணுக்கும் மாசிலா மணியாகவே அவள் காணப்படுகின்றாள்' என்றனர். அப்போது பொய்ம்மையை வாய்மையாகத் திரிப்பதையே தொழிலாகக்கொண்ட அவ் வஞ்சகன், 'அவள் பிறருடன் உறவாடுவதை நான் அடிக்கடி நேரில் பார்த்திருக்கிறேன். நாளை அவள் உங்களை மணக்கப் போகும் பெண் அல்லவா? இன்றிரவுகூட அவள் வழக்கம்போல் ஒரு மூன்றாம் மனிதனுடன் பேசுவதை நீங்கள் கண்டால் என்ன சொல்வீர்கள்' என்றான். அதுகேட்டு வியப்பும் கலவரமுங் கொண்டு கிளாடியோ, 'நீ கூறுவது

1. Borachio.

உண்மையாயின் அவள் மணவினையைப் பலரறியத் துறந்து அவளை நீக்கிவிடுவேன்,' என்றான். இளவரசனும் 'அப்படிச் செய்தே தீருவோம்,' என்று அவனுடன் சேர்ந்தே பேசினன். அதன்பின் மூவரும் ஹீரோவின் அறைச் சாளரத்தின் பக்கம் ஒளிந்து நின்றனர். நள்ளிரவில் முன்னேற்பாட்டின்படி ஹீரோவின் உடையணிந்த மார்கரட் சாளரத்தைத் திறந்து வெளியே கண்ணோட்டம் செய்தாள். அதனை



கிளாடியோ ஹீரோவைத் துறத்தல்

எதிர்பார்த்துநின்ற பொராகியோ மெல்லிய குரலில் காதற்பா ஒன்றைப் பாடிக்கொண்டு வந்தான். உண்மையிலேயே காதலரான அவ்விருவரும் அளவளாவிக் கைகோத்துப் பேசி மகிழ்ந்தனர். அதனைக் கண்ணுற்றிருந்த கிளாடியோவின் நெஞ்சில்

ஊழித் தீப் போன்ற சீற்றம் எழுந்து புகைந்து எரிய லாயிற்று. இளவரசன் நெஞ்சமும் சட்டென்று கருகிற்று.

மறுநாள் மணவினை தொடங்குகையிலேயே கிளாடியோ துடிதுடிக்க வந்து, அந்தணன் வளர்த்த வேள்வித் தீயை அவித்து, அதற்காக வைத்திருந்த பொருள்களைக் காலாலுதறித் தள்ளித் தேய்த்தான். பின் மணப்பெண்ணைப் பார்த்து, 'உனக்கு மண வினைதான் எதற்கு; உன் நடையை மறைக்க உன் தந்தை செய்த சூழ்ச்சியா இது?' என்றான். லியோ னதோ இக் கொடுமொழிகள் கேட்டு, 'ஐயா நேற்று வரை என்னுடன் உயிருக் குயிராய்ப் பழகிய நீங்கள் இன்று இப்படி ஏன் தாறுமாறாய்ப் பேசுகிறீர்கள்,' என்றான். இளவரசன் முன் வந்து, 'அரசே தாறு மாறாய்ப் பேசுவது நாங்கள் அல்லேம்; தங்கள் புதல்வி நடையிற் கண்ட தாறுமாறான தன் மையே நீங்கள் காண்பதன் மூலகாரணம்,' எனக் கூறிவிட்டுக் கிளாடியோவையும் கூட்டிக்கொண்டு வெளியேறினான்.

தன் காதலனே தன்னை வெறுத்துத் தன் நடையிற் குறை கண்டதாகக் கூறவே, ஹீரோ எண்சாணும் ஒருசாணாய்க் குறுகினாள். அவள் மெய் துடிதுடித்தது. அவள் உணர்வற்று நிலத்தில் வீழ்ந்தாள். கிளாடியோவும் இளவரசனும் அவள் விழுந்ததைப் பார்த்தும் அவளுக்கு என்னுற்றதோ என்று கூடக் கருதாமல் வெளியே சென்று விட்ட னர்.

## 4. உற்றவிடத்துதவும் உறவோர்

உண்மை வீரர்களும் உயர்குண முடையவர் களுமான இவ்விருவரும் கூறிய மொழிகளி லிருந்து லியோனதோவும் தன் மகள் தீயநடத்தை யுடையவளே என்று நினைத்தான். உணர்வற்றுக் கிடக்கும் ஹீரோவி னருகிற் சென்று பீயாத்ரிஸ் 'என் அருமை அண்ணி, உனக்கு என்ன திவினை நேர்ந்தது; ஐயோ, நீ கண் திறவாயோ என அழு தாள். பெனிடிக்கும் அணுகிவந்து, 'பீயாத்ரிஸ், அவள் எந்நிலையி லிருக்கிறாள?' என்றான். பீயாத் ரிஸ் கண்ணீர் வழிந்த முகத்துடன், 'அவளைக் கொன்றுவிட்டார்கள் போலும் அப்பாவிகள்!' என் றாள். ஹீரோவின் தந்தையாகிய லியோனதோ மட்டும், 'அவள் இறந்தே போகட்டும்; இறைவனே, அவள் கண்கள் திறவாதிருக்க அருள்க,' என்றான்.

மணவினை முடிக்கவந்த அந்தணன் ஹீரோ வின் செவியில் கிளாடியோ கடுமொழிகள் விழும் போதும் அவள் உணர்வற்று விழும்போதும் அவள் முகத்திற் கண்ட வியப்பையும் பெருந்தன்மை யையுங் கண்டு, அவள் தூய கற்பு உடையவளே என்று உறுதிகொண்டான். அவன் உதவியாலும் பீயாத்ரிஸ், பெனிடிக் ஆகியவர்கள் முயற்சியாலும், ஹீரோ விழித்தெழுந்தாள். ஆனல் அவள், 'நான் ஏன் பிறந்தேன்; ஏன் பிழைத்தேன்?' என்று அழத் தொடங்கினள். அந்தணன் அவளுக்கு ஆறு தல் கூறி லியோனதோவிடம், 'ஐய, இவள் குற்ற மற்றவள் என்று நான் உறுதி கூறுவேன். இவள் வகையில் ஏதோ சூது நடந்துள்ளது. எல்லாம் காலம் சரிப்படுத்தும். அதுவரை அவள் இறந்து விட்டாள் என்றே வெளியிற் செய்தி கூறிவிடுங்கள். பிற என் பொறுப்பு,' என்றான்.

லியோனதோ: அதனால் பயனென்ன? அப்படி ஒரு வீண் பொய்யைத்தான் சொல்வானேன்?

அந்தணன்: அப்படியன்று. நான் சொல்கிற படி செய்யுங்கள். அதன் பயன் பின்னால் தெரியும். அவள் இறந்தாள் என்று ஏற்பட்டபின் அவளைப் பற்றிய பொய் எளிதில் வெளிப்படும்.

லியோனதோ இதற்கு ஒருவாறு இணங்கினான். பெனிடிக்கும் பீயாத்ரிஸும் உண்மைச் செய்தியை வெளியிடோம் என உறுதி கூறினர்.

பெனிடிக்குக்கு உண்மையிலேயே ஹீரோவினிடம் நல்ல நம்பிக்கையும் இரக்கமும் ஏற்பட்டன. ஆயினும் பீயாத்ரிஸ், 'அவன் என் அருமை அண்ணியைக் குறை கூறின கிளாடியோவின் நண்பன் தானே' என மனதிற்கொண்டு அவனிடம் விலகி நடக்கலானாள். அப்போது அவன் 'பீயாத்ரிஸ், நான் உனக்குச் செய்த பிழை யாது?' என்று வருந்திக் கேட்டான்.

பீயாத்ரிஸ்: நீ என்னை நேசிக்கவில்லை.

பெனிடிக்: யார் சொன்னது! நான் நேசிப்பதுபோல........

பீயாத்ரிஸ்: 'அந்தக் கதை கட்டுகளெல்லாம் இப்போது என் காதில் விழாது. என் மனத்தில் ஹீரோவைப்பற்றிய கவலை ஒன்றிற்கே இடம் உளது. அதைத் தீர்த்த பின்னர்தான் உம்மைப் பற்றி என்னால் நினைக்கமுடியும். அவளைக் கறைப் படுத்திய அந்தக் கிளாடியோ இருக்கும்வரை நான் உம்மை அவர் நண்பராகவே நினைப்பேன்.'

பெனிடிக்: 'கிளாடியோ வேண்டுமென்று இக் குற்றம் செய்ததாக எனக்குப் புலப்படவில்லை.

ஆயினும் அவனை எதிர்த்து வென்று உன் காதலுக்குத் தகுதி யுடையவனுவேன்.'

இம் மொழிகளுடன் பெனிடிக் கிளாடியோவை நாடிச் சென்றான். அச் சமயம் லியோனதோ இளவரசனையும் கிளாடியோவையும் வழிமறித்துத் தன் புதல்வியின் மானத்தைப் பழித்து அவள் உயிரை வாங்கியதற்காகத் தன்னுடன் போராடும்படி அவர்களை அழைத்தான். 'ஆண்டிலும் ஆட்சி முறையிலும் எங்களுக்குப் பெரியவரான தங்களுடன் நாங்கள் போர் செய்யமாட்டோம்,' என அவர்கள் மறுத்து விட்டனர். அச் சமயம் பெனிடிக்கும் வந்து போருக் கழைத்தான்.

## 5. உண்மை விளங்குதல்

இத் தறுவாயில் தீயவர் நலம் தீய்ந்து நல்லோர் தீமை நலிய அருள்புரியும் இறைவனது தோற்றம் போன்ற நற்செய்தி ஒன்று நிகழ்ந்தது. பொராகியோ தான் ஜான் ஏவலினுல் தான் செய்துமுடித்த அரிய வேலைத்திறனைப்பற்றி வீம்பு பேசிக்கொண்டிருந்தான். குற்ற வழக்குத் தலைவர் ஒருவர் இதனைக் கேட்டிருந்து அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொண்டுவந்து லியோனதோமுன் விட்டார். லியோனதோவின் காவலர் அவனை அச்சுறுத்தி உண்மை முழுமையும் வெளியிடச் செய்தனர்.

ஹீரோ வகையில் தான் செய்த தீமையின் முழுவன்மையும் இப்போது கிளாடியோ மனத்தில் அழுந்திற்று. அவனுடைய தீச்சொல் கேட்டு ஹீரோ அடைந்த துயர்கூட அதற்கு ஈடன்று. தான் ஹீரோவுக்குச் செய்த தீங்கிற்கு அவன் அழலாய் உருகி, லியோனதோவை நோக்கி,

அதற்காக எத்தகைய கழுவாய் புரியவும் தான் முன்வருவதாகக் கூறினன்.

லியோனதோ, 'என் மகளுக்குச் செய்த தீமைக்குச் சரியான கைம்மாறு அவளுக்கு இளையாளான அவள் போன்ற மற்றொரு புதல்வியை மணப்பதுதான்,' என்றான். தன் மொழியால் தானே கட்டுண்டு கிளாடியோ இதனை வேண்டா வெறுப்பாய் ஏற்றான். முறைப்படி மணம் நடக்கலாயிற்று. மணத்திரை நீக்கியதும் கிளாடியோ மணவினையில் ஏற்பட்ட வழக்கப்படியே, 'நீ ஏற்றுக்கொள்வையாயின் நான் இன்று முதல் உன் கணவன்' என்றான். அதற்கு விடையாகப் பெண், 'நான் முன்பே உம்மை ஏற்று உம் மனைவியாய் இருக்கிறேன்,' என்றாள். அது கேட்டு வியப்புடன் கிளாடியோ அவளை நோக்க, அவள் தன் பழைய காதலியே—தான் மணக்க மறுத்த ஹீரோவே என்று கண்டு ஒன்றுந் தோன்றாமல் திகைத்தான். அப்போது அந்தணன் நடந்தவற்றை யெல்லாம் விளங்கக் கூறினன். கிளாடியோ அதுகேட்டுக் கண்ணை யிழந்து மீண்டும் பெற்றவன் போல் உளமகிழ்ந்தான். மணவினை இனிது நடந்தேறியது.

இம் மணவினையின்போதே தாமும் மணந்து கொள்ள வேண்டுமென்று பெனிடிக்கும் பீயாத்ரிஸும் லியோனதோவிடம் வழக்காடினார்கள். ஆனல் லியோனதோ, 'உங்களிடையே காதல் கிடையாது,' என்று கூறி மறுக்கத் தொடங்கினன். பெனிடிக்கும் பீயாத்ரிஸும் ஹீரோவையும் கிளாடியோவையும் விடத் தாம் ஒருவரை ஒருவர் பன்மடங்கு காதலிப்பதாகக் கூறினர். அப்போது ஹீரோவும் கிளாடியோவும் நகைத்துத் தாங்கள் அவர்கள்வகையில் செய்த ஏமாற்றத்தை விளக்க,

அது கேட்டுப் பீயாத்ரிஸ் சற்று முகம் கோணினாள். ஆனால் பெனிடிக்கு அவள் கையைப்பற்றி இழுத்து, 'இவர்கள் வாயாலேயே இவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்று ஆய்விட்டது. இவர்கள் இப்போது கூறுவதும் ஏமாற்றமாகவே இருக்கவேண்டும். எப்படியானாலும், நான் அரும்பாடு பட்டுத் தேடிய என் காதல்மணியை மணம் செய்தே தீருவேன்,' என்றான்.

லியோனதோ விலாப்புடைக்க நகைத்துப் பீயாத்ரிஸைப் பார்த்து, 'இவர் இப்படிச் சொல்லுகிறாரே, நீ என்ன செய்யப்போகிறாய்?' என்று கேட்டான்.

பீயாத்ரிஸ், 'இவர் இவ்வளவு பிடிமுரண்டாயிருப்பதனால், இவரை ஏற்றுத்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் கிளாடியோ மாதிரி இவரும் பெருங்கதை கிளப்பி விட்டுவிடுவார்,' என்றாள்.

எங்கும் மண வாழ்த்தும் மண முரசும். தான்-ஜான் காதுக்கு மட்டும் இம் மணப்பேச்சுச் சுவை தரவில்லையாம். அவனை யார் இப்போது கவனிப்பார்கள்!

---

# 3. சரிக்குச் சரி

## (கதை உறுப்பினர்)

ஆடவர்

1. **வின்செந்தியோ :** வியன்ஞ நகர்த்தலைவன் - **மாற்றுரு வில் - துறவி.**
2. **ஏஞ்செலோ :** வின்செந்தியோவைக் குறை கூறிய கூட்டத்தின் தலைவன் - எஸ்காலஸ் பெருமகன் ஆதரவுடன் நகர்த்தலைவ ஞனவன்-மேரியாஞ கணவன் - அவளைத் துறந்து போலித் துறவியானவன்.
3. **எஸ்காலஸ் பெருமகன் :** முதல் அமைச்சன் - வின்செந்தியோவைக் குறை கூறி ஏஞ்செலோவை ஆதரித்தவன்.
4. **கிளாடியோ :** நகர் இளைஞன் ஜூலியட்டின் காதலன் - இஸெபெலின் தம்பி.
5. **லூஸியோ :** கிளாடியோவின் நண்பன்.

பெண்டிர்

1. **இஸபெல் :** கிளாடியோவின் தமக்கை - ஜூலியட்டின் உயிர்த் தோழி - கிளேர் நாச்சியார் மடத்து முதற் பயிற்சித் துறவி.
2. **ஜூலியட் :** இஸபெலின் உயிர்த்தோழி- கிளாடியோவின் காதலி.
3. **மேரியாஞ :** ஏஞ்செலோவால் துறக்கப்பட்ட மனைவி.

# கதைச் சுருக்கம்

வீயன்னு நகரத்துத் தலைவன் வின்செஸ்ஸியோ ஈரநெஞ்சுடையவன். களவான காதலுக்கு அந்நாட்டுச் சட்டம் தூக்குத் தீர்ப்புக் கொடுத்தபோதிலும் அதனை அவன் வலியுறுத்தவில்லை. இதற்காக அவனை எதிர்த்தவருள் தலைவனுன ஏஞ்சொலோவைத் தற்காலிகமாக நகர்த் தலைவனுக்கிவிட்டு வெளியேறி அவன் துறவி உருவில் மீண்டும் வந்து மறைவாய்ப் புதிய தலைவன் போக்கைக் கவனித்து வந்தான். அப்போது ஜூலியட் என்ற பெண்ணைக் காதலித்ததற்காகக் கிளாடியோ என்ற இளைஞன் இந்தச் சட்டப்படி சிறைப்பட்டான். அவன் தமக்கை இஸபெல் கிளேர்நாச்சியார் மடத்துப் பயிற்சிநிலைத்துறவி. கிளாடியோவுக்காகப் பரிந்து பேசவந்த அவளிடம் ஏஞ்செலோ உள்ளூரக் காதல் கொண்டு தன்னை மணப்பதாயின் அல்லது விருப்பத்திற்கு இணங்குவதாயின் அவள் உடன்பிறந்தானைக் காப்பதாகக் கூறினன். அவள் அதனை மறுத்துவிட்டபோதிலும், துறவியுருக்கொண்ட வின்செந்தியோவின் தூண்டுதலால் இணங்குவதாகக் காட்டி ஏஞ்செலோவினல் துறக்கப்பெற்ற மனைவி கற்பரசியாகிய மேரியானவை அவனிடம் அனுப்பினள். இப்படியும் அமையாது ஏஞ்செலோ கிளாடியோவைக் கொல்ல உத்தரவிடும் அளவில் வின்செந்தியோ தன்னுருக் காட்டி எல்லாம் விளக்கிக் கிளாடியோவைக் காத்து ஜூலியட்டை மணக்கும்படி செய்ததுடன் இஸபெலின் கற்பை வியந்து அவளைத் தானே மணந்து கொண்டான்.

---

# 1. சட்டப் பொறி

வீயன்னு[1] நகரம் முன்னாட்களில் ஒரு குடியரசா யிருந்தது. அதன் தலைவன் வின்ஸென்தியோ[2] அன்பும் அருளும் நிறைந்த உள்ளம் உடையவன். மக்கள் தவறி நடந்தவிடத்துக் கூடியமட்டும் திருத்த முயலு வானேயன்றிச் சினங்கொள்ளவோ கடுமையாகத் தண்டிக்கவோ மாட்டான். அந்நாட்டுச் சட்டங்களுள் சில அவனுக்கு மிகக்கடுமையாகப்பட்டன. அவற்றை அவன் கையாளாமல் கூடியவரை விலக்கியும் இன்றியமையா இடங்களில் அருமையாக வழங்கியும் வந்தான். அச் சட்டங்களுள் ஒன்று, தம் மனைவிய ரல்லாத பெண்களுடன் உறவு கொண்டவரைத் தூக்கிலிடவேண்டும் என்பது. சொல்லளவில் இச்சட் டம் பிறர்மனை நயப்பவரை மட்டுமல்லாமல் காதல ரையும் உட்படுத்துவதாயிருந்தது. ஆயினும் காத லரைப் பொறுத்த மட்டில் தலைவன் இச் சட்டத்தை நடைமுறையில் வழங்காமலே விட்டுவிட்டான். ஆகவே அதன் குரங்குப் பிடிக்கு அஞ்சி ஓடி ஒளிந்து காதலித்த இளைஞர் இப்போது அச்சமின்றி மங்கையருடன் காதல் கொள்ள முடிந்தது.

இளைஞரும் மங்கையரும் இங்ஙனம் கட்டுப்பா டின்றி வெளிப்படையாகக் காதல் வாழ்க்கை வாழ் வது அந்நகரத்துப் பெருமக்கள் பலருக்குப் பிடிக்க வில்லை. அவர்கள் தலைவனது இளக்க மனமுடைய நடையைக் குறை கூறினர். முதல் அமைச்சனாகிய எஸ்காலஸ் பெருமகனும்[3] இத்தகையோர் பக்கமே நிற் பது கண்ட தலைவன், 'நீங்கள் உங்கள் மனப்படி ஒரு தற்காலிகத் தலைவனைத் தேர்ந்தெடுத்து ஆட்சி நடத்துங்கள். நான் போலந்து நாடு சென்று சற்று ஓய்வெடுத்துக்கொண்டு வருகிறேன். உங்கள் ஆட்சி

---

1. Vienna. 2. Vincentio. 3. Lord Escalus.

நன்ருக நடப்பதா யிருந்தால் அதனையே நானும் தொடர்ந்து நடத்தலாகும்,' என்ருன்.

தலைவனைக் குறைகூறுவோர் கூட்டத்தில் ஏஞ்செலோ[1] என்பவன் ஒருவன். அவன் தன் மனைவியைத் துறந்துவிட்டு அதன்மேல் இல்வாழ்க்கையையே நாடாதிருந்தான். ஆதலால் அவனைப் பலரும் துறவி என்றும், ஒழுக்கம் உடையவன் என்றும் போற்றி வந்தனர். அவனது கண்டிப்பு தலைவனது வழவழப்பிற்கு ஒரு மாற்று ஆகும் என்று மக்கள் நினைத்தனர். நினைத்து அவனையே தமக்குத் துணைத்தலைவனுக்கிக் கொண்டனர். அதன் பின் சில நாட்களுக்குள் தலைவன் போலந்துக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் பயணமானுன். ஆனல் உண்மையில் அவன் வேறெங்கும் போகவில்லை. நகரத்திலிருந்து வெளியே போய் மடத்துத் துறவி என மாற்றுருக் கொண்டு திரும்பி வந்து என்ன நடக்கிறது என்று பார்த்துக்கொண்டிருந்தான்.

தலைமை ஏற்ற சில நாளைக்குள் ஏஞ்செலோ தனது கண்டிப்பைக் காட்ட இடம் ஏற்பட்டது. அந் நகரில் கிளாடியோ[2] என்ற ஒரு நல் இளைஞன் இருந்தான். அவன் தமக்கையாகிய இஸபெல்[3] அங்குள்ள கிளேர் நாச்சியாரது கன்னிமாடத்தில்[4] துறவியாகச் சேர விரும்பி அதற்கான முதற் பயிற்சிகளைக் கையாண்டுகொண்டிருந்தாள். அவளுடைய தோழி ஜூலியட்[5] ஓர் அழகிய நங்கை. கிளாடியோ அவளை விரும்பிக் காதலித்தான். அவன் அவளை மணஞ்செய்துகொள்ளும் விருப்பினனுயினும், அந்நகர் வழக்கப்படி அதன் முன்னு

---

1. Angelo. 2. Claudio. 3. Isabel. 4. Convent of St. Clare. 5. Juliet.

கவே அவளுடன் அளவளாவி வாழ்வானுபினன் இதுவரையில் நடைமுறையிலில்லாமல் இன்று நடைமுறையில் திடீரென வர இருக்கும் சட்டம் தவறான காதலைமட்டுமே கண்டிப்பது ஆயினும், சொல் அளவில் தன்னையும் அகப்படுத்தவல்லது என்று அவன் அறியாது அதன் பொறியுட்பட்டான்.

நகர்க் காவலர் ஒரு குற்றவாளியைப் பிடித்துக் கொண்டு போவதுபோல் அவனைக் கொண்டு போய்ப் புதிய தலைவனாகிய ஏஞ்செலோவின்முன் விட்டனர். தனக்கேற்பட்ட புதிய நிலையையும் மதிப்பையும் எண்ணி வெறி கொண்டிருந்த ஏஞ்செலோ, சட்டத்தின் கண்டிப்பைக் காட்ட இது நல்ல வாய்ப்பு எனக்கொண்டு கிளாடியோவுக்குத் தூக்குத் தண்டனை தரும்படி தீர்ப்பளித்து விட்டான்.

கற்பைக் காக்கவேண்டும் சட்டம் காதலைப் பலி கொள்ளலாயிற்று.

கிளாடியோவின் சிறு குற்றத்திற்குக் கொலைத் தீர்ப்பளிப்பது கொடுமை என்பதைப் பலரும் எடுத்துக் காட்டினர். ஏஞ்செலோ தலைவனாக வரவேண்டுமென்று முயன்ற எஸ்காலஸ் பெருமகன்கூட இத் தண்டனையால் இச் சட்டத்திற்கே கெட்ட பெயர் வரும் என்று கூறினான். 'கிளாடியோவுக்காக அன்றாயினும் அவனைக் காதலித்த மங்கைக்காக வேனும் அவனை மன்னித்துத் தண்டனையைக் குறைத்தருளுக,' என்று அவன் வேண்டினான். ஆனால் ஏஞ்செலோ, 'அங்ஙனம் முதல் முதலாகவே இச் சட்டம் வெறும் பூச்சாண்டி யென்று காட்டிவிட்டால் பின் அதனை யார் மதிப்பர்?' என்றான்.

இன்னொருபுறம் கிளாடியோவின் நண்பனாகிய

லூஸியோ[1]வும் மன்றாடிப் பார்த்தான். எல்லாம் வீணாயின. காவலர் கிளாடியோவைச் சிறைக் கூடத்திற்குக் கொண்டு போயினர். அரும்பாடு பட்டு லூஸியோ சிறைக் காவலர்களை வசப்படுத்திச் சிறைக் கூடத்திற்குள் சென்று கிளாடியோவைப் பார்த்தான். அப்பொழுது கிளாடியோ, 'அன்ப, எனக்காக ஒரு காரியம் மட்டும் இன்னும் நீ செய்ய வேண்டும். கிளேர் நாச்சியார் கன்னிமாடம் சென்று என் தமக்கையிடம் செய்தி தெரிவிப்பாயாக! ஒரு வேளை அவள் ஏஞ்செலோவிடம் நேரில் சென்று கேட்டால் எனக்கு மன்னிப்புக் கிடைக்கலாம். அவள் சொல் திறமும் நயமும் உடையவள்,' என்றான். லூஸியோ அப்படியே ஆகட்டும் என்று இணங்கி இஸபெலைக் காண அக் கன்னிமாடத்தை நோக்கிச் சென்றான்.

மாடத் தலைவியின் இணக்கம் பெற்று இஸபெலை அணுகி லூஸியோ கிளாடியோவுக்கு நிகழ்ந்தவை அனைத்தும் கூறினான். முதலில் இஸபெல் அதனை நம்பக்கூடவில்லை. 'ஜூலியட்டும் கிளாடியோவும் ஒன்றாக வாழ்வதில் தவறென்ன? அவர்கள் தாம் மணம் புரிந்துகொள்ளப் போகிறவர்கள் என்பதை நகரமுற்றும் அறியுமே. கிளாடியோ அவளை மணம் புரிய மறுத்தாலன்றோ அவன் குற்றம் செய்தவன் ஆவான்,' என்றாள் அவள்.

லூஸியோ : அம்மணி! அக்காலம் வேறு; இப்போது வீயன்னாவில் நாமனைவரும் மறந்துவிட்ட ஒரு சட்டம் புதுப்பிக்கப்பெற்று நடப்புக்கு வருகிறது. உண்மையில் அது கற்பைக் கெடுப்பவரைத் தண்டிக்க எழுந்த சட்டமேயாயினும், சொல் அளவில் மணமாகாதவர் அனைவரையும் குறிக்

1. Lucio

கிறது. சூதறியாத கிளாடியோவை ஏஞ்செலோ இச் சொற்பொறியிற் பிடித்துத் தண்டித்துவிட்டான். எங்கள் மொழி ஒன்றும் அவனிடம் செல்லவில்லை. கிளாடியோ ஏதோ தங்கள் திறனிலேயே நம்பிக்கை வைத்திருக்கிறான்.

**இஸபெல்:** நான் பெண்ணாயிற்றே, அதிலும் துறவி; நான் என்ன செய்யக்கூடும்?

**லூஸியோ:** 'அம்மணி, தாங்கள் பெண்ணாயிருப்பதனாலேதான் தங்கள் சொல் ஏஞ்செலோவின் நெஞ்சைக் கனியவைக்கக் கூடும் என்று எண்ணுகிறேன். தாங்கள் துறவியாயிருப்பது அவன் தங்களை இன்னும் மதிக்கவே இடமாகும். தங்கள் சொல் நயத்தாலும் திறத்தாலும் தான் பிழைக்கக்கூடும் என்று கிளாடியோ நம்புகின்றான்.'

**இஸபெல்:** 'கடவுள் துணை செய்வாராக. நான் என்னாலாவதைச் செய்கிறேன். நீ போய்க் கிளாடியோவைக் கண்டு நான் போகும் விவரம் கூறித் தேறுதல் கூறுக.,

## 2. நடுநிலையா? அருளா?

லூஸியோ போனதும் இஸபெல் தனது முக்காட்டை அந்நாட்டு வழக்கப்படி இழுத்து முகத்தை மூடிக்கொண்டு தலைவர் மாளிகையை நோக்கி நடந்தாள். பொதுமன்ற வேலை முற்றும் முடிந்தபின் ஏஞ்செலோ தன் இருக்கை சென்றான். அவனைத் தொடர்ந்து சென்று இஸபெல் அவன் முன் பணிந்து நின்றாள். அடிமுதல் முடிவரை வெண் துகில் போர்த்து நின்ற அவளது பொன் வடிவம், வாடி வதங்கித் துயரே வடிவெடுத்து வந்தது போலிருந்தது.

**ஏஞ்செலோ:** அம்மணி, தங்களைப் பார்த்தால்

உயர்குடி மாதராகத் தோற்றுகிறது. உடையோ துறவி உடை. தாங்கள் கண்ணீரும் கம்பலையுமாய்க் காணப்படுகிறீர்களே! தங்கள் போன்ற துறவிகளுக்கும் வருத்தந் தரும் துயர் எதுவோ?

இஸபெல்: குடிகள் குறை தீர்க்கும் குடியாண்மைத் தலைவ! துறவிகள் தாமாகக் கவலையை உண்டு பண்ணிக் கொள்ளாதவர்களே யாயினும், பிறப்



இஸபெல ஏஞ்செலோவிடம் மன்றுடல்

பால் துயருக்கு உரியவர்களே. அத் துயரைப் பொறுமையுடன் தாங்கவும் வேண்டியவர்கள். ஆனல், இன்று தங்களால் தீரவேண்டும் குறை ஒன்றுடையேன்.

ஏஞ்சேலோ : நாட்டின் சட்டத்திற்கும் என் திறனுக்கும் உட்பட்ட எதனையும் நான் செய்யப் பின்வாங்கேன். உமது குறையைக் கூறுக.

இஸபெல் : என்னுடைய தம்பி கிளாடியோ ஒழுக்கமும் நேர்மையும் உடையவன். அவன் ஜூலியட்டிடம் கொண்ட காதலும் உண்மையான காதலே. அவளை மணந்துகொள்ளும் எண்ணமே உடையவன். அப்படி இருக்க அவனை நீங்கள் இச் சட்டத்தின்கீழ்த் தூக்குத் தீர்ப்பளிப்பது கடுமையன்றோ? அருள்கூர்ந்து அத் தண்டனையைக் குறைக்க வேண்டுகிறேன்.

ஏஞ்சேலோ : அம்மணி, இவ்வகையில் என் தீர்ப்பை மாற்ற வழியில்லை. அவன் இறக்க வேண்டியவனே.

இஸபெல் : இறைவன்கூட நடுநிலையுடன் கருணையும் உடையவரா யிருப்பதனா லன்றோ நாம் இருவினைப் பயனாகிய நரகச் சுழலினின்றும் விடுபட முடிகின்றது. ஆகவே, தாங்கள் அருளுக்கெதிராக இந் நடுநிலையை வழங்கலாமா?

ஏஞ்சேலோ : அம்மணி, அருள் வழங்குவதற்குத் துறவியருடைய மடங்கள் இருக்கின்றன. நான் சட்டத்தை ஒட்டி அரசியலை நடத்த வேண்டியவன். நான் அதினின்றும் விலக முடியாது. வீணே கேட்க வேண்டாம்.

இஸபெல் இனி நிற்பதில் பயனில்லை என்று திரும்ப விருந்தாள். ஆனால் அச்சமயம் லூஸியோ அவளை வாயிலினருகில் கண்டு, 'அம்மணி, அவர் எவ்வளவு கடுமையாகச் சொன்னாலும், நீங்கள் மனம் உளையக்கூடாது. காரியம் கைகூடும்வரை நீங்கள் முயன்று அவர் மனத்தில் இரக்கத்தை உண்டு பண்ணவே வேண்டும்,' என்றான்.

ஏஞ்செலோவிடம் தனக்கேற்பட்ட கசப்பை அடக்கிக்கொண்டு இஸபெல் மீண்டும் ஒருமுறை ஏஞ்செலோவை அணுகினாள். பற்றற்ற துறவியாகிய அவள் உள்ளத்தில் உள்ளடங்கிநின்ற சினத்தின் தாக்கினால் அவள் உடல் காற்றிலாடும் தளிரெனத் துடித்தது. சினத்தினால் பயனில்லை, தன் தம்பியின் உயிர் அவன் கையிலிருக்கிறது என்ற எண்ணத்தினால் துயர் பொங்கி எழுந்தது. கண்ணீர் ஆறாகப் பெருக அவள் அடியற்ற மரம்போல் ஏஞ்செலோவின் காலடிகளில் வீழ்ந்து அவற்றைப் பற்றிக்கொண்டு, 'இந்நகரத்துக் குயிர்போன்ற காவலரே! தம்பிக்காக அன்றாயினும் எனக்காகவாவது இத் தண்டனையைக் குறைத்தருள லாகாதா? என் தம்பி மணமாகப் போகும் நிலையிலுள்ள இளைஞன். சாவுக் குரியவன் அல்லன். உணவுக்காக ஆடு கோழி அறுப்பவர்கூட அதனை இத்தகைய பருவத்தில் அறுக்கத் துணியாரே! அண்ணலே, தாங்களும் அவன்போன்ற இளைஞர்தாமே; தமது நெஞ்சைத் தொட்டுத்தான் பாருங்கள். தாங்கள் துறவு வாழ்வு வாழ்பவரா யிருந்தாலும், தங்கள் நெஞ்சத்தின் உட்கிடக்கையுள் அவன் மனத்துத்தோன்றும் அதே ஆர்வம் இல்லையா! பார்த்து அதற்காக வேனும் அவனிடம் அன்புகூறுங்கள்,' என்றாள்.

இச் சொற்கள் எதிர்பாரா வகையில் அவன் நெஞ்சைப் பிளந்துகொண்டு சென்றன. துறவி எனப் பெயர் தாங்கினும் தன்னலம் துறவாச் சிறியோனாகிய ஏஞ்செலோவுக்கு இஸபெலின் தூய உள்ளமும் அவள் துன்பத்தின் ஆழமும் தென்படவில்லை. அவள் மொழிகளைத் தன் சிறுமைக் கேற்பப் பொருள்படுத்திக் கொண்டான். இறைவனது அருளழகு துன்பத்தாலேதான் வெளிப்படும் என்

பர். அதுபோல் பெண்களது முழுக் கவர்ச்சியும் அவர்கள் துன்பத்திலேதான் காணப்படும். இஸபெலின் வடிவழகும் அவள் சொல்நயமும் கலையும் கனிவித்து அதிற் கடவுளது அருளை ஊட்டத்தக்கது. ஆனால் ஏஞ்செலோ போன்ற அன்பிலாப் புறத்துறவியர் உள்ளம் கல்லினும் கடுமையானதாதலின் அதற்கு இதுவரை இடந்தர வில்லை. ஆனால் 'கிளாடியோ இளைஞன்—மணமாக வேண்டும் நிலையுடையவன்—அவனுக்காக அன்றாயினும் எனக்காக—தாமும் இளைஞர்தாமே' என்ற மொழிகள் அவனது மேற்படையான துறவைக் கிழித்து அவனுடைய உண்மை விலங்கியல்பைக் கிளறிற்று. எனவே, இஸபெல் எதிர்பாராத வகையில் அவனது மனத்தில் அது தீய எண்ணங்களை உண்டுபண்ணிற்று.

'தங்கள் நெஞ்சைத் தொட்டுப் பாருங்கள்,' என்ற மொழிகள் காதில் விழுந்தபோதுதான் அவனுக்குத் தன் மனத்தில் இஸபெல்மீது தீய பற்று உண்டாய்விட்டது என்று தெரிந்தது.

செய்தி இன்னது என்றறியாமல் ஊழ்வலியால் உந்தப்பெற்று அவள், மேலும், "தலைவரே! எனது வேண்டுகோளைப் புறக்கணித்து என்னை விட்டுச் செல்லாதீர்; என் துயரைப் பாராது முகந் திரும்புகின்றீர்! என் பக்கமாகத் திரும்பிப் பார்த்து மனமிரங்குக! தாங்கள் இன்று எனக்கு நன்மைசெய்தால், அதற்கான பயன் உங்களுக்குக் கட்டாயம் கிடைக்கும்,' என்று மொழிந்தாள்.

'பயன்' என்ற சொல்லைக் கேட்டதுமே என்னவோ உள்ளம் சட்டெனஎழுந்து கிளர்ச்சியுற்றது 'ஆ, நான் மனத்துட்கொண்ட பயன் எனக்குக் கிட்டுமாயின்' என அவன் மனம் கோட்டை கட்ட

லாயிற்று. 'பயனு! எனக்கு என்ன பயன் கிட்டக் கூடும்' என்று அவனையும் அறியாது அவன் நாக்கு வினவிற்று. அவன் உடல் முழுமையும் அவன் கட்டிலடங்காது துடிதுடித்தது.

இஸபெல்: ஆம்; நற்செய்கை செய்பவர் எவரும் அதனுல் வரும் பயனை இழந்ததில்லை. அந் நற்பயன் மனிதர் தரும் வெள்ளி பொன் போன்ற தன்று. அந் நற்செய்கைக்கு ஆளான உயிர்களின் உள்ளத் தடத்தினின்றும் மேலெழுந்து இறைவனை நோக்கி நன்றியுடன் செலுத்தப்படும் பாராட்டு வணக்கம். அவ் இறைவனையே ஆட்டுவிக்க வல்லது. அதன் விலை அளவிடற் கரியது.

ஒரு பெரிய புயல், அதன் இறுதியில் இஃது ஒரு ஏமாற்றமா?

ஏமாற்றமில்லை; குறிப்பே என்றது உடல்.

இருநிலைப்பட்ட உள்ளத்தினனுய் ஏஞ்செலோ, 'இப்போது இதுவகையில் துணிந்து முடிவு செய்யக் கூடவில்லை. நாளை வருக!' என்ருன்.

'அன்பு விதை வேரூன்றிவிட்டது' என்று நினைத்தாள் இஸபெல். பாவம்! விதை அன்பு விதைதானு, வம்பு விதையா என்பதை அறியாமல் அகத்துள் அருளொளிகொண்ட அந்நங்கை அமைதியுடன் அன்றைப் பொழுதைக் கழித்தாள்.

அன்பகத்தில்லா இருளொளி கொண்ட ஒரு புறத் துறவிக்கு அந்த நாள் இறவாநாளா யிருந்தது.

## 3. போலித் துறவி

அவள் போனபின் ஏஞ்செலோ, தன் மனத்துள் எழுந்த பகைப்புயலை எதிர்த்தடக்க முயலுவானாயினன்! 'ஆ, என் துறவு அவள் துறவின்முன் பணிந்துவிட்டதா? குற்றவாளியின் சிறு குற்றத்திற்கு மன்னிப்பு வாங்க வந்த அவள், என்மீது அதனிலும் பன்மடங்கு கொடிய குற்றத்தை எழுப்பிவிட்டனளே? பயன் என்ற சொல்லைக் கேட்டு அஞ்சவேண்டும் எனது கண்டிப்பு எங்கே? நினைத்த பயன் கிட்டாதா என்ற ஏக்கமெங்கே? ஆ, நான் ஏன் தலைவனானேன்? துறவி என்ற பெயர் எனக்கேன் வந்தது? இத்தகைய பெண்மையின் கவர்ச்சி இல்லாமையாலன்றோ நான் இதுவரை உலகத்தில் பெரியவர் குழாத்தில் எளிதில் சேர்ந்திருக்கமுடிந்தது? ஆ அப்பெருமை எல்லாம் என்ன பயன் உடையது? இவளுடைய கறுத்திருண்ட கண்களின் பார்வை ஒன்றிற்கு அஃது ஈடாகுமா? என்னே அன்பகத்தில்லா வாழ்க்கை? அவள் நேரிய அன்பிற்காக இரங்கும்பொழுது வன்நெஞ்சனாய் மறுத்தேனே? இப்போது தவறான எண்ணத்திற்கு நான் என்ன செய்வேன்? இக் கண்டிப்பினால் பயன் என்ன? அவளுக்குத் தம்பி உயிர்வேண்டும், ஆம், அதற்காக அவள் கண்ணீர் வடிக்கிறாள், அழுகிறாள்; ஆம், அவளுக்கு அதைக் கொடுத்து நான் விரும்பிய பயன் பெறுவதாயிருந்தால்- நன்று நன்று, தலைவர் என்ற நிலை எங்கே? கண்டிப்பு எங்கே? குடிகள் என்மீது வைத்த நம்பிக்கை எங்கே? ஆனால் நான் என் செய்வது? இவ்வேட்கை அடக்கக் கூடியதன்று. அடக்கினும் அதன்பின் உயிர்வாழ்தல் முடியாது. எப்பாடு பட்டாயினும், எதைக் கொடுத்தாயினும் அவளை நான் அடையவே

முயலவேண்டும் கண்டிப்பு? வெளிக்குக் கண்டிப்பைச் சற்றுக் குறைத்தால் என்ன? எல்லாரும் வேண்டியபடி அருள் காட்டினதாகத்தானே ஆகும். மதிப்பு! அதுவும் என்ன கெட்டு விட்டது. மறைவில் நடப்பதை யார் அறியப் போகிறார்கள்? அறிந்தாலுங்கூட நான் கவலைப் படப்போவதில்லைதான். இவ் வேட்கை ஒன்று ஒரு தட்டில், உலகில் புகழும் செல்வமும் எல்லாம் ஒரு தட்டில் வைத்தால்கூட எனக்கு வேண்டியது இவ் வேட்கையே. அது நிறைவேறியபின் வாழ்ந்தாலும் சரி, மாண்டாலும் சரி, ஒன்றுதான்,' என்றிவ்வாறு அல்லோல கல்லோலப்பட்டது அவனது உள்ளம்.

நாளை இடப்படும் தூக்குத் தண்டனைக்காகச் சிறையிற் காத்திருக்கும் ஒருவனது உள்ளங்கூட அன்று தலைவனது உள்ளம் பட்ட பாடு பட்டிருக்க முடியாது. ஆனால், இதற்கு நேர்மாறாகத் தூக்குத் தண்டனையே பெற இருக்கும் கிளாடியோவுக்கு அன்று பேராறுதல்கூட ஏற்பட்டது. ஏனெனில், அன்றிரவு பழைய தலைவன் மடத்துத் துறவி உருக் கொண்டு கிளாடியோவை அணுகி, 'இளைஞனே, உலகின் இருட்சட்டம் உனக்குத் தீங்கிழைத்தது. அதனை நினைத்து இறைவன் அருட்சட்டத்தை மறந்துவிடாதே,' என்றுகூறி, 'உடல் இறந்தாலும் இறவாதது அருள் உடம்பு. அதனை இழந்து வாழ்வதைவிட அதனைப் பெற்று இறப்பது மேல். இறைவன் உன் அருள் உடம்பு கெடாது தன் அடியிற் சேரும்படி உனக்கு அருள் புரிவானாக,' என்று வாழ்த்தினன். கிளாடியோ அதுகேட்டுச் சாவுக் கஞ்சும் கோழைத்தனத்தை விட்டு, இறைவனை மனத்துள் நினைந்துகொண்டே துயிலுள் ஆழ்ந்தான்.

குற்றம் செய்தவன் நெஞ்சில் ஒரு புயல்; குற்

றம் செய்ய எண்ணுபவன் நெஞ்சிலோ இருபுயல் ஒன்றை ஒன்று எதிர்த்துப் போராடுகின்றன. ஏஞ்செலோ கண்முன் சட்டத்தின் கண்டிப்பு இப்பொழுது இருபுறமும் இரு கத்திகள் போல் தொங்குகின்றன. தன் விருப்பம் நிறைவேற வேண்டுமாயின், சட்டத்தின் கண்டிப்பைத் தளர்த்திக் கிளாடியோவைக் காத்தாக வேண்டும். அப்படிச் செய்து தன் விருப்பத்தை நிறைவேற்றினாலோ, அந்தச் சட்டத்தின் கண்டிப்புக்குத் தானும் ஆளாகவே வேண்டும். அது வெளியில் தெரியாவிட்டால் என்ன? தன் மனச்சான்றின்முன் தான் என்றுங் குற்றவாளிதானே? ஆனால் இவ்வளவும் ஆராய்ந்தால், பின் விருப்பம் நிறைவேறாது போய்விடும் என்ற நினைவு வந்தது. மின்வலியால் தாக்குண்டவன்போல் அவன் துள்ளி எழுந்தான். 'நான் என்ன கோழை! காரியமே கண்ணுயினோர் இத்தகைய எண்ணங்களுக்கு இடங் கொடுத்தலாகாது. அவளை அடைவேன். அதற்காகச் சட்டத்தைத் தளர்த்த மட்டுமன்று; வேண்டுமாயின் அச் சட்டத்தையும் அதனை என்மீது சுமத்தும் இந்நகரையுங் கூடத் துறந்துவிடுவேன்,' என்று முடிவு கொண்டான் ஏஞ்சலோ.

மறுநாட் காலையில் இஸபெல் வந்தபோது வாயிற் காவலர் அவளை மதிப்புடன் வரவேற்று உள் அனுப்பினர். ஏஞ்சலோவின் ஏற்பாட்டின்படி வேறெவரும் உள்ளே வரக்கூடாதெனத் திட்டம் செய்யப்பட்டிருந்தது. இஸபெல் உள்ளே வேறு யாரும் இல்லாததைக் கவனிக்கவில்லை. ஆனால், இஸபெலுக்கு அவன் வணக்கம் அளித்துச் சரியிருக்கை அளித்தபோது அவளுக்கு அது புதுமையாகத் தோன்றிற்று. இருக்கையை மறுத்துவிட்டு

'என் விருப்பத்தைத் தாங்கள் நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகிறேன்,' என்றாள்.

ஏஞ்செலோ: ஆம், ஆனல் நீயும் என் விருப்பத்திற்கு இணங்கவேண்டும்,' என்று நான் வேண்டுகிறேன்.

இஸபெல் சற்றுத் திடுக்கிட்டு, 'என்ன! உங்கள் விருப்பமா? தலைவரான நீங்கள் அப்படி என்னிடம் விரும்புவதற்கு என்ன இருக்க முடியும்?'

ஏஞ்செலோ: நான் நகரத்துக்கு மட்டுமே தலைவன்; நீ அழகுக்குத் தலைவி. உன்னைக் கண்ட பிறகு கிளாடியோவின் குற்றத்தைத் தண்டிக்காமல் விட்டுவிடவே மனம் வருகிறது. ஆனல், கிளாடியோ செய்யும் குற்றத்தை நானும் செய்ய மனம் நாடுகிறது.

இஸபெல் அவனது இழிந்த நோக்கத்தை ஒரு நொடியில் கண்டுகொண்டாள். அவள் கண்கள் அழலெனச் சிவந்து பொறி வீசின. 'தலைவரே, தகுதியான காதலுக்குக் கொலைத்தண்டனை தரக்கூசாத நீர், அதில் கண்டிப்பாய் இருக்கவேண்டும் என்று பிடிமுரண்டு கொண்ட நீர், இப்பொழுது என்பாற் செய்த குற்றத்திற்கு யாது சொல்லுவீர்?' என்றாள்.

விலங்கியல் கொண்டிருந்த ஏஞ்செலோ, பேய் இயல் கொள்ளலானன். 'என் தண்டனையைப் பற்றிப் பேசவில்லை. உன் தம்பியின் உயிர் வேண்டுமா, வேண்டாமா என்பதே பேச்சு. நீ இவ் விரவிற்குள்ளாக என் விருப்பத்திற்கு இணங்கவேண்டும். அன்றேல், உன் தம்பியை மறந்துவிடு,' என்றான்.

இஸபெல் வியப்புடன், 'தலைவ, துறவி என்றும் வீரர் என்றும் பெயர் எடுத்த நீர், இவ்வாறு

பேசுவதென்றால் என்னால் நம்பக்கூட வில்லையே. ஒருவேளை என் உறுதியைப் பார்க்க இப்படி நடக்கிறீரோ என்னவோ ?

ஏஞ்செலோ : பெண்மணி, உனக்கு அந்த ஐயம் சற்றும் வேண்டாம். நான் எவரையும் அங்ஙனம் நடித்து ஏமாற்றுபவனல்லன்.

இஸபெல் காதிரண்டையும் பொத்திக்கொண்டு, ஐயோ, கடவுளே! இந்தப் பேர்வழி நடிப்பவனேயல்லன். நேற்றுவரை துறவியாக நடித்ததெல்லாம் மறந்து விட்டேனே என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள். தெளிப்படத் ‘தலைவரே, உமது பகுத்தறிவை இழந்து நன்மை தீமை தெரியாதவராய் நீர் பேசுகின்றீர். ஆனால் உமக்கு நான் கூறுகிறேன். நீர் இப்போது என்னிடம் கூறியதையெல்லாம் ஊரிற்சென்று பறைசாற்றி உமக்கு நாலா பக்கமும் நரகத் தீயை என்னால் உண்டுபண்ண முடியும் என்பதை நீர் அறிந்துகொள்ளும். ஆகவே, மறுபேச்சுப் பேசாமல் என் தம்பியை மன்னித்து விட்டேன் என்று எழுதிக் கொடும்,’ என்றாள்.

தான் அச்சுறுத்துவதற்கு அஞ்சாததோடு இப்பெண் தன்னையே ஏமாற்றியது கண்டு முதலில் ஏஞ்செலோ திகில் கொண்டான். ஆனால் மறுநொடியில் அவனது தீய அறிவு அவன் துணைக்கு வந்தது. உடனே அவன், ‘பெண்மணி, என்னை மிரட்டுவதற்கு உன் அறிவைப் பயன்படுத்தாதே. உன் தம்பியைத் தப்ப வைப்பதற்கு அதைப் பயன்படுத்து. நீ வெளியிற் சென்று என்னைத் தூற்றுவையானால் எல்லாரும் என்னையே நம்புவர்; உன்னை நம்பார். ஒருவரிருவர் நம்பக் கூடியவரும் உன் தூய்மையைத் தான் அவமதிப்பர்’ என்று கூறிப் பேய் போல

நகைத்தான். பின் 'சரி, உனக்கு ஒருநாள் தவணை தந்தேன். அதற்குள் முடிவு தெரிவி,' என்றான்.

இஸபெல் அந்த ஒருநாளில் எப்படியும் இவன் வலையை அறுக்க வழி தேடவேண்டும் என்று நினைத்தவளாய் வெளியே வந்தாள்.

## 4. மறைந்துநின் றருள்புரியும் அண்ணல்

இஸபெல் உடனே நேராகத் தன் தம்பியைக் காணச் சிறைக்கூடம் சென்றாள். மடத்துத் துறவி உருக்கொண்ட பழைய தலைவன் அப்போது கிளாடியோவுக்கு அருளுரை தந்துகொண்டிருந்தான். இஸபெல் வந்ததும், "அவன் நான் சென்று வருகின்றேன். கடவுள் உன்னைக் காப்பாராக," என்றுகூறி விட்டு வெளிச் சென்றான். ஆனால் அவன் வேறெங்கும் போகாது மறைவில் ஒளிந்திருந்து அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

கிளாடியோ : இஸபெல், ஏஞ்செலோவைக் கண்ட காரியம் வெற்றிதானே?

இஸபெல் : உனக்கு உயிர் பெரிதாயின் வெற்றியே; மானம் பெரிதாயின் தோல்வியே.

கிளாடியோ : நீ சொல்வது விளங்கவில்லையே!

இஸபெல் : விளங்குமுன் இதற்கு விடைசொல் : உனக்கு உயிர் பெரிதா, மானம் பெரிதா?

கிளாடியோ : இதைக் கேட்கவேண்டுமா? மானந் தான் பெரிதென்று நான் நினைப்பேன் என்பது உனக்குத் தெரியாதா?

இஸபெல் : சரி. இப்போதுதான் என் மனம் குளிர்ந்தது. என் மானம் நிற்பதானால் நீ இறக்க வேண்டும். களிப்புடன் இறக்கவேண்டும். ஏனெ

னில், நீ பிழைக்க வேண்டுமானல் அவ்வொன்றையே விலையாகக் கேட்கிறான் அந்த நீசன் ஏஞ்செலோ ?

கிளாடியோ : ஆ! அப்படியும் கேட்பானா? கொடியன்! ஆயினும், அதே குற்றத்தின் பகுதியை நானும் செய்திருக்கிறேன். நான் பிழைப்பதானல் ஜூலியட்டுக்கு நான் செய்த தீங்கையும் அகற்ற முடியும். இஸபெல்! இருவர் நன்மையை நினைத்தால்—நீ துறவியாகப் போகிறவள்தானே—வெளித் தெரியாத ஒரு தவறுதலை எங்கள் இருவர் நன்மைக்காகக் கடவுள் பொறுக்கமாட்டாரா ?

இஸபெல் : 'அட, கோழை! உன்னை நான் எவ்வளவு பெரிதாக எண்ணினேன்! இன்றிருந்து நாளைப் போகும் உயிரை வெல்லமாகக் கொண்டு உடன் பிறந்தவள் மானத்தை விற்றுத் தின்னப் பார்க்கிறாய்! நீ உண்மையாகவே என் உடன்பிறந்தவனா யிருந்தால் என் மானத்தை இழக்குமுன் இருபது தடவை சாவ அஞ்சியிருக்கமாட்டாய்!' என்றாள். கிளாடியோ தலை கவிழ்ந்து நின்று, 'இஸபெல், நீ வீர மாது என்று நான் காண்கிறேன்; என் பிழை பொறுப்பாய்,' என்றான்.

அச் சமயம் துறவி யுருக்கொண்ட தலைவன் வந்து இஸபெலின் வீரத்தை மெச்சி, கிளாடியோவைப் பார்த்து, 'இத்தகைய தமக்கைக்குத் தகுந்த தம்பியாய் வீரத்துடன் உன் முடிவை ஏற்பாயாக,' என்று கூறி அவனை அவன் அறைக்கு அனுப்பினான். அதன்பின் அவன் இஸபெலை நோக்கி, 'இஸபெல், நீ பத்தரைமாற்றுத் தங்கம் போன்றவள். உன் வீரத்தை நான் இன்றுதான் கண்டேன். நான் சொல்லுகிறபடி நீ நடந்தால் உனக்குத் தீமையில்லாமலே உன் தம்பி பிழைப்பதோடு நீ இன்னொரு

பெண்ணுக்கும் உயிர் கொடுத்தவள் ஆவாய்,' என்றான்.

இஸபெல். துறவுருக் கொண்ட பெருந்தகை யோய், தாங்கள் கூறுவது தக்கதாயின் அங்ஙனமே செய்வேன்.

துறவி: நான் கூறுவது தக்கதா அன்றா என்பதை நீயே மதித்து விடை கூறலாம்.

உன்னை வஞ்சிக்க முயன்ற ஏஞ்செலோ ஒரு போலித் துறவி. அவனால் வாழ்க்கையிழந்து ஒரு பெண் தவிக்கின்கிறாள். அவள் பெயர் மேரியானா[1]



மேரியானா

அவள் இந்நாட்டையடுத்த தீவின் இறைவனான பிரடெரிக்கின்[2] தங்கை. பிரடெரிக் அவளை இவ் வேஞ்செலோவுக்கு மணம்செய்து கொடுத்தான். தங் கைக்குப் பரிசமாக அவன் பெரும்பொருட் குவை

1. Mariana. 2. Frederick.

யைக் கப்பலில் வைத்துக்கொண்டு கடல் வழியாக வந்தான். வழியில் கப்பல் உடைந்து பொருள் அழிந்ததுடன் அவனும் அவன் நண்பர்களும் இறந்தொழிந்தார்கள். மேரியானு தன் ஒப்பற்ற தமையனையும் உறவினரையும் இழந்தாள். ஆனால் இவ் வேஞ்செலோ அதனைப் பெரிதாக எண்ணுமல் அவள் பொருள் போனதையே . பெரிதாகக் கருதினுன். மேலும், பொருளுக்காகவே அவளை அவன் மணந்தவனுதலால் அவளைப் பல கொடுமைகளுக்கு உட்படுத்தி இறுதியில் அவள் தீ நடத்தையுடையவள் என்று பொய்க் குற்றம் சாட்டித் தள்ளிவைத்து விட்டான்.

' அப் பேதை மாது தீமையே தரும் அக் கணவனிடமே உயிர் வைத்து நலிகின்ருள். தன் உயிரைத் தான் மாய்த்துக்கொண்டால் கூட அவனுக்குத் தீவினைப்பயன் வருமே என்று அஞ்சுகின்ருள்.'

'ஏஞ்செலோ இத்தகைய கொடியன்.'

'ஆனுல் இப்போது, நீ அவன் சொல்வதற்கிணங்குவதாக நடித்து இரவு வரும்படி சொன்னல், உனக்கு மாருக அவளை அனுப்ப நான் எண்ணங்கொண்டுள்ளேன்.

இஸபெல் முதலில் இச் சூழ்ச்சிக்கு இணங்கவில்லையாயினும் நால்வழியும் ஆராய்ந்து அது தீமையற்றது எனக் கண்டு இணங்கினுள்.

அதன்படியே இஸபெல் ஏஞ்செலோவை ஏமாற்றி இரவு வந்து சேரும் இடத்தை அறிந்து அதற்கான திறவுகோல்களும் வாங்கி வந்துவிட்டாள். அவற்றின் உதவியால் மேரியானு தன் மனதைக் கொள்ளைகொண்ட கொடியவனை அடைந்து ஓரளவு தன்னை மறந்தாள்.

தீமையில் இறங்க இறங்கத் தீயவர் துணிவும் மிகுதி. தான் நினைத்த காரியத்தை முடித்துவிட்ட தாக எண்ணிய ஏஞ்செலோ ஏன் இஸபெலை முற்றி லும் ஏமாற்றக் கூடாது என்று எண்ணி விடியற் காலையிலே கிளாடியோவைக் கொலைசெய்யும்படி ஆள் அனுப்பினன். அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த துறவியுருக்கொண்ட தலைவன் தனது தலைமை நிலைக்கான குறிகளைச் சிறை காவ லனுக்குக்காட்டி அவனைத் தன் கருத்துக்கிணங்கச் செய்தான். அதன்படி அவன் கிளாடியோவை மறைத்து வைத்துவிட்டு, வேறு இறந்துபோன ஒருவன் தலையைக் கொண்டுபோய்க் கொடுத்துக் 'கிளாடியோவை வெட்டிவிட்டேன்,' என்றான்.

தன்னையும் ஏஞ்செலோவின் இன்னல்களையும் வெளிப்படுத்தும் சமயம் வந்துவிட்டதெனப் பழைய தலைவன் இப்போது எண்ணினன். ஆகவே, தன் பயணத்தைச் சில காரணங்களால் நிறுத்திவிட்டுத் தான் திரும்புவதாகவும், மறுநாட் காலையிலேயே தனது தலைமை உரிமையைத் தன்னிடம் விட்டுவிட வேண்டுமென்றும் அவன் ஏஞ்செலோவுக்கு எழுதி னன். அதோடு, தன்னிடம் குறை கூறிக்கொள் வோர் நகரத்துத் தெருக்களிலேயே முறையிட்டுக் கொள்ளலாம் என்று முரசறைவிக்கும்படியும் பணித்தான்.

ஏஞ்செலோ இழிகுண முடையவன் என்பது இஸபெலுக்குத் தெரியும். ஆனால் தன் கீழான விருப் பத்தை ஈடேற்றிக்கொண்ட பின்னும் அவன் கிளா டியோவைக் கொல்வான் என்று அவள் கனவிலும் எண்ணவில்லை. எனவே, அதனைக் கேள்வியுற்ற தும் அவள் எண்ணாததெல்லாம் எண்ணி விம்மினள்; வெகுண்டாள்; தன் தீவினையை எண்ணி மனமழுங்

கிறாள். ஏஞ்சலோ நயவஞ்சகன் மட்டுமன்று; நன்றியறிதலற்ற பன்றிமகன் என்பதுங் கண்டாள். இதற்கிடையில் பழைய தலைவன் நாளையே வருகிறான் என்ற முரசொலி கேட்டதும் அவள் ஒருவாறு தன்னை அடக்கிக்கொண்டு அவனிடம் முறையிட எண்ணினாள்.

நிழலின் அருமை வெயிலில் அன்றோ தெரியும்? அருள் நோக்குடையார் ஒழுங்கிற்கும், போலி நடு நிலை யுடையார் கண்டிப்புக்கும் உள்ள வேற்றுமையை ஏஞ்செலோவின் ஆட்சியில் கண்டுகொண்ட நகர மக்கள், தம் பழந்தலைவன் வருவது கேட்டு இழந்த உறுப்புக்கள் உயிர்பெற்றெழுந்தன என ஆரவாரத்துடன் எழுந்துசென்று வரவேற்றனர். இன்முகத்துடனும், வணங்கிய கைகளுடனும் தலைவன் அனைவர் வணக்கத்தையும் ஏற்றுத் தெரு வழியே வரலாயினான். அச்சமயம் இஸபெல் தலைவிரி கோலத்துடன் அவனெதிரே வந்து வழி மறித்து, 'அருளுருக்கொண்ட எம் ஆருயிரே வருக. நீவிர் இல்லாதபோது இக் கொடியோன் (ஏஞ்செலோவைச் சுட்டிக்காட்டி) என் தம்பிக்கு உயிர் கொடுக்கும் பொய் உறுதி தந்து என் மானத்தைக் கைக்கொண்டு பின் அப் பழியோடு பழி சேர்த்து அவன் உயிரையும் வாங்கிவிட்டான். என் கண்மணியையும் இழந்தேன். பெண்களின் உண்மணியையும் இழந்தேன். இது முறையோ?' என்று கதறினாள்.

ஏஞ்செலோ, 'தம்பியை இழந்த துயர் இப் புனைவையும் அருளியதுபோலும்!' என்று கூறி, வலிய முறுவலை வருவித்துக்கொண்டான்.

அப்போது மேரியானா முன்வந்து, "அரசே. இம்மாது கூறியவை முற்றும் உண்மையன்று; இவ்

உதவித் தலைவர் அவளுக்கு உண்மையில் எத்தகைய தீங்கும் செய்யவில்லை. அவர் செய்த தீங்கு எனக்கே. அவள் பெயரால் அங்கே சென்று அவர் காதலைப் பெற்றவள் நானே,' என்றாள்.



தலைவன் வின்செந்தியோவிடம் இஸபெல்
ஏஞ்செலோவைக் குறைகூறி வழக்காடல்

இப்படி இருவரும் ஒருவருக்கொருவர் எதிராக வழக்காடவே தலைவன், 'உங்களுக்குச் சான்று உண்டா', என்றான். இருவரும் ஒருங்கே மடத்துத் துறவி ஒருவரே எங்களுக்குச் சான்று என்றனர். 'சற்று நேரத்தில் அவரை அழைத்து வருக,' என்று தலைவன் அவர்களிடம் கூறிவிட்டு, முதல் அமைச்சனாகிய எஸ்காலஸ் பெருமகனை அழைத்து, 'இப்போது ஏஞ்செலோ வழக்காளிகளுள் ஒருவனாய்

விட்டபடியால் நான் வருமுன் அவர்கள் சான்று கொண்டுவந்தால் நீயே வழக்காராய்ந்து தீர்ப்பளிப் பாயாக' என்று கூறிவிட்டு வெளியே சென்ருன்.

## 5. கற்பரசிகளின் வெற்றி

வெளியே சென்று அவன் மறுபடியும் மடத் துத் துறவி உருக்கொண்டு மேரியானவுக்கும் இஸ பெல்லுக்கும் சான்று கூறுவதாக அவர்களையும் உடன் கூட்டிக்கொண்டு வந்தான். தலைவ னில்லா ததையும் தன் நண்பனே உதவித் தலைவனுக இருப் பதையும் கண்டு துணிவுற்று ஏஞ்செலோ, 'ஐயா, இப் பெண்கள் இருவரும் சேர்ந்து, என்மீது பழிகட்டி யிருக்கின் றனர். இத் துறவியும் அவர்களுக்கு உடந்தையானவனே' என்று கூறினுன். அது கேட்டுத் துறவி, 'நான் சான்று பகர வந்தேனே யன்றி உனக் கெதிராக வழக்காட வரவில்லை. ஆயினும், நீ என்னை இழுத்துவிட்டபடியால் கூறு கிறேன். உன் தகுதி தெரியாமல் தலைவன் உன்னை ஆளவிட்ட வீறு, நீ தலைகால் தெரியாமல்நடக்கிருய். நீ செய்த கொடுமைகள் பலவும் நான் நேரில் கண் டறிந்தவனே' என்ருன். இவனைப் பேச விடுவது தவறு என்று கண்டு எஸ்காலஸ், 'அடே துறவி, இவர் தலைவரா யிருந்தவர்; இன்னும் உயர் நிலையி லுள்ளவர். இவருக் கெதிராகப் பேசுமுன் உன்னைக் குற்றுயிராகக் குலைக்கும் படி உத்தரவிடுவேன்' என்ருன்.

'உதவித் தலைவன் ஒழுங்கு இதுதானு?' என்று கேட்டுக்கொண்டே தலைவன் தன் துறவி உடையை அகற்றித் தலைவனுடையில் வெளிப்பட்டான். எஸ் காலஸ் பெருமகன் முகம் சுண்டிற்று. ஏஞ்செலோ முகத்திலோ இருபத்தொரு நரகங்களும் தாண்டவ

மாடின. தலைவன்முன் தன் சிறுமையனைத்தும் வெளிப்பட்டுவிட்டது எனக் கண்டு அவன் வேரற்ற மரம்போலத் தலைவன்முன் விழுந்து உயிருக்கு மன்றாடினான். தலைவனோ அவன் பக்கம் பாராமல், 'உன்னை எக் குற்றத்திற்கும் மன்னிக்கலாகும்; கிளாடியோவின் உயிரைக் கொள்ளைகொண்டதற்கு மட்டும் மன்னிக்க முடியாது. அவனது முடிவை நீயும் அடைக,' என்றான்.

அச்சமயம் மேரியானா ஓடி வந்து பணிந்து, 'அண்ணலே, எனக்கு இவர் கணவர், காதலர். அவர் என்னைத் தள்ளினும் என் உள்ளத்தில் அவர் என்றும் தலைவரே. அவர் இறந்து வாழேன். என்னுயிரைக்கொண்டேனும் அவர் உயிரைக் காப்பாற்றி யருளுவீர்' என்றாள்.

தலைவன் அசையாதது கண்டு, அவள் இஸபெலை, அணுகி, 'இஸபெல், இஸபெல், நீ பெரிய மனம் கொண்டவள் என்று எனக்குத் தெரியும். அவர் செய்த பிழை மன்னிக்க முடியாதது என்றும் நான் அறிவேன். அதற்காக நான் என்மீது எத்தகைய தண்டனையையும் ஏற்றுக்கொள்வேன். அவரை மட்டும் காப்பாற்றவேண்டுமென்று தலைவரை என்னுடன் நீயும் வேண்டிக்கொள்ளுவாயா?" என்று இரந்தாள்.

இஸபெல் தன் தம்பியைக் கொன்ற பாதகன் மீது தனக்குள்ள சீற்றத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு, 'தலைவரே, அவ்வாடவன் செய்த குற்றம் எதுவாயினும், இப் பெண் அவன்மீது கொண்ட காதல் அதனை அழித்துவிடும் தன்மையது. இவள் வேண்டுகோளை நிறைவேற்றி அருள் புரிவீர்', என்றாள்.

தலைவன் எல்லையிலா மகிழ்ச்சி கொண்டு, 'மேரியானா கற்பரசி. அவளுக்கு அவள் கணவன் உயிரைக் கொடுக்கத் தடையில்லை. ஆனால் அவன் தன் போலித்துறவை ஒழித்து அவள் கணவனானால் மட்டுமே உயிர் பிழைப்பான்' என்றான். மேலும் அவன், 'அவளைவிட இஸபெலும் கற்பிற் குறைபடுபவள் அல்லள். அதோடு தம்பியைக் கொன்றவனை மன்னித்த அவள் பெருமை அரிதே. அவளுக்கும் நான் பரிசு கொடுக்க எண்ணுகிறேன்,' என்று கூறி ஒரு வேலையாளைக் குறிப்பாகப் பார்த்தான். உடனே அவன் சென்று கிளாடியோவைக் கூட்டிக் கொண்டு வந்தான்.

இறந்து போவோம் என்று வந்த கிளாடியோ, உயிரையும் பெற்றான். உயிரினும் பன்மடங்கு உயரிய தமக்கை அன்பையும் பெற்றான்; இஸபெலின் வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் ஓர் எல்லை இல்லை.

தலைவன் இஸபெலை நோக்கி, 'இத்தனைப் பெருந் தகைமையையும் உறுதியான கற்பையும் உடைய நீ துறவறம் பூண்பது தகுதியன்று. உனது பெருமைக்கேற்ற கணவன் இவ்வுலகில் இருக்கமுடியாது. ஆயினும் உனக்கு நான் செய்த உதவியை எண்ணி என்மீது கடைக்கணிப்பதாயின், அஃது இந்நகரும் யானும் செய்த முன்னை நல்வினைப் பயன் என்றெண்ணுவேன்,' என்றான்.

இஸபெல் தன்னை ஈன்ற தாயை நினைப்பவள் போல நிலமாதை உற்று நோக்கினாள்.

அதுமுதல் வியன்னா நகரத்து இளைஞரை அந்நகரத்து மங்கையர் விழிகளே நல்வழிப்படுத்தின. இஸபெலின் முன்மாதிரியே, அவர்களுக்கு எச் சட்டத்திலும் மேலான சட்டமாய் அமைந்தது.

# 4. ரோமியோவும் ஜூலியட்டும்

## கதை உறுப்பினர்கள்

*ஆடவர்*

1. **கப்பியூலத்துப் பெருமகன் ;** ஜூலியட்டின் தந்தை.
2. **மாண்டேகுப்பெருமகன் :** கப்பியூலத்தின் வான்முறைப் பகைவன்- ரோமியோவின் தந்தை.
3. **ரோமியோ :** மாண்டேகுப் பெருமகன் புதல்வன் - ஜூலியட்டைக் காதலித்து மறைவாய் மணந்தவன்.
4. **பொன்வாலியோ :**
5. **மெர்குதியோ :** } ரோமியோவின் நண்பர்கள்
6. **டைபால்ட் :** ஜூலியட்டின் அருமை மைத்துனன் — ரோமியோவை மல்லுக்கிழுத்து அவன் கையால் இறந்தவன்.
7. **லாரன்ஸ் :** துறவி - அருளுடையார் - ரோமியோ ஜூலியட் காதலால் இரு குடிகளின் பகை தீர்க்க எண்ணி மணம் புரிவித்தவர்.
8. **கவுண்ட்பாரிஸ் :** பெற்றோரால் ஜூலியட்டுக்குக்கணவனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற மணமகன்.

*பெண்டிர்*

1. **ஜூலியட் :** கப்பியூலத்துப் பெருமகன் புதல்வி, ரோமியோவின் காதலி.
2. **ரோஸாலின் :** ரோமியோவின் முதற் காதலி - அவனைப் புறக்கணித்தவள்.

# கதைச் சுருக்கம்

மாண்டேகு கப்பியூலத்து என வெரோணு நகரத்தில் இரு பெருஞ் செல்வக் குடிகள். அவர்கள் தம்முட் பெரும் பகைமை கொண்டிருந்தனர். மாண்டேகுப் பெருமகனுடைய ஒரே புதல்வன் ரோமியோ. கப்பியூலத்துப் பெருமகனுடைய ஒரே புதல்வி ஜூலியட். கப்பியூலத்துப் பெருமகன் மாளிகையில் நடந்த ஒரு விருந்திற்குத் தான் விரும்பிய ரோஸாலின் என்ற மங்கையைக் காணப் பொன்வாலியோ மெர்குதியோ என்ற தன் இரு நண்பருடன் வந்த ரோமியோ ஜூலியட்டைக் கண்டு காதலித்தான். ரோமியோவுக்கு லாரன்ஸ் என்ற ஒரு துறவி நண்பனு யிருந்தான். அவன் பகைமை கொண்ட இரு குடிகளையும் இணைக்கும் ஆர்வத்துடன் ரோமியோ ஜூலியட் ஆகியவர்களின் காதலை ஆதரித்து மறைவில் மணஞ் செய்துவைத்தான்.

அவர்கள் காதல் செய்தி யறியாது ஜூலியட்டின் மைத்துனன் டைபால்ட் ரோமியோவை மெர்குதியோவுடன் தெருவில் கண்ணுற்று மல்லுக்கிழுத்துப் போரிட்டு அவனுல் கொலையுண்டான். இதனுல் நகர்த் தலைவன் ரோமியோவை நாடு கடத்தவே, ஜூலியட்டிடமும் துறவியிடமும் விடைபெற்று அவளை அழைத்துக் கொள்வதாக உறுதி தந்து சென்ருன்.

இதற்கிடையில் ஜூலியட்டின் காதல் மணச் செய்தி யறியாத பெற்ருேர் அவளைப் பாரிஸ் பெருமகனுடன் மணஞ் செய்ய ஏற்பாடு செய்தனர். இவ் விக்கட்டினின்றும் தப்ப லாரன்ஸ் ஒரு சூழ்ச்சி செய்தான். 42 மணி நேரம் இறந்தவர்போ லாக்கும் மயக்க மருந்தொன்றை அவளுக்கு அவன் கொடுக்க, அவள் இறந்தவளென்று தன் குடும்பக் கல்லறையில் அவளை அடக்கம் செய்கின்றனர். துறவி இது செய்தியைத் தூதனுல் அவனுக்குத் தெரிவித்து அவளை எழுப்பிப் போகும்படி ரோமியோவுக்கு எழுதினுன். ஊழ்வலியால் தூதன் தாமதம் செய்துவிட்டான். நற்செய்தியிலும் கடுகச் சென்ற ஜூலியட் இறப்புச் செய்தி கேட்டு வந்த ரோமியோ அவளைக் கண்டு இறந்ததாகக் கொண்டு அங்கே வந்த பாரிஸ் பெருமகனுடன் போரிட்டு அவனைக் கொன்றபின் தானும் மாள, அதன்பின் எழுந்த ஜூலியட்டும் காதலுடன் மாண்டாள். இறுதியில் வந்த இரு குடிப் பெற்ருேரும் நகர தலைவனும் துறவியால் செய்தி முற்றும் அறிந்து முன் பகைமைக்குக் கழிவிரக்கங்கொண்டு வருந்தினர்.

## 1. எதிர்பாரா விருந்தினர்

[1]வெரோணா நகரத்தில் [2]கப்பியூலத்து என்றும் [3]மாண்டேகு என்றும் இரண்டு பழம் பெருங்குடிகள் இருந்தன. இக் குடியினர் நெடுங்காலம் ஒருவரை ஒருவர் பகைத்து வந்திருந்தனர். அந்நகரத்தார் நினைவு எட்டிய வரையிலும் அவர்கள் பகைவர்களாகவே இருந்து வந்தமையால் அப் பகைமை வேரூன்றியதோ டன்றி, அவர்கள் உறவினர் நண்பர் பணியாட்கள் முதலிய யாவரிடமும் பரவிற்று. எனவே அந்த இரு கட்சியினரும் அவர்கள் நண்பர்களும் பணியாட்களும் தெருக்களிலும் சந்துகளிலும் ஒருவரையொருவர் கண்ணுறும் போதெல்லாம் நாள்தோறும் பூசல் விளைத்துவந்தனர். அடிதடியும் கொலையும் தீமொழியும் இதனால் நகரில் மிகுந்தன.

ஒருநாள் கப்பியூலத்துப் பெருமகனார் மாளிகையில் ஒரு பெரு விருந்து நிகழ்ந்தது. அதில் அந்நகரத்து நன்மக்களில் மாண்டேகுகள் நீங்கலாக ஆடவர் பெண்டிர் யாவரும் வந்து குழுமினர். நகரத்தின் அழகிகள் அனைவரும் அவ் விருந்தின்போது நடக்கும் ஆடல்பாடல்களில் கலந்தனர். அவர்களைப் பார்க்க வந்த இளைஞரும் மிகப் பலர்.

அத்தகைய அழகிகளுள் ஒருத்தி [4]ரோஸாலின் என்பவள். மாண்டேகுப் பெருமகனாரின் மகனாகிய [5]ரோமியோ இவ்வழகியின் கவர்ச்சியுட்பட்டு அவள் வெறுத்துத் தள்ளியும் நீங்காது அவளைத் தொடர்ந்து வந்தான். அவளுடன் கலந்துறவாட இவ் விருந்து நல்ல வாய்ப்பளிக்கும் என்பதைத் தெரிந்து அவன் அதில் வந்து சேர்ந்துகொள்ள

---

1. Verona. 2. Capulet. 3. Montague. 4. Rosaline. 5. Romeo.

விரும்பினான். ஆனால், தன் குடும்பத்தின் பண்டைப் பெரும் பகைவர்களான கப்பியூலத்துக்களின் வீட்டில் நிகழும் விருந்துக்குச் செல்வதென்றால், 'அது கீரி வீட்டில் பாம்பு குடிபோவது போலாயிற்றே' என்று கவன்றான்.

ரோமியோவுக்குப் [1] பென்வாலியோ, [2] மெர்க்குதியோ என்ற நண்பர்கள் இருவர் இருந்தனர். காதலின் அருமை அறியாத கல் நெஞ்சினளாகிய ரோஸாலினுக்குத் தம் நண்பன் அடிமையாயிருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. கப்பியூலத்துக்களின் விருந்தில் அழகிகள் பலரும் வருவார்களாதலால் அவர்களைக் கண்டு ரோமியோ ரோஸாலினின் கவர்ச்சியினின்று விடுபடக் கூடும் என்று அவர்கள் நினைத்தனர். ஆகவே அவ்விருந்துக்கு அவனுடன் போவதென அவர்களும் தீர்மானித்தனர். எதிரிகள் தம்மை எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி அவர்கள் அனைவரும் முகமூடியுடன் செல்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

முகமூடி யணிந்து விருந்துகளுக்கும் நடனங்களுக்கும் செல்வதும், ஒருவரை ஒருவர் தெளிவாக அறியாமலேயே உறவாடிக் கலந்து காதல் நாடகம் நடிப்பதும் அந்நாட்டில் அக்காலத்தில் வழங்கி வந்த வழக்கங்கள் ஆகும். ஆகவே அவர்கள் முகமூடி யணிந்து வந்ததைப்பற்றி எவரும் தவறாக எதுவும் எண்ணவில்லை. ஆனால் அவர்கள் இன்னார் என்றறிய முடியாவிடினும், நடை உடை தோற்றங்களால் அவர்கள் இளைஞர்கள் என்றும் உயர்குடிச் செல்வர்கள் என்றும் எளிதில் உணர முடிந்தது. அதனால் அவர்களைக் கப்பியூலத்துப் பெருமகனாரே நேரில் வந்து எதிர்கொண்டு அழைத்தார். அவர்

1. Benvolio. 2. Mercutio.

ஆண்டில் முதிர்ந்தவராயினும் அன்பு கனிந்த உள்ளமும் இளைஞர்களும் வியக்கும் ஊக்கமும் உடையவர் எனவே அவர்களுடன் இன்மொழிகள் கூறி அளவளாவலாயினர்.

ரோமியோவின் நண்பர்கள் எதிர்பார்த்தபடியே வெரோணு நகரத்திலுள்ள வடிவழகிகள் அவ்விருந்தில் நடந்த ஆடல் பாடல்களில் கலந்து கொண்டனர். அழகுக் கலை வல்லுநர் பாராட்டும் பல்வகை அழகுகளும் உருவெடுத்து நேரில் வந்தனவோ என்னும்படி அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் ஒப்புயர்வற்ற அழகிகளாகவே விளங்கினர். பல வகை மலர்கள் ஒரே கொம்பில் வந்து சேர்ந்தாற்போல ஒரே இடத்தில் வந்து குழுமிய இத்தனை அழகிகளை ரோமியோ பார்த்ததே கிடையாது. கால்கள் பாவுகின்றனவோ அல்லவோ என்று ஐயுறும்வண்ணம் நீரில் மிதக்கும் அன்னங்கள் போல அவர்கள் மிதந்து சென்றனர். கண்களைக் கவரும் பலநிறப் பாம்புகள் போல் அவர்கள் ஒருவரை ஒருவர் வட்டமிட்டு, நெளிந்து நெளிந்து ஒருவரூடு ஒருவர் புகுந்து மீளுவாராயினர். இவை யனைத்தும் விழித்த கண் விழித்தபடி இமையாமல் பார்த்துக்கொண் டிருந்தான் ரோமியோ. ரோஸாலினின் கொடுமையால் புண்பட்ட அவன் உள்ளத்தில் இவ்வினிய காட்சி படிந்து புண்ணாற்றியது.

ரோஸாலினைப் பற்றிய நினைவு அதனுடன் மனத்தினின்றும் அகன்றது.

விண்மீன்களினிடையே திங்கள் போலும், வான மங்கையரிடையே இந்திராணி போலும் அவ்வழகியர் குழாத்தில் ஓர் ஒப்பற்ற வடிவழகி விளங்கினாள். அவள் அழகை நோக்க அவளைச் சூழ்ந்த பெண்களெல்லாம் அவன் கண்களுக்கு அனனப்

புள்ளைச் சூழ்ந்து நின்ற வாத்துக்கள் போலத் தோன்றினர். அவன் கண்ணுக்கு அங்குள்ள விளக்கங்கள் அனைத்தும் அவளிடமிருந்தே ஒளிபெற்று விளங்குவனவாகத் தோன்றின. 'ஆ, இத்தனை அழகும் இம் மண்ணுலகத்திற் குரியதுதானா? இது மனிதர் கண்கள் பார்க்கத் தக்கதுதானா? என்று அவன் வியந்தான். அவள் அப் பெண்கள் கூட்டத்தில் இடையிடையே தோன்றித் தோன்றி மறையுந்தோறும் அவனுக்குத் தன் உயிரே அவளுடன் சென்று மீளுவதாகக காணப்பட்டது.

காதல் வயப்பட்டோர், கவிதை வயப்பட்டோர், கள் வயப்பட்டோர் என்னும் இம் மூவரும் நாவை அடக்கார் என்பது பொதுச்சொல் அன்றோ? ரோமியோ உளமும் கண்ணும் அவ்வழகியர் கூட்டத்திற்குள்ளும் புறமுமாகத் திரியும்போது கூட அவன் நாக்குமட்டும் ஓயாது அவளைப் புகழ்ந்து புகழ்ந்து பிதற்றிய வண்ணமாகவே இருந்தது. 'ஆ, அவள் பொன்மேனி' என்பான்; 'அவள் ஆடைகள் பாலாடைகள் போன்றன' என்பான். 'அவை ஆடைகள் அல்ல, அன்னப் பறவையின் தூவிகள்' என்பான்; 'இத்தகைய பெண்ணைக் கப்பியூலத்தின் மாளிகையில் வந்தா காணவேண்டும்? எமது குடிக்கு இத்தகைய தெய்வ வடிவம் கொடுத்து வைக்கவில்லையே' என்றிவ்வாறு கூறிப் பலபடப் புலம்புவான்.

## 2. காற்று நுழையா இடத்தும் நுழையும் காதல்

ரோமியோவின் உள்ளத்தைக் கவர்ந்த அப் பெண்ணணங்கு வேறு யாருமல்லள். கப்பியூலத்துக் குடிகளின் குலக்கொடியாக வந்து பிறந்த

[1]ஜூலியட்டே யாவாள். திருமகள் பிறந்த பாற்கடலுள் அவளுடன் கூடவே பிறந்த நஞ்சுபோல அவளுக்கு [2]டைபால்ட் என்ற ஒரு மைத்துனன் இருந்தான். அவன் இவ் விளைஞர்களினுடைய பெருமித நடையையும் அவர்களிடம் கப்பியூலத்துப் பெருமகன் காட்டிய நன்மதிப்பையும் கண்டு உள்ளூறப் பொறாமை கொண்டான். நண்பரைவிட ஒருவனை நன்கு உற்றுக் கவனிப்பர் பகைவர். ஆதலின் அவன் அவர்களை அடுத்து, அவர்கள் தமக்குள் தாழ்ந்த குரலிற் பேசுவதைக் கூட உற்றுக் கேட்டு வந்தான். தன் குடிக்கு ஒரு குலக்கொழுந்தான ஜூலியட்டின்மீது அவன் கண்கள் செல்வதையும் அவள் கவர்ச்சியில் அவன் ஈடுபடுவதையும் காண அவனது பொறாமைத் தீ இன்னும் பல மடங்கு மிகுதியாயிற்று.

இறுதியில் அவன் பேச்சிலிருந்தும், நடை உடை தோற்றத்திலிருந்தும் அவன் மாண்டேகுக் குடியினன் என்பதையும், அக் குடியின் தலைவன் மகனான ரோமியோ என்பதையும் உன்னிப்பாய் அறிந்தபோது, அவனுடைய உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த பொறாமைக் கனல் வெஞ்சினமாகப் பொங்கி எழுந்தது. ஆனால் விருந்து விழாவின் போது பூசல் விளைப்பது அதன் பெருமையைக் குலைப்பதாகும் என்பதை உன்னி அவன் மிக முயன்று தன்னைத் தற்காலிகமாக அடக்கிக் கொண்டான்.

இரும்பும் காந்தமும் எங்கிருந்தாலும், எது வந்து இடைப்பட்டாலும் ஒன்றை ஒன்று ஈர்த்தே தீருமன்றோ? அதுபோல எதிரெதிரான பகைக் குடியுட் பிறந்தும் இவ்விரு சிற்றுயிர்களும் ஒன்றை

1. Juliet 2. Tybalt.

யொன்று பார்த்ததுதான் தாமதம். உடன் தாமே உடல் மாறி ஒருவர் உடலில் ஒருவர் புகுந்து வருத் தத் தொடங்கினர்.

விருந்தின் முடிவில் நங்கையர் தம் ஆடல் பாடல்களை விடுத்துக் கலைந்தபோது ரோமியோ அவளை அணுகினன். அவ்வளவு ஆடல் பாடல்களி னிடையேயும் அவள் உள்ளம் அவன் பக்கமாகவே நாடி நின்றதாதலின், அவளும் தன்னை அறியாம லேயே அவனை அணுகினள்.



ரோமியோவும் ஜூலியட்டும்

முகமூடி யணிந்தோர் அதன் மறைவிலிருந்து கொண்டு கபடின்றித் தம் கருத்துக்களை வெளியிடு வது வழக்கம். அதை ஒட்டி ரோமியோவும் ஜூலியட் டின் கையைத் தன் கைகளிற் புதைத்துககொண்டு அவள் அழகையும் இனிய பாடலையும் பாராட்டிப் பேசுவானாயினன்.

ரோமியோ :—'உன் உருவமும் பாடலும் நடையும் யாவுமே வானவர்க் குரியன. நீ ஒரு தெய்வ மங்கை என நினைக்கிறேன்.

ஜூலியட் :—மிகவும் நன்று. அப்படியானல் அத் தெய்வ மங்கையின் கையை மண்ணுலக மாந்தர் கைகொண்டு தீண்டல் பழியன்றோ ?

ரோமியோ :—உண்மை. 'ஆயின் அப் பழிக் கேற்ற தண்டனை அதனை முத்தமிடுவதுதான்' என்று கூறிக் கொண்டு அக்கையை முத்தமிட லானன்.

ஜூலியட் :—'உண்மைப் பற்றுடைய அடியவர் தெய்வ வடிவங்களைத் தீண்டும் உரிமை யுடையவரே. ஆனல், அதனை முத்தமிடும் உரிமை உடையவ ரல்லர்.'

இத்தகைய இனிய காதலுரைகளுக்குத் தடையாக 'ஜூலியட், ஜூலியட்' என்ற ஒரு குரல் கேட்டது. உடனே ஜூலியட், 'ஆ, என் தாய் அழைக்கிருள்' என்று கூறிவிட்டு ஓடினள். ஓடும் போதும் ஒன்றிரண்டு தடவை அவள் கண்கள் சற்றுச் சாய்வாகத் தன் பக்கம் திரும்பிப் பார்த்து விட்டுச் சென்றன என்று ரோமியோவுக்குப் பட்டது.

அதன் பின்புதான் அவன், அவள் யார் என்று பக்கத்தி லுள்ளவர்களிடம் உசாவினன். உண்மையை அறிந்தபோது அவன் மனம் முதலில் இடிவுற்றது. 'ஆ, என்ன செய்தேன்; பகைவர் புலத்துட்பட்ட பாவையிடம் என் உயிரைக் கொண்டு வைத்துவிட்டேனே' எனக் கலங்கினன். ஆனல், காதலைத் தடுத்து நிறுத்தும் வன்மையுடையது எது? பகை, பொருமை, சிறுமை ஆகிய புயல்களால்

மொத்துண்ட வாழ்க்கைக் கடலுக்கு அமைதி யளிக்கும் மதியம் அக் காதலேயன்றோ?

மாண்டேகுப் பெருமகனரின் மகனுகிய ரோமியோ கப்பியூலத்தின் மாளிகையுட் புகுந்து விருந்தில் கலந்துகொண்டதோடன்றி ஜூலியட்டிடம் பேசக்கூடத் துணிவுகொண்டா னென்ற செய்தி நகரெங்கும் பரவிற்று. அன்று முழுமையும் தான் கண்ட இளைஞனையும் அதனுடைய காதற் குறிப்புக்களையும் பற்றியே கனுக் கண்டுகொண் டிருந்த ஜூலியட்டின் காதிலும் இது விழுந்தது. அப்போது அவளது முகம் சட்டென நகை யிழந்து கவலையுள் ஆழ்ந்தது. 'அந்தோ, எனக்கும் என் காதலுக்கும் இடையே மாந்தர் கட்டிய கோட்டைகள் எத்தனை உள்ளன!' என்று ஏங்கினள் அவள்.

பண்டை நாள் தொட்டே காதல், கடலும் மலையும் கானுறும் கடக்கும் திறனுடையதாக விளங்குகின்றது. அது, காலம் இடம் என்பவற்றின் கட்டறுத்த கடவுளின் ஒரு சிறு பதிப்பு ஆதலின், அவரைப் போலவே இச் சிறு வாழ்க்கையளவில் அது காலமும் இடமும் கடந்து நிற்கின்றது. அதன் வயப்பட்டோர்க்கு இரவும் பகலும் ஒன்றுதான். காடும் நாடும், முள்ளும் மலரும் ஒன்றுதான்.

உலகத்திற்கு ஒரு பகல் சென்றது. உலகத்தார்க்கு ஓர் இரவு வந்தது. தூங்கும் உயிர்களுக்கு அது நளளிரவுப்போது. ஆனல் ரோமியோவுக்கு ஜூலியட்டின் நினைவே ஞாயிருய் இருந்தது. அந் நினைவு மாருத அவனுக்கு இரவேது? ஞாயிறு படிந்ததையும், மதி உயர்ந்ததையும் அவன் அறியவில்லை. அப்படி ஜூலியட்டே நினைவாக மனத்துட் கொண்டலேந்தான்.

அவன் உள்ளம் ஜூலியட்டைச் சுற்றி வட்ட மிட்டது. அவன் கால்களும் அவனை யறியாமலே கப்பியூலத்தின் மாளிகையைச் சுற்றி வட்டமிட்டன. மாளிகையின் பின்புறம் ஒரு தோட்டம். அதன் மதில்கள் இரண்டாள் உயரம் ஓங்கி நின்றிருந்தன. தன் காதலி இருப்பது அதன் மறுபுறம் என்று மனத்துள் நினைத்தான். உடன் அம் மனமும் அதனைப் பின்பற்றி அவனுடலும் தாமே அம் மதிலைத் தாண்டிக் குதித்தன. தோட்டத்தில் யாரேனும் இருப்பாரோ என்று எண்ணிப் பதுங்கிப் பதுங்கி நடந்தான். அந் நள்ளிரவில் அங்கு யார் இருப்பர்? கொஞ்ச நேரத்திற்குள் தோட்டங் கடந்து மாளிகையின் பின்புறத்தை அடைந்தான். அதன் பலகணி தலைக்கு மேலாகச் சற்று உயர்ந்து காணப்பட்டது. அதன் சித்திர வேலைப்பாட்டினுல் அதுவே பெண்டிர் பகுதி எனக் கண்டான். அதன் உட்புறமே அவனது காதற்கனி தூங்கிக்கொண்டிருக்க வேண்டும். அதனைப் பற்ற எண்ணிய தான் இப்படி வெளியே நிற்பதை எண்ணி வருந்தினுன்.

## 3. காதலர் கண்ட இன்பம்

கூட்டி வைக்கும் காதல் என்றால், அவர்கள் காதலைச் சொல்ல வேண்டும். ரோமியோ அங்கு வந்து நின்ற அதே சமயத்தில் ஜூலியட்டும் அதே பலகணியின் பக்கத்திலேதான் நின்றிருந்தாள். அவளது காதல் அவள் மனத்துள் அடங்காததாகத் தோன்றியதனுல் அதனைச் சற்றே இவ்வகன்ற உலகில் திறந்து வெளிவிடுபவள் போல அவள் பல கணியைத் திறந்து வந்து நின்றாள். பின் தன் காதலை போல் உயர்ந்தகன்று விரிந்த வானத் திரையில், தன் எண்ணங்களேபோல் எண்ணற்று

விளங்கிய விண் மீன்களில் தன் கவனத்தைச் செலுத்தினுள். 'ஆ!

காதல், காதல், காதல் ; அக் காதல் போயில்

சாதல் சாதல், சாதல்!!

எவ்வளவு பொருத்தமானது இப் பாட்டு" என்ருள் ஜூலியட்டு. கீழிருந்து ஒருவன், 'உன் விழியிலே தானே இருக்கிறது, அச் சாதல்' என்ருன். அஃது அவள் காதில் விழவில்லை.

'ஆ! விருந்தில் ஆடிப் பாடியபோது நீ தெய்வ மாது என்பது முற்றிலும் விளங்கவில்லை! இப்போது உன் குரல் வானிலிருந்து வருவதுபோன்றே இருக்கிறது. உயரப் பறக்கப்போகும் பறவை போலவே நீ வெளியில் அந்தரத்தில் வந்து நிற்கிருய்?' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் ரோமியோ!

தன் மனத்துட் கொண்ட ரோமியோவைப் பார்த்து அவள் பேசத் தொடங்கினுள். உண்மையில் ரோமியோவே அதனை உற்றுக் கேட்டுக்கொண்டிருக்கிருன் என்பதை அவள் அறியவில்லை.

'ஆ, ரோமியோ; ரோமியோ? நீ ஏன் ரோமியோவா யிருக்கவேண்டும்? மாண்டேகுக் குடியில் நீ ஏன் பிறக்கவேண்டும்? அன்றி அது தான் போகட்டும். கடவுள் என்னை ஏன் ஜூலியட்டாகப் படைக்கவேண்டும்? நான் ஏன் உனக்குப் பகைவர்களான கப்பியூலத்துக் குடியிற் பிறக்க வேண்டும்?' என்ருள்.

அவளுக்கு விடையிறுக்க, அவளுடன் உரையாட அவன் உள்ளம் பாய்ந்தெழுந்தது. ஆனல் அவள் இன்னுரைகளைப் பின்னும் கேட்கவேண்டு

மென்னும் ஆர்வம் அத்தனை அழுத்திப் பின்னுக்கு இழுத்தது.

அவள் பின்னும் 'ஆ, ரோமியோ? நீ ஏன் ரோமியோவா யிருக்கவேண்டும்? நீ ஏன் மாண்டேகு ஆயிருக்கவேண்டும்? அக் கொடியவர்களை விட்டு விட்டு வேறு பெயர் கொள்ளலாகாதா? என் மனத்தில் உள்ள காதலின் ஒரு பகுதிமட்டும் உன் மனத்தில் இருந்தால் இப் பெயர்களை உதறித் தள்ளிவிட மாட்டாயா? அப்படி நீ தள்ளாவிட்டால் இதோ நான் தள்ளுகிறேன். நான் ஜூலியட்டல்லள், கப்பியூலத் அல்லள் என்று வைத்துக்கொள்க" என்றாள்.

காதல் போட்டிக் கழைத்த அழைப்புப் போன்ற இம்மொழிகளுக்கு ரோமியோவால் விடை கொடுக்காமல் இருக்க முடியவில்லை. எனவே அவன் 'நானுந்தான் இனி ரோமியோ அல்லன்; மாண்டேகு அல்லன்; உன்னைக் கண்டதே நான் மீண்டும் பிறந்தேன். நீ இனி எனக்கு என்ன பெயரிட் டழைப்பாயோ அதுவே என் பெயராகும். நீ காதல் என்றோ, கண்மணி என்றோ, வேறெப்படி வேண்டுமாயினும் அழைத்துக் கொள்க,' என்றான்.

தான் தனிமையாய் இருப்பதாக நினைத்ததற்கு மாறாக வேறு ஏதோ குரல், அதுவும் ஆடவர் குரல் கேட்பது கண்டு திகில் கொண்டு ஜூலியட் கதவை அடைத்துவிட்டு உட்செல்ல இருந்தாள். ஆனால் ரோமியோ, 'என் ஜூலியட்; உன் மனக் கதவைத் தான் திறந்துவிட்டாயே; இனி ஏன் இவ் வெளிக் கதவைச் சாத்திவிட்டு ஒளிக்க வேண்டும்," என்றான்.

அப்போதுதான் அவளுக்கு, அவன் தன்

உளங் கோயில்கொண்ட தலைவனே என்பது விளங்கிற்று.

பசிப்பிணி தீரக் கூழில்லையே என்று வருந்துபவன்முன் முக்கனியும் தேனும் கலந்த இன்னுணவு வைக்கப்பட்டா லெப்படியோ, அப்படி யிருந்தது ஜூலியட்டுக்கு ரோமியோவின் வரவு!

அவளது உளத்துக்கு முந்த நாவும் நாவுக்கு முந்த உளமும் துடித்தன. அவனைக் கண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சி ஒரு புறம்; அவன் பகைவரிடத்திற் கன்றோ வந்திருக்கிறான், அவனுக்கு என்ன நேருமோ என்ற அச்சம் ஒரு புறம் ஆகப் போரிட்டன. பின் தழுதழுத்த குரலில் அவள் 'நீ இவ்விடத்தை அறிந்து எப்படி வந்துசேர்ந்தாய்?' என்று கேட்டாள்.

ரோமியோ: 'காதலாகிய வடமீன் வழி காட்ட வந்தேன். இம் மாளிகையிலிருக்கும் பொருட்குவையைப் பெற ஏழு கடலையுந் தாண்டவும் நான் தயங்கேன்.'

அவனுக்காகத் தன் மனம் துடிப்பதுபோல் தனக்காக அவன் மனமும் துடிக்கின்றது என்பதை அவள் கண்டாள். அவளுள்ளத்தில் ஒளித்து நின்ற நாணாகிய செவிலித்தாய் உடன்தானே தனது சிவந்த திரையால் அவள் முகத்தை மறைத்திட்டாள்.

ஆனால் அவர்கள் காதலில் திரைக்கு ஏது வேலை. கண்டபின் காதலிப்பவருக்கன்றோ திரைமறைவிலிருந்து காதல் வலை வீசவேண்டும். காணுமுன்னே காதலனுடன் கலந்துவிட்ட அவள் உள்ளம், நாணம் மடம் அச்சமென்னும் முப்படியையும் கடந்து தன் காதலுணர்ச்சிகளை உள்ளன உள்ளபடியே வெளியிட்டது. அவனது விடையும் அதற்கு எதிரொலி

போன்றே இருந்தது. அவர்கள் இருவரும் ஒருவருக் கொருவர் தம் காதலை வெளியிட்டு, உலகுமாறினும் ஊழிமாறினும் மாரு உறுதி கூறி இறைவனே சான்ருகக் காதல் மணம் செய்துகொண்டனர்.

ஆயினும் உலகத்தோடொப்ப அந்தணர் சான்றும் வேண்டுவதேயாகலின் மறுநாளே அவனிடம் ஒரு தூதனை அனுப்புவதாகவும், மணவினைநாள் முதலிய விவரங்களை அவன் மூலம் அறிவிக்க வேண்டுமென்றும் அவள் வேண்டிக்கொண்டாள்.

மேலும் அவர்கள் பேசுவதற்கில்லாது போயிற்று. ஜூலியட்டின் தாய் அவளைத் தன் பக்கம் காணுமல் 'ஏன் இராப்பொழுதில் பனியில் போய் நிற்கிருய்?' என்று கடிந்து அவளை உள் அழைத்தாள். தாய்ப் பணி ஒரு புறமும் காதல் ஒரு புறமும் இழுக்க ஜூலியட் மீண்டும் மீண்டும் வந்து ரோமியோவிடம் காதல் கனிந்த மொழிகள் பேசிப் பிரிவு பெற்றுக் கொண்டாள்.

அவர்கள் பிரிந்தபோது விடியும் நேரமாயிருந்தது. வெளியே நிலவு மங்கி கதிரொளி வீசலாயிற்று. ரோமியோவுக்கு அப்போதுதான் பகல் போய் நிலவுவருவது போல இருந்தது.

திரும்பத் தன் வீடு சென்று முன்போல் நண்பருடன் பொழுது போக்க அவனுக்கு மனம் வரவில்லை. காதல் நினைவு ஒன்றைத் தவிர வேறெதற்கும் அவன் மனத்தில் இடமில்லை. எனவே தன் வீடு செல்லாது நகர்ப் புறத்திலுள்ள ஒரு மடத்தை நோக்கி நடந்தான். அதில் லாரென்ஸ்[1] என்ற ஒரு துறவி உறைந்து வந்தார். அவர் இன்ப வாழ்க்கையைத் துறந்த துறவியேயாயினும் அன்பு வாழ்க்

1. Lawrence.

கையைத் துறந்தவர் அல்லர். ரோமியோவிடம் சிறப்பாக அவர் பரிவுடையவர். ரோஸாலிண்யே தஞ்சமென அவன் திரியும் காலத்தில், அவர் அவனிடம் ' அவள் அன்பற்றவள், அவளை நம்பி அலைவானேன். அன்பின் முதல்வனுகிய அருட்கடலை விட்டுவிட்டு இச் சிற்றின்ப வலையிற் பட்டு ஏன் அலைகிருய்?' என்று அறவுரை கூறுவர்.

ரோமியோவின் புதிய காதல் வரலாற்றைக் கேட்டதும் முதலில் அவருக்கு நகைப்பு ஏற்பட்டது. ' என்னே! மனிதரின் மடமை? நட்ட நடுவிலிருக்கும் நறுநீர்ச் சுனையை விடுத்து அதனைச் சுற்றிநாற்புறத்திலும் காணப்படும் கானல் நீரைத் தேடி அலைகின்றனரே? ஒரு தடவை இரு தடவை ஏமாந்தால் போதாதா? பின்னும் அவ்வகையிலே புதிய புதிய மாதிரியா ஏமாற்றுக்குள் விழவேண்டும்! என்று அவர் முணுமுணுத்துக் கொண்டார். அது கேட்டு ரோமியோ, ' அடிகளே! தாங்கள் அறியாதது என்ன? இறைவனது அருளை நேரடியாக அடையச் சிறியேம் தகுதியுடையேம் அல்லமே; பொறுத்தருள்க. எமது கண்ணில் இக் காதலே பெரிதாகப் படுகிறது. அதன் வழியாகவே எம்மைக் கடைத்தேற்றுக' என்றான். துறவியின் ஏளனச் சிரிப்பு புன்முறுவலாக மாறிற்று. ' அப்படியே ஆகுக. உனக்கு நான் செய்யவேண்டும் உதவி யாது?' என்றார். ரோமியோ, தன் ஜூலியட்டை மணக்கும்படி உடனிருந்து உதவ வேண்டும் என்றான்.

எப்பொருளிலும் நற்பொருளே காணும்பெருந் தகையோராகிய லாரன்ஸ், ரோமியோ ஜூலியட் ஆகிய இவர்கள் காதலை வற்புறுத்தி மணவினையால் அவர்களைப் பிணைத்துவிட்டால் அதன் மூலம்

மாண்டேகுக்கள் கப்பியூலத்துக்கள் ஆகிய இருகுடியினரின் பழம்பகையும் ஒழிந்து நகரில் அமைதி நிலவும் என்று மனத்துட்கொண்டார். அவர் இணக்கம் பெற்று ரோமியோவும் ஜூலியட்டுக்குச் செய்தி சொல்லி அனுப்பினன். அன்றிரவே, ஜூலியட் பிறரறியாமல் அம்மடத்திற்கு வந்து ரோமியோவை மணந்துகொண்டாள்.

## 4. துயரமும் பிரிவும்

அன்றிரவு ரோமியோ ஜூலியட்டின் மாளிகைக்கு வந்து அவளைக் காண்பதாகக் கூறியிருந்தான். அதனையே எண்ணி எண்ணி அவள் போகாத அப் பகலைப் போக்கி வந்தாள். ஆனல் அப் பகல் அவள் எதிர்பார்த்ததைவிட அவளுக்குக் கொடியதா யிருந்தது.

விருந்து நாளன்றே ரோமியோமீது கறுவிக் கொண்டு சென்ற டைபால்ட்டு, நகரத்துத் தெருக்களில் மெர்க்குதியோவையும் ரோமியோவையும் கண்டு அவர்களைக் கடுமொழியால் தாக்கினன். இருபக்கத்தினரும் முதலில் வசைமாரியில் தொடங்கி விரைவில் அடிதடி மாரியிலிறங்கினர். ரோமியோ சிலநேரம் இப்பூசலில் கலக்காது அதை விலக்கவே முயன்றான். இயற்கையிலேயே அவனுக்கு இத்தகைய அடிதடிகளில் பற்றில்லை. இப்பொழுதோ கப்பியூலத்து என்றபெயரே அவன் காதுக்கினிமை தருவதாயிருந்தது. ஆனல் அவன் பின்வாங்கப் பின்வாங்க, டைபால்டு மட்டுக்குமிஞ்சிச் சீறி யெழுந்து அவனைக் கோழை என்றும் பேடி என்றும் வைது தாக்கினன் இத்தகைய அவமதிப்பைப் பொறுக்க முடியாமல் ரோமியோ சினத்துடன்

வாளால் அவனைத் தாக்கினன். டைபால்ட்டு பேச்சு வீரனேயன்றி வாள்வீரனல்லன். ஆகலின் ரோமியோவின் தாக்கை எதிர்த்து நிற்கமாட்டாமல் வாளேறுண்டு மாண்டான். அடிதடியோடு இங்ஙனம் கொலையும் சேர நகர மாந்தர் அனைவரும் பெருங் கலவரம் அடைந்தனர். விரைவில் எள்விழ இடமின்றி எங்கும் மக்கள் திரண்டெழுந்தனர்.



டைபால்டின் முடிவு

நகரின் நிலை கண்டு கலக்கமுற்ற நகர்த்தலைவனும் சண்டை நடந்த இடத்துக்குவந்து இருதிறத்தாரையும் நிறுத்தி உண்மையை ஆராய முயன்றான். இத்தகைய நேரங்களில் நடுநிலை உண்மை காண்பது அருமை. எப்படியும் அமைதியை நிலை நிறுத்துவதிலேயே கண்ணுயிருந்த தலைவன் இருதிறத்தாரையும் புண்படுத்தாமல் தீர்ப்பளிக்க விரும்பி, ரோமியோவை நகரினின்றும் துரத்திவிட்டான்.

நகரெங்கும் பரவிவிட்ட இச்செய்திகள் ஒன்றன் பின் ஒன்ருக ஜூலியட்டின் செவிகளிலும் புகுந்தன. அச் செய்திகளுக்கு, மாருக உருக்கிய நாராசம் அவள் காதில் பாய்ந்திருந்தால் அவள் அதனைப் பொருட்படுத்தி யிராள். "காக்கைக்குந் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்னுமாறுபோல டைபால்ட்டு அவள் உறவினனுனதால், அவன் குற்றம் முதலில் அவள் கண்ணுக்குப் படவில்லை. அவள் சீற்றமனைத்தும் முதலில் ரோமியோவிடமே சென்றது. அவன் காதலனுகவே வந்தான் என்பதை மறந்து, தன் மைத்துனனுக்குக் காலனுகவே வந்தான் என்று வைதாள். ஆனல் முதல் எழுச்சி தணிந்ததன்பின், ரோமியோவின் காதலைப் பற்றிய நினைவும் அவனுடைய நற்குணமும் நடையும் அவள் கண்முன் நின்று அவள் சீற்றத்தைத் தணித்தன. அச் சண்டையை நேரில் பார்த்த அவள் தோழியர் சிலர் அவனுடைய நேர்மையையும் வீரத்தையும் போற்றியதை அவள் செவிகுளிரக் கேட்டாள். மேலும் அவன் கூடியவரை டைபால்ட்டை எதிர்க்காமலே இருந்தான் என்றும் டைபால்ட்டு தன்னைக் கோழை என்று அவமதித்த பின்னரே வேண்டா வெறுப்பாகச் சண்டையில் நுழைந்தான் என்றும் அவள் அறிந்தபோது அவனமீதிருந்த சீற்றம் எல்லாம் பாராட்டாக மாறியது. 'ஆ, என் காதலின் தகுதியை நானே குறைத்துக்கொண்டேனே! நான் இப் பெருந்தகை வீரனுகருத் தகுதி யுடையேன் அல்லேன்' என வருந்தினுள். மேலும் 'என் மைத்துனன் ஓர் உதவாக்கறை. அவன் இறந்தது கூடப் பெரிதன்று; என் ரோமியோவுக்கு அவன் ஊறு செய்திருந்தால்........ஓ அதை நான் எவ்வாறு பொறுப்பேன்' என நினைத்து அவள் அவன் செய்

கைக்காக வருந்தாமல் நன்றி செலுத்தக்கூடத் தொடங்கினள்.

ரோமியோவுக்குத் தான் நாடு கடத்தப்பட்ட செய்தி பேரிடி போன்றிருந்தது. தூக்குத் தீர்ப்புக்கூட அவனுக்கு அவ்வளவு கொடிதாகத் தோன்றியிராது. ஏனெனில் அவன் ஜூலியட் இருக்கும் நகரில் இராது வேறெங்கேபோய் இருக்க முடியும்? அவள் இருக்குமிடம் அவனுக்கு விண்ணுலகம். அவள் இல்லாத இடம் மண்ணுலகுகூட அன்று; நரகம்கூட அன்று; அதனினுங் கொடிய உலகமேயாம். இதில் வாழ்வதைவிட இறப்பதே மேலென்று துணிவுறலானான். அப்போது அத் துறவி, என்ன கூர் அறிவு உனக்கு? நீ உன் காதலியை விட்டுச் சீற்றுத் தொலைவில் செல்ல அஞ்சி இறந்தாயானால் உன் உயிரை இழந்து ஜூலியட் எப்படி வாழக்கூடும்? என்றார். முதலில் இதை எண்ணிப் பார்க்காத ரோமியோ பின்னும் மனங் கலங்கி, 'அந்தோ, அங்ஙனமாயின் நான் என்ன தான் செய்வது? வாழவும் வகையில்லை; மாளவும் வகையில்லையே; நீர்தாம் ஒரு வழி காட்டுவீர்!' என்றான்.

அருளும் அறிவும் நிறைந்த அத் துறவி சில நேரம் ஆழ்ந்து எண்ணமிடலானார். அதன்பின் தெளிந்து, 'நான் கூறுகிறபடி கேள். இன்றிரவு இறுதியாக ஜூலியட்டைக் கண்டு விடைபெற்றுக் கொண்டு [1]மாந்துவா நகரத்துக்குச் சென்று உறைவாயாக. அதன்பின் நான் வேளை நயமறிந்து தலைவருக்கும் நகர மக்களுக்கும் உங்கள் மணச் செய்தியை அறிவித்துச் சேராத இரு குடியினரையும் சேர வைப்பேன். அதன்பின் நீ வந்து நகரறிய

1. Mantua

அவளை மனைவியாகப் பெற்று வாழலாம்' என்றார். ரோமியோவுக்கு இது பொருத்தமாகவும் நலமாகவும் பட்டபடியால் அதன்படியே நடக்க இசைந்தான்.

ஜூலியட்டின் தோழியர் சிலரது துணையால் அன்றிரவு ரோமியோ அவளது மாளிகையுள் அவளைத் தனிமையாகக் கண்டு உறவாட முடிந்தது. முதல்முதல் அம் மாளிகையில் அவர்கள் கூடிய போது அக் கூட்டுறவு மாசு மறுவற்ற காதலின்பமாகவே இருந்தது. இப்போது பிரிவுத் துன்பத்துடன் அது கலந்து துன்பமோ இன்பமோ என்று கூறமுடியாத நிலையிலிருந்தது. அவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசக்கூட முயன்றிரார். அதற்கு முன் விடிந்துவிட்டதுபோல் அவர்களுக்குத் தோற்றியது. கடையாமத்துக் கோழி கூவினபோது ரோமியோ திடுக்கிட்டான். ஆனால் ஜூலியட் சற்றே நகைத்து அது கடையாம மன்று; இரண்டாம் யாமமே என்றாள். வெளியே வந்தபோது விடிவெள்ளியைக் கண்டு நேரமாயிற்றென அவன் கலவரப்பட்டபோது, அவள் அது விடிவெள்ளியன்று; அது செட்டியைக் குடிகெடுத்த வெள்ளி; இன்று உன் அமைதியைக் கெடுக்கவந்தது போலும்!' என்றாள்.

ஆனால் பொய்யின் துணையால் தன்னையே எத்தனை தடவை வஞ்சிக்கமுடியும். கிழக்கு வெளுத்தது. சின்னஞ் சிறு பறவைகள் தம் பெற்றோரது பிரிவஞ்சிக் கலகலத்தன. இனித் தாம் பிரிந்தேயாகவேண்டும் எனக் கண்டனர் காதலர். ஆனால் அவர்கள் பிரிந்தாலும் அவர்கள் உடல் பிரியமாட்டேன் என்று முரண்டின. கன்றை விட்டுச் செல்லும் ஆ போன்று மீண்டும் மீண்டும் வருவான்

ரோமியோ. கருத்தை இழந்தவள் போன்று மீண்டும் மீண்டும் அவனை அழைத்துப் பேசுவாள் ஜூலியட். இங்ஙனம் காலம் தாழ்த்துவதால் காதலனுயிருக்கு இடுக்கண் என்பதை ஓர்ந்து அவள் அவனை எச்சரித்து, 'மனம் கவலவேண்டாம்; நான் நேற்றுவரை சிறு பெண். இன்று உன் காதலால் பெரியவளாய் விட்டேன். நாம் ஒன்றுபடும் நாள் வரை நான் ஆண்மையுடன் பிரிவைப் பொறுத்திருப்பேன். நீ கவலையற்று அந் நன்னாளுக்கான ஏற்பாடுகளைச் செய்க' என்று கூறி, அவனை அனுப்பினாள். அவனும் நாள்தோறும் தவறாது தன் நிலைமையையும் காதலையும் கடிதமூலம் வரைவதாக உறுதி கூறிச் சென்றான்.

## 5. துறவியின் திட்டமும் முடிவும்

ஜூலியட்டின் அறையினின்று கீழிறங்கிய பின் ஜூலியட் கண்ணுக்கு அவன் அவ் வரையிருளில் புதையுண்டு போவதுபோல் தோற்றியது. அத் தீய நினைவை அவளால் விலக்கக்கூடவில்லை. அதே போன்று அவன் கண்ணுக்கு அவள் முகில்களிடையே மறைவதுபோல் தோன்றினள். இத் தகைய நினைவுகளுக் கிடங்கொடுக்காது அவன் விரைந்து நகரை விட்டு நீங்கினன்.

அது முதல் அவர்கள் தீவினை அவர்கள் காதலின் போக்கில்வந்து குறுக்கிட்டதென்னவேண்டும். ஜூலியட் காதலாலும் துயராலும் அடைந்த மாறுதல்களை அவள் தாய்தந்தையர் கவனியாமலில்லை. பெண் பெரியவளாய்விட்டாள். அவள் உள்ளம் உலைவுறத் தொடங்கிற்று எனக் கண்டு அவர்கள் அவள் மணவினையை விரைவில் முடிக்க

வேண்டுமென நினைத்தனர். அதற்கேற்றபடி, அவர்கள் நெடுநாள் மனத்திற்குள் அவளுக்கேற்றவனென்று நினைத்திருந்த [1]கவுண்ட் பாரிஸ் தானுகவே அவளை மணஞ்செய்துகொள்ள விரும்பிக் கடிதம் எழுதினன். அது கண்டு மகிழ்ந்து உடன் தாமே அவன் விருப்பத்திற்கு உடன்பட்டதோ டன்றி விரைவிலேயே மணநாளையும் குறிப்பிட்டனுப்பினர்.

கவுண்ட் பாரிஸ் ஜூலியட்டை ஒத்த பெண்கள் விரும்புந் தலைவன் என்பதில் ஐயமில்லை. ஆனல் ரோமியோவினிடமே மனம்வைத்து அவன் மனைவியாய்விட்ட ஜூலியட் அவனை மணப்பதெங்ஙனம்? தன் மனத்தை வெளியிட்டுச் சொல்லி மறுத்துவிடலாமா என்று நினைத்தாள். எதற்கும் தனக்கும் தன் ரோமியோவுக்கும் உற்ற நண்பரான துறவியினிடம் சென்று அவரது அறிவுரையைப் பின்பற்றுவோம் என் றெண்ணினுள்.

ஜூலியட்டின் மணச் செய்தியை இப்போது வெளியிடுவதனல் நன்மை விளையாது என்று லாரென்ஸ் எண்ணினர். ஆனல் நிலைமையோ முற்றிவிட்டது. தப்ப வழி வேண்டும். அவர் மனத்தில் ஓர் அரிய எண்ணம் தோன்றியது. அதனைச் செய்து முடிக்க வீரமும் துணிவும் வேண்டும் என்று அவர் ஜூலியட்டினிடம் கூறினர். ஜூலியட் 'என் காதலனுக்காக நான் எதனையும் துணிந்து செய்வேன். என்னை நம்பலாம். தங்கள் எண்ணத்தை வெளியிடுக' என்றுள். அவர் அவள் கையில் மயக்க மருந்து ஒன்றைக் கொடுத்து, 'இதனை உட்கொண்டோர் நாற்பத்திரண்டு மணி நேரம் இறந்தவர்போல் கிடப்பர். பின் உயிர் மீண்டார்போல் எழுந்திருப்பர்.

1. Count Paris

இதனை மணநாளின் முன் நீ உட்கொண்டால் இறந்தவள்போல் கிடப்பாய். பெற்றோரும் உற்றோரும் உன்னை இறந்தவள் எனவே கொண்டு உங்கள் குடும்பத்தாருக் குரிய கல்லறையில் கொண்டு அடக்கம் செய்வர். அதற்குள் ரோமியோவுக்கு நான் கடிதம் எழுதி வரவழைத்து உன்னை அழைத்துப்போகச் செய்வேன். அதன்பின் மணவினையை நான் வெளியிடும் வாய்ப்பு நேர்ந்தபோது நீங்கள் வெளிப்படலாம்' என்றார். ஜூலியட் மகிழ்ச்சியுடனும் துணிவுடனும் இவ்வேற்பாட்டுக் கிணங்கினாள்.

முதன் முதலில் பாரிஸை மணக்கவேண்டுமென்று பெற்றோர் சொன்னபோது அவள் முகம் கோணியது கண்டவர் இப்போது அவள் அமைந்த முகத்துடன் விளங்குவது கண்டு வியப்படைந்தனர். 'பாரிஸை நேரில் கண்டபின் வந்த மாறுதல் இது. ஆளை அறிவதன்முன் காதல் கொள்வதெங்ஙனம்,' என அவர்கள் மனந்தேறினர். பாரிஸினிடம் அவள் மணப்பெண் மாதிரி நடக்கவில்லையாயினும் நெடுநாள் பழகிய உறவினரிடம் நடந்துகொள்வது மாதிரி நடந்துகொண்டாள் சூதொன்று மறியாத பாரிஸ், 'காதலொன்றும் அறியாத சிறு பெண்தானே' என்று நினைத்தான்.

மணநாளுக்கு முந்திய இரவில் ஜூலியட் மருந்தை உட்கொண்டாள். விடியுமுன் எழுந்து தோழியரும் தாயும் அவளை எழுப்பி மணப்பெண்ணுக்குரிய வாழ்த்துக் கூற வந்தனர். அவர்கள் கண்ட காட்சியையும் அவர்கள் அடைந்த நிலையையும் யாரே மதிப்பிடக்கூடும்? அழகே வடிவெடுத்த அவள் வடிவம் தந்தத்தால் கடைந்தெடுத்த பாவை போல் கிடந்தது. நெடுநேரம் உடலை யசைத்தும் ஓசை யுண்டுபண்ணியும் உருட்டிப் புரட்டிப் பார்த்

தும் பயனில்லாதுபோகவே இறந்தாள் என்று கருதிக் கதறினர். பெண்ணழைக்க வந்த மணமகன் பாரிஸ் அவ்வொலி கேட்டுக் கலங்கி ஓடிவந்து பார்த்தான். பார்த்து அவனும் இடியொலிகேட்ட அரவம்போல் மெய்ம்மறந்து அவள் அருகில் வீழ்ந்து புரண்டான்.

மன்றங் கறங்க மணப்பறை ஒலிக்கவேண்டிய அன்றே பிணப்பறை ஒலிக்கலாயிற்று.

சுற்றத்தினரும் நண்பரும் நகர மக்களும் அழுதரற்ற ஜூலியட்டின் உடலம் நகர்ப்புறத்துள்ள கப்பியூலத்துக் குடியினரின் கல்லறையிற் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டது. அதற்குச் செய்ய வேண்டும் கடமைகளனைத்தும் நிறைவேற்றிய பின் ஒருவர் பின் ஒருவராகக் கலைந்தனர். ஜூலியட்டின் தாய் தந்தையர் கோவெனக் கதறிய வண்ணமே அங்கு நின்றும் இழுத்துச் செல்லப்பட்டனர். பாரிஸ் உணர்வற்ற நிலையில் கொண்டுபோகப்பட்டான்.

ஜூலியட் உணர்வற்ற நிலையில் தனியே அக் கல்லறையுட் கிடந்தாள்.

இதற்கிடையில் துறவியாகிய லாரென்ஸ் புதிதாக ஏற்பட்ட நிலைமையினையும், அதனால் நேர்ந்த இக்கட்டையும், அதனை மாற்றத் தான் செய்த சூழ்ச்சியினையும் இனிச் செய்யவேண்டும் காரியங்களையும் பற்றி விவரமாக எழுதிய கடிதமொன்றை ஓராள் மூலமாக ரோமியோவுக்கு அனுப்பினர். அச்செய்தியை விரைவில் கொண்டு சேர்க்கும்படி அவர் அத்தூதனுக்கு மீண்டும் மீண்டும் சொல்லியிருந்தார். ஆனால் ஊழ்வலியால் அத்தூதன் வழியில் காலந் தாழ்த்திவிட்டான். நல்ல செய்திகளைவிடத் தீய செய்திகளே விரைவில் பரவும் என்பதற் கிணங்க,

அதற்குள் ஜூலியட் இறந்தாள் என்ற துயர் தரும் செய்தி பரவி ரோமியோவின் காதுவரை எட்டியது. அது கேட்டு ரோமியோ துடிதுடித்த உள்ளத்தினனாய்த் தலைகால் தெரியாமல் ஓடோடியும் வெரோணாவுக்கு வந்து நகர மக்களால் அவள் இறந்த செய்தியை உறுதிப்படுத்திக்கொண்டு கல்லறைக்குச் சென்றான். அங்கே அதற்கு முன்னதாகவே ஜூலியட்டை மணக்க எண்ணிய பாரிஸ் வந்து அவள் உடல் மீது மலர் தூவிக்கொண்டிருந்தான். ரோமியோ ஜூலியட்டின் காதலன் என்றறியாது அவள் இறந்தபின் உடலை அவமதிக்க வந்தானென்று நினைத்துப் பாரிஸ் அவனை எதிர்த்



காதலர் முடிவைத் துறவி கண்ணுறுதல்

தான். இருவருக்கும் நடந்த சண்டையில் பாரிஸ் வீழ்ந்திறந்தான். அவன் ஜூலியட்டை மணக்கவந்தவன் என்று கேட்டிருந்த ரோமியோ அவனை

வேறிடத் தடக்கம் செய்தபின், ஜூலியட் உடலின் அருகே வந்து நஞ்சுண் டிறந்தான்.

ஜூலியட் மயக்க மருந்தின் வன்மை தீர்ந்த பின் எழுந்து தன் அருகே தன் காதலன் மாண்டு கிடப்பது கண்டாள். அதன் காரணம் என்ன வென்று அவளுக்கு விளங்கவில்லை யாயினும், அவன் இறந்தான் என்பதுமட்டும் கண்கூடா யிற்று. இனி எது எப்படியானல் என்ன என்று அவளும் அவனருகிற் கிடந்த உடைவாளால் தன் உயிரைப் போக்கிக் கொண்டாள்.

தான் எழுதிய கடிதப்படி ரோமியோ வரக் காலந் தாழ்த்தது கண்டு, துறவி நேராகத் தானே கல்லறை எய்தி ஜூலியட்டைக் கூட்டிப்போகலாம் என்று வந்தார். வந்து அங்கு நடந்த காட்சி களைக் கண்டு, துறந்த மனமும் துடிக்கக் கண் கலங் கினர். அதற்குள்ளாக ரோமியோவும் பாரிஸனும் கல்லறைப் பக்கம் போவது கண்ட சிலர் என்ன நேருமோ என அஞ்சிப் பின் வந்தனர். அவர் களும் இக்காட்சியைக் கண்டு திகைத்து நாலா புற மும் சென்று புலம்பினர். அரை நாழிகைக்குள் நகர மாந்தர் அனைவரும் தலைவரும் கல்லறை வந்து சேர்ந்தனர். அவர்களிடையே கிழவர்களான ரோமியோவின் பெற்றோர்கள் ஒரு புறமும், ஜூலி யட்டின் பெற்றோர்கள் ஒரு புறமும் வந்து நின்றனர். அவர்கள் வடித்த கண்ணீர் ஆறாகப் பெருகி அவர் கள் பகைமையைக் கருதாது ஒன்றாகக் கலந்தன. இத்தனை நாள் இன்பத்திடையேயும் நாயும் பூனையும் போல் சண்டையிட்ட இப் பெரிய குடியினர் தம்

கான்முளைகள் தம் பகைமைக்கே பலியாயின வென்று கண்டு மனம் அழுங்கினர்.

லாரன்ஸ் அவர்களுக்கு நடந்ததை யெல்லாம் அடிமுதல் முடிவரை எடுத்துக்கூறி, 'நானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது. உங்கள் பகைமை இத்துடனாவது போகட்டும்; உங்கள் பிள்ளைகள் இறந்தபோதும் அவர்கள் காதலின் புகழ் நின்று நிலவும்படி அவர்களை ஒரேகல்லறையி லிட்டு அவர்கள் நினைவுக் குறியாகப் பெரியதொரு மண்டபம் நிறுவுமின்; கடவுள் அக்காதலர் உயிர் களைக் காத்து உங்களை மன்னிப்பாராக!' என்று கூறி அகன்றார்.

வெரோனா நகரத்தார் அக்காதலர் நினைவுக் குறியாகிய மண்டபத்தையே நகர மண்டபமாகக் கொண்டு அவர்களைப் போற்றினர்.

---